சிறுவர்களுக்கான விஞ்ஞான நாவல்

# ஆப்பிள் தேவதைகள்

ஆர்னிகா நாசர்



# ஆப்பிள் தேவதைகள்

(சிறுவர்களுக்கான விஞ்ஞான நாவல்)

ஆர்னிகா நாசர்

நேஷனல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்),
தியாகராய நகர், சென்னை - 600 017.
✆ : 2834 3385
Email : national_publishers@yahoo.com

# ஆப்பிள் தேவதைகள்

# முன்னுரை

'ஆப்பிள் தேவதைகள்' சிறுவர் நாவல் - விஞ்ஞான செய்திகளும் அதீத கற்பனைப் புனைவுகளும் கனவுகளில் மட்டுமே சாத்தியமாகக்கூடிய அமானுஷ்யங்களும் சேர்ந்த நுட்ப கலவை. ஓர் எழுத்தாளன் அதிநவீன INFOTAINER ஆக இருக்க வேண்டும் என நான் நினைக்கிறேன். நானும் அப்படித்தான் இருக்கிறேன். நாவலில் வரும் கம்ப்யூட்டர் தாத்தாவை எழுத்தாளர் சுஜாதா சாயலில் உருவாக்கினேன். நாவலில் வரும் சிறுவர் சிறுமியர்கள், நான் பல தருணங்களில் சந்தித்த, பழகிய, பேசிய சிறுவர் சிறுமியரின் நகல்கள். நான் இதுவரை எழுதிய நாவல்களில் மாஸ்டர்பீஸ் நாவல் 'ஆப்பிள் தேவதைகள்'தான். இந்நாவலை தொகுப்பாக்கும் நேஷனல் பப்ளிஷர்ஸ் சகோதரர் ஷாஜஹான் அவர்களுக்கு நன்றி.

இத்தொகுப்பினை விரைவில் பிறக்கப்போகும் என் பேரன் (அ) பேத்திக்கு சமர்ப்பிக்கிறேன்.

*என்றென்றும் அன்புடன்,*

**ஆர்னிகா நாசர்**

அண்ணாமலை நகர்,
12.10.2010

# 1

***ம***காத்மா காந்தி அடுக்குமாடி ஆடம்பரக் குடியிருப்பு.

ஆறு மாடி பிளாக்குகள் நான்கு.

ஒவ்வொரு பிளாக்கிலும் 24 பிளாட்டுகள்.

பிளாக்குகளில் லிப்ட் வசதியும் உண்டு.

நான்கு பிளாக்குகளுக்கும் நடுவே சதுரமாய் சிறுவர் விளையாடும் பூங்கா அமைந்திருந்தது. பூங்காவின் வலதுகை ஓரத்தில் பிள்ளையார் கோயில் ஒன்றும் இருந்தது.

வழக்கம் போல அபார்ட்மெண்ட் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன.

'பி' பிளாக்கின் ஆறாவது மாடியின் 'எண் 48' பிளாட் உயிர்த்தது.

கம்ப்யூட்டர் தாத்தா சுவர் கடிகாரத்தை ஏறிட்டார்.

மை டியர் குட்டீஸ்! இந்த கம்ப்யூட்டர் தாத்தாவை ஞாபகமிருக்கிறதா?

'அஷோக் துப்பறிகிறான்'-கதையில் வந்த அஷோக், மேகா, பூனை மிக்கி இவர்களை எளிதில் மறக்க முடியுமா நம்மால்?

ஆறுமாதம் அமெரிக்காவில் தங்கிவிட்டு முந்தின நாள்தான் இந்தியா திரும்பியிருந்தார் தாத்தா.

ஆஹா இன்று குழந்தைகளுக்கு கதை சொல்லும் நாள் அல்லவா?

மணி மாலை ஆறாக இன்னும் பத்தே நிமிடங்கள்.



தாத்தாவுக்கு கூடுதல் சுறுசுறுப்பு தொற்றிக் கொண்டது.

தர்பூசணி சாறு எடுத்து வைத்தார்.

பிஸ்கெட் பாக்கட்கள் பரப்பினார்.

போன தடவை சர்க்கஸ் கோமாளி வேஷம் போட்டவர் இம்முறை ராஜா வேஷம் போட்டார்.

கையில் ஒரு மணியை எடுத்துக் கொண்டார்.

பால்கனியில் வந்து நின்றார்.

அங்கிருந்து பார்க்க விளையாடும் சிறுவர்கள் அனைவரும் பொம்மைகளாகத் தெரிந்தனர்.

மணியை வேகவேகமாய் ஆட்டினார்.

'டிங் டிங் டிங்ங்ங் '

அவ்வளவுதான்....

விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் விளையாட்டை நிறுத்தினர்.

பால்கனியை நிமிர்ந்து பார்த்தனர்.

"ஹைய்யா கம்ப்யூட்டர் தாத்தா கதை சொல்லப் போறார்!"

"ஆமா.... இன்னைக்கி வெள்ளிக்கிழமை!"

"ஓடி வாங்கடா டோய்."

நாற்பதுக்கு மேற்பட்ட சிறுவர் சிறுமியர் உற்சாகமாய் குரல் எழுப்பியபடி 'பி' பிளாக்குக்கு ஓடினர்.

இன்னும் தாத்தா மணியை ஒலித்துக் கொண்டிருந்தார்.

நிமிடத்துக்கு நிமிடம் சிறுவர் சிறுமியர் எண்ணிக்கை கூடிக்கொண்டிருந்தது.

லிப்ட்டை புறக்கணித்துவிட்டு மாடிப்படியில் தபதப வென ஏறினர்.

ஐந்து நிமிடம் மணியை ஒலித்தபிறகு நிறுத்தினார் கம்ப்யூட்டர் தாத்தா.

ஆறுமாத பிரிவுக்கு பிறகு குழந்தைகளை பார்க்கும் ஆனந்தம் தாத்தாவை தாக்கியது.

ஆனந்தகண்ணீர் வடித்தார்.

ஒரே சமயத்தில் பத்துக்கு மேற்பட்ட குழந்தைகளை கட்டிக்கொண்டு முத்தமிட்டார்.

"சூர்யா அர்ச்சனா குண்டு வசந்த் தாச்சுக்குட்டி பிரவீன் சின்ன அர்ச்சனா அம்முலு புவனா கமலு எல்லாம் எப்படியிருக் கீங்க கன்னுக்குட்டிகளா?"

"போங்க தாத்தா உங்களோடு டூ-கா "

"ஏண்டா கமலு?"

"எங்களை விட உங்களுக்கு அமெரிக்கா பெரிசா போச்சோ?"

"இல்லடா இல்ல... அதான் ஓடிவந்துட்டேனே... எல்லா குட்டிகளும் வளர்ந்திருக்கீங்க..."

"நீங்களும் தான் தாத்தா " குண்டு வசந்த்.

"பொய் சொல்லாதடா வசந்த் "

"நிஜம்தான். உங்க தாடி வளர்ந்திருக்கு "

"எல்லாரும் உக்காருங்க புவனா எல்லாருக்கும் தர்பூசணிப்பழ சாறு கொடு "

புவனா பரிமாறினாள்.

குழந்தைகள் ரசித்து சாறு குடித்தனர்.

"வாயைத் துடைச்சிக்கங்க குட்டீஸ் "

துடைத்துக் கொண்டனர்.

"எல்லாரும் ஒழுங்கா படிக்கிறீங்களா? அம்மாப்பா பேச்சை கேட்கிறீங்களா? சுயசுத்தம் பேணறீங்களா?"

"அய்யோ தாத்தா. ஒவ்வொரு தடவையும் இதை கேக்கனுமாக்கும். உடனே உடனே லேட் பண்ணாம ஒரு சூப்பர் கதைய ஆரம்பிங்க தாத்தா "

மற்ற குழந்தைகளும். "ஆமா... கதைய ஆரம்பிங்க தாத்தா " கூவின.

சிரித்தார் கம்ப்யூட்டர் தாத்தா.

"பாருங்கடா அவசரத்தை. சரி இன்னைக்கி என்ன டைப் கதை சொல்ல?" கூட்டத்தை பார்த்து கேட்டார்.

குழந்தைகள் ஒன்றோடு ஒன்று கிசுகிசுத்துக் கொண்டன.

நட்டு எழுந்தான்.

"அஷோக் துப்பறிகிறானின் இரண்டாம் பாகம் சொல்லுங்களேன் தாத்தா "

"வேண்டாம் தாத்ஸ். அடுத்த தடவை சொல்லுங்க " என்றான் கமல்.

"பேய் கதை சொல்லுங்க தாத்ஸ் "

"வேண்டாம் வேண்டாம் "

"கம்ப்யூட்டர் தாத்தா ராஜாராணி கதை வேணும்..."

"வேண்டாம் வேண்டாம் "

"சயின்ஸ் கதை?"

"வேண்டாம் வேண்டாம் "

கமலும் வசந்தும் எழுந்தனர்.

பெப்ஸோடன்ட் விளம்பர பாணியில் மோதிக் கொண்டனர்.

"மை லார்ட் எனது எதிர்கட்சிக்காரருக்கு ராஜாராணி கதையின் அருமை தெரியவில்லை " என்றான் குண்டு வசந்த்.

"அப்ஜக்ஷன்... ராஜாராணிகதைகள் மூடநம்பிக்கையை அறியாமையை வளர்ப்பவை... விஞ்ஞான உண்மைகள் கொண்ட கதைகளே மூளையை வலிமைப்படுத்துகின்றன மை லார்ட் "

தாத்தா சிரித்தார்.

"விஞ்ஞானம் கலந்த ராஜாராணி கதை என்றால் இரட்டை மகிழ்ச்சிதானே பசங்களா?"

"மகிழ்ச்சிதான். ஓவரா விஞ்ஞானம் கலந்திராதீங்க "

"கதைல மந்திரம், தந்திரம் மாயாஜாலம் வரும்தானே?"

"வரும் "

"அரக்கர்கள், பூதங்கள், தேவதைகள் வருவார்களா?"

"வருவார்கள் "

"கதைல வேற என்னென்ன வரும் தாத்தா?"

"எல்லா அம்சங்களும் கலந்த ஒரு சூப்பர் கதை இது. எத்தனை வருஷமானாலும் மறக்கமாட்டீர்கள். ஞாபகம் வைத்திருந்து இக்கதையை உங்கள் குழந்தைகளுக்கும் ஏன் பேரன் பேத்திகளுக்கும் கூட சொல்லுவீர்கள் "

"ஆஹா நீங்கள் சொல்லச் சொல்ல கதை மீது எதிர்பார்ப்பு கூடுகிறதே "

"வழக்கம் போல கதையில் புரியாத இடங்களில் விளக்கம் கூறுவீர்கள் தானே?"

"நிச்சயமா குட்டீஸ் "

"அப்புறமென்ன? கதையின் தலைப்பை எடுத்து விடுங்க தாத்தா "

பிகு பண்ணினார் தாத்தா.

"ஓம் ரீம் கரீம் ரிம்ஜிம்பம்.... கதையின் தலைப்பு 'ஆப்பிள் தேவதைகள் " குண்டு வசந்த் வியந்தான்.

"ஆப்பிள் தேவதைகள் 'தலைப்பைக் கேட்டாலே கடித்துத் திங்கணும் போல இருக்கு. அடுத்தடுத்து தக்காளி தேவதை, ஆரஞ்சு தேவதை, அன்னாசி பழத்தேவதை, பப்பாளி தேவதைன்னு கதை சொல்லுங்க தாத்தா... கதையை காதாரக் கேட்டே பசியாறலாம் "

அர்ச்சனா எழுந்தாள்.

"உக்காருடா தின்னிப்பய்யா. 'ஆப்பிள் தேவதைகள்'னா ஆப்பிள் மாதிரி அழகான தேவதைகள்னு அர்த்தம்டா. அப்டித்தான தாத்தா?"

"ஆமா அர்ச்சுக்குட்டி " ஆமோதித்தார் தாத்தா.

"ஓகே.... கதைய ஆரம்பியுங்க தாத்தா "

எல்லா குழந்தைகளும் சம்மணமிட்டு அமர்ந்து முனைப்பாக தாத்தாவையே கவனித்தன.

கதையின் ஆரம்ப வரிகளுக்காக தாத்தா திணறினார்.

சொல்ல நினைத்திருந்த கதையை அசை போட்டு ஒரு வடிவத்துக்கு கொண்டு வந்தார்.

இதிலேயே பத்து நிமிடங்கள் போயின.

கடிகாரத்தின் டிக்டிக் சப்தம் கூட பெரிதாய் கேட்டது.

குழந்தைகள் காத்திருந்தன.

திடீரென்று தாத்தாவின் முகம் பிரகாசித்தது.

கதையை ஆரம்பித்தார்.

குழந்தைகள் கைதட்டி ஆரவாரம் செய்தன. வசந்த் விசிலடித்தான். தாத்தா முறைத்தார். வசந்த் மன்னிப்பு கேட்கும் பாவனையில் கும்பிட்டான்.

"ஒரு ஊர்ல மூணு நண்பர்கள் இருந்தாங்க. மூவரில் இருவர் பொம்பிளை பிள்ளைகள். ஒருத்தன் ஆம்பிளைப்பய்யன். பொம்பிளைப்பிள்ளைகளின் பெயர்கள் ஆர்த்தி, சக்தி. இருவருக்கும் வயசு பத்து. அஞ்சாம் கிளாஸ் படிக்கிறவங்க. ஆர்த்தி பார்க்க குட்டி ஐஸ்வர்யாராய் மாதிரி இருப்பா. சக்தி குட்டி குஷ்பு ஆனா குண்டு கம்மி. ஆம்பிளைப்பய்யன் பேரு நடராஜ். சுருக்கமா செல்லமா நட்டு. பாக்றதுக்கு சின்னவயசு அஜித்குமார் மாதிரி இருப்பான். இந்த மூன்று பேரும் எங்க போனாலும் சேந்தே போவாங்க சேந்தே வருவாங்க "

"பாத்ரூமுக்கு கூடவா?" என குறுக்கிட்டான் வசந்த்.

"குசும்பு கேள்வி கேக்காம உக்கார்ரா பப்பலோ. நீங்க கதைய கண்டினியூ பண்ணுங்க தாத்தா " என்றாள் அம்முலு.

"இந்த மூணு பேரும் ஒரு நா தோட்டத்தைக் கொத்தி ரோஜாச்செடி நட முயற்சி பண்ணிக்கிட்டு இருந்தாங்க "

"ம்..."

"ஏறக்குறைய ரெண்டு அடி ஆழத்துக்கு குழி வெட்டி யிருந்தான் நட்டு இன்னும் குழியை ஆழப்படுத்த முயன்றபோது குழிக்குள் 'டிங் ' என்ற சப்தம் கேட்டது "

"ஓவ் அப்றம் அப்றம்?"

"நட்டு குழி அருகே முழங்காலிட்டு மண்ணை கைகளால் விலக்கினான். மெதுமெதுவா ஒரு பாட்டில் தென்பட்டது. பாட்டிலை கைல எடுத்தான் பாட்டில் கலர் கலரா மின்னுச்சு. நட்டு மூஞ்சி டாலடிச்சுச்சு. யாருக்குமே புரியாத மொழில பாட்டில் மர்மமா சிரிச்சது " நிறுத்தினார்.

O

# 2

**வ**சந்த் குறுக்கிட்டான்.

"என்ன தாத்தோவ் கதை சொல்றீங்க.... பாட்டிலுக்கு... உயிர் இல்ல.. பின்ன அது எப்டி சிரிக்கும்?"

"அடேய் வசந்த்து கதைல வர்ற வரிகளுக்கு நேரடியா அர்த்தம் பாக்கக்கூடாது. தவிர இது ஒரு மாயாஜாலக் கதை! சமயங்கள்ல உயிர் இல்லாதவைகளும் மிருகங்களும் பறவை களும் மனுச பாஷைல பேசும். அப்பயும் நீ மூக்க நீட்டக்கூடாது "

வசந்த தலையாட்டினான். தாத்தா கதை சொல்ல ஆரம்பித்தார்.

-பாட்டிலை கையில் எடுத்து பார்த்தான் நட்டு.

அடிப்பகுதி உருண்டையாய் இருந்தது. அதன் மேல் நீளமான கழுத்து கழுத்தின் மேல் வித்தியாசமான மூடி.

பாட்டிலின் வெளிப்புறங்களில் ஒட்டியிருந்த மண்ணை துடைத்தான் நட்டு.

பாட்டிலை ஆட்டி பார்த்தான்.

எந்த சப்தமும் எழவில்லை.

"நட்டு பாட்டிலை தூக்கி சூரியவெளிச்சத்தில பாரு. உள்ள வேற எதாவது இருந்தா தெரிஞ்சிரும் " என்றாள் ஆர்த்தி.

பாட்டிலைத் தூக்கி சூரியவெளிச்சத்தில் பார்த்தான் நட்டு.

உள்ளே ஆயிரம் விதமான வர்ணங்கள் நெளிந்தன.

வர்ணங்கள் நட்சத்திரங்கள் போல மின்னின.



சக்தி, "டேய் நட்டு நீ பாட்டிலை தூக்கி பாக்ரப்ப உன் மூஞ்சில ஆயிரம் நட்சத்திரங்கள் முளைச்சமாதிரி இருக்கு..." வியந்தாள்

"நான் நிறைய கதைகள் படிச்சிருக்கேன். பழைய காலத்ல பாட்டில்கள்ல பேய்களையும் பூதங்களையும் அடைச்சுவச்சு மந்திரவாதிகள் கடல்ல விட்டு எறிஞ்சிருவாங்களாம். இங்க என்னடான்னா பாட்டில் நம்ம தோட்டத்லயே கிடைச்சிருக்கு. எந்த சோம்பேறி மந்திரவாதி இந்த பாட்டிலை நம்ம தோட்டத்ல புதைச்சு வச்சானோ?" என்றாள் ஆர்த்தி.

சக்தி சிரித்தான். "ரொம்ப பெருசா கற்பனை பண்ணாத ஆர்த்தி. இது சாதாரண ஆராய்ச்சிக்கூட பாட்டிலாய் இருந்தாலும் இருக்கக்கூடும் "

"பாட்டில்ல கலர் கலரா தெரியுதே?"

"எதாவது கெமிக்கலா இருக்கும். கெமிக்கல்னா தமிழ்ல ரசாயனம். நாம சோத்ல சேத்துக்கிர உப்புகூட ஒரு கெமிக்கல்தான் சோடியம் குளோரைடுன்னு பேரு "

"பாட்டிலைத் திற. உள்ளே கெமிக்கல் இருக்கான்னு பாத்திரலாம் " என்றாள் ஆர்த்தி.

"இதோ திறக்கிறேன் " பாட்டிலின் மூடியை திருகி திறக்க முயன்றான் நட்டு.

மூச்சை முழுக்க நிறுத்தி முழுபலம் உபயோகித்தான்.

ம்ஹிம்!

பற்களை இறுக்க் கடித்துக்கொண்டு முயற்சித்தான்.

உள்ளங்கை வரிவரியாய் சிவந்து போனது.

"ஏண்டா நட்டு நீ பாட்டிலை திறக்றியா, மூடுறியா? பீச்சாங்கைலயிருந்து சோத்து கைபக்கம் மூடிய திருகினாத்தான் திறக்கும்." என்றாள் சக்தி.

"ஏண்டி முண்டம் நீ அறிவாளி நான் முட்டாளாக்கும். நான் முன்னபின்ன பாட்டில்களை திறந்ததே இல்லையாக்கும். உன் வாய் வீரத்தை என்கிட்ட காட்டாதே. இந்தாடி பாட்டில். நீ திறந்து காட்டு பார்ப்பம் "

"ரொம்பத்தான் ரோஷப்படாதே" வாங்கி பாட்டிலைத் திறக்க முயற்சித்தாள் சக்தி.

பாட்டிலை ஜல்லிக்கட்டு காளை போல பாவித்து அதன் கொம்புகளை பிடிப்பதை போல பாட்டிலின் மூடியை பிடித்து திருகினாள் சக்தி.

கராத்தே வீராங்கனை போல 'ஆ ஊ ' என கத்தினாள்.

தரையில் உருண்டு பாட்டிலுடன் அல்லாடினாள்.

நட்டு விழுந்துவிழுந்து சிரித்தான்.

"இவளுக்கு என்ன ஆச்சு ஆர்த்தி? பாட்டிலைத்தானே திறக்கச் சொன்னோம்? பாட்டில் கூட சண்டையா போடச் சொன்னம்? கழுதை மாதிரி தோட்டத்து மண்ல உருளுரா பாரு..."

ஆர்த்தி முன் வந்தாள்.

"நான் என் பங்குக்கு பாட்டிலைத் திறக்க முயற்சி பண்றேன்."

பாட்டிலை வாங்கி தரையில் வைத்தாள்.

இரு உள்ளங்கைகளையும் மண்ணில் தேய்த்து சொர சொரப்பு ஏற்றிக் கொண்டாள்.

"முருகா இந்த பாட்டிலை என் கையாலத் திறக்க வை. சக்தி நட்டு முன்னாடி எனக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்திக் குடு."

கைகூப்பி வேண்டினாள்.

"ஜெய் ஆஞ்சநேயா " பாட்டிலை எடுத்தாள்.

பாட்டிலுடன் போராடினாள்.

ம்ஹிம். பாட்டிலின் மூடி சிறிதும் அசைந்து கொடுக்க வில்லை.

தலையில் இருகைகளையும் வைத்தபடி சோர்ந்து அமர்ந்தாள் ஆர்த்தி.

"பாட்டிலை திறக்க ஒரு ஐடியா வச்சிருக்கேன் "

"என்ன? என்ன?" என்றனர் ஆர்த்தியும் சக்தியும்.

"நான் எச்சி பண்றேன்னு நினைச்சிரக்கூடாது நீங்க. நான் வீட்ல நிறைய டானிக் பாட்டில் எல்லாம் வாயால கடிச்சு திறந்திருக்கேன். இவ்ளவு ஏன்? பெப்சி, கோகோ கோலா பாட்டில்களைக்கூட ஓபனர் இல்லாம கடிச்சுத்திறந்திருக்கேன். இந்த பாட்டில் மூடியையும் கடிச்சு திறந்திரவா?"

"ம்ப்ச். ஒரு நேரம் மாதிரி ஒரு நேரம் இருக்காது. கடக்னு உன் கடைவா பல்லுகள் நொறுங்கிரும். சின்னவயசுலயே தாத்தா ஆய்டுவ. அப்றம் முறுக்கெல்லாம் உனக்கு உரல்ல இடிச்சுத்தான் தர வேண்டிருக்கும் "

"கேலி பண்றதை நிறுத்ரீங்களா கொரங்குகளே.. சீரியஸா யோசிப்பம் " என்றான் நட்டு.

"நாம மூணுபேரும் சின்னப்புள்ளைங்க. பெரிய மனுசன்னா பலம் ஜாஸ்தியா இருக்கும். தோட்டக்காரர் கிட்ட குடுத்து திறக்கச் சொல்லுவமா?"

"அதுலயும் ஒரு பிரச்சனை இருக்கு. அப்டி அவர் திறந்தா உள்ள எதாவது பொருள் இருந்தா அவர் வச்சுப்பார். எதுவும் இல்லைன்னா இதுக்கா இத்னை கூத்துன்னு கிண்டல் பண்ணுவார். வேணாமே?" என்றான் நட்டு.

"நம்ம அம்மாப்பாகிட்ட குடுத்து திறக்கச் சொல்லுவமா?" என்றாள் ஆர்த்தி.

"அவங்ககிட்டயும் அதே பிரச்சனைதான் வரும் " என்றான் நட்டு.

"பாட்டிலோட கழுத்துப்பக்கத்தை உடைச்சுப் பாத்துட்டா?" சக்தி.

"எப்பவும் உடைக்றது கவிழ்க்கிறதிலேயே இரு. ஆக்கப்பூர்வமா யோசி சக்தி "

தோட்டம் சக்தியின் பெற்றோருக்கு உரியது.

சக்தியின் அப்பா குரல் கொடுத்தார்.

"மூணு அரை டிக்கட்டுகளும் தோட்டத்ல மூஞ்சூறுக மாதிரி என்ன பண்றீங்க?"

மூவரும் பால்கனிக்கு அண்ணாந்தனர்.

நட்டுவின் கை மெதுவாக பாட்டிலை முதுகுக்கு பின்னால் ஒளித்தது.

"நல்ல காரியம்தான் பண்றம். ரோஜாச்செடி நடுகிறோம்"

"இதுக்கு இவ்வளவு நேரமா?"

"ஆடிப்பாடி வேலை செஞ்சா அலுப்பு இருக்காதுன்னு தமிழ்ல ஒரு பழைய பாட்டு இருக்கே அங்கிள். நாங்க கதை பேசிக்கிட்டே வேலை செய்ரோம் "

குழிக்குள் முட்டை ஓடுகள், ஆட்டுப்புழுக்கை, தேயிலைத்தூள் சக்கை கொட்டினர்.

ரோஜாச்செடி நட்டு மண்ணை விரவினர்.

சக்தியின் அப்பா திருப்தியானர். "ரொம்ப நல்ல காரியம் பண்றீங்க குட்டிகளா. நாம வசிக்ற பூமியை ஒருமனுசனா நினைச்சிக்கங்க. மனுசன் மூச்சு விட நுரையீரல்கள் தேவை. நம்ம நுரையீரல்கள் ரோஸ் நிறத்ல இருக்கும். பூமி மனுசன் மூச்சு விட மரங்கள் தேவை. மரத்தின் இலைகள் நிறம் பச்சை. ஆகவே பூமி மனுசனுக்கு மரங்கள் பச்சை கலர் நுரையீரல்கள். ஒவ்வொரு மனுசனும் ஆணோ பெண்ணோ குறைஞ்சது ஆளுக்கொரு மரம் நடணும். மரங்கள் அதிகமாக அதிகமாக பூமி குளிர்ச்சி ஆகும். நிறைய மழை பெய்யும். விவசாயம் செழிப்பமா நடக்கும். எல்லா மனுசங்களுக்கும் குடிக்கத்தண்ணி கிடைக்கும் "

நட்டு கிசுகிசுத்தான் சக்தியிடம். "ஆஊன்னா உங்கப்பா பக்கம் பக்கமா அறுக்க ஆரம்பிச்சிருவாரு. அவர் பேசுனாலே தாலாட்டுப்பாட்டு கேக்ற மாதிரி இருக்கு."

சக்தி கிள்ளினாள்.

"யாரு நல்லது சொன்னாலும் உனக்கு அவங்களை புடிக்காது நட்டு. உன் களிமண் மூளைக்கு ஜீரணிக்கும் சக்தி கம்மி "

சக்தியின் அப்பா உள்ளே போய் விட்டார்.

"எனக்கு களிமண் மண்டைன்னா என் கூட ஏண்டி ப்ரண்டு ஆனீங்க? நான் தேர்டு ஸ்டாண்டர்டு. உங்கள விட ரெண்டு வயசு கம்மி. அதுக்காக என் முதுகுல ஏறி கூத்தாடாதிங்க."

ஆர்த்தி சமாதானப்படுத்தினாள்.

"நாம சண்டை போட்டுக்கக்கூடாது. நம்ம மூணு பேர்ல யாருமே முட்டாள் கிடையாது. இப்ப பாட்டில் விஷயத்தை பேசுங்க" என்றாள் ஆர்த்தி.

"என்ன பண்ணலாம்?" முகவாயில் விரல் தட்டி யோசித்து நிமிர்ந்தான் நட்டு.

"ஆர்த்தி, சக்தி இந்த செடி மறைவிலேயே இந்த பாட்டில் பகல் முழுவதும் இருக்கட்டும். ராத்திரி நாம மூணுபேரும் கூடி பாட்டிலை எப்படி திறக்றதுன்னு புதுசா விவாதிப்போம்..."

இரண்டு சிறுமிகளும் தலையாட்டினர்.

நட்டு பாட்டிலை எடுத்து ஒரு பெரிய செடிக்குப்பின் ஒளித்து வைத்தான் அதன்மேல் கிளைகள் பரப்பினான்.

மூவரும் பிரிந்தனர்.

இரவு.

தோட்டத்துக்கு மூன்று உருவங்கள் பதுங்கிபதுங்கி வந்தன.

ஆர்த்தி, சக்தி, நட்டு.

நட்டு கிளைகள் துழாவி பாட்டிலை எடுத்தான்.

"யாரும் எடுத்துட்டுப் போயிருப்பாங்களோன்னு பயந்துக் கிட்டு இருந்தேன் "

பகலில் பார்த்ததற்கும் இரவில் பார்ப்பதற்கும் பாட்டில் தோற்றத்தில் ஏகப்பட்ட வித்தியாசங்கள்.

பாட்டிலிலுள்ள வர்ணங்கள் மாறியிருந்தன.

கதைக்குள் அர்ச்சனா குறுக்கிட்டாள்.

"என்ன தாத்தா... சஸ்பென்ஸை கூட்டிக்கிட்டே போறீங்க... பாட்டிலுக்குள்ள அப்படி என்னதான் இருக்கு?"

தாத்தா சிரித்தார்.

"கவலைப்படாதிங்க குட்டிகளா.. உங்க எதிர்பார்ப்பை புஸ்வானம் ஆக்கிரமாட்டேன். மீதிக்கதைய கேளுங்க " தாத்தா கதைக்குள் பாய்ந்தார்.

பாட்டிலைத்திறக்க ஸ்பானர் போன்ற ஒரு கருவி கொண்டு வந்திருந்தான் நட்டு.

"ஏதுடா?"

"மெக்கானிக் டூல்பாக்ஸிலிருந்து திருடினேன் "

"திருடுனது தப்பில்ல?"

"ஆபத்துக்கு பாவமில்லை "

ஸ்பானரை பாட்டில் மூடியுடன் இணைத்தான்.

பாட்டிலை இரு சிறுமிகள் பிடித்துக்கொள்ள-

ஸ்பானரை பிடித்து இடத்திலிருந்து வலதிசை சுழற்றினான்.

கிர்ரக்.

மீண்டும் முயற்சித்தான் நட்டு.

கிர்ரக். கிர்ரக்.

மீண்டும் மீண்டும்...

மூடி அசைந்து கொடுத்தது. சரசரவென சுழன்றது.

மேலும் மேலும்...

டொபக்

மூடி முழுக்க சுழன்று தனியே விழுந்தது.

மூவரூம் திறந்த பாட்டில் வாயை உன்னித்தனர்.

"கடவுளே "

மூவரும் வானம் வெடிக்கக் கூவினர்.

பாட்டிலிலிருந்து வரிசை வரிசையாக...

# 3

**வ**ட்டம் போட்டு ஆர்த்தி, சக்தி, நட்டு குத்துக்காலிட்டு அமர்ந்து திறந்திருந்த பாட்டிலை கண் இமைக்காமல் பார்த்தனர்.

கண்களை அகட்டி பெரிதாய் ஆச்சரியப்பட்டனர்.

பாட்டிலிலிருந்து-

புறாக்கள் பறந்தோடின.

தோகை விரித்த மயில்கள் வெளியேறின.

வானவில்கள் தெறித்தன.

நட்சத்திரங்கள் தெறித்தன.

கிளிகளும் குயில்களும் பாட்டு இசைத்தன.

கோடி பூக்கள் ஒரே சமயத்தில் பூத்தது போல் கமகம வாசனை எழுந்தது. வண்ணத்துப்பூச்சிகள் படபடத்து உயர்ந்தன.

புல்லாங்குழல் இசை வழிந்தது.

இது எல்லாம் நடக்கப்போகும் அதிசயத்துக்கு முன்னோட்டம்தான்

சிலநொடிகள் கரைந்தன.

கண்ணை பறிக்கும் வெள்ளைகவுனும் தங்க சரிகை வேலைப்பாடுகள் கொண்ட மேற்சட்டையும் அணிந்த ஒரு தேவதை வெளிப்பட்டாள். ஒரு செண்டிமீட்டர் உயரம் இருந்தாள். தலையில் கிரீடம். வலதுகையில் மந்திரக்கோல். இமை இல்லாத பொம்மை கண்கள். சீன பெண்களுக்கு இருப்பதுபோல அமுங்கிய குட்டி மூக்கு. குட்டி வாய். இரு விலாவிலும் பறக்க இறக்கைகள்.

வெளிப்பட்ட தேவதை காற்றில் மிதக்க-

பாட்டிலிலிருந்து இன்னொரு தேவதை வெளிப்பட்டாள்.

முந்தின தேவதைக்கும் பிந்தின தேவதைக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். இரண்டாவது தேவதை ரத்த நிறத்தில் கவுன் அணிந்திருந்தாள்.

தொடர்ந்து-

நூற்றுக்கும் மேற்பட்ட தேவதைகள் வெளிப்பட்டன.

ஒவ்வொரு தேவதையும் ஒரு நிறம்.

மூவரின் பிடியில் இருந்த பாட்டில் உடைந்து சிதறியது.

மூவரின் முகத்துக்கு நேராக தேவதைகள் நடனமாடின.

அழகிய நடனம்.

கண்ணை பறிக்கும் நடனம்.

டாலடிக்கும் நடனம்.

நடனம் ஆடியபடியே கூட்டமாய் பாடின.

"தேவனே தேவனே

இதய நன்றி தேவனே -

சிறைபட்டுக் கிடந்த எங்களை

மூன்று சிறார் அனுப்பி

விடுதலை தந்ததற்கு

நன்றி நன்றி தேவனே

லலா லலா லலாலா

லால லாலலல்லா"

பாட்டின் அர்த்தம் புரிந்து கொண்டதும் நட்டு அண்ட் கோவுக்கு ஆனந்தம் தாளவில்லை.

எழுந்து மூவரும் தேவதைகளுடன் நடனமாடினர்.

சிறிதுநேரம் ஆடியபின் தேவதைகள் காற்றில் மிதந்தன.

நட்டு ஆடுவதை நிறுத்திவிட்டு தேவதைகளை ரசித்தான்.

"ஹைய்யா...ஜாலியா இருக்கு... தேவதைகளோட டான்ஸ் வேற ஆடிக்கிட்டு "

ஆர்த்தி கிள்ளினாள்.

"நட்டு அவங்களோட பேசுடா "

நட்டு, "தேவதைகளே உங்களைத் தொட்டு பார்க்க ஆசையா இருக்கு... தொட்டு பாக்கலாமா?"

தேவதைகள் தலையாட்டின.

தேவதைகளை பிடித்தனர்.

ஒவ்வொருவர் கையிலும் முப்பதுக்கும் மேற்பட்ட தேவதைகள்.

தேவதைகளின் உடம்பு வண்ணத்துப்பூச்சி உடம்பு போல மிருதுவாய் இருந்தது.

"நட்டு பாத்துடா... இறக்கை எல்லாம் வெல்வெட் மாதிரி இருக்கு. முரட்டுத்தனமா தொட்டு உதிர்ந்திரப் போகுது "

தேவதைகள் சிரித்தன.

"அச்சச்சோ நூறு ஐஸ்வர்யா ராய் குட்டிகுட்டியா நின்னு சிரிச்ச மாதிரி இருக்கு. சாமி நடக்றதெல்லாதம் கனவா, நிஜமா? கனவுன்னாலும் உடனே கலைஞ்சு போயிராம பாத்துக்கணும்"

ஆர்த்தி பேச ஆரம்பித்தாள்.

"உங்களுக்கு தமிழ் தெரியுமா?"

"இப்ப தமிழ்லதான பாடினோம்?"

"அப்டின்னா தமிழ்மட்டும்தான் உங்களுக்குத் தெரியுமா?"

"இல்லை. எங்களுக்கு பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பாஷைகள் தெரியும் "

"நீங்கல்லாம் தேவதைகள்னு பாத்தா தெரியுது உங்க இருப்பிடம் எது?"

"ஏழாம் வானத்துக்கு அப்பால் எங்க இருப்பிடம் இருக்கு"

"அப்டின்னா?"

"உங்களது மாதிரி இன்னும் ஆறுவானம் தாண்டிப் போகணும் எங்க உலகத்துக்கு "

"உங்க உலகத்தோட பேரென்ன?"

"தேவதை கிரகம் "

"சூரியனைத் தாண்டியிருக்குமா உங்க தேவதை கிரகம்?"

தேவதைகள் சிரித்தனர்.

"உங்க கணக்கு வேற. எங்க கணக்கு வேற. நொடிக்கு மூணு லட்சம் கிலோமீட்டர் வேகத்ல நீங்க பறந்தாலும் எங்க கிரகத்தை அடைய எட்டாயிரம் வருஷம் ஆகும். ஆனா நாங்க இங்கிருந்து எங்க கிரகத்துக்கு கண் மூடி கண் திறக்கிறதுக்குள்ள போய்டுவம்."

"அது எப்படி தேவதைகளா?"

"காலம்ன்றது பூமில வசிக்ற மனுசங்களுக்குத்தான். உங்களுக்குத்தான் ராத்ரி பகல் எல்லாம் உண்டு. உங்க மனுச உடம்பை வச்சுக்கிட்டு நீங்க எந்த நட்சதத்திரத்துக்கும் பறந்து போயிர முடியாது. இது கடவுள் தாத்தாவோட படைப்பு சூட்சமம். உங்க கைல வாட்ச் கட்டிருக்கீங்க. எங்க கைல வாட்ச் இல்லை பாத்தீங்களா?"

"ஆமாம். சரி தேவதைகளா, உங்களுக்கு எல்லாம் என்ன வயசாகுது?"

மீண்டும் தேவதைகள் சிரித்தனர்.

"எங்களுக்கு பிறப்பும் கிடையாது இறப்பும் கிடையாது பசியும் கிடையாது தூக்கமும் கிடையாது. இதே அளவில் எங்களை கடவுள் படைத்துள்ளார். நாங்கள் எல்லா கிரகங்களும் சுத்தி வருவோம். மனுசங்களுக்கு நல்லது செய்வோம் "

"உங்க கிரகத்ல மொத்தம் எத்தனை தேவதைகள் இருப்பீங்க?"

"கோடிக்கணக்கில் இருக்கிறோம் "

"ஆம்பிளை தேவதைகள் எவ்வளவு பொம்பிளை தேவதைகள் எவ்வளவு?"

மீண்டும் சிரிப்பு.

"தேவதைகளுக்கு ஆண்பால் பெண்பால் கிடையாது. ஆனால் எங்கள் தோற்றத்தையும் குரலையும் ஆடையையும் கவனிச்சா பெண் அம்சம் தான் அதிகம் எங்ககிட்ட காணப்படும்"

"கேக்க கேக்க ஆச்சரியமா இருக்கு. உங்களுக்கெல்லாம் பெயராவது உண்டா? அல்லது அதுவும் கிடையாதா?"

"உண்டு. ஆனால் எங்க பெயர் மனுசங்க வாய்ல ஈஸியா நுழையாது "

"பரவாயில்லை... சொல்லுங்க தேவதைகளா "

தேவதைகள் வரிசை அமைத்து பெயர்களை கூற ஆரம்பித்தனர்.

"பிங் பிங் பியா "

"மினுமினு மினுக்கியோ "

"ஜரோ ஜவா "

"டுஷ் "

"குய் "

"டிக்கிலி "

"பக்லூஷ் "

"என்னங்க தேவதைகளா உங்கள் பேரெல்லாம் சீனக் காரங்க பேரு மாதிரி இருக்கு. பத்துதடவை சொன்னாலே வாய் சுளுக்கிக்கும் போல இருக்கு "

"குழந்தைகளா, உங்க பேரென்ன?"

"இவ பேரு அம்ஜக்கா ஜிம்ஜக்கா ஆர்த்தி " ஆர்த்தியை சுட்டி கேலியாக கூறினான் நட்டு.

"பேரு இவ்வளவு நீளமா இருக்கு " தேவதைகள் வியந்தார்கள்.

"இவன் உங்களை கிண்டல் பண்ணுதான். நா சொல்ரேன். என் பேரு ஆர்த்தி. இவ பேரு சக்தி. இந்த வாயாடிப்பய பேரு நடராஜன். சுருக்கமா 'நட்டு'ன்னு கூப்பிடுவம். நாங்க அஞ்சாங்கிளாஸ் படிக்கிரம் இந்த குள்ளப்பய மூணாங்கிளாஸ் படிக்கிரான்." அறிமுகம் செய்து வைத்தாள் ஆர்த்தி.

"உங்க உலகத்ல பள்ளிக்கூடம் கிடையாதில்ல?"

"ஆமா..."

"அதிஷ்டக்காரத் தேவதைகள். அறுவை டீச்சர்ககிட்டயிருந்து தப்ச்சீங்க. கிளாஸ்ல நாங்க எதாவது தப்பு செஞ்சோம்னு வையுங்கள். வீட்ல இருக்ற கோபத்தை எல்லாம் சேத்து வச்சு எங்களை பின்னிருவாங்க பின்னி " என்றான் நட்டு.

"நீ நினைக்றது தப்பு நட்டு. பொதுவாகவே டீச்சர்க நல்லவங்கதான். அவங்க உங்களைத் கண்டிக்றதும் சமயங்கள்ல அபூர்வமா அடிக்றதும் உங்க நல்லதுக்குதான். நீங்க டாக்டரானா இன்ஜீனியர் ஆனா உங்க பெற்றோரை விட அவங்களுக்குத்தான் சந்தோஷம் அதிகம் "

"பொதுவா தேவதைகளோட வேலைதான் என்ன?"

"குறிப்பிட்டு கட்டாயமா எந்த வேலையும் கிடையாது. கடவுள் தாத்தா பூமி மனுசங்க பேரச் சொல்லி அவங்களுக்கு எதாவது உதவி செஞ்சுட்டு வரச் சொல்லுவாரு.. செய்வோம்.... இதுதவிர கிரகம் கிரகமா சுத்துவம். நட்சத்திரங்களோட விளையாடுவோம். எங்களுக்கு பூக்கள்னா கொள்ளைப் பிரியம். வண்ணத்துப் பூச்சிகள்னா கொள்ளைப்பிரியம். முருகன் சாமி மயில் ஏறி வரும். பிள்ளையாரோட வாகனம் மூஞ்சுறு. திருமால் சயனம் கொள்ளும் இடம் அஞ்சு தலை நாகம். ஐயப்பனின் வாகனம் புலி. எங்களின் வாகனம் வண்ணத்துப்பூச்சிகள். வண்ணத்துப் பூச்சிகளை கொல்ற மனுசங்களுக்கு சொர்க்கத்தின் வாசலில் கூட இடம் கிடையாது "

"நல்லா சொல்லுங்க தேவதைகளா.. இந்த நட்டுப்பயதான் சதா வண்ணத்துப்பூச்சி வேட்டையாடுவான் "

நட்டு கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

"இனிமேலும் சாமி சத்யமா வண்ணத்துப்பூச்சிகளை பிடிக்க மாட்டேன். பிடிச்சவரைக்கும் மன்னிச்சிருங்க "

"மன்னித்தோம் "

சிறிதுநேரம் மௌனம் நிலவியது.

பின் மூவரும் கூடி கிசுகிசுத்தனர்.

"என்ன ரகசியம் குழந்தைகளா?" தேவதைகள் வினவினர்.

"இல்ல... இவ்ளவு தகவல் கேட்டம்... ஆனா ஒண்ணே ஒண்ணு கேக்க மறுந்துட்டோம்.."

"பயப்படாம கேளுங்க "

"பூமிக்கு மனுசங்களுக்கு நல்லது செய்ய வருவோம்னு சொன்னீங்க.. சரி... ஆனா... நீங்க அம்புட்டு பேரும் அடைச்ச பாட்டிலுக்குள்ளல்ல சிறைபட்டுக்கிடந்தீங்க... அது எப்டி? நீங்களா இந்த பாட்டிலுக்குள்ள போனீங்களா?... அல்லது யாராவது வலுக் கட்டாயமா உங்களை இதுக்குள்ள போட்டு பூட்டி வச்சாங்களா?"

நட்டு இந்த கேள்வியை சாதாரணமாகத்தான் கேட்டான்.

ஆனால் தேவதைகளின் முகம் அழுவது போல மாறிற்று.

சில தேவதைகளின் கை கால்களும் இறக்கைகளும் நடுங்கின.

ஒன்றை ஒன்று தேவதைகள் பார்த்துக் கொண்டன.

பின் ஒரு தேவதை அனைத்து தேவதைகள் சார்பாக பேச ஆரம்பித்தது.

"குழந்தைகளே நாங்கள் பாட்டிலில் இருந்து விடுதலை யானதும் முதலில் உங்கள் மூவருக்கும் எங்கள் நன்றியை தெரிவித்திருக்க வேண்டும். பேச்சு சுவாரசியத்தில் மறந்து விட்டோம். மன்னியுங்கள். குழந்தைகளா இந்த பாட்டில் சிறையி லிருந்து விடுவித்த உங்க மூவருக்கு எங்களது நன்றி நன்றி நன்றி. இந்த பாட்டிலில் பூமி கணக்குக்கு ஆயிரம் வருடங்களாய் சிறை கிடந்தோம். யாரும் மீட்கவில்லை. இடையில் சிலர் எடுப்பார்கள் பாட்டிலுக்குள் எந்த தங்கக்காசும் காணாமல் விட்டெறிந்து விட்டு போவார்கள். நீங்கள் கூட விடுவிப்பீர்களோ அல்லது தூக்கி எறிவீர்களோ என பயந்தோம். ஆனா விடாப்பிடியாக முயற்சித்து வெற்றி கண்டுவிட்டீர்கள் "

"தேவதைகளே நன்றி என்கிற வார்த்தைகள் வெறும் சம்பிர தாயம். ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான தேவதைகளை தரிசிக்கும் பாக்கியம் எங்களுக்கு கிடைத்ததே.... அதற்கு நாங்கள்தான் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும். விடுவிக்கப்பட்டவுடன் பறந்து செல்லாமல் எங்களுடன் பேசிக் கொண்டிருக்கும் உங்களுக்கு நன்றி செலுத்தவேண்டும்"

"நன்றி-பதில் நன்றி " பரிகசித்தாள் ஆர்த்தி. "எங்களுக்கு முன் உள்ள பிரமாண்டமான கேள்வி உங்களை பாட்டிலுக்குள் சிறை பிடித்தது யார்? என்ன நடந்தது?"

தேவதைகள் பெருமூச்சு விட்டனர்.

"அது ஒரு பெரிய கதை. பூமி கணக்ல ஆயிரம் வருஷத்துக்கு முன்னாடி ஒரு நாள்..." கதையை நிறுத்தி சிரித்தார் கம்ப்யூட்டர் தாத்தா.

○

# 4

கம்ப்யூட்டர் தாத்தா கதை கூற ஆரம்பித்தார். "இந்த அத்தியாயம் முழுவதும் 'பிளாஷ் பேக்' தான் "

"பிளாஷ் பேக்னா என்ன தாத்?" என்றான் கமல்.

"பல வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியை தற்சமயம் மீண்டும் நினைத்து அசை போடுவது பிளாஷ்பேக் ஆகும். இங்கு பிளாஷ்பேக் என்னன்னா ஆயிரம் வருஷத்துக்கு முன்னாடி தேவதைகள் பாட்டிலில் போய் சிக்கியது-எப்டின்றதுதான். ஓகே. பிளாஷ்பேக்குக்கு போவம் " என்றார் தாத்தா.

பராக்கிரம சோழனின் அரண்மனை.

அந்தப்புரம்.

வசந்த் குறுக்கிட்டான். "அந்தப்புரம்னா?"

அர்ச்சனா பாய்ந்தாள். "இதுக்கு தாத்தா என்ன பதில் சொல்லுவது. நானே சொல்றேன். குண்டா நீ ராஜாராணி கதைகளே படிச்சதில்லையா? அந்தப்புரம்னா ராணிகள் மட்டும் தங்கிற 'லேடீஸ் ஒன்லி' பகுதி."

"அப்ப ராஜா அங்க வர முடியாதில்ல?"

முறைத்தாள். "மண்டூகம். அவர் எங்க வேணாலும் வரலாம் போகலாம். அந்தப்புரத்ல இருக்றது பூராவும் அவரோட மனைவிகள் தான்டா"

தாத்தா ஆமோதித்தபடி கதை தொடர்ந்தார்.

ராணி பெரியநாயகி கோபத்துடன் அமர்ந்திருந்தாள்.

மிடுக்காக நடந்து வந்தார் ராஜா.



"என்ன நாயகி... என்ன நடந்தது? கோபமாக இருக்கிறாய்?"

"அந்தப்புரத்தில் பொழுதே போகமாட்டேன் என்கிறது. பொழுதுபோக ஏதேனும் ஏற்பாடுகள் செய்யுங்கள் என்று உங்களை பல முறை இறைஞ்சி விட்டேன். பயனில்லை."

ராஜா யோசித்தார்.

கைகளை தட்டினார். "யாரங்கே?"

இருவர் வந்து வணங்கினர்.

"உடனே மந்திரவாதி நம்பூதிரியை அழைத்து வாருங்கள்"

அடுத்த பத்தாவது நிமிடத்தில் நம்பூதிரி வந்து நின்றான். நம்பூதிரி சேரநாட்டு மாந்திரீகன். நம்பூதிரிக்கு தெரியாத மந்திர தந்திரங்களே இல்லை.

நம்பூதிரியின் உச்சந்தலையில் கொண்டை.

நெற்றியில் விபூதி பட்டை. கொத்தாய் அப்பிய குங்குமம்.

கொழுத்த புருவங்கள்.

கொடூரமான கண்கள்.

மிளகாய் பழ மூக்கு.

முறுக்கிய மீசை.

சடை சடையாய் திரிந்த தாடி.

கழுத்தில் உத்திராட்சங்கொட்டை மாலைகள்.

மேற்சட்டை இல்லை.

இடுப்பில் மட்டும் காவி உடை.

உடம்பு முழுவதும் சுடுகாட்டு சாம்பல் தடவியிருந்தார்.

கால்களில் மரச்செருப்பு.

வலதுகையில் மந்திரக்கோல்.

"வந்தனம் செய்கிறேன்-மன்னாதி மன்னரையும் மகா ராணியையும். அழைத்தீர்களாமே?"

"ஆம் நம்பூதிரி. ராணியாருக்கு பொழுதே போகவில்லை யாம். எதாவது உன் மந்திரத்தால் வரவழைத்துக் கொடேன். விளையாடிக் களிக்கட்டும் "

மந்திரவாதி மந்திரக்கோலை வட்டமாக சுழற்றினான்.

கர்ண கடூரமாய் மந்திரங்களை முணுமுணுத்தான்.

"கப்லா ஜிப்லா குப்லா

தியாவோ ஜியாவோ மியாவோ

சத்.

பத்.

மித் "

'உஷ்க்' என்ற சப்தத்துடன் ஒரு உபகரணம் தோன்றியது. அதனை நம்பூதிரி மன்னரிடம் கையளித்தான்.

"இது மாயக்கண்ணாடி மன்னா இதன் மூலம் சாதாரண மக்கள் பார்க்க முடியாத அபூர்வ விஷயங்கள் பார்க்கலாம் "

மன்னர் ராணியாரிடம் கொடுத்து விட்டு திரும்பினார்.

"உனது சேவையை மெச்சுகிறேன் நம்பூதிரி "

"தங்கள் ஆனந்தமே எனது பாக்கியம் "

நம்பூதிரி அகன்றான்.

மன்னர் தான் சிறிதுநேரம் மாயக்கண்ணாடியை பார்க்கலாம் என விரும்பினார். ராணியாரிடம் திரும்பினார்.

அதற்குள் அவள் நந்தவனத்துக்கு ஓடிவிட்டாள்.

சிரித்தபடி மன்னர் கிளம்பினார்.

ராணியார் மந்திரக்கண்ணாடி வைத்து அங்குமிங்கும் பார்த்தாள்.

எறும்புகள் ஒன்றுக்கு ஒன்று பேசிக்கொண்டு நகர்ந்தன.

வானத்தை அண்ணாந்தாள்.

புஷ்பக விமானங்களில் தேவர்கள் போய் கொண்டிருந்தனர்.

ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டு வந்தவள் திடுக்கிட்டாள்.

ஒரு ரோஜாப்பூவின் மீது ஒரு தேவதை நடனமாடிக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு பக்கமும் மாயக்கண்ணாடியைத் திரும்பினாள்.

திரும்பின பக்கமெல்லாம் பூக்களின் மீது தேவதைகள் நாட்டியம்.

தேவதைகளை பிடிக்க பாய்ந்தாள் ராணி.

இங்கே தாவினாள்.

அங்கே தாவினாள்.

எட்டிக் குதித்தாள்.

தேவதைகள் குறும்பாய் போக்குக்காட்டின.

ஏறக்குறைய ஒருமணி நேர போராட்டம்.

இறுதியில் வழுக்கி விழுந்து காலை உடைத்துக் கொண்டாள்.

அவளது கூச்சல் அந்தப்புரத்தையே கிடுகிடுக்க வைத்தது.

தேவதைகள் ஓடி ஒளிந்து கொண்டன.

மன்னர் ஆடைகளும் அணிகலன்களும் சரசரக்க ஓடி வந்தார்.

"என்ன ஆனது ராணியாரே?"

"உங்கள் ராஜ்ஜியத்தில் ஒரு தேவதையைக்கூட உயிருடன் பிடிக்க முடியவில்லை என்னால்?"

"தேவதைகளா?"

"ஆம் மன்னா. மாயக்கண்ணாடி எடுத்து பூக்கள் பக்கம் பார்வையை ஓட விடுங்கள்."

பார்த்தார்.

ஒரு தேவதை பார்வையானது.

"அட... என்ன அழகு? என்ன அழகு?"

"அந்தத் தேவதைகளையும் திருமணம் செய்து அந்தப் புரத்தில் பூட்டிவிட திட்டம் தீட்டிவிடாதீர்கள் "

"பின்ன... நான் என்ன செய்ய வேண்டும்?"

"நம்பூதிரியிடம் கூறி நான் விளையாட சில தேவதைகளை பிடித்துத் தருமாறு கட்டளையிடுங்கள் "

"நம்பூதிரி " கத்தினார் மன்னர்.

மீண்டும் மந்திரவாதி ஓடிவந்தான்.

"மன்னா "

"நீர் தந்த மாயகண்ணாடி மூலம் ராணியார் சில தேவதை களை பார்த்துவிட்டார். சிலவற்றை பிடித்துக் கொடுக்க வேண்டு மாம்."

மந்திரவாதி இருண்டான்.

"இந்த தேவதைகள் இறைவனின் நேரடி பிரதிநிதிகள். இவைகளை பிடிப்பது இறை குற்றமாயிற்றே மன்னா?"

"உனக்கு மாதாமாதம் ஆயிரம் பொற்காசுகள் சம்பளம் தருவது இறைவன் அல்ல நான். பிடித்துத்தர முடியுமா, முடியாதா நம்பூதிரி?"

தலையாட்டினார் நம்பூதிரி.

"செய்கிறேன் மன்னா "

"எப்போது?"

"நாளைக்காலை. அதுவரையாவது ராணியாரை பொறுத் தருளச் சொல்லுங்கள் "

**ம**றுநாள்

சூரிய உதயத்துக்கு இன்னும் சில நாழிகைகள்.

நம்பூதிரி தோட்டத்தில் ஒரு விசேஷ வலையை இரு பூஞ்செடிகளுக்கிடையே கட்டினான்.

துஷ்ட தேவதைகளுக்கு பலி கொடுத்தான்.

அம்முலு குறுக்கிட்டாள். "தாத்தா ஒரு சந்தேகம் "

"என்ன அம்முலு?"

"அதென்ன தேவதைகளிலேயே இரண்டு வகை-நல்ல தேவதை, கெட்ட தேவதைகன்னு?"

"ஆமா அம்முலு. இந்த துர்தேவதைகள் கறுப்பு ஆடை அணிந்திருப்பார்கள். முகம் பேய் மாதிரி இருக்கும். கெட்ட காரியங்களுக்கு துணை போவார்கள். புரிஞ்சதா? கதைக்குப் போவமா?"

அம்முலு தலையாட்டினாள்.

-பலி கொடுத்த நம்பூதிரி மந்திரங்களை தொடர்ந்து உச்சரிக்க ஆரம்பித்தான்.

**"ஆசா மாசா பாசா**
**சீசா கீசா மூசா**
**சசா சுசா சீசா**
**சசசா சுசசா சிசசா.."**

மந்திரங்களைச் சொல்ல சொல்ல தேவதைகள் ஒரு மயக்க நிலைக்கு பாய்ந்தன. ஒவ்வொன்றாய் வலையில் வந்து விழ ஆரம்பித்தன.

மொத்தம் நூற்றுக்கும் மேற்பட்ட தேவதைகள்.

கொண்டு வந்திருந்த விசேஷ குடுவைக்குள் தேவதைகளை போட்டு மூடினான் நம்பூதிரி.

"ராணியாரே " நீட்டினான் குடுவையை. "இதில நீங்கள் விரும்பிய தேவதைகள் உள்ளன. தினம் மாலை சந்திரோதயத்தின் போது நீங்கள் இவைகளின் நடனத்தை ரசிக்கலாம் "

"எப்படி?"

"குடுவையைத் திறக்கும் போது 'நஷ்புஷ்-நடனமாடுங்கள்' என்ற மந்திரத்தைக் கூறுங்கள். தேவதைகள் வெளியே வந்து ஆடும். 'டபக் டுபக்... குடுவைக்குள் போங்கள்' என்ற மந்திரத்தைக்

கூறுங்கள். தேவதைகள் குடுவைக்குள் தானே சென்று விடும். மூடிவிட வேண்டியதுதான் "

ராணியார் குதூகலித்தாள்.

"நன்றி. மிக்க நன்றி. மிக்கமிக்க நன்றி நம்பூதிரியாரே "

"நன்றி இருக்கட்டும் ராணியாரே ஒரு முக்கியமான எச்சரிக்கை.... மந்திரத்தை மறந்து விட்டாலோ மாற்றிச் சொன்னாலோ குடுவை திறக்கவே திறக்காது. தேவதைகள் நிரந்தரமாய் குடுவைக்குள் சிக்கிப் போவார்கள். பின் உலகம் அழியும் வரை அவர்களுக்கு ஜாகை குடுவைதான் "

ராணியார் தலையாட்டினாள்.

நம்பூதிரி பத்தாயிரம் பொற்காசுகள் பரிசு பெற்றான்.

நம்பூதிரி உற்சாகமாய் தனது குடிலுக்கு திரும்பிக் கொண்டிருந்தான்.

இவன் வரும் பாதையில் ஒரு ராஜநாகம் காத்திருந்தது.

நம்பூதிரியின் கண்களுக்கோ மந்திரக்கோலுக்கோ ராஜநாகம் பார்வையாகவில்லை.

எல்லாம் இறைவன் கட்டளை.

ராஜநாகம் சீறி சினந்து நம்பூதிரியை ஒருமுறை அல்ல இருமுறை அல்ல நூறுமுறை கொத்தியது.

நொடியில் கொடிய விஷம் பரவியது. வாயில் நுரை தள்ளியது. உடல் நீலம் பாரித்தது.

நம்பூதிரி மரித்தான்.

அவனது மந்திரகோல் எரிந்து சாம்பலாகி மறைந்தது.

அன்றிரவே சோழ நாட்டுக்குள் நரகத்தின் கதவுகள் திறந்து கொண்டன.

புயலும் பேய்மழையும் சுழன்றடித்தன.

இடியும் மின்னலும் அபாயகரமாய் மின்னின.

தொடர்ந்து இடிகள் அரண்மனை மீது விழுந்தன.

'டட்டாங் '

அரண்மனை நொறுங்கியது.

மன்னரும் ராணியாரும் மின்னல் தாக்கி கருகினர்.

ஒட்டுமொத்த நாடும் சுடுகாடானது.

தேவதைகள் சிறைப்பட்ட குடுவை மட்டும் மண்ணோடு மண்ணாய் புதைந்து போனது.

தொடர்ந்த வருடங்களில்-

பாட்டில் பலரின் கைகளுக்கு மாறியது.

சிலர் அதனை உதைப்பந்தாட்டம் ஆடினர்.

சிலர் புராதண கலைப்பொருளாய் பாதுகாத்தனர்.

அங்குமிங்கும் இடமாறி கடைசியில் ஆர்த்தி வீட்டு தோட்டத்துக்கு வந்து சேர்ந்தது பாட்டில்.

ரோஜாச்செடிக்கு ஆர்த்தி, சக்தி, நட்டு மூவரும் குழி தோண்டும் போது பாட்டில் மூவருக்கும் பார்வையானது.

பூமி கணக்குக்கு ஆயிரம் வருடங்கள் கழித்து பாட்டில் சிறையிலிருந்து விடுதலையானோம் "

-பிளாஷ்பேக்கை சொல்லி முடித்தன தேவதைகள்.

ஒரு தேவதை "நாங்க கிளம்பவேண்டிய நேரம் வந்திருச்சு. அதுக்கு முன்னாடி நாங்க உங்களுக்கு ஒருபரிசு தர விரும்புறோம்" என்றது.

○

# 5

"ஸ்டாப்..... ஸ்டாப் தாத்தா.... என்னுடைய ரெண்டு மூணு கேள்விகளுக்கு பதிலைச் சொல்லிட்டு கதைய கண்டினியூ பண்ணுங்க " என்றான் ரகு.

எப்போதும் கதையில் குறுக்கிடாதவன் குறுக்கிடுகிறானே...

"என்ன கேள்வி வேண்டுமானாலும் கேள் ரகு "

"இந்த ஆப்பிள் தேவதைகள் கடவுளின் பிரதிநிதிகள் அல்லவா!... அவர்களை நம்பூதிரி பாட்டிலில் சிறை பிடிக்கும்போது கடவுள் ஏன் நேரடியாக தேவதைகளுக்கு உதவவில்லை? நம்பூதிரியின் மந்திரங்கள் செயல்படாமல் பண்ணியிருக்கலாம் கடவுள். வலையை அறுந்துபோக செய்திருக்கலாம். அதை விட்டுவிட்டு மூக்கைச்சுற்றி காதைத் தொட்ட கதையாய் இருந்தது- கடவுள் நம்பூதிரியை பாம்பை விட்டு கடிக்கச் செய்தது. அதன்பின் நம்பூதிரியின் மந்திரக்கோல் எரிந்து சாம்பலானது சரியான காதுகுத்தல் தாத்தா "

"சரி அப்றம்?"

"தேவதைகளை சிறை பிடித்த குற்றம் செஞ்சது மன்னரும் ராணியாரும்தான். இந்த ரெண்டு பேரை மட்டும் சாகடிக்காமல் ஊரையே அழிச்சது என்ன விதத்ல நியாயம்?"

"நல்ல கேள்வி அப்றம் "

"ஆயிரம் வருஷமா பாட்டில் அங்கயும் இங்கயும் அலைக்கழிக்கப்பட்டுச்சாம்... இடைல யாருமே பாட்டிலை உடைக்கவோ திறக்கவோ முயற்சி பண்ணலையாம். கடைசில சரியா ஆர்த்தி வீட்டு தோட்டத்ல வந்து பாட்டில் புதைஞ்சுகிச்சாம்."

"ஆமா... அதுக்கென்ன?"

"இந்த மூணுமே நம்புரமாதிரி இல்லை "

"உண்மைதான் ரகு. கதை சுவாரசியமா போகுதான்னு பாரு. போகலையா குறை சொல்லு. ஆனா லாஜிக்குக்கு நான் கேரண்டி தரமுடியாது."

அனைத்துக்குழந்தைகளும் ஆர்ப்பரித்தன.

"தாத் சொல்றது கரக்ட்தான். உக்கார் ரகு. நீங்க கதைய கண்டினியூ பண்ணுங்க தாத் "

-கம்ப்யூட்டர் தாத்தா ரகுவை தட்டிக்கொடுத்தபடி கதையைத் தொடர்ந்தார்.

-தேவதைகள் மூன்று சிறார்களை பார்த்து கூட்டாய் வினவின.

"உங்களுக்கு என்ன பரிசு வேணும்?"

"மூவருக்கும் தனித்தனியாவா, அல்லது மூவருக்கும் சேத்தே ஒண்ணாவா?" நட்டு

"அது உங்கள் விருப்பம் "

"தனித்தனியா குடுத்திருங்க. இல்லைன்னா பங்கு பிரிக்றப்ப எங்கக்குள்ள சண்டை வந்திரும் "

"பயப்படாதே நட்டு. நாங்க சொல்ல வந்தது வேற "

"என்ன தேவதைகளா?"

"நாங்களே உங்க மூணுபேருக்கும் சேத்து ஒரு பரிசளிக்கப் போகிறோம் "

"என்ன பரிசு?" சாந்தமாக வினவினாள் சக்தி.

ஒரு தேவதை மந்திரக்கோலை ஆட்டி மந்திரத்தை முணு முணுத்தது.

ஸ்ப்ளாஷ்!

அந்த தேவதையின் கைகளில் ஒரு மந்திரப்பேழை மின்னியது. பேழை முழுக்க முழுக்க சுத்த தங்கத்தால் செய்யப் பட்டிருந்தது. ஆகவே நிலா மஞ்சள் நிறத்தில் தகதகத்தது.

ஆர்த்தி மந்திரப்பேழையை வாங்கினாள்.

எடையே இல்லாததது போல் பிரமை தந்தது.

"குழந்தைகளா அந்தப்பேழையைத் திறந்து பாருங்கள் "

நட்டு திறந்து விட்டான்.

பேழைக்குள்-

ஏராளமான வஸ்துகள் இருந்தன.

"என்ன தேவதைகளா, கொஞ்ச நாள் எதாவது டாக்டர்கிட்ட வேலை பாத்தீங்களா, பேழைல டிஸைன் டிஸைனா மாத்திரை எங்க டாடி கிட்ட சொன்னா வாங்கிக் குடுத்திருவாரு இதென்ன வைட்டமின் மாத்திரையா? மீன் எண்ணெய் மாத்திரையா?" கிண்டல் செய்தான் நட்டு.

"அவசரப்படாதே நட்டு. இதுல என்னென்ன இருக்குனு விளக்கமா சொல்லிடுரோம் அப்றம் செய் உன் கிண்டலை "

"சொல்லுங்க "

"மூணு செட் சிவப்பு மாத்திரை இருக்கு. இதை ஆளுக் கொண்ணு எடுத்து முழுங்கிட்டீங்கன்னா அடுத்தவங்க கண்ணுக்குத் தெரியாம மறைஞ்சிருவீங்க. ஒரு மணி நேரம் கழிச்சு உங்க உருவம் திரும்பிடும். எல்லார் கண்ணுக்கும் தெரிய ஆரம்பிச்சிருவீங்க "

"அப்டின்னா இந்த சிவப்பு மாத்திரைகளை நாங்க ஒரே ஒருதடவைதான் யூஸ் பண்ண முடியுமா?"

"இல்லை. ஒவ்வொரு தடவை நீங்க சிவப்பு மாத்திரைகளை முழுங்கின உடனே இன்னொரு மூணு சிவப்பு மாத்திரை செட் மந்திரப்பேழைக்கு தானா வந்திரும். அதாவது புரியுறமாதிரி சொல்லனும்னா எப்பவுமே ஒரு மூணு சிவப்பு மாத்திரை செட் பேழைல காத்திருக்கும் "

"ஹைய்யா சூப்பர் "

"இந்த பச்சை மாத்திரை?" வினவினாள் ஆர்த்தி.

"இந்த மூணு செட் பச்சை மாத்திரை கூடு விட்டு கூடு பாய உதவும் இதை முழுங்கிட்டீங்கன்னா இன்னொரு மூணு செட் பச்சை மாத்திரை பேழைல ஆட்டோமேட்டிக்கா தோணிக்கும் "

"வாவ் " என்றான் நட்டு.

"இந்த நீல நிற மாத்திரை பறக்கும் மாத்திரை. இதை விழுங்கிட்டா நினைச்ச இடத்துக்கு நீங்க பறவை மாதிரி பறந்து போகலாம். முதல் இரு மாத்திரைகளின் விதிமுறைகள் இதற்கும் பொருந்தும். இந்த மாத்திரைகளின் பவரும் ஒரு மணி நேரம்தான்."

"ஜாலி ஜாலி " குதித்தான் நட்டு.

சக்தி பேழையில் மூன்று வினோதமான கடிகாரங்களை பார்த்துவிட்டாள்.

"இது?"

"இந்த கடிகாரங்களை அவரவர் கைகளில் கட்டிக்கொண்டு இயக்கி இறந்த காலத்ததுக்கும் போக முடியும் எதிர்காலத்துக்கும் போக முடியும் "

கதையில் கமல் குறுக்கிட்டான். "தாத்தா இந்த கடிகார விஷயம் புரியல தாத்தா "

ரகு ஆமோதித்தான். "இறந்த காலத்துக்குள்ள எப்டி ஒரு மனுசன் போக முடியும்? சரி அதாவது நடந்து முடிஞ்ச காலம். அதுக்குள்ள ஒருத்தன் போரான்னு ஒரு பேச்சுக்காவது ஒத்துக்கலாம். எதிர்காலம்ன்றது இன்னும் நடக்காத விஷயங்களை கொண்டது. அதுக்குள்ள எப்டி போறது?"

தாத்தா நெற்றி சுருக்கினார்.

"உங்க லெவலுக்கு இதனை விளக்கிச் சொல்றது ரொம்ப கஷ்டம். இருந்தாலும் சொல்ரேன். உலகம் தோணி பல்லாயிரம் வருஷம் ஆய்ருச்சு. இருந்தாலும் இயேசு நாதர் பிறந்ததிலிருந்து தான் நாம வருஷத்தை கணக்குல வச்சுக்கிரம். இப்ப கி.பி.2010. அப்டின்னா கிறிஸ்து பிறந்த பின் 2010ன்னு அர்த்தம். காலம்ன்றது ஒரு விடியோ கேசட் மாதிரின்னு வச்சுக்கயேன். விருப்பப்பட்டா கேசட்டை 'ரீவைண்ட்' பண்ணி பழைசை பாக்கலாம். அல்லது 'பார்வரட்' பண்ணி கேசட்டின் பின்னாடி இருக்றத முன்னாடியே பாத்திரலாம். இது ஒரு வகை விஞ்ஞானம். வெற்றி பெற விஞ்ஞானிகள் முயற்சி பண்ணிக்கிட்டு இருக்காங்க. இந்த ஆராய்ச்சி வெற்றியடைஞ்சா நட்டு இறந்த காலத்துக்கு போய்

அவனோட கொள்ளு தாத்தாக்கிட்ட கை குலுக்கலாம்... இல்ல எதிர்காலத்துக்கு போய் நட்டுவோட பேரன் பேத்தியை நட்டுவே கட்டி அணைச்சுக்கலாம். நம்ம மகாத்மா காந்தி, ராஜீவ் காந்தி மரணத்துக்கு முன்னாடி போய் அவங்க மரணத்தை தடுக்கலாம்..."

"கேக்கவே புல்லரிக்குது தாத்தா " என்றான் கமல்.

"இந்த விஞ்ஞான வித்தையைத்தான் தேவதைகள் மந்திரகடிகாரம் மூலம் நட்டு, ஆர்த்தி, சக்திக்கு பரிசளிச்சிருக்காங்க. நிஜத்ல நம்மளால முடியாததை கதைல வரும் நட்டு அண்ட் கோவாவது சாதிக்கட்டுமே குழந்தைகளே" குழந்தைகள் ஆமோதித்தனர்.

"ஆஹாஹ்ஹ ஹாஹா " துள்ளிக்குதித்தான் நட்டு.

கடைசியாக பேழையில் துப்பாக்கி போன்ற வஸ்து காணப்பட்டது.

"தேவதைகளே இது துப்பாக்கியா?"

"சாதா துப்பாக்கி இல்ல... விசேஷ துப்பாக்கி.. இதுல பல பட்டன்கள் இருக்கும்... ஒரு பட்டனை அமுக்கிட்டு எதிராளிய சுட்டா எதிராளி ஐஸ் கட்டியா உறைஞ்சு நின்னிருவார்... இன்னொரு பட்டனை அமுக்கிட்டு எதிராளிய சுட்டா எதிராளி எரிஞ்சு சாம்பலாயிடுவார். இந்தத் துப்பாக்கில ஏகப்பட்ட பட்டன்கள் உள்ளன. படிச்சு பாத்து தெரிஞ்சுக்கங்க குழந்தைகளா "

இன்னொரு தேவதை கூறியது. "இந்த தங்கப் பேழையுடன் உங்களுக்கு ஒரு விசேஷ சக்தி அளிக்கிறோம். அதன் மூலம் பறவை மிருகம் பாஷை பேச முடியும் புரிய முடியும் உங்களால் "

"பேழையில் இன்னும் சில பொருட்கள் உள்ளன. விவரிக்க நேரமில்லை. உபயோகப்டுத்தித் தெரிந்து கொள்ளுங்கள் " ஒரு தேவதை.

"பேழையையும் விசேஷ சக்தியையும் நன்மைக்குத்தான் உபயோகிக்க வேண்டும். தீமைக்கோ சுயநலத்துக்கோ பயன் படுத்தினால் அதே நொடியே பேழையும் விசேஷசக்தியும் உங்களிடமிருந்து மறைந்து போகும் "

"எப்டியிருந்தாலும் இந்த பரிசு பூமியின் கணக்குக்கு இன்னையிலிருந்து ஒரு வருடத்துக்குத்தான். பின் பேழை எங்களிடமே பறந்து வந்துவிடும் "

"இந்தப்பரிசு திருப்தியா குழந்தைகளே நாங்க புறப்படு கிறோம் "

மூவரும் அழுதுவிட்டனர்.

"எங்களுக்கு பரிசும் வேணாம் கிரிசும் வேணாம். தேவதைகளே.. பேசாம எங்ககூட இருந்திருங்களேன் "

"முடியாது. எங்க கிரகத்து விதிகள் அனுமதிக்காது "

"ப்ளீஸ் "

"கெஞ்சக்கூடாது. அழக்கூடாது. எங்கே... சிரிச்ச முகமா எங்களை வழியனுப்புங்க பாப்பம் "

கண்ணீரை துடைத்துக்கொண்டு மூவரும் செயற்கையாய் சிரித்தனர்.

"டாட்டா... பைபை.... ஸி யூ "

"டாட்டா.... பைபை...ஸி யூ "

தேவதைகள் வானத்துக்கு எழுந்தனர். நட்சத்திரங்களாய் மின்னியபடி பறந்து மறைந்தனர்.

மந்திரப்பேழையை பிடித்தபடி மூவரும் அழுதனர்.

நட்டு அழுகையை நிறுத்தி வினவினான்.

"இந்த மந்திரப்பேழையிலுள்ள பொருட்களை எப்ப உபயோகிச்சு பார்க்கலாம்?"

"நாளைக்கே."

O

# 6

**ஆ**ர்த்தி நட்டுவிடமும் சக்தியிடமும் கூறினாள். "தேவதைகள் நமக்கு பறவை பாஷை மிருகம் பாஷை பேசும் சக்தியை தந்திருக்கிறதா சொன்னாங்கள்ல?"...

"ஆமா " தலையாட்டினான் நட்டு.

"அத இப்ப சோதிச்சு பார்ப்பமா?"

"ஓ எஸ் "

மூவரும் நட்டு வீட்டு சமையலறைக்குள் போயினர். ஒரு கரப்பான் பூச்சி இவர்களைத் தாண்டி பறந்து போனது.

பறந்து போகும்போது குறுக்கே நந்திகள் போல் நிற்கும் மூவரையும் பாத்து கத்தியது கரப்பான் பூச்சி.

"குறுக்கால ட்ராபிக் கான்ஸ்டபிள் மாதிரி நிக்குதுக மூணு முண்டங்கள் "

"நாங்க முண்டமா?"

கரப்பானுக்கு பயங்கர ஆச்சரியம்.

"அட.... என் பாஷை பேசுரீங்க...."

"எங்களுக்கு எல்லா பாஷையும் தெரியும் "

"ஸாரிப்பா. உங்களைத் தெரியாமத் திட்டிட்டேன் "

"போகட்டும். உன்கிட்ட ஒரு முக்யமான கேள்வி கேக்கணும்."

"என்ன?"

"சமையக்கட்டுல சாக்கடைல மேஜை ட்ராயர்ல சுவர் பொந்துகள்ல எங்க பாத்தாலும் வசவசன்னு பெருகி மனுசங்களுக்கு பயங்கரமா தொந்திரவு தரீங்களே.. நியாயமா கரப்பான்ஸ்?"



"இந்த பூமியை சாமி மனுசங்களுக்கு மட்டும் எழுதித்தரல. உங்களுக்கு என்ன உரிமை இருக்குதோ அதே உரிமை மத்த உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் உண்டு. நியாயப்பிரகாரம் பாத்தா மனுசங்களை விட சக்தி வாய்ந்தவங்க நாங்க. மனுசங்க ஒருத்தருக்கு ஒருத்தர் அணுகுண்டை வீசி செத்துப்போனாலும் நாங்க உயிரோட இருப்போம். எங்க உடல் 'கைட்டின்' எனும் பொருளால ஆனது "

நட்டு உதடு பிதுக்கினான்.

"பொளந்து கட்டுதே கரப்ஸ். சாரிப்பா. நீ எங்க வேணாலும் இரு. எங்க பெட்ல வேணாலும் வந்து படுத்துக்க. இனி நாங்க உன்னை மட்டுமில்ல எல்லா உயிரினத்தையும் மதிக்கிறோம் "

"வெரி குட் " என்றபடி கரப்பான் சர்க்கரை இருக்கும் பெட்பாட்டிலுக்கு பறந்தது.

சுவரோரம் ஒரு சுண்டெலி மூஷ் மூஷ் என ஓடிவந்தது.

"என்ன சுண்டெலியாரே இந்த ஓட்டம் ஓடி வர்ற?"

"அட... உங்களுக்கு என் பாஷை பேசத் தெரியுமா? இந்த ஏரியால ஒரு உசிலைமணி சைஸ் பூனை இருக்கு. அதுதான் என்னை துரத்திட்டு வருது. தப்பிச்சேன் பிழைச்சேன்னு ஓடிவரேன்."

"எங்கே அந்த பூனை? காண்பி. அடிச்சே கொன்னிர்ரேன்"

"மூஷ் மூஷ் சேச்சே... அதெல்லாம் வேணாம்பா. எங்களுக்கும் பூனைகளுக்கும் ஆயிரம் இருக்கும் குறுக்கே வராதிங்க."

"சரிங்க சுண்டெலியாரே நீங்க புறப்படுங்க "

எலி தனது பொந்துக்குள் ஓடி மறைந்தது.

தரையில் சிவப்பு எறும்பு கூட்டம். எதிர் எதிர்திசைகளில் வரும் எறும்புகள் வாய்க்கு வாய் மோதிக்கொண்டு விலகின.

மூவரும் முழங்காலிட்டு தரைக்குக்குனிந்தனர்.

காதுகளை தீட்டிக்கொண்டனர்.

ஒரு எறும்பு மற்றொரு எறும்பிடம். "சீக்கிரம் போ. ஒரு வண்டு செத்துக் கிடக்கு. மழை வரதுக்குள்ள வண்டை துண்டாக்கி உன் பங்கை சுமந்து வா " என்றது.

"சரி பிரதர்!" என்றது மற்றொரு எறும்பு.

"எறும்பு நண்பர்களே வணக்கம் " என்றாள் ஆர்த்தி.

"மெதுவா பேசித் தொலைங்க. காதுல இடி விழுந்தமாதிரி இருக்கு "

குரலை கிசுகிசுப்பாய் முணுமுணுத்தாள் சக்தி.

"உங்க சுறுசுறுப்பின் இரகசியத்தைச் சொல்லுங்களேன் "

"அது கடவுளுக்குத்தான் தெரியும் " என்றது எறும்பு. "எட்டி நில்லுங்கப்பா. உங்க கிட்ட வெட்டிப்பேச்சு பேச எங்களுக்கு நேரமில்லை "

சக்தி, ஆர்த்தி, நட்டு தோட்டத்துக்கு வந்தனர்.

ஆன்ட்டெனா மீது அமர்ந்திருந்தது ஒரு காகம்.

"கா கா கா கா "

"என்ன காக்கா கத்ற?"

"கத்ரேனா? பாடுரேன்ய்யா பாடுரேன்.. தோ....இன்னும் பாடுரேன்- கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா.. கண்களுக்கு சொந்தமில்லை....கா கா....கண்களுக்கு சொந்தமில்லை " பாடியபடியே ஆடியது. "எப்டி என் ஆட்டம்? மைக்கேல் ஜாக்சன் பிச்சை வாங்கனுமில்ல?"

புகைந்து வரும் சிரிப்பை அடக்கிக் கொண்டான் நட்டு.

"ஆமாமாம் காக்ஸ் "

"காக்ஸா?"

"அஹ்... காக்காவை தமிழும் இங்கிலீஷும் கலந்து சுருக்கி கூப்ட்டோம்"

"ஒழுங்கா கலப்படமில்லாம தமிழ்ல பேச வராதா உங்களுக்கு?"

"யா பிரதர் "

"தொலைங்க. மனுச கும்பல் சரியான லொள்ளு பார்ட்டிகபா..."

"மனிசங்களை உனக்கு பிடிக்கவே பிடிக்காதா?"

"ஒரே ஒரு விஷயத்ல பிடிக்கும் "

"என்ன விஷயம் அது?"

"கொஞ்ச நாளா நீங்க எங்க இயற்கை வீடுகளான மரங்களை ஏகமா வெட்டித் தள்ளிட்டீங்க. டிவி பொட்டி வந்துச்சோ நாங்க பொழைச்சோமோ?"

"புரியலையே?"

"டிவி பார்க்க ஊரு முழுக்க உசரம் உசரமா ஆன்ட்டெனா கட்டி விட்ருக்கீங்க. நீங்க கட்ன ஆன்ட்டெனல்லாம் எங்களுக்கு ஓய்விடங்களா பயன்படுது " விளக்கியது காகம்.

"அட ஆன்டெனாவுக்கு இப்டி ஒரு யூஸ் இருக்கா?" வியந்தாள் ஆர்த்தி.

"சரி.. எனக்கொரு பாட்டுக்கச்சேரி இருக்கு. வரட்டா?"

"போறதுக்கு முன்னாடி ஒரே ஒருகேள்வி... பதில் சொல்லிட்டு போ "

"என்ன?"

"உங்க இனத்தைபற்றி ஒரு கதை எங்ககிட்ட உண்டு. பாட்டி-வடை-காக்கா- நரி- பாட்டு கதை உண்மையா?"

"எங்க எள்ளுக்கு எள்ளு தாத்தா ஏமாந்த ஓல்டு கதைய இப்ப கேக்காத எட்டி நில்லு... போரேன் "

காகம் பறந்து போனது.

சாலைக்கு வந்தனர்.

ரோட்டோர சினிமா போஸ்டரை ஒரு மாடு தின்று கொண்டிருந்தது.

"கண்ட கண்ட போஸ்டரைத் தின்னு ஏன் உன் உடம்பை கெடுத்துக்கிர மிஸஸ் பசுவாரே?"

ஆச்சரியமாய் நிமிர்ந்தது மாடு.

"மே..ம்மா...நானா விரும்பத் திங்கிரேன்? என்னை வளர்க்ற சண்டாளப்பயதான் இப்டி அம்போன்னு ரோட்ல விட்டுர்ரான்.. ஆனா தினம் ரெண்டு தடவை பால் மட்டும் கறந்து தண்ணி ஊத்தி

வாடிக்கைகாரன்களுக்கு வித்ருவான் அவன்களைப்போய் திட்டுங்க "

"நாங்க சொன்னா கேக்க மாட்டாங்க. மனுச குணம் அப்டி "

சக்தி, ஆர்த்தி, நட்டு மாட்டிடம் பேசுவதை பிளாட்பாரத்தில் போகிறவர் வருகிறவர் கவனித்தனர்.

"பாவம்ய்யா... மூணும் பைத்தியம் போல.... மாடு தனியா 'ம்மா'னு கத்திகிட்டு இருக்கு. இதுக மாடு பேசுரதா நினைச்சு பதில் சொல்லிக்கிட்டு நிக்குதுக "

"கத்திரி வெயிலுக்கு இப்டித்தான். என்ன பண்றது?"

நட்டு "இதுக்கு மேல நாம இன்னைக்கி பறவை மிருகங்க கிட்ட பேசவேணாம். விட்டா நம்பள பைத்யம்னு முடிவு பண்ணி பைத்யக்கார ஆஸ்பத்திரில சேத்துருவாங்க.. போதும்"

"ஆமா நட்டு " சக்தியும் ஆர்த்தியும் ஆமோதித்தனர்.

"வேணும்ன்னா இந்த மாத்திரைக விஷயத்தை டெஸ்ட் பண்ணி பார்ப்பம் "

"ம்...நட்டு...மொதல்ல என்ன கலர் மாத்திரை?"

"சிவப்பு கலர் மாத்திரை. சாப்ட்ட உடனே மறைஞ்சு போய்டுவம் இல்லையா?"

"ஆமா..."

"மறைஞ்சவுடனே நாம போக வேண்டிய இடம்..."

"டேடேய்.. நாம மொதல்ல எங்க கிளாஸ்மெட் வாணி வீட்டுக்கு போவம் அவளை கன்னாபின்னான்னு கிள்ளி அடிச்சு உதைச்சு பயமுறுத்தி அழ வைக்கணும்..." என அவசரப்பட்டாள் ஆர்த்தி.

"கெட்ட விஷயங்களுக்கு இந்த சக்திகளை யூஸ் பண்ணக் கூடாதுன்னு தேவதைகள் எச்சரிக்கை பண்ணிருக்காங்க... மறந்துட்டியா?"

"சாரி நட்டு... சாரி சக்தி "

"ஒண்ணு செய்வோம்... அருண் ஐஸ்கிரீம் பார்லருக்குள்ள நுழைஞ்சு வயிறு குளிரக்குளிர ஐஸ்கிரீம் வெட்டிட்டு வருவம் "

"திருடுறதும் கெட்ட விஷயம்தான நட்டு?"

"இது திருட்டல்ல குட்டீஸ் குறும்பு-கண்ணன் வெண்ணெயை திருடித்தின்ன மாதிரி "

"அப்டின்னா சரி நட்டு "

மந்திரப்பேழையிலிருந்து ஆளுக்கொரு சிவப்பு மாத்திரையை எடுத்து விழுங்கினர்.

ஜிவ்க்க்

மூவரும் மறைந்தனர்.

கண்ணாடி முன் நின்று பார்த்தனர்.

கண்ணாடியில் உருவங்கள் பிரதிபலிக்கவில்லை.

ரோட்டில் நிற்கும் ஒரு ட்ராபிக் கான்ஸ்டபிளை முதுகில் தொட்டனர்.

ஐஸ்கிரீம் கடைக்குள் புகுந்து கிலோக்கணக்கில் ஐஸ்கிரீம் விழுங்கினர்

கடைக்காரன் அலறினான்.

"குளிர்பெட்டிக்குள்ள இருந்த ஐஸ்கிரீம் முழுக்க காணம்.... எங்க மாயமா மறைஞ்சு போச்சு?"

நட்டுவை அவசரப்படுத்தினாள் சக்தி.

"நாம மறைஞ்சு ஒரு மணிநேரம் ஆகப்போகுது. உருவம் தெரியுறதுக்குள்ள வீடு திரும்பிருவோம் "

நட்டுவை இழுத்துக்கொண்டு சைக்கிளுக்கு சக்தியும் ஆர்த்தியும் ஓடினர். உருவம் மீண்டன.

ஸ்போர்ட்ஸ் சைக்கிளில் வீடுகளுக்கு பறந்தனர்.

"செம த்ரில்லிங்டா நட்டு "

"பறக்ற மாத்திரையை சோதனை பண்ணி பார்ப்பமா ஆர்த்தி?"

"மொதல்ல நீ மட்டும் "

தோட்டத்தில் வேறு யாருமில்லை என உறுதி செய்து கொண்டு நீலநிற மாத்திரைகளை விழுங்கினான் நட்டு.

அவ்வளவுதான்...

நட்டுவின் தலையில் கொண்டை முளைத்தது. மூக்கு நீண்டது. கைகள் இறக்கைகளாக ஆயின.

தோட்டத்திலுள்ள மரத்துக்கு மரம் பறந்து போனான் நட்டு.

மீதி இருவரும் கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

"சூப்பர்டா நட்டு. சூப்பரோ சூப்பர் "

ஒருமணி நேரத்துக்கு பிறகு..

கொண்டை மறைந்து மூக்கு குறுகி இறக்கைகள் கைகள் ஆயின நட்டுவுக்கு.

பச்சை மாத்திரையை விழுங்கினான் நட்டு.

கோழியாக மாறி 'கோக் கோக் ' என்றான்

நாயாக மாறி 'லொள் லொள் ' என்றான்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் மனிதனாக மாறினான் நட்டு.

"எல்லாம் செஞ்சு பாத்துட்டோம்... ஒண்ணே ஒண்ணைத் தவிர' சக்தி.

"என்ன?"

"இறந்தகாலத்துக்கு போயிட்டு வரணும் " சக்தி.

"எப்ப?" நட்டு

"இப்பவே " அறிவித்தாள் ஆர்த்தி.

மூவரும் மந்திரக்கடிகாரங்களை அவரவர் கைகளில் கட்டிக் கொண்டனர்.

"இருபது வருஷத்துக்கு முன்னாடி போயிட்டு வரலாமா?"

"அதிலென்ன த்ரில் இருக்கு?"

"பின்ன?"

"லட்சம் வருஷங்களுக்கு முன்னாடி போயிட்டு வருவம்"

வரப்போகும் விபரீதமான விபரீதம் உணராமல் மூவரும் மந்திரக்கடிகாரங்களை பின்னுக்குத் திருப்பினர்.

O

# 7

**கை**கடிகாரத்தின் திருகியை பின்னுக்கு திருகிவிட்டு. "லட்சம் வருஷத்துக்கு முன்னாடி எங்களை கொண்டு போ " என மூவரும் தத்தம் கடிகாரத்திடம் ஆணையிட்டனர்.

அவ்வளவுதான்....

மூவரின் தலைக்கு மேலே ஒரு சுரங்கம் தோன்றியது.

சுரங்கத்திலிருந்து ஒரு அசுரக்காற்று மூவரையும் உறிஞ்சியது. சொய்ங்.

மூவருடனும் காற்று மனோவேகத்தில் பின்னுக்கு பறந்தது.

கதையில் ரகு குறுக்கிட்டான்.

"தாத்தா 'மனோவேகம்'னா என்ன தாத்தா?"

"நல்லகேள்வி இது. நம்ம ஊர்ல பஸ்ஸோ ரயிலோ மணிக்கு அதிகபட்சம் நூறுகிலோ மீட்டர் வேகம் போகும் சில விமானங்கள் ஒலிவேகத்தில் கூட பறக்கும். பூமில அதிகபட்ச வேகம் ஒளி. அதாவது வெளிச்சம். நொடிக்கு மூணுலட்சம் கிலோ மீட்டர் போகும். ஆனா மனசு 'இப்போதே நான் செவ்வாய் கிரகத்தைத் தாண்டி பறப்பேனாக ' என நினைக்க நாம நிஜம்போலவே செவ்வாய் கிரகத்தைத் தாண்டினால் அதுவே மனோவேகம். எளிதா சொல்லப்போனா மனசு நினைக்ற வேகம் மனசோட வேகத்துக்கு அளவே இல்லை.."

"மனசு வேகத்ல போற மாதிரி ராக்கட் இதுவரைக்கும் விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்காங்களா தாத்தா?"

"இதுவரைக்கும் இல்லை ஆனா யார் கண்டது? இன்னும் நூறு வருஷத்துக்குள்ள கண்டுபிடிச்சாலும் கண்டுபிடிச்சிருவாங்க."

"அது கண்டுபிடிச்சிட்டா ஜாலி இங்கயிருந்து அமெரிக்கா ஒரு செகன்ட்க்குள்ள போய்ரலாம் "

"உண்மைதான் இன்னொரு ஆராய்ச்சியும் நடந்துக்கிட்டு இருக்கு குழந்தைகளா "

"என்ன ஆராய்ச்சி?"

"ஒரு மெஷின் உதவியோட வசந்த்தை கோடிக் கணக்கான செல்களாக அக்குவேற ஆணிவேற பிரிச்சு இங்கயிருந்து அமெரிக்கா அனுப்றது. அமெரிக்கால இருக்ற மெஷின் கோடிக் கணக்கான செல்களை வாங்கி கோர்த்து முழுவசந்த் ஆக்கிடும். வசந்த்தை பிரிக்கவும் கோர்க்கவும் ஆகிற நேரம் சிலநொடிகள் தான். இதுக்கு இங்கிலீஷ்ல பேர் 'டெலிபோர்ட்டிங் ' இந்த ஆராய்ச்சி ஜெயிச்சிட்டா எந்த வாகனமும் இல்லாம யார் வேணா லும் எப்ப வேணாலும் எங்க வேணாலும் போகலாம் வரலாம் "

வசந்த் குறுக்கிட்டான்.

"எதிர்முனை நம்ம உடம்பு செல்களை கோர்க்கிற மெஷின் திடீர்னு ரிபபேர் ஆயிட்டா?"

"அவ்வளவுதான். காத்தல சுத்திக்கிட்டு இருப்ப. உன் அழுகையோ அலறலோ யாருக்கும் கேக்காது.

"செம வம்புடா இது " அலுத்துக்கொண்டான் வசந்த்.

"திரும்ப கதைக்கு போவம் " என்றார் தாத்தா.

மூவரும் பின்னுக்கு பறந்தபடியே பூமியே பார்த்தனர்.

இரவுகளும் பகல்களும் மாறிமாறி வந்தன.

குழந்தைகள் பிறக்கும்போது அழும் சப்தங்கள் கேட்டன.

மனிதர்கள் இறக்கும் போது உறவினர் அழும் சப்தமும் கேட்டன.

1998...
1968...
1938...
1890...
1450...

வருடங்கள் பேய்த்தனமாய் கரைந்தன.

எவ்வளவு நேரம் பயணம் செய்தார்களோ அவர்களுக்கே தெரியவில்லை. 'தொப்' என்று ஒரு இடத்தில் விழுந்தனர்.

விழுந்தவர்கள் தங்கள் ஆடைகளில் படிந்த தூசிகளை தட்டிவிட்டுக் கொண்டனர்.

திடீரென்று நட்டு கூச்சலிட்டான்.

"கடவுளே எங்க நம்ம மெட்ராஸ்? கார் இல்ல... ரோடு இல்ல.. வீடு இல்ல..." சக்தியும் ஆர்த்தியும் கண்களை சுழலவிட்டனர்.

முரட்டுத்தனமான உயரம் உயரமான மரங்கள் அடர்ந்த காடு.

தூரத்தில் நீர்வீழ்ச்சி

பெரும் சப்தத்துடன் நீர் விழுந்து கொண்டிருந்தது.

தரையில் உன்னித்தான் நட்டு.

ஏராளமான பாம்புகள்

என்ன ஆச்சரியம்

நெளியவில்லை நடந்தன.

ஒவ்வொரு பாம்புக்கும் நான்கு நான்கு குட்டி கால்கள் இருந்தன.

"எப்படி சக்தி பாம்புக்கு கால்கள் இருக்கு?"

"ஆதிகாலத்ல பாம்புக்கு கால்கள் இருந்திருக்குடா. நாளாக நாளாக கால்கள் தேவைப்படாம தேய்ஞ்சு மறைஞ்சு போச்சுடா."

"கால்களோட பாம்பை பாக்க ஜாலியாத்தான் இருக்கு "

குதித்து சிரித்தான் நட்டு.

தொடர்ந்து நடந்தனர்.

கண்களில் பல அதிசயக்காட்சிகள் பட்டன.

கூட்டம் கூட்டமாய் ஒட்டகச்சிவிங்கிகள். ஆனால் கழுத்துகள் நீளமாய் இல்லை. குறுகி இருந்தது.

"பாத்தியாடா ஒட்டகச்சிவிங்கிகளை மொதல்ல கழுத்து சாதாரணமாத்தான் இருந்திருக்கு. உயரமான மரக்கிளைகளில் உள்ள இலைகளைத்தின்ன முயற்சி பண்ணி முயற்சி பண்ணி கழுத்து நீளமாயிருக்கு "

நீர்வீழ்ச்சியிலிருந்து ஓடிவரும் நீரை கூட்டம் கூட்டமாய் வெள்ளை நிற யானைகள் தும்பிக்கையால் உறிஞ்சி குளித்துக் கொண்டிருந்தன.

இன்னும் நடந்தனர்.

யாளி மிருகங்கள் மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டிருந்தன.

மரக்கிளையில் நிஜம் போலவே அன்னப்பறவைகள்.

நடக்க நடக்க பல விசித்திரமான ஜீவராசிகளைக் கண்டனர்.

"பசிக்குது சக்தி, ஆர்த்தி "

ஆர்த்தி ஒரு மரம் ஏறி பழங்களை பறித்து வந்தாள்.

மூவரும் பழங்களைத் தின்று கொண்டிருந்தனர்.

சக்தி அந்த இரத்தத்தை உறைய வைக்கும் காட்சியை பார்த்து விட்டாள்

"அ...அ....அங்கே ப...ப.....பாருங்க "

மீதி இருவரும் அண்ணாந்தனர்.

அங்கே-

அறுபதடி உயர டைனசார் ஒன்று நின்றிருந்தது

"ஜுராஸிக் பார்க் படத்ல பாத்ததுக்கும் இதுக்கும் எக்கசக்க வித்தியாசம் இருக்கே "

"டைனசார் நம்பள கடிச்சுத்திங்கிரதுக்குள்ள மறையுற மாத்திரையை முழுங்கிடுவம் " கூவினாள் சக்தி.

"சேச்சே... அப்றம் ஒரு த்ரில்லும் இருக்காது.. வேற வழியே இல்லாதப்பத்தான் மறையுற மாத்திரையை சாப்பிடனும் " என்றான் நட்டு.

டைனசார் பெரிதாய் வாயைத்திறந்தது. சப்தம் எழுப்பியது.

சப்தம் கர்ணகடூரமாய் இருக்கும் என நினைத்தவர்களுக்கு பெரிய அதிர்ச்சி. மாடு போல் 'ம்மா' என்றது.

இன்னும் ஏழெட்டு டைனசார்கள் வந்து விட்டன.

"எனக்கு பயமாயிருக்குடா நட்டு ஓடிருவோம் " என்றாள் ஆர்த்தி.

"சரி.. கொஞ்ச நேரம் இந்த டைனசார்களுக்கு விளையாட்டுக் காட்டுவோம் "

மூவரும் தலைதெறிக்க ஓட ஆரம்பிததனர்.

டைனசார்கள் துரத்தி வந்தன.

வெகுநேரம் அவைகளுக்கு 'தண்ணீர்' காட்டினான் நட்டு.

டைனசார் வாய்கள் நுரைத்தன.

ஒரு டைனசார் இலைதழைகளைத் தின்று அசை போட ஆரம்பித்தது.

நட்டு, "சக்தி ஆர்த்தி நமக்குத்தான் மிருகபாஷை தெரியுமே... இந்த டைனசார்க கிட்ட பேசி பார்ப்பமா?"

"வெரிகுட் ஐடியா.. பேசுபேசு நட்டு "

"ஹாய் டைனசார்ஸ் "

டைனசார்கள் திடுக்கிட்டன. "யார் நீங்க? உங்களுக்கு எப்டி எங்க பாஷை தெரியும்?"

"அத விடுங்க... எப்டியிருக்கீங்க? உங்களை மோசமான உயிர்க்கொல்லி மிருகங்களா எங்க சினிமால காட்டிக்கிட்டு இருக்கம். நீங்க என்னடான்னா ஆடுமாடு மாதிரி இலைதழைகளை அசை போட்டுக்கிட்டு நிக்றீங்க. நீங்கல்லாம் மாமிச பட்சிணிகள் அல்லது சர்வபட்சிணிகள் கிடையாதா?"

"நீங்களா எங்கள பத்தி மோசமா கற்பனை பண்ணிக் கிட்டீங்கன்னா நாங்க என்ன பண்றது? நாங்க பாக்கத்தான் ஆளு படாபடா. ஆனா நாங்க பயங்கர சாது. வெறும் இலைதழைகள் திங்ற தாவர பட்சிணி நாங்க நீங்க ஓடுனதுனால சும்மானாச்சுக்கும் துரத்திக்கிட்டு வந்தம். ஹிஹிஹி " சிரித்தன.

"அப்டி போடு அரிவாளை "

"என்ன பேசுரீங்கன்னு புரியலையே.."

"அது எங்ககால பேச்சுத்தமிழ் "

"ஓஹோ "

"டைனோஸ் ஒரு உதவி..."

"என்ன?"

"கொஞ்ச நேரம் உங்க முதுகுல சவாரி செய்ய ஆசை.. அனுமதிப்பீங்களா?"

"தாராளமா "

தரையோடு தரையாய் மூன்று டைனசார்கள் சரிந்து கொடுக்க-

மூவரும் சிரமப்பட்டு ஏறினர்.

டைனசார்கள் காட்டை முழுக்க முழுக்க சுற்றி வந்தன மூவருடன்

"ஹைரஹைர ஹைரப்பா......தௌசன்ட் கேஜி தாஜ்மஹாலும் எனக்கே..."

"என்ன திடீர்னு உளர்ற தம்பிப் பய்யா?"

"இது எங்க கால சினிமாப்பாட்டு "

"சகிக்கல பேசாம வா..."

புதியபுதிய நிறங்களில் புதிய புதிய சுவைகளில் பழங்களை பறித்து மூவருக்கும் டைனசார்கள் தந்தன.

டைனசார் குட்டிகளுடனும் மூவரும் கூத்தடித்தனர்.

ஒரு புத்திசாலி டைனசார் நட்டுவிடம் வந்தது.

"தம்பி ஒரு கேள்வி..."

"என்ன டைனசார் அண்ணா?"

"நீங்க எந்த காலத்லயிருந்து வரீங்க?"

"லட்சம் வருஷத்துக்கு பின்னாடியிருந்து வரம் "

"அப்பாடி சரி... அப்ப... எங்க இனம் எப்டியிருக்கு?"

கவலையில் மூழ்கினான் நட்டு. காரணம் மூவர் போன சில வருடங்களில் விண்வெளி கற்கள் தாக்கி பூமியிலிருந்த அனைத்து டைனசார்களும் அழிந்து விடுகின்றன என்பது விஞ்ஞான உண்மை.

"உங்க இனம்தானே? அட்டகாசமா இருக்கீங்க " பொய் சொன்னான் நட்டு.

"மொதல்ல பேசும்போது எங்களை உயிர்கொல்லி மிருகமா ஏதோ ஒரு சினிமால காட்ராங்கன்னு சொன்ன.."

"அத விடுங்க டைனோஸ் " மழுப்பினான் நட்டு.

சக்தி இருவரின் அருகில் வந்தாள். "ஏங்க டைனசார் நாங்களும் வந்ததிலிருந்து பார்க்கிறோம்... விதவிதமா மிருகங்களை பாத்தோமே தவிர எங்களை மாதிரி மனுசங்களை பாக்கல... இந்தக்காட்ல மனுசங்க இருக்காங்களா இல்லையா?"

டைனசாரின் முகம் இருண்டது.

"ஏன் இல்லை? இருக்காங்க ஆனா அவங்க உங்களை மாதிரி நல்லவங்க இல்லை காட்டுமிராண்டிகள் ஒருத்தரை ஒருத்தர் அடிச்சு நரமாமிசம் சாப்பிடுவாங்க மொத்தத்ல மிகமிக ஆபத்தானவங்க "

பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு டைனசார் கத்தியது.

"ஆதிவாசிகள் வராங்க... ஆதிவாசிகள் வராங்க

"விடு ஜூட் " என்ற படி டைனசார்கள் ஓட-

கல் அம்புகளை வீசியபடி இரு ஆதிவாசிகள் ஓடி வந்தனர்.

சக்தி கூச்சலிட்டாள். "நட்டு சீக்கிரம் சீக்கிரம்... சிவப்புகலர் மாத்திரைகளை எடு. சாப்ட்டு மறைஞ்சு போய்டுவம் "

"ஏன் பயப்படுற? என்னதான் இந்த ஆதிவாசிக செய் ராங்கன்னு பாப்பம்."

அவர்களோடு நட்டு பேச முயற்சித்தான் பலிக்கவில்லை. ஏனென்றால் ஆதிவாசிகளுக்கென்று மொழியே இல்லையே....

மூவரின் கைகளியிலிருந்த கடிகாரங்களை ஆதிவாசிகள் பிடுங்கிக் கொண்டனர்.

ஒரு குகைக்கு இழுத்துச் சென்றனர். மூலிகைச்சாற்றை மூவரின் தலை மீது பிழிந்து எரியும் தீயில் வாட்ட தீக்கு நடந்தனர்.

சக்தியும் ஆர்த்தியும் கூச்சலிட்டனர்.

நட்டு திகிலில் ஸ்தம்பித்தான்.

"அப்றம்? அப்றம்?" குழந்தைகள் பரபரத்தன கம்ப்யூட்டர் தாத்தா சிரித்தார்.

O

# 8

ஆதிவாசிகளின் மனைவிகளும் குழந்தைகளும் வந்தனர். இடுப்பில் மட்டும் இலைதாழை ஆடை. குழந்தைகள் அதுவும் அணியவில்லை. பானை போன்ற வயிறு. பற்கள் மஞ்சள் பூத்திருந்தன.

மனைவிமார்கள் கத்தினர். "ஹிய்யா ஹிய்யா "

மந்திரக்கடிகாரங்களை பெரிய கருங்கல் கொண்டு உடைக்க முயற்சித்தனர். டொங் டொங்.

நட்டு பதறினான். "அய்யய்யோ.. கடிகாரங்களை உடைச்சிரப் போகுதுங்க..."

"கடிகாரங்க உடைஞ்சிட்டா?" வினவினான் ஆர்த்தி.

"பெருசா ஒண்ணும் ஆய்டாது. நாம நம்ம காலத்துக்கு திரும்ப முடியாது. நாம்பளும் இலைதாழை கட்டிக்கிட்டு ஹிய்யா ஹிய்யானு கத்த வேண்டியதுதான். சாப்பாட்டுக்கு நூடுல்ஸ் கிடையாது கெல்லாக் கிடையாது மேக்ரோனி கிடையாது "

"அட நீ வேற நட்டு. தீக்கு முன்னாடி நிக்ரோம். நாம்பள உயிரோட வாட்டித் திங்கப் போரான்க. மொதல்ல உயிர் பிழைக்ற வழியப்பாரு "

நட்டு ஆமோதித்தான்.

ஆதிவாசிகள் இவர்களை தீக்கு வெகு அருகே இழுத்துச்சென்று விட்டனர்.

அனல் முகத்தில் அடித்தது.

"சீக்கிரம் நட்டு.... எதையாவது செய்யேன் "

நட்டு திடீரென்று முரண்டு ஆதிவாசியின் பிடியிலிருந்து வழுக்கினான்.

வழுக்கின நட்டு இரு ஆதிவாசிகளுக்கும் கிச்சு கிச்சு மூட்டினான்.

இரு ஆதிவாசிகளும் தரையில் விழுந்து புரண்டு சிரித்தனர்.

உடனே ஆதிவாதிகளின் மனைவிகளும் குழந்தைகளும் ஓடி வந்தனர்.

"எங்களுக்கும் கிச்சுகிச்சு மூட்டுங்க ப்ளீஸ்" சமிக்ஞை காட்டினர். இரு பெண்களும் தங்களுக்குத்தானே கிச்சுகிச்சு மூட்டி தோற்றனர்.

நட்டு, சக்தி, ஆர்த்தி, மூவரும் பாய்ந்து பாய்ந்து அனை வருக்கும் கிச்சுகிச்சு மூட்டினர்.

அவ்வளவுதான்...

ஒட்டுமொத்த ஆதிவாசிகள் கும்பலும் விழுந்துவிழுந்து சிரித்தன.

நட்டு கடிகாரங்களை எடுத்து வந்தான்.

"எதாவது உடைஞ்சிருக்கான்னா பாரு நட்டு "

கடிகாரங்களை ஆராய்ந்தான்.

ஒரு கடிகாரம் பேசியது.

"தம்பி "

"ஆ கடிகாரமும் பேசுதுடாடோய் "

"தம்பி தேவதைகள் சொன்ன ஒரு வருஷ கணக்குக்கு உங்களுக்கு மாடா உழைப்போம். அதுவரைக்கும் எங்களை எந்த விதத்லயும் யாரும் சேதப்படுத்திர முடியாது "

"ரொம்ப சந்தோஷம் "

அவரவர் வாட்ச்சை கட்டிக்கொண்டனர்.

சிரித்துக்கொண்டிருந்த ஆதிவாசிகள் எழுந்தனர். தடாலென்று அனைவரும் இந்த மூவரின் கால்களில் விழுந்தனர்.

"சொய்யா மாரியாத்தா.. குய்யா மாரியாத்தா "

ஆதிவாசிகள் அதுவரை சிரித்ததே இல்லை. முதல்முறையாக சிரிக்க வைத்த இந்த மூவரும் அவர்களுக்கு கடவுள்களாக தென்பட்டனர்.

சிரிக்க சிரிக்க உடம்பு லேசானது. குறிப்பிட்ட ஹார்மோன் சுரந்து உடல் முழுவதும் பரவியது.

அர்ச்சனா கதைக்குள் குறுக்கிட்டான்.

"எக்ஸ்க்யூஸ் மீ தாத்தா! ஹார்மோன்னா என்ன? அத பத்திக் கொஞ்சம் விளக்குங்களேன் "

"ஹார்மோனுக்கு சுத்த தமிழ் 'இயக்கு நீர் ' நமது உடலில் பலவகையான சுரப்பிகள் இருக்குது. அந்த சுரப்பிகள் பல வகையான ஹார்மோன்களை சுரக்குது. இந்த ஹார்மோன்களின் வேலை நமது இரத்தத்தில் கலந்து நமது உடல் உறுப்புகளை வேலை செய்ய தூண்டுவதுதான். நமக்கு பயம் ஏற்படும் போது 'அட்ரினலின்' எனும் ஹார்மோன் சுரக்கும். சிரிக்கும்போது ஒரு ஹார்மோன் தாய்பால் கொடுக்கும் தாய்மாருக்கு ஒரு ஹார்மோன். இப்டி "

திருப்தியான அர்ச்சனா முகம் கண்டு மீண்டும் கதைக்குள் பாய்ந்தார் தாத்தா

சிரிக்கும்போது ஏற்படும் அலாதி ஆனந்தம் ஆதிவாதிகளை கிளுகிளுப்பூட்டியது.

அதுவரை பாம்புகளையும் சூரியனையும் கடவுளாக கும்பிட்டவர்கள் சிரிக்க வைத்த இந்த மூவரையும் கடவுளாக நினைத்தனர்.

"கிக் கிக் கியா. கிக்கிக் கியா. கிக் கிக் கியா. கியாகியாகியா"

தலைக்கு மேல் கைகளை உயர்த்தி பட்பட்என்று அடித்துக்கொண்டு நடுக்கமாய் உடம்பை ஆட்டிக்கொண்டு மூவரையும் சுத்திசுத்தி வந்தனர்.

"இதுக்கு என்னடா அர்த்தம் நட்டு?"

சிரித்தான் நட்டு.

"புரியல? நம்பள கடவுள்னு நினைச்சிருச்சுக "

"கிழிஞ்சது கிருஷ்ணகிரி " என்றாள் ஆர்த்தி

"அப்டின்னா தைச்சது தர்மபுரியா?" கிண்டல் செய்தாள் சக்தி.

"கடவுள்னா வரம் கொடுக்கனுமே..."

"வரம் கேக்க இதுகளுக்கு தெரிஞ்சாத்தான?"

கால்களில் கிடக்கும் அனைவரையும் எழுப்பினான்.

"எந்திரிங்கடா... எந்திரிங்கடி முண்டங்களா..."

அர்த்தம் புரியாமல் குலவை இட்டு மேலும் கும்பிட்டனர். நெஞ்சில் ரப்ரப் என்று அடித்துக் கொண்டனர்.

புவனா கதையில் குறுக்கிட்டாள்.

"குலவைன்னா என்ன அர்த்தம் தாத்?"

"நம்ம கலாச்சாரத்ல 'குலவை' க்கு தனி இடம் உண்டு. மக்கள் கூட்டம் கூட்டமாக ஆடும் போதோ பாடும் போதோ வாய்க்குள் நாக்கை படுவேகமாய் ஆட்டி வித்தியாசமான சப்தம் எழுப்பு வார்கள். அந்த சப்தத்தில் ஒரு இசை நயம் இருக்கும். ஒற்றுமை இருக்கும். கோயில் திருவிழாக்கள் சம்பந்தமா போனீங்கன்னா இந்த குலவை சப்தத்தை கேக்கலாம் ரசிக்கலாம் "

"நம்ம வசந்த் மொச்மொச்னு திங்கும்போது குலவை சப்தம் கேக்குது தாத்தா "

"ஏன்... என்னை இழுக்கலேன்னா உங்களுக்குத் தூக்கமே வராதா?"

"யானைக்குட்டி உன்னை இழுக்கமுடியுமா?"

"நான் யானைக்குட்டின்னா நீங்கல்லாம் கழுதைக்குட்டிக பன்னிக்குட்டிக "

"நோ மோர் சண்டை ப்ளீஸ் " என்றபடி கதைக்குள் புகுந்தார் தாத்தா.

குலவை இட்ட ஆதிவாசிகள் சிறிது நேரம் கழித்து கிறங்கி அமர்ந்தனர்.

"என்னாச்சு?" என்றாள் ஆர்த்தி.

"இம்.குழந்தை அழுகுது. சும்மாருக்கியா ஆர்த்தி? அதுகளுக்கு பசிக்குது போல"--

சக்தி அவைகளை பார்த்து 'பசிக்குதா?' என சமிக்ஞையில் கேட்டாள்..

அவைகளும் தின்பது போலவும் வயிற்றையும் சமிக்ஞையில் காட்டினர்

"இதுகளுக்கு சாப்பாடு தயார் பண்ணனும். என்ன செய்யலாம்?"

"சிக்கன்-65 செஞ்சு தராலாமா?"

"சிக்கன்-ஒன் லாக் னு சொல்லு "

"எப்டி செய்வ?"

"கை வசம் ஐடியா இருக்கு "

"என்ன ஐடியா?"

இருவர் காதிலும் ஏதோ நட்டு ஓத-

சக்தியும் ஆர்த்தியும் கோரஸாய் பாடினர். "கொலம்பஸ்... கொலம்பஸ் கண்டுபிடிச்சுத் தா ஒரு கோழி "

இவர்கள் பாடுவது தெரியாமல் மீண்டும் ஆதிவாசிகள் விழுந்து கும்பிட்டனர்

நட்டுகோழி போல் சப்தம் எழுப்பியபடி காட்டுக்குள் போனான்.

சககோழி சப்தம் கேட்டு ஒருகாட்டுக்கோழி ஓடி வந்தது.

மறைந்து போகும் மாத்திரையைத் தின்றிருந்தான் நட்டு.

'கபக்' என்று கோழியை பிடித்து விட்டான்.

"ஸாரி கோழி. இன்னைக்கி உனக்கு டைம் சரியில்லை "

கோழியுடன் திரும்பிய நட்டுவுக்கு உருவம் மீண்டது.

கோழியை சக்தியுடன் ஆர்த்தியும் பிடித்துக்கொள்ள 'பிஸ்மில்லா' என்றபடி கல்கத்தியால் கோழியை அறுத்தான்.

கோழியின் சிறகுகளை வேண்டாத உட்பகுதிகளை நீக்கி தீயில் வாட்டினான் நட்டு. அதற்குள் சக்தி காட்டுக்குள் ஓடிப்போய் மஞ்சள் கிழங்கு, புதுமிளகாய், இஞ்சிக் கிழங்குகளை பிடுங்கி வந்தாள்.

ஆர்த்தி அவைகளை சுத்தப்படுத்தி சிறுதுண்டுகளாக்கி கல்லில் அரைத்து எடுத்தாள்.

அரைத்த மசாலாவை சிக்கன் துண்டுகளில் தடவி தீயில் வாட்டி எடுத்தான் நட்டு.

சிக்கன் துண்டுகள் மணத்தன.

"எல்லாம் சரிடா நட்டு. உப்புக்கு எங்க போறது?"

ஒரே ஒரு நொடிதான் யோசித்தான் நட்டு.

பின் சிரித்தான்.

"சூப்பர் ஐடியா கைவசமிருக்கு " ஆர்த்தி, சக்தியின் நெற்றியில் வழியும் வியர்வையை வழித்தெடுத்து சிக்கன் துண்டுகளில் தடவினான்.

"தப்பில்லையா நட்டு?"

"நம்ம காலத்லயும் இது நடக்குது சக்தி ஆர்த்தி. ஹோட்டல் கள்ல ஸ்பெஷல் தோசை ஆர்டர் பண்ற. இடைல சொய்ங்னு ஒரு சப்தம் கேக்கும். அது என்னன்னு நினைக்ற? சரக்கு மாஸ்டரோட வியர்வைதான் பெரும்பாலும் "

"யாராவது ஹோட்டல்காரங்க காதுல விழுந்தது-தொலைஞ்ச."

"லட்சம் வருஷம் தூரத்ல இருக்கம். யாருக்கும் கேக்காது"

சிக்கன் துண்டுகளை வாட்டி எல்லா ஆதிவாசிகளுக்கும் சமமாய் வழங்கினான்

அனைவரும் சப்புக் கொட்டித்தின்றனர்.

அப்படியொரு சுவையை அவர்கள் வாழ்நாளில் கண்டதில்லை.

சாப்பிடும்போதோ அனைவரின் வாயிலும் ஜொள் லிட்டர் கணக்கில் வழிந்தது.

மூவரின் சமையலை வேடிக்கை பார்த்தன டைனசார்கள்.

ஒரு டைனசார். "செம புத்திசாலிகபா நீங்க. ஒரே ஒரு கோரிக்கை தம்பி "

"என்னங்கண்ணா?"

"நீங்க போறதக்கு முன்னாடி உங்களுக்குத் தெரிஞ்ச தெல்லாம் இதுகளுக்கு சொல்லிக் குடுத்துட்டுப் போங்க "

நட்டு தலையாட்டினான்.

-மறுநாள் காலை.

வேப்பங்குச்சிகளை ஒடித்து வந்து அனைவருக்கும் வழங்கினான்.

பல் துலக்கச்சொல்லிக் கொடுத்தான்.

எல்லா ஆதிவாசிகளும் 'ஈ' என்று பல்லைக் காட்டிக் கொண்டு நின்று பல் துலக்கியது வேடிக்கையாக இருந்தது.

இந்த மூவர் வரும் வரை இந்த ஆதிவாசிகள் குளித்ததேதே இல்லை.

செம்பருத்திப்பூவையும் வேப்பங்கொழுந்தையும் தனித் தனியே அரைத்து நீட்டினாள் ஆர்த்தி.

செம்பருத்திப்பூ கிரீமை அனைவரின் தலையிலும் தடவினாள். வேப்பங்கொழுந்து கிரீம் உடலுக்கு.

அனைத்து ஆதிவாசிகளையும் குளிக்க வைத்தாள் சக்தி.

அனைவரும் தண்ணீரை விட்டு எழுந்து வர மறுத்தனர்.

வலுக்கட்டாயப்படுத்தி கரையேற்றினர்.

நட்டு அறிவித்தான். "அடுத்த வேலை நமக்கு என்ன தெரியுமா? இந்த ஆதிவாசிகளுக்கு ட்ரஸ் தைச்சு தருவதுதான்"

"கொஞ்சம் பொறு " தாமரை இலைகளையும் வாழை நாரையும் கொண்டு வந்தாள்.

கல் ஊசி கொண்டு தாமரை இலையில் டவுசரும் சட்டையும் தைத்தான் அனைவருக்கும் அணிவித்தான்.

தண்ணீருக்கு அருகே கொண்டு போய் தண்ணீரில் பிரதிபலிக்கும் அவர்களது உருவததைக் காட்டினான் நட்டு.

முதலில் பயந்தனர்.

எதிரி என நினைத்து பிம்பத்தை கல் ஈட்டியால் குத்தினர்.

பின் உண்மை தெரிந்து கூத்தாடினர்.

-அடுத்த ஒரு வாரத்துக்கு நட்டு அண்ட் கோவின் சீர்திருத்தங்கள் தொடர்ந்தன. இவர்கள் மூலம் ஆதிவாசிகள் பல ஆயிரம் ஆண்டுகள் கழித்து அறியவேண்டிய நாகரிகங்களை முன்னதாகவே கற்றுக் கொண்டனர்.

இறுதியாக பாடவும் ஆடவும் கற்றுக் கொடுத்தான் நட்டு.

இவர்களது ஆடல்பாடல்களில் டைனசார்களும் கலந்து கொண்டன.

-எட்டாவது நாள் ஆர்த்தி கேட்டாள். "நட்டு நாம என்ன இப்டியே ஆதிவாசிகளோட ஆதிவாசியா வாழப்போரமா?"

"நோநோ. நாளை புறப்படுகிறோம் "

"எங்கே?"

"இறந்தகாலத்திலேயே ஒரு புதிய இடத்துக்கு "

"அது என்ன இடம் தாத்?" சொரண்டின குழந்தைகள்.

O

# 9

"சீக்கிரம் கதைய கண்டினியூ பண்ணுங்க தாத்தா. நட்டு அண்ட் கோ இறந்த காலத்திலேயே ஒரு புது இடத்துக்கு போறதா சொன்னீங்க.... அது எந்த இடம்?" புவனா, ரகு, கமல் பரபரத்தனர்.

தாத்தா தொண்டையைச் செருமிக் கொண்டார்.

"சொல்ரேன்... மொதல்ல ஒரு கேள்வி கேக்றேன்... அதுக்கு உங்க பதிலைச் சொல்லுங்க "

"இம் "

"நட்டு, சக்தி, ஆர்த்தி மூவரும் வீட்டை விட்டு கிளம்பி இறந்த காலத்துக்குள்ள போய் எட்டு நாளாகுது. எட்டு நிமிஷம் குழந்தைகளை காணோம்னாலே பெற்றோர் பதறுவாங்க. எட்டு நாள்னா என்னம்மா துடிதுடிச்சுப் போய்ருப்பாங்க நட்டு அண்ட கோ பெற்றோர். அதை ஏன் நீங்க கேக்கல?"

"அட... ஆமா... கதை போற சுவாரசியத்ல கேக்க தோணல.. நட்டு அண்ட் கோவின் பெற்றோர் பிள்ளைகளைக் காணாம என்ன பண்ணாங்க தாத்தா?" என்றாள் புவனா. திருப்தியாய் கதைக்குள் புகுந்தார் தாத்தா.

நட்டுவின் பங்களா.

நட்டு, சக்தி, ஆர்த்தி மூவரின் பெற்றோர் கண்ணீரும் கம்பலையுமாய் அமர்ந்திருந்தனர்.

அவர்களின் எதிரே இன்ஸ்பெக்டர் ஜோ அமர்ந்திருந்தார்.

"என்ன சார்... எங்க குழந்தைகளைப்பற்றி ஏதாவது துப்பு கிடைச்சுதா?"



உதடு பிதுங்கினார் ஜோ.

"என்ன சார் இது அநியாயம்? எங்க குழந்தைகள் காணாம போய் இன்னையோட எட்டு நாளாகுது. எழுத்து வடிவ புகார் குடுத்திருக்கம். பேப்பர்ல விளம்பரம் பண்ணிருக்கம். ஊர் முழுக்க டாம்டாம் அடிச்சிருக்கம். கண்டுபிடிச்சு தரவங்களுக்கு பரிசுன்னு போஸ்டர் அடிச்சு ஒட்டிருக்கம். ஆனா குழந்தைகளைப் பத்தி எந்த துப்பும் கிடைக்கலைன்னா என்ன அர்த்தம் இன்ஸ்பெக்டர்?"

"நீங்க சொல்றது உண்மைதான். குழந்தைகளை யாரும் கடத்திட்டுப் போனதா கூட தெரியல. கடைசியா அவங்க விளை யாடுன தோட்டத்தையும் ஆராய்ஞ்சு பாத்துட்டேன். அவங்க ரோஜாச்செடி நட்ட குழிக்கு பக்கத்ல வித்தியாசமான பாட்டில் துண்டுகள் மட்டும் கிடந்தது. பல்லாயிரம் வருடங்களுக்கு முந்திய பாட்டில் அது "

"அதனால?"

"உங்க குழந்தைகள் காணாம போனதுக்கும் மந்திர தந்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்குமோன்னு சந்தேகப்படுரேன் "

"மந்திரவாதி யாரோ எங்க குழந்தைகளை கடத்திக் கொண்டு போய்ட்டான்றீங்களா இன்ஸ்பெக்டர்?"

"என் உள்ளுணர்வுக்கு அப்டி தோணல. உங்க குழந்தைகள் விருப்பத்தோடதான் எங்கேயோ போயிருக்காங்கன்னு நம்புரேன்."

"எப்டியாவது எங்க குழந்தைகளை உயிரோட கண்டு பிடிச்சுக் குடுத்திருங்க. உங்க காலை பிடிச்சு மடிபிச்சை கேக்ரோம்."

இன்ஸ்பெக்டர் ஜோ அழுதுவிட்டார்.

"என்னங்க இது? இப்டியெல்லாம் பேசுறீங்க. எனக்கும் ரெண்டு குழந்தை இருக்கு. குழந்தை அருமை எனக்கு நல்லாவே தெரியும் போலீஸ் இந்த கேஸை சாதாரணமா கையாளல. வெகு தீவிரமா சென்னையை சல்லடை போட்டு அலசிட்டு இருக்கம் " எழுந்தார்.

"படு சீக்கிரமே உங்ககிட்டயிருந்து நல்ல செய்தியை எதிர்பார்க்கிறோம்."

"உங்க நம்பிக்கை ஜெயிக்க கடவுளை வேண்டுகிறேன். நா புறப்படுகிறேன் "

"காப்பி சாப்ட்டுட்டு போங்க இன்ஸ்பெக்டர் "

"குழந்தைகளை கண்டுபிடிச்சுக் குடுத்துட்டு விருந்தே சாப்பிடுரேன் " நடந்தார்.

போலீஸ் ஜீப்பில் ஏறிக்கொண்டார் ஜோ.

ஜீப் உருமி கிளம்பியது. சாலைப் போக்குவரத்தில் கலந்து மறைந்தது.

நட்டுவின் முகத்தை சக்தியும் ஆர்த்தியும் பார்த்தனர்.

"இறந்த காலத்திலேயே ஒரு புது இடம்னு சொன்னியே நட்டு.. அது எந்த இடம்?"

"உங்களுக்கெல்லாம் திருவள்ளுவர் தெரியுமாடி?"

திடீரென்று கதைக்குள் மூக்கை நீட்டினான் வசந்த்.

"திருவள்ளுவரைப் பத்தி எனக்கு தெரியும் தாத்தா!"

"சொல்லு பார்ப்பம் "

"தமிழ்நாட்ல பெரிய பஸ் கம்பெனி வச்சிருக்கார். அவர் பேர்ல ஆயிரக்கணக்கான பஸ் ஓடிச்சு. அரசாங்கத்துக்கும் அவருக்கும் ஏதோ டூ-கா போல. அவர் பஸ்ஸை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கிட்டு அவர் பெயரையும் அழிச்சிருச்சு!"

ரகு வசந்த் தொடையில் கிள்ளினான். "எருமை எருமை " திட்டினான். "உன் வாயைத் திறந்தாலே அறியாமைதான் நீர்வீழ்ச்சி மாதிரி கொட்டுது. திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தெய்வீகப்புலவர். உலகப் பொதுமறை திருக்குறளை எழுதியவர் "

புவனா குறுக்கிட்டாள். "திருக்குறள்ல 1330 குறள் இருக்கு. திருக்குறளை மூணுபாலா பிரிச்சிருக்காங்க "

"அதான் தெரியுமே... ஆவின் பால்... வின்னர் டைரி பால்... ஹெரிடேஜ்பால்..... இன்னும் கூட இருக்கே... ஸ்ரீபால்... தனபால்.......... கோபால் " உளறிக் கொட்டினான் வசந்த்.

இம்முறை தாத்தா நறுக்கென்று கிள்ளினார்.

"தெரியாமப் பேசுறானா இல்லை எல்லாரையும் வேணும்னே கிண்டல் பண்றானா?" என்றார் தாத்தா.

வசந்த் அழுதான். "எனக்கு அறிவு அவ்ளவுதான் தாத்தா. நா எதாவது தப்புத்தப்பா உளறிக்கொட்னா சொல்லித் திருத்துங்க தாத்தா "

"சரி சரி... அழாதே! புவனா நீ சொல்லு திருக்குறள்ல எத்னை பால் இருக்கு?"

"மூணுபால். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் "

"சீ... கர்மம்... உவ்வே " என்றாள் அர்ச்சனா.

-மீண்டும் கதைக்குள் போனார் தாத்தா.

"திருவள்ளுவரை நல்லாத் தெரியும்டா நட்டு "

"நேர்ல பாத்ருக்கியா ஆர்த்தி?"

"நக்கல்தானே வேணாம்கிறது. திருவள்ளுவர் கி.மு 31ல் வாழ்ந்தவர்னு எனக்கு தெரியும்டா. நா அவரோட திருக்குறளை படிச்சிருக்கேன்னு சொன்னேன் "

கதையில் கமல் குறுக்கிட்டான்.

"கி.மு.ன்னா என்ன தாத்தா?"

"வசந்த்கிட்ட கேட்டிராத. கிறுக்கு பிடிச்ச முண்டம்னு அர்த்தம் சொல்லுவான். கி.மு.ன்னா கிறிஸ்து பிறப்பதற்கு முன். கி.பி.ன்னா கிறிஸ்து பிறந்ததற்கு பின்."

"ஓஹோ "

"உலகம் தோன்றி லட்சக்கணக்கான வருஷம் ஆகுது. ஆனா நாம ரெண்டாயிரம் வருஷமாத்தான் காலண்டர் கணக்கை கையாள்ரோம். நம்ம வசதிக்காக இயேசு கிறிஸ்து பிறந்த வருடத்தை '1' என கணக்கு வைத்திருக்கிறோம். கி.பி.2005னா கிறிஸ்து பிறந்து 2005 வருஷமாகுதுன்னு அர்த்தம். தமிழ் உணர்வு மிகுந்தோர் வள்ளுவர் பிறந்ததிலிருந்து கணக்கை ஆரம்பித்து 'வள்ளுவராண்டு' கடை பிடிக்கின்றனர். முஸ்லிம்கள் முகமது நபி

பிறப்பை அடிப்படையாகக் கொண்டு 'ஹிஜிரி' கணக்கை கையாள்கின்றனர்"

குழந்தைகள் திருப்தியாக-கதைக்குள் புகுந்தார் தாத்தா.

நட்டு அறிவித்தான். "நாம திருவள்ளுவரை பாக்க போறோம்."

சக்தி கவலையாய் கேட்டாள்.

"திருவள்ளுவர் என்பதே கற்பனை பெயர். அப்டி ஒருவர் உயிரோடு இருந்ததே இல்லைன்னு சிலர் வாதம் பண்றாங்கன்னு எங்க தமிழ் வாத்தியார் சொல்லிருக்கார் "

"உண்மை எது, பொய் எதுன்னு போய் பார்த்தா தெரியுது" என்றான் நட்டு.

ஆர்த்தி முகத்தில் சந்தோஷம் பரவியது.

"நட்டு சொல்றது உண்மைதான். நமக்கு இறந்த காலத்தை பார்க்க தங்க சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. இது மூலமா நாம யார் யாரை பாக்கனுமோ அவங்க அவங்களை போய் பாத்திரனும் ரெண்டு வார்த்தை வாயார மனசார பேசிரனும்..."

"ஓகேடா. புறப்படுவோமா?"

அவசரப்பட்டாள் சக்தி.

"ஒருவாரம் பழகினவங்ககிட்ட பிரியாவிடை பெத்துக்க வேணாம்?"

"வேணும் வேணும் "

காய்கறிகளை அவித்து தின்பதற்கும் உடல் நோவுகளுக்கு மூலிகைமருத்துவம் பார்ப்பதற்கும் சொல்லிக் கொடுத்திருந்தான் நட்டு.

மரவள்ளிக்கிழங்கை கல்சட்டியில் வைத்து அவித்து தின்று கொண்டிருந்தனர் ஆதிவாசிகள்.

நட்டுஅண்ட் கோ வருவதை பார்த்ததும் தின்பதை நிறுத்திவிட்டு விழுந்து வணங்கினர்.

"குய்யோ மாரியாத்தா... சொய்யோ மாரியாத்தா "

சக்தியும் ஆர்த்தியும் கண்ணீர் விட்டு அழுதனர்.

டைனசார்களும் வந்து சேர்ந்தன.

ஒரு டைனசார், "ஏம்ப்பா போறீங்க?"

"டைனோ. எங்களுக்கு இருக்றது ஒரு வருஷ அவகாசம். அதுக்குள்ள போற இடத்துக்கு போய்ட்டு நாங்க புறப்பட்ட இடத்துக்கு திரும்பனுமில்ல?"

"இன்னும் ஒரு ரெண்டு வாரம் இருந்துட்டு போங்க "

"ஸாரி டைனோஸ் "

"உங்களுக்கு கல்நெஞ்சம்பா "

பதில் சொல்லாமல் நட்டு டைனசாரைக் கட்டிக் கொண்டு அழுதான்.

"போறது போறீங்க. உங்க நினைவா ஏதாவது குடுத்துட்டு போங்களேன் "

"கூடைகூடையா எங்க அன்பை வாரி வழங்கிட்டு போறம். அதுக்கு அடையாளமா- ஆளுக்கு ஒரு முத்தம் குடுத்துட்டுப் போறம் "

எல்லா டைனசார்களுக்கும் நட்டு அண்ட் கோ முத்தம் வழங்கின.

ஒரு குட்டி டைனசார் தாவி ஆர்த்தியை முத்தமிட்டது.

நட்டு மீண்டும் ஆதிவாசிகளிடம் "நாங்க போய்ட்டு வரோம் " என்றான்.

சக்தி, "தப்பு. நாங்க போரோம்னு சொல் " என்றாள்.

"சிபாகா டிபாகா டுபாகா. பக் பக். கச்சாக்கச்சாக் " (தயவு செஞ்ச எங்களை விட்டு போகாதிங்க சாமிகளா)

ஒவ்வொருவரின் கன்னத்திலும் முத்தமிட்டான்.

"ஜிங்ச்சா ஜிங்ச்சா " (கடவுளே  கடவுளே)

சில ஆதிவாதிகள் மண்ணில் புரண்டு அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினர்.

அவர்களை சமாதானப்படுத்துவது பெரும்பாடாயிற்று நட்டுவுக்கு.

ஆதிவாசிகளுக்கும் டைனசார்களுக்கும் டாட்டா காண் பித்தபடி காட்டில் வெகுதூரம் நடந்தனர் நட்டு அண்ட் கோ.

"ஏன் இவ்ளவு தூரம் நட்டு?"

"அவங்க முன்னாடி மறைய விடமாட்டாங்க. அவங்களோட துக்கத்தை அதிகரிக்க விரும்பல நான்..."

"நீ சொல்றதும் உண்மைதான் நட்டு "

பறக்க ஆயத்தமாயினர்.

கைகளில் கட்டப்பட்டிருந்த கடிகாரத்தை இடுப்பிலிருந்த மந்திரப்பேழையை சோதித்துக் கொண்டனர்.

"எல்லாம் ஓகே. புறப்படுவோம் "

மூவரும் விறைப்பாய் நின்றனர். கடிகாரத்தின் திருகியை முன்னுக்கு திருகினான்.

"ஏ கடிகாரமே எங்களை கி.மு.21க்கு திருவள்ளுவர் வீட்டுக்கு அழைத்துச் செல்வாயாக "

உய்க்க்

மூவரும் காற்றில் ஏறி பறந்தனர். காலச்சுரங்கத்துக்குள் முன் நோக்கிய பயணம்.

கி.மு.98000

கி.மு.9800

கி.மு.800

கி.மு. 80

கி.மு. 39.....38....37....36...35...34....33...32...31

டொமார்

மூவரும் ஒரு தோட்டத்து வீட்டின் முன் போய் நின்றார்கள். மண் சுவர் வீடு சுற்றிலும் அழகிய தோட்டம். தோட்டத்தில் மான்களும் மயில்களும் நடமாடின. கொல்லையில் பெரிய கிணறு.

பேழையிலிருந்து ஒரு நாவல்நிற மாத்திரையை விழுங்கினர்.

பழங்கால மனிதர் போல ஆடைக்கு மாறினர்.

தங்களைக் கடந்து செல்லும் ஒரு மனிதரிடம் "அய்யா தெய்வீகப்புலவர் திருவள்ளுவரின் உறைவிடம் இதுதானே?" என வினவினான் நட்டு.

"ஆம். அந்த வள்ளுவன் உறைவிடம் இதுதான். நீவீர் யாரோ?"

"இசுக்கு புசுக்கு சொல்ல மாட்டேன். போய்யா "

நட்டுபேசிய மொழி புரியாமல் வழிபோக்கன் அகன்றான்.

அந்த வீட்டுக்குள் நடந்தனர்.

திருவள்ளுவர் ஓலைச்சுவடியில் எழுத்தாணியால் ஏதோ எழுதியபடி நிமிர்ந்தார். "யார் நீங்கள்?"என அன்பாய் வினவினார்

பழங்கால மனிதர் போல ஆடைக்கு மாறினர்.

திருவள்ளுவர் நடிகர் கமல்ஹாசன் போல் அழகாக இருந்தார்.

பிடறியில் தவழ்ந்தது நீண்ட தலைகேசம்.

கனத்த புருவம்.

பாரதியார் கண்கள்.

கூர்மையான மூக்கு.

அழகியதாடி.

நெற்றியில் குங்குமம்.

இடுப்பில் வேட்டியை ஒரு மாதிரி கட்டியிருந்தார். சட்டை இல்லை. கழுத்தில் ஏராளமான மணி மாலைகள். மார்பிலும் புஜத்திலும் சந்தனம் பூசியிருந்தார்.

ஓலைச்சுவடியில் எழுத்தாணி உதவியுடன் அவர் எழுதுவது வித்தியாசமாக இருந்தது.

-கதைக்குள் ரகு குறுக்கிட்டான்.

"திருவள்ளுவர் காலத்திலே பேனா கிடையாதா தாத்ஸ்?"

"ஆமா. அப்பல்லாம் ஓலைச்சுவடி எழுத்தாணிதான். பச்சை ஓலைல கூர்மையான ஆணியால எழுத்துக்களை பச்சை குத்துரமாதிரி எழுதவேண்டியதுதான். புள்ளி வச்சா ஓலை ஓட்டை ஆய்டும்னு தமிழ் எழுத்துக்களுக்கு அப்பல்லாம் புள்ளி வைக்காம விட்ருவாங்க. 'அவன் சாப்பிட்டான்' என்பதை 'அவன சாப்பிட்டான' என்றுதான் எழுதுவாங்க."

"ஓஹோ "

"உலகத்ல எல்லா மொழியும் ஆயிரம் வருஷத்துக்கு ஒருமுறை தன்னுடைய எழுத்து வடிவத்தை முழுசா மாத்திக்குது. ஸோ.... இந்த ரெண்டாயிரம் வருஷத்ல தமிழ் எழுத்துக்கள் இருமுறை மாறிருச்சு. திருவள்ளுவர் எழுதின தமிழ் எழுத்துக்கும் இப்போதைய பெரியார் சீர்திருத்த தமிழ் எழுத்துக்களுக்கும் துளியும் ஒற்றுமை இல்லை..."

"ஓ "

"சுவடி எழுத்துக்கள் மூன்று வகைப்படும். கண் எழுத்து, வட்ட எழுத்து, கோர எழுத்து. ஓலைச்சுவடி தமிழை எல்லாரும் வாசித்து விட முடியாது. அதற்கென்று தனி நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தான் வாசித்து சுவடி எழுத்துக்களை தற்சமய எழுத்துக்கு மாற்றுவார்கள். மாற்றியும் நம்மால் எந்த செய்யுள் வடிவ தமிழையும் புரிந்து கொள்ள முடியாது "

"செய்யுள்னா சரியான அர்த்தம் என்ன தாத்தா?"

"இலக்கண ரீதியான கவிதை நடை தமிழ்தான் செய்யுள் ரகு. மேலும் பண்டைய தமிழ் செய்யுள்கள் விடுகதை போல புதிராய் அமைந்திருக்கும். அவைகளுக்கு பல தமிழ் பெரியவர்கள் பொழிப்புரை எழுதியிருக்கிறார்கள். அதனை வைத்து நாம் செய்யுள்களை புரிந்து கொள்ளலாம். திருக்குறளுக்குக் கூட பலர் பொழிப்புரை எழுதியிருக்காங்க. மீண்டும் கதைக்குள் போவமா ரகு?"

"யெஸ் தாத்தா "

-மீண்டும் திருவள்ளுவர். "யார் நீங்கள்? என அன்பாய் வினவினார்

நடிகை ரேவதி மாதிரி பெண் ஒருத்தி திருவள்ளுவருக்குப் பின் வந்து நின்றாள். மிக நீண்ட தலைகேசம். நெற்றியில் நெற்றிச்சூடி.

காது வளர்த்திருந்தாள்.

தொங்கும் காதுகளில் பாம்படம் அணிந்திருந்தாள்.

நெற்றியில் பெரிய வட்டமாய் பொட்டு.

மை இட்ட அகலக்கண்கள்.

இருபுறமும் மூக்குத்திகள் கொண்ட மூக்கு.

கழுத்தில் தங்க ஆபரணம்.

ஜாக்கட் அணியாமல் மார்புகச்சை அணிந்திருந்தாள்.

கால்களில் தண்டை.

பதில் பேசாமல் மூவரும் விழித்தனர். சில நிமிடத் தயக்கத்துக்கு பிறகு நட்டுதான் பேசினான்.

"நாங்க தமிழ்நாட்டுக் குழந்தைகள். நீங்கள் வாழ்ந்த காலத்துக்கு இரண்டாயிரம் வருஷம் பிந்தியவங்க. தேவதைகள் பரிசளித்த மந்திரக்கடிகாரம் உதவியுடன் காலத்தின் பின்னோடி வந்திருக்கிறோம்..."

"தமிழ் நாடுன்னா?"

"சேர, சோழ, பாண்டிய நாடுகள் இணைந்த பகுதிதான். இந்தியாவில் ஒரு பகுதிதான் தமிழ்நாடு...."

"அப்படியா? அமருங்கள். உங்களை சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்"

"இவங்க உங்கள்மனைவி வாசுகி அம்மையார் தானே?"

"ஆமாம். எப்படி உங்களுக்கு இவரைத் தெரியும்?"

"இவரைப்பத்தி பெருமையா கதைகள் படித்திருக்கிறோம்"

"என்ன கதை?"

"ஒரு நாள் இவர் கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந் திருக்கிறார். நீங்கள் அவசரமாய் கூப்பிட நீர் இறைப்பதை

அப்படியே விட்டுவிட்டு உங்களிடம் வந்திருக்கிறார். மீண்டும் அவர் கிணற்றுக்கு போகும் வரை வாளி அந்தரத்தில் தொங்கிய தாம்."

திருவள்ளுவரும் வாசுகி அம்மையாரும் விழுந்துவிழுந்து சிரித்தனர்.

வாசுகி, "வாளி தானாக நிற்கவில்லை குழந்தைகளா. சகடையில் கயிறு சிக்கி நின்றது " என்றார்.

ஆர்த்தி நெற்றியில் தட்டிக்கொண்டாள். "இந்தக்கதையை தப்பாக சொல்லியே எங்க கால பெண்களை அடிமைப்படுத்து கிறார்கள் வள்ளுவர் சார் "

"சார் என்றால்?"

"சார் என்றால் மரியாதையான ஆங்கில வார்த்தை "

"அய்யா என அழையுங்கள் போதும் "

"சரிங்கய்யா "

"என்ன பருகுகிறீர்கள்?" வினவினார் வாசுகி.

"பெப்ஸி, மிராண்டா அல்லது தம்ஸ் அப் " என்றான் நட்டு குறும்பாக.

"அவன் கிடக்கிறான். நீங்கள் விருப்பப்பட்டதைக் கொடுங்கள் " என்றாள் சக்தி.

மூவருக்கும் மோர் மண் குவளையில் வந்தது.

குடிக்க குளிரச்சியாய் இதமாய் இருந்தது.

"உங்கள் காலம் எப்படி இருக்கிறது குழந்தைகளே?"

"விஞ்ஞான வசதிகள் பெருகிவிட்டன. மனித உள்ளம் குறுகி விட்டது. உங்கள் காலத்தில் வாளால் சண்டையிட்டுக் கொண்டார்கள். எங்கள் காலத்தில் அணுகுண்டால் சண்டையிட்டுக் கொள்கிறோம். உங்கள் காலத்தில் 4448 வியாதிகள். எங்கள் காலத்தில் நாற்பதாயிரம் வியாதிகள். நிலாவுக்கும் செவ்வாய் கிரகத்துக்கும் விண்கலம் அனுப்புகிறோம் கோடிக்கணக்கான மக்களை பட்டினி போட்டு...."

"ஆதி பகவனே " கவலையுற்றார் வள்ளுவர்.

"என் கடவுள்தான் சக்தி வாய்ந்தவர் என மதச்சண்டைகள். இந்து-முஸ்லிம் பிரச்சனை "

"முஸ்லிம் என்றால்?"

"உங்களுக்கு 600 வருடங்கள் கழித்து தோன்றிய மதம் முஸ்லிம் மதம். அதனைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்கள். ஆரியர், திராவிடர் இனங்களைச் சார்ந்தவர்கள் இந்துக்கள் "

"கேட்கவே மனவருத்தமாக உள்ளது. அது போகட்டும். எனது குறள்களை படித்திருக்கிறீர்களா?"

"சரியாக போனது போங்கள். உங்களது குறள்களை எங்களுக்கு பாடமாக வைத்திருக்கிறார்கள். மனனம் செய்து தேர்வில் எழுதினால் மதிப்பெண் "

"எத்தனை குறள்கள் தெரியும் உங்களுக்கு?"

"பத்து பதினைந்துதான் தெரியும் அய்யா." என்றான் நட்டு. "ஆனால் கேட்டு விடாதீர்கள். தவறாகக் கூறி உங்களை கோபப் படுத்த விரும்பவில்லை நான் "

"நீங்கள் உண்மையில் எத்தனை குறள்கள் எழுதுனீர்கள் அய்யா?" என்றாள் ஆர்த்தி.

"ஏன்?"

"1330தான் என என் தமிழ் ஆசான் கூறுகிறார் "

"தவறு நான் எழுதியது மொத்தம் மூவாயிரம் குறள். 1330 தவிர மீதி அழிந்து விட்டன போலும் "

"அழிந்த 1670 குறளை கொடுங்கள். எங்கள் காலத்துக்கு சேர்த்து விடுகிறோம் "

மூவாயிரம் குறள்களைக் கொண்ட ஓலைச்சுவடிகளை எடுத்தார் வள்ளுவர்.

நட்டு மந்திரப்பேழையிடம் முணுமுணுத்தான்.

"கால வெள்ளம் அழித்த 1670 குறளை பதிவு செய்து வைத்துக் கொள் பேழையே."

பேழை பதிவு செய்து கொண்டது.

வள்ளுவரின் விழிகள் ஆச்சரியத்தால் அகன்றன.

"அற்புதம். மகா அற்புதம் குழந்தைகளா "

தொடர்ந்து வள்ளுவருடன் கதைக்க ஆரம்பித்தனர்.

வாசுகி அம்மையார் மதிய விருந்தை சமைக்க ஆரம்பித்தார்.

நீண்ட வாழை இலைகளில் ஏராளமான பதார்த்தங்களுடன் மதியவிருந்து பரிமாறப்பட்டது.

இரசாயன உரக்கலப்பு இல்லாமல் சாதம் தனிச்சுவை காட்டியது.

திருப்தியாக சாப்பிட்டு முடித்தனர்.

"உங்களின் விருந்தோம்பலுக்கு நன்றி அய்யா, அம்மா "

"நீங்கள் மூவரும் இங்கேயே தங்குங்கள் "

"மன்னிக்க வேண்டும். நாங்கள் சிறிது நேரத்தில் புறப்படுகிறோம் "

"உங்கள் விருப்பம் "

"எங்கள் கால குழந்தைகளுக்கு ஏதாவது அறிவுரை கூற விரும்புகிறீர்களா?"

"வேறென்ன? மனசாட்சிக்கு அடங்கிய மனிதாபிமானமிக்க பொன் பொருள் சாராத நல்லதொரு வாழ்க்கை வாழப்பாருங்கள் குழந்கைளே "

நட்டு, சக்தி, ஆர்த்தி மூவரும் தம்பதிகள் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றனர்.

நட்டு வள்ளுவர் கையை முத்தமிட்டான்.

மூவரும் புறப்பட்டனர் கண்ணீருடன் பிரியாவிடை பெற்றபடி.

திருவள்ளுவரின் குடிலைவிட்டு வெகுதூரம் நடந்து வந்து விட்டனர்.

"அடுத்து எங்க போறது நட்டு?"

"இயேசு நாதரை பார்க்க போவமா?"

"இயேசு நாதரை போய் பார்த்தா அடுத்து முகமது நபியை போய் பாக்கணும் "

"அவரையும் பாத்துட்டா போச்சு "

"இதுல ஒரு சிக்கல் இருக்கு நட்டு "

"என்ன?"

"மதம்-மதம் சார்ந்த கடவுள்கள் பற்றி நம்மகிட்ட ஒரு வரலாறு இருக்கு. நாம போய் பாத்து அந்த வரலாறுல மாற்றம் இருந்தா பிரச்சனை! நாம பாத்த மாற்றத்தை மதங்களை சார்ந்த மக்கள் நம்பமாட்டாங்க. வீண் பிரச்சனை, வீண் சண்டை மூளும். ராமரோ, இயேசு நாதரோ, நபிகளோ அவரவர் மதம் வர்ணித்தபடி மக்கள் மனதில் உலவட்டும். நாம வேற எங்கயாவது போவம்" என்றாள் சக்தி.

"ஆமாமா... நீ சொல்றதுதான் சரி.. வேற எங்க போவம் ஆர்த்தி?"

ஆர்த்தி யோசித்து கண் அகட்டி குதூகலித்தாள்.

"இப்டி செஞ்சா என்ன?"

"எப்டி?" நட்டு

"மாயாஜாலமும் மந்திரமும் மிக்க ஒரு ராஜா ராணி காலத்துக்கு போவமா?"

"சபாஷ் போவம் " நட்டு

"அப்டிப்பட்ட காலம்னா எந்த வருஷம்?" சக்தி

"கிபி 200கள்ல வரும். தவிர அதப்பத்தி நமக்கென்ன கவலை? 'ராஜா ராணி காலத்துக்கு போ' ன்னா மந்திரக்கடிகாரம் கொண்டு போய் விட்ரப் போகுது "

மூவரும் ஆயத்தமாயினர்.

மந்திரக்கடிகாரங்களை திருகி கட்டளை இட்டனர்.

'உய்க் '

மூவரும் வானத்தில் பறந்தனர்.

கீழே இறங்கிய மூவரையும் மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் வரவேற்றன.

அவற்றுடன் கூடைகூடையாய் ஆபத்தும்!

O

# 11

மூவரும் அந்த நாட்டில் இறங்கினர்.

இறங்கியதும் மந்திர மை தடவிக்கொண்டு அந்த நாட்டினர் உடைகளுக்கு மாறினர்

விசேஷ மாத்திரைகள் சாப்பிட்டு அந்த நாட்டினரின் பேச்சு தமிழ் பேசக் கற்றுக் கொண்டனர்.

அந்த நகரத்தில் மொத்தம் ஐம்பது தெருக்கள் இருந்தன.

சத்ரியர் தெரு.

வணிகர் தெரு.

அந்தணர் தெரு.

இப்படி நிறைய.

ஒவ்வொரு தெருவிலும் நூறு நூறு வீடுகள். ஒவ்வொரு வீட்டின் முன்புறத்திலும் விஸ்தீரணமான திண்ணை காணப்பட்டது. திண்ணையும் வெளி வாசலும் மாட்டுச் சாணத்தால் மெழுகப் பட்டிருந்தன. நிலைகளில் திருஷ்டி பொம்மைகள் தொங்கின.

திறந்தவெளி சாக்கடைகள்.

மூவரும் 'பராக்கு' பார்த்தபடியே நடந்தனர்.

முதலில் நட்டுதான் வாய் திறந்தான்.

"என்ன ஆச்சரியம்! தெருக்களிலோ வீடுகளிலோ மக்களைக் காணவில்லை ஒட்டுமொத்தமாக எங்கே தொலைந்து போனார்கள்?"

சக்தி திரும்பி கூவினாள். "அதோ "

அவள் சுட்டிய திசைக்கு ஆர்த்தியும் நட்டுவும் திரும்பினர்.

கறுப்பு ஆடை அணிந்த குடிமக்கள் தென்பட்டனர்.

கறுப்பு உடுத்துவது துக்கத்தின் அறிகுறியாயிற்றே!

மூவரும் குடிமக்களை நெருங்கினர்.

நெருக்கத்தில் மூவரும் திடுக்கிட்டனர்.

குடிமக்கள் அனைவரின் கண்களிலும் கண்ணீர் வழிந்தோடியது.

சிலர் நினைத்து நினைத்து கதறி அழுதனர்.

மூவரையும் அவர்கள் பார்த்து நெற்றி சுருக்கினர்.

"யார் நீங்கள்?"

"நாங்களும் உங்களைப் போலத்தான். சுற்றுலா வந்துள்ளவர்கள் என வைத்துக் கொள்ளுங்களேன் "

"பொய் கூறுகிறீர்கள் "

"பின்ன?"

"நீங்கள் மந்திரவாதியின் ஆட்கள். எங்களை ஏமாற்ற மாயத் தோற்றத்தில் வந்திருக்கிறீர்கள் "

"கடவுளே எங்களை சந்தேகப்படாதீர்கள். நாங்கள் நல்லவர்கள். (தேவதைகள் தந்த விசேஷ சக்திகளை விளக்கி) இந்த நாடு ஏதோ ஒரு பிரச்சனையில் சிக்கியிருக்கிறது என்பதனை நன்கு உணர்கிறோம். உங்கள் பிரச்சனையைக் கூறினால் உதவக் காத்திருக்கிறோம் "

"நீங்கள் மூவரும் சின்னஞ்சிறு சினார்கள். உங்களால என்ன செய்ய முடியும்?"

"எங்களிடம் புத்திக்கூர்மையும் மந்திரசக்திகளும் அபரிமிதமாய் உள்ளன சிறிதும் தயங்காமல் இந்த நாட்டுக்கு நேர்ந்துள்ள அவலத்தைக் கூறுங்கள் "

குடிமக்கள் ஒருவருக்கொருவர் கிசுகிசுப்பாய் பேசிக் கொண்டனர்.

ஒரு குடியானவன் முன் வந்தான்.

"எங்கள் நாட்டின் பெயர் ஜாலபுரி. எங்கள் பேரரசரின் பெயர் நந்திவர்மன். வீரதீரம் மிக்கவர். எங்கள் நாட்டைச் சூழ்ந்துள்ள நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளை வென்று கப்பம் கட்ட வைத்தவர். எங்களின் மீது கருணை மழைபொழிபவர். நீதி வழுவாதவர். நாங்கள் அனைவரும் அவரை எங்கள் உயிருக்கு மேலாக மதிக்கிறோம் "

"அவருக்கு ஏதாவது ஆபத்தா?" குறுக்கிட்டான் நட்டு.

"இல்லை. முழுவதும் கேளுங்கள். எங்கள் பேரரசருக்கு ஒரே ஒரு மகள். அந்த இளவரசியின் பெயர் ராஜமோகினி. அழகில் சொர்ண விக்கிரகம். அவர் போன்ற அழகியை இதுவரை ஈரேழு லோகமும் கண்டிருக்காது. தந்தையைப் போன்றே கனிவுள்ளம் கொண்டவர். மெத்தப்படித்தவர். அவரை மணம் செய்து கொள்ள எல்லா நாட்டு இளவரசர்களும் போட்டி போடுகின்றனர்.."

"அவருக்குத்தான் ஆபத்தா?" என்றாள் சக்தி.

"ஆமாம். ஆபத்தென்றால் அது சாதாரண வார்த்தை. பேராபத்து. மூன்று நாட்களுக்கு முன் எங்கள் இளவரசி ராஜ மோகினியை அடையாளம் தெரியாத ஒரு மந்திரவாதி கடத்திச் சென்று விட்டான் "

சொன்ன குடியானவன் கேவிகேவி அழுதான்.

"கடத்தல் எப்படி நடந்தது?" வினவினாள் ஆர்த்தி.

"எங்கள் இளவரசியார் அந்தப்புரத்தில் கன்னிமாடத்தில் நின்று தலை வாரிக் கொணடிருந்திருக்கிறார். அவரின் தலைகேசம் கால் வரை தவளும் அளவுக்கு நீளமானது. அப்போது வான்வழியே சென்ற மந்திரவாதி இளவரசியாரின் அழகை பார்த்திருக்கிறான். உடனே மணிப்புறாவாக மாறி இளவரசியாரின் மீது எதனையோ உமிழ்ந்திருக்கிறது. இளவரசியார் மயக்கமடைந் திருக்கிறார். மந்திரவாதி மனித உருவுக்கு மாறி இருக்கிறான். இளவரசியாரை ஒரு ரோஜாப்பூவாக மாற்றி இடுப்பில் மறைத்துக் கொண்டு பறந்து விட்டான்..." பெருமூச்செறிந்தான் குடியானவன்.

"மந்திரவாதி இளவரசியாரை கடத்திச்சென்றதை நேரில் யார் பார்த்தது?" கேட்டான் நட்டு.



"இளவரசியாரின் நெருங்கிய சேடியர்கள் பார்த்திருக்கின்றனர் "

"அவர்கள் இப்போது எங்கே?"

"இளவரசியை தான் கடத்தியதை யாரிடம் சேடியர் சொன்னாலும் அந்த கணமே சேடியர் கல்லாய் சமையட்டும்' என மந்திரவாதி சபித்து விட்டு போயிருக்கிறான். கடத்தல் விஷயத்தை மன்னரிடம் சொன்ன கணமே அந்த பணிப்பெண்கள் கருங்கல்லாய் மாறி விட்டனர் "

"அடக்கடவுளே " அலுத்துக்கொண்டான் நட்டு.

"நாங்கள் உங்களின் பேரரசரை பார்க்கவேண்டுமே " என்றாள் சக்தி.

"இப்போதே கூட்டிச் செல்கிறோம் "

குடிமக்கள் நடக்க மூவரும் பின் தொடர்ந்தனர்.

தங்கமும் வெள்ளியும் இழைக்கப்பட்ட மாபெரும் அரண்மனை பார்வையானது.

அரண்மனையின் உச்சியில் அந்த நாட்டுக்கொடி பறந்து கொண்டிருந்தது.

அரண்மனையை காவல் காக்கும் வீரர்கள் கூட கறுப்பாடை அணிந்திருந்தனர்.

மன்னரைத் தேடி மூன்று வாண்டுகள் வந்திருப்பது உடனே செய்தியானது.

சயன அறையில் மனச்சோர்வாய் படுத்திருந்த மன்னர் எழுந்து அமர்ந்தார்.

"உடனே அவர்களை வரச் சொல்லுங்கள் "

எழுந்து அமர்நதிருந்த மன்னருக்கு வயது 52. உயரம் ஆறடிக்கு மேல். தலையில் கிரீடம். நெற்றியில் பிறை நிலா பொட்டு. முறுக்கு மீசை. முறுக்கேறிய புஜங்கள். கழுத்தில் தங்க ஆபரணங்கள். நெஞ்சில் விழுப்புண்களின் வடுக்கள்.

கதைக்குள் குறுக்கிட்டான் ராஜ்குமார்.

"தாத்தா ஒரு சந்தேகம். விழுப்புண்கள்னா என்ன? எனக்கு விழுப்புரம் தான் தெரியும் "

"பண்டைய காலத்தில் வீரத்துக்குத்தான் முதல் மரியாதை. சுத்த வீரனுக்கு தான் பெண் கொடுப்பார்கள். போர்க்களத்தில் சண்டையிடும்போது ஒரு வீரன்ஒரு முக்கியமான அம்சத்தை பிரதானமாக கடைபிடிப்பான். எதிரிகளால் ஏற்படும் காயம் முதுகில் ஏற்படாமல் மார்பில் ஏற்படுமாறு பார்த்துக் கொள்வான். தோற்று ஓடும் கோழைகளுக்குத்தான் முதுகில் காயம் ஏற்படும். மார்பில் ஏற்படும் காயம் வீரக்காயம் அதாவது விழுப்புண். பல போர்க்களங்களைக் கண்ட அரசனுக்கு ஏராளமான விழுப்புண்கள் இருப்பது இயற்கைதானே?"

தலையாட்டினான் ராஜ்குமார்.

ரகு குறுக்கிட்டான். "எங்க தமிழ் வாத்தியார் கூட பண்டை தமிழர் வீரத்தை விளக்க ஒரு புறநானூற்று கதை கூறினார். ஒருதாய் தனது மகனை போருக்கு அனுப்புகிறாள். போரில் மகன் இறந்த செய்தி வருகிறது. தாய்க்கு துக்கம்தான். ஆனால் அந்த தாய்க்கு பயங்கர பதட்டம். மகன் கோழைத்தனமாய் புறமுதுகிட்டு ஓடி முதுகில் காயம் பெற்றானா? வீரனாய் சண்டையிட்டு மார்பில் விழுப்புண் பெற்று வீரமரணம் அடைந்தானா? போர்க்களத்தின் பிணங்களில் மகனைத் தேடுகிறாள். கடைசியில் மகனின் பிரேதம் விழுப்புண்ணுடன் கிடைக்கிறது தாய் ஆனந்தக்கூத்தாடுகிறாள் "

புவனா விவாதத்தில் கலந்து கொள்கிறாள்.

"இந்த விழுப்புண் விஷயமெல்லாம் மாறிருச்சு இப்ப. வீரனாக இருக்றத விட இன்னைக்கி சூழ்நிலைக்கு மனுசனா இருக்றது சாலச்சிறந்தது."

"இன்னைக்கி போர் முறைகளே வேற. கொரில்லா போர் யுக்தி வந்திருக்கு. ஒளிஞ்சு நின்னு தாக்ரது. தீவிரவாதிக செய்யுராங்க. நோய் கிருமிகளை வச்சுக்கிட்டுக்கூட யுத்தம் நடத்ராங்க "

"அது எப்டி தாத்தா?"

"எதிரி நாட்டு மேல கொடிய வைரஸ் நோய் கிருமிகளை வீசி லட்சக் கணக்கானவர்களை கொல்ராங்க. ஈராக் நாடு கூட அது

மாதிரி ஆயுதங்களை நிறைய வச்சிருக்கு. கிருமிகளை வச்சு நடத்ற போருக்கு ஆங்கிலத்ல 'BIOLOGICAL WARFARE' என கூறுவாங்க."

"தகவல் போதும். கதைக்குள் போங்க தாத்தா "

-மீண்டும் கதைக்குள் புகுந்தார் தாத்தா.

மன்னரைக் கண்டதும் மூவரும் குனிந்து வணங்கினர்.

"வணக்கம் பேரரசர் அவர்களே "

"வணக்கம் நீங்கள் யார்?"

"நாங்கள் மூவரும் மந்திரமும் விஞ்ஞானமும் தெரிந்த புத்திசாலி வாண்டுகள்! இளவரசியாரை மீட்டுக்கொடுக்க வந்திருக்கிறோம் "

வேதனையாய் சிரித்தார் பேரரசர்.

"நீங்களா?"

"சந்தேகம் கொள்ளாதீர்கள் எங்களால் எல்லாம் முடியும்"

"யு டோண்ட் ஒர்ரி முஸ்தபா " என்றான் நட்டு.

"இந்த குட்டிப்பையன் என்ன கூறுகிறான்?"

"அது பரங்கியர் மொழி. உங்களுக்குப்புரியாது நட்டு பீ சீரியஸ் "

பேரரசர் நெற்றி சுருக்கினார்.

"நோய்க்கு ஏதாவது மருந்து உட்கொண்டுதானே ஆக வேண்டும்... சரி.... உங்களை நம்புகிறேன். இளவரசியாரை மீட்க என்ன வசதிகள் வேண்டும்.. சொல்லுங்கள்... செய்கிறேன்"

"வசதிகள் வேண்டாம். இளவரசியாரின் போட்டோ வச்சிருக்கீங்களா?"

"போட்டோவா? புரியவில்லையே?"

"ஓவியம்.. இளவரசியின் ஓவியம்... உங்களின் முத்திரை மோதிரம்... இரண்டும் வேண்டும்."

"தருகிறேன் வாண்டுகளே. நீங்கள் வாக்குறுதி தந்தபடி இள வரசியை மீட்டுக் கொடுத்தீர்கள் என்றால் பாதி நாடு உங்களுக்கே."

நட்டு அலுத்துக்கொண்டான். 'இம் நான் வயசு பய்யனாயி ருந்தா இளவரசிய எனக்கே கட்டி வச்சிர்ரேன்னு சொல்லிருப்பாரு.'

"நாடெல்லாம் வேண்டாம் மன்னா. உங்கள் அன்பு மட்டும் போதும் " என்றாள் சக்தி.

"என்று புறப்படுகிறீர்கள்?"

"இன்றே.... இப்பொழுதே " ஆர்த்தி.

"இளவரசியை கடத்திச் சென்ற மந்திரவாதியின் அங்க அடையாளங்கள் தெரிந்தால் எவ்வளவு உதவியாக இருக்கும். மந்திரவாதியை நேரில் பார்த்தவர்கள் எல்லாம் கல்லாய் அல்லவா சமைந்து விட்டார்கள்?" சலித்துக் கொண்டான் நட்டு.

அப்போதுதான் அது நடந்தது!

சயன அறைக்குள் ஒரு பச்சைக்கிளி படபடப்பாய் பறந்து வந்தது.

படுக்கையில் அமர்ந்து கொண்டு 'கீச் கீச்' என்று கத்தியது.

மன்னர் கூவினார்.

"இந்த பச்சைக்கிளி ஏதோ சொல்ல விழைகிறது. ஆனால் நமக்குத்தான் அதன் கிளி பாஷை புரியவில்லை "

"ஹாய் கிளி பிரதர் "

கிளி திடுக்கிட்டது.

"ஓ காட் உங்களுக்கு என் மொழி தெரியுமா?"

"ஆமா " தோள்களை குலுக்கி குலுக்கி சிரித்தான் நட்டு.

"இளவரசியை மந்திரவாதி கடத்திச் செல்வதை ஒளிந்திருந்து பார்த்தேன் "

"நல்லவேளை நீ மந்திரவாதி கண்களில் சிக்கவில்லை. சிக்கியிருந்தால் நீயும் கல்லாய் போயிருப்பாய் "

"மந்திரவாதி பற்றிய பலதகவல்களை என்னால் தரமுடியும்."

"டெல்...டெல்..." ஆங்கிலத்தில் பரபரத்தான் நட்டு.

"அவசரப்படக்கூடாது" எனக்கூறி கண்ணடித்தது பச்சைக் கிளி.

வாவ் !

# 12

பச்சைக்கிளி கொழுகொழுவென்று நடிகர் செந்தில் சைஸ்க்கு இருந்தது. அடிக்கடி இறக்கைகளை தூக்கி பட்பட் என்று அடித்துக்கொண்டது.

பச்சைக்கிளி கண்ணடிக்க நட்டு பதிலுக்கு குறும்பு கொப்பளிக்க கண்ணடித்தான்.

'டிங்க் '

கிளிக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது.

நாணிக்கோணியது.

"தம்பீ நீ ஜாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை நீ நினைக்ற மாதிரி நான் ஆண் கிளிஅல்ல பெண்கிளி என்னைப் பார்த்து நீ கண்ணடிக்கலாமா?"

"ஓ ஸாரி சிஸ்டர். இதற்காக நீ கோபித்துக்கொண்டு மந்திரவாதி பற்றிய செய்திகளை சொல்லாம இருந்திடாதே "

மன்னிப்பு கேட்கும் குரலில் பேசினான் நட்டு.

கிளி கண்மூடி யோசித்து விட்டு நிமிர்ந்தது.

"உங்க மூன்று பேரின் முகங்களையும் பார்த்தால் ராஜாராணி காலத்துப் பிள்ளைகளாகத் தெரியவில்லை. நீங்கள் நினைப்பது போல மந்திரவாதிகள் எளிதில் வீழ்பவர்கள் அல்ல. மந்திரவாதி யிடமிருந்து இளவரசியை மீட்பதாகக் கூறி புறப்பட்டு உயிர் ஆபத்துக்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள் " நிஜமான அக்கறையுடன் கூறியது கிளி.

"மிஸ் கிளி உனது அறிவுரை எரிச்சல் மூட்டுகிறது. சுற்றி வளைக்காமல் மந்திரவாதி பற்றிய செய்திகளை உடனே கொட்டி விடு."

"இம் விதி வலியது. யாரை விட்டது?" அலுத்துக் கொண்டது கிளி.

"சொல்லுகிறாயா, அல்லது பறந்து போகிறாயா?"

"இளவரசி கடத்தல் மூன்று நாட்களுக்கு முன் நடந்தது. அந்தப்புரத்திலுள்ள ஒரு அத்தி மரத்தில் அமர்ந்து அத்திப்பழங் களை கொத்திக்கொண்டிருந்தேன். கன்னி மாடத்தில் இளவரசி நின்று கொண்டிருந்தார். தனது நீளமான தலைமுடியை வாரிக் கொண்டிருந்தார். இளவரசி பெண்ணுக்கு பெண்ணே பொறாமைப் படும் அழகு. எப்போதும் நான் அவரது அழகை மெய்மறந்து ரசிப்பது வழக்கம் அன்றும் ரசித்துக் கொண்டிருந்தேன் "

"இம் "

"திடீரென்று வானத்தில் பெரும் இரைச்சல். பயந்தபடி அண்ணாந்து பார்த்தேன். ஒரு ராட்சச கழுகின் மீது அமர்ந்து அந்த மந்திரவாதி வந்து கொண்டிருந்தான். பறக்கும்போது அந்த கழுகு வித்தியாசமான சப்தம் எழுப்பியது. மந்திரவாதி இளவரசியை பார்த்து விட்டான். அவ்வளவுதான். கழுகுடன் தோட்டத்தில் இறங்கினான். அங்குமிங்கும் நோட்டமிட்டான். நான் மரக் கிளைக்கு பின் பதுங்கிக்கொண்டேன். மந்திரவாதி ஒரு அழகிய மணிப்புறாவாக மாறினான். இறக்கைகளை சடசடவென அடித்துக் கொண்டு இளவரசியிடம் பறந்து போனான். இளவரசியை சுற்றிச் சுற்றி பறந்தான். இளவரசியின் பணிப்பெண்கள் மணிப்புறாவை விரட்ட முயற்சி செய்தனர். அவர்களை இளவரசி தடுத்தார். வலதுகையை இளவரசி நீட்ட கையில் வந்து அமர்ந்து கொண்டது மணிப்புறா. மணிப்புறாவிடம் இளவரசி கொஞ்ச ஆரம்பித்தார் "

"அப்புறம்?" என்றாள் ஆர்த்தி.

"மணிப்புறா தனது கூரிய அலகில் ஏதோ அடக்கி வைத்திருந்தது. அதனை அப்படியே இளவரசி முகத்தில் உமிழ்ந்து விட்டது. ஒரு பச்சைநிறத்திரவம் இளவரசி முகத்தில் பரவியது. இளவரசி மயக்கமடைந்தார். தோழிப்பெண்கள் பதறி சிதறி ஓடி வந்தனர். மணிபுறா மந்திரவாதி ஆகியது."

"ம்"

"ஒரு தோழிப்பெண். "சண்டாளா எங்கள் இளவரசியை என்ன செய்தாய்?" என கத்தினாள்.

"ம்"

"அதற்கு மந்திரவாதி, "என்னை இழித்துப் பேசாதீர்கள். நான் கடவுளுக்கு ஈடு இணையான மந்திரவாதி. உங்கள் இளவரசியின் அழகில் மயங்கி விட்டேன். வேறு உபாயம் தெரியாததால் இளவரசியை கடத்திச் செல்கிறேன். என்னையோ என் இருப் பிடத்தையோ கண்டறிதல் குதிரைக்கொம்பு.-" என்றான். இளவரசியை ஒரு ரோஜாப்பூவாக மாற்றி இடுப்பில் செருகிக் கொண்டான்."

"ம் "

"பக்கத்தில் ஓடிவரும் பணிப்பெண்களை நோக்கி கை உயர்த்தினான் மந்திரவாதி. "நான் இளவரசியை கடத்திச் சென்ற விஷயத்தை நீங்கள் யாரிடம் கூறினாலும் அடுத்த நொடியே கல்லாய் போவீர்கள் " என சபித்தான். மீண்டும் தோட்டத்துக்கு வந்தான். கழுகின் மீது ஏறி அமர்ந்தான். பறந்து மறைந்தான் "

மூன்று வாண்டுகளும் பெரிதாய் பெருமூச்சு விட்டன.

"அந்த மந்திரவாதியின் பெயர் என்ன?"

"தெரியாது "

"அவனது இருப்பிடம் எது?"

"தெரியாது "

"அவனைப்பற்றி ஏதாவது காதுவழி செய்திகளாவது உண்டா?"

"இல்லை "

"பின்னே நீ எந்தவிதத்தில் எங்களுக்கு உதவுவதாக 'பந்தா' காட்டினாய்?" என்றான் நட்டு.

கிளி குழம்பியது. "பந்தா-இந்த வார்த்தையை புதிதாக கேள்விப்படுகிறேன். இந்த குள்ளச்சிறுவன் பேசும் தமிழ் வித்தியாசமாகவே இருக்கிறது. நான் உங்களுக்கு நிச்சயம் உதவ

முடியும். அந்த மந்திரவாதியை நேரில் பார்த்துவிட்டு இன்னும் கல்லாய் போகாமல் உயிருடன் ஒரே ஜீவன் நான்..."

"அதற்கென்ன?"

"மந்திரவாதியின் உருவத்தை வர்ணிக்கிறேன். எனது வர்ணனைப்படி மந்திரவாதியின் உருவத்தை வரைந்து கொள்ளுங்கள். அந்த ஓவியத்தை வைத்துக் கொணடு நீங்கள் போகும் வழியெல்லாம் மந்திரவாதியைப் பற்றி விசாரிக்கலாம். யாராவது ஒருவர் மந்திரவாதியைப் பற்றி உபயோகமான தகவல் சொல்லாமலா போய் விடுவார்?"

சக்தி குதூகலித்தாள்.

"நட்டு இது நல்ல யோசனை. குற்றவாளிகளை கண்டுபிடிக்க நமது காலத்து காவல்துறையும் இதே முறையை கையாள்கிறது. ஆங்கிலத்தில் இதற்கு 'IDENTY KIT' எனக் கூறுவார்கள் "

-கதைக்குள் கமல் குறுக்கிட்டான்.

"ஐடென்டி கிட் அப்டின்னா தாத்தா?"

"சொல்ரேன். ஒருத்தரை ஒரு கொலையாளி கொலை செஞ்சிட்டு தப்பிச்சுப் போய்டுரான். அதிஷ்டவசமா அந்த கொலையாளியை ஒருத்தர் பாத்திடுராரு. அந்த நேரில் பார்த்த சாட்சியை போலீஸ் தனது கம்ப்யூட்டர் முன் கொண்டு போய் நிறுத்தும். கம்ப்யூட்டரில் நூற்றுக்கும் மேற்பட்ட மூக்குகள் காதுகள் வாய்கள் இருக்கும். சாட்சி சொல்லக் சொல்ல உருவத்தை அமைப்பார்கள். கடைசியில் ஏறக்குறைய கொலையாளி முகம் வந்து விடும். ராஜீவ் காந்தி கொலைவழக்கில் சிவராசன் எனும் சதிகாரனை கண்டுபிடிக்கக் கூட இம்முறை பயன்பட்டது."

"சரி கதைக்குள் போவம் தாத்தா " என்றான் கமல்.

-நட்டு சக்தியின் பேச்சுக்கு தலையாட்டினான்.

ஆர்த்திக்கு ஒரு சந்தேகம் தோன்றியது.

"இந்த யோசனையிலே எனக்கு நம்பிக்கை இல்ல "

"ஏன்?"

"அந்த மந்திரவாதி மாறுவேஷத்ல வந்திருந்தா?"

"வாய்ப்பில்லை ஆர்த்தி... தேவைப்பட்டா மந்திரவாதி மாறுவேஷங்கள்ல எப்டி இருப்பான்னு கூட ஓவியம் வரைஞ்சு வச்சுக்கலாம் "

மன்னர் குறுக்கிட்டார்.

"ஓவியம் வரைய திரைச்சீலையும் வர்ணங்களும் வரவழைக்கவா?"

எதிர்மறையாய் தலையசைத்து சிரித்தான் நட்டு.

மந்திரப் பேழை மூலம் ஸ்கெட்ச் பேனாக்களும் வெள்ளைத்தாள்களும் வரவழைத்துக் கொண்டான்.

"மிஸ். கிளியம்மா! இப்ப நீ அந்த மந்திரவாதி உருவத்தை வர்ணிக்கலாம். நீ வர்ணிக்க வர்ணிக்க நான் வரைந்து கொள்கிறேன்."

"பூசணிக்காய் முகம் "

"ம் "

"சடைசடையாய் திரிந்த தலைகேசம் "

"ஓ "

"கம்பிளி பூச்சி புருவங்கள் "

"அஹ் "

"இரத்தக்குளத்தில் மிதக்கும் சினை கெழுத்திகளாய் கண்கள்."

"ஆஹா "

"கொழுக்கட்டை போல மூக்கு "

"ச்ச் "

"புதராய் தாடி. கழுத்தில் உத்திராட்சங் கொட்டை மாலைகள். கையில் மந்திரக்கோல். கால்களில் தண்டை. மரச் செருப்பு...." சொல்லிக் கொண்டே போனது கிளி.

நட்டுவின் கை-வகுப்பில் வாத்தியார்களையும் டீச்சர் களையும் கேலிச் சித்திரமாய் கிறுக்கித் தள்ளிய கை.

ஒருமணி நேரத்தில் மந்திரவாதியின் உருவத்தை வரைந்து முடித்தான் நட்டு.

கிளி அசந்து போனது.

"பார்க்கத்தான் ஆள் சுண்டைக்காய் மாதிரி இருக்கிறாய். ஆனால் ஓவிய திறமையில் நீ அசாத்தியன் "

"அசாத்தியன்னா?"

"உன்னை பாராட்டினேன் தம்பீ "

"குட்ட புசுக்கா... அசத்திட்டடா " என்றாள் சக்தி.

"தூள்.. டாப்டக்கர்மா... அர டவுசரு " என்றாள் ஆர்த்தி.

"வாய மூடுங்கடி " அதட்டினான் நட்டு.

கிளி தலையாட்டிக் கொண்டது. "எனக்கு இப்ப நம்பிக்கை வந்து விட்டது. உங்களிடம் அபூர்வத் திறமைகள் உள்ளன. மிக நிச்சயம் இளவரசியை மீட்டு வருவீர்கள். அதற்கான வாழ்த்துக்களை இப்போதே வழங்குகிறேன் "

"நன்றி கிளிக்குட்டி " என்றான் நட்டு.

"இளவரசியைத் தூக்கிக் கொண்டு மந்திரவாதி போன திசை வடக்கு ஆகவே வடக்கு நோக்கி பயணம் இளவரசியைத் தேடுங்கள் " எனக்கூறி விட்டு பறந்தது கிளி.

கிளியிடம் மூன்று வாண்டுகளும் கிளிபாஷையில் பேசிக் கொண்டது புரிபடாமல் தத்தளித்தார் பேரரசர்.

ஆனால் கிளியின் யோசனையின் படி வரையப்பட்ட படம் தனது மகள் இளவரசி ராஜமோகினியை கடத்திச்சென்ற மந்திர வாதிக்குரியது என்பதனை தெளிவாக புரிந்து கொண்டார்.

அழுதார்.

நட்டு தேற்றினான். "இப்போதே புறப்படுகிறோம். இளவரசி யுடன்தான் திரும்பி வருவோம். மனக்கிலேசம் இல்லாமல் நாட்டை ஆளுங்கள் "

சற்றே சமாதானமானார் மன்னர்.

"உங்கள் பயணத்திற்கு என்னென்ன வசதிகள் வேண்டும்"

"எல்லா வசதிகளும் எங்களிடம் உள்ளன "

மந்திரப்பேழை உதவியுடன் மந்திரவாதி, இளவரசி ஓவியங்களை பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்களாக்கி பத்திரப்படுத்திக் கொண்டான் நட்டு.

மூவருக்கும் பிரியாவிடை கொடுத்தார் பேரரசர்.

மூவரும் தோட்டத்துக்கு வந்தனர்.

"நட்டு, அடுத்து என்ன?"

"நாம் பறவைகளாய் மாறி வடக்கு வானம் நோக்கி பறக்கப் போகிறோம் "

"என்ன பறவையாய் மாறுவோம்?"

"நாரைகளாய் மாறுவேடம் "

"நாரைகளில் அப்படி என்ன விசேஷம்?"

"தூர தேச பறப்புக்கு நாரை வடிவமே நல்லது "

"சரி "

விசேஷ மாத்திரைகள் மூலம் மூவரும் செங்கால் நாரைகளாய் மாறினர்.

ஷ்க்

ஷ்க்

ஷ்க்

நீண்ட சிறகுகளை விரித்து மூவரும் பறந்தனர்.

கீழே பொம்மை பொம்மையாய் ஜாலபுரி

அகண்டு, விரிந்த, நீலமான, பஞ்சு பஞ்சு மேகங்கள் கொண்ட வானத்தில் உல்லாசமாக பறந்தனர் மூவரும்.

நட்டு பறவை பாஷையில் விசில் அடித்தான்

ச்சீய்ங் ச்சீய்ங் ச்சீய்ங்

# 13

மூவரும் பறந்தனர்.

தலைக்கு மேலே சூரியன் பிரகாசித்தது.

நட்டுவுக்கு குஷி தாங்கவில்லை.

பறந்து கொண்டே பலமுறை பல்டி அடித்தான். அவனது சந்தோஷம் சக்தி ஆர்த்தியையும் தொற்றிக் கொண்டது. அவர்களும் பல்டி அடித்தார்கள்.

பல்டி அடிக்கும் போது வானம் காலுக்கு போனது. பூமி தலைக்கு உயர்ந்தது.

"பறக்கிறது செம ஜாலிடா நட்டு. பறவையா பிறந்திருக்கக் கூடாதான்னு ஏக்கம் தோணுது. மேலே பறக்க பறக்க பூமி கடுகு சைஸ்க்கு மாறுது. அரண்மனைகள் மாட மாளிகைகள் கூட கோபுரங்கள்... எங்கு பாத்தாலும் பச்சை பசேல்னு நெல் வயல்கள் வாழைத் தோப்புகள். மின்கம்பங்கள் இல்லை. நம்ம காலத்து வாகனங்கள் இல்லை. இந்த மாதிரி இருந்த பூமியைத்தான் நம்ம காலத்ல கெடுத்து குட்டிச்சுவராக்கிட்டோம்..." என்றாள் சக்தி.

"பறவையா பிறந்தா ஜாலிதான். ஆனா மனுசன் கைல சிக்னா சிக்கன் ஸிக்ஸ்ட்டி பைவ் போட்ருவான்க சக்தி " என்றான் நட்டு.

"ஜனத்தொகை கூடிருச்சு. விஞ்ஞானம் வளர்ந்திருச்சு. அதுதான் பூமில மரங்கள் குறையக் காரணம் " என்றாள் ஆர்த்தி.

-கதைக்குள் முதல் முறையாக குறுக்கிட்டான் முத்தமிழ்.

"தாத்தா மனுசனால பறவை மாதிரி தானே பறக்க முடியுமா?"

"முடியாது. பறவைகளின் உடல்அமைப்பு வேற மனிதனின் உடல் அமைப்பு வேற. காற்றைக் கிழித்துக் கொண்டு பறக்க

உதவியாய் கூரிய முகம் பறவைகளுக்கு. எடை குறைவாக எலும்புகள். நீளமாக இறக்கைகள். மனிதன் பறக்க செயற்கையாய் ஒரு சாத்தியம் உண்டு. மனிதனின் மரபியல் அணுவில் பறவையின் பறக்கும் அம்சங்களை பதித்து பறக்கும் மனிதனை உருவாக்கலாம்."

"ஓ "

"வசந்த்தை அப்டி மாத்னாக் கூட பறக்க மாட்டான். குண்டு போந்தான் கோழி போல பொதக்பொதக்னு ஓடுவானே தவிர பறக்க மாட்டான் "

"எதுனாலும் என்னையே கிண்டல் பண்ணுங்கடா..."

"வசந்த்தை கேலி பண்ணாதே. பறவைகளை பத்தி இன்னொரு முக்யமான விஷயம். தனது எடையை விட பத்து மடங்கு உணவு உண்ணும். சரி கதைக்குள் போவோம் " என்றார் தாத்தா.

-மூவரின் காலடியில் மேகங்கள்.

"இத்தனை நாள் மேகங்களை அண்ணாந்துதான் பாப்பம். இன்னைக்கி மேகங்களுக்குள்ளே புகுந்து பறக்கிறோம். மேகங்கள் நம்பள கிச்சுகிச்சு மூட்டுதுக. தரைல இருந்து பாத்தா மேகங்கள் யானைமாதிரி, குரங்கு மாதிரி, பிசாசு மாதிரி தெரியும். பறக்ரப்ப பாத்தா வடிவமே, இல்லாம வெண் புகையா தவழுது " கூறினாள் சக்தி.

"வானம் ஒரு விளையாட்டு மைதானம் மாதிரி. வானம் எல்லா உயிரினங்களுக்கும் சொந்தம். இந்த வானத்தில் தான் எத்தனை வகையான பறவைகள்! ராஜாளி, சிட்டுக்குருவி, குயில், கொக்கு, நாரை, காகம், மயில், மரங்கொத்தி பறவை, புறா இப்டி...." வர்ணித்தாள் ஆர்த்தி.

"பெரிய கவிதாயினி மாதிரி பேசுரா ஆர்த்தி."

"இன்னும் பேசுவேன்டா குள்ளபுசுக்கா. வானம் ஒரு மந்திரவாதி மாதிரி. ஏராளமான மர்மங்களை விசித்திரங்களை ஒளிச்சு வச்சிருக்கு. நட்சத்திரங்கள், நவகிரகங்கள், சூரியன், நிலா, இப்டி "

நட்டு ஏதோ யோசித்து சிரித்தான்.

"என்னடா சிரிக்ற?"

"சொன்னா திட்டுவீங்க "

"இல்ல... சொல்லு "

"வானத்ல பறக்ற மத்த பறவைகள் கிட்ட கொஞ்சம் நேரம் குறும்பு பண்ணப் போரேன் "

"வம்பை விலைக்கு வாங்ற "

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது. குறும்பு நான் பண்ரேன். நீங்க வேடிக்கை பாருங்க "

சக்தியும் ஆர்த்தியும் ஒன்றும் பேசவில்லை.

நட்டு இன்னும் உயரப் பறந்தான்.

ஒற்றைக் கழுகு ஒன்று ஆங்கில வி வடிவில் சிறகு விரித்து மிதந்து கொண்டிருந்தது.

'ழிய்ய்' என சப்தம் எழுப்பியது.

பக்கத்தில் போய் இடித்தான் நட்டு.

கழுகு நிலை குலைந்தது.

திரும்பி கத்தியது. "என்ன நாரையாரே வலிய வந்து வம்பு செய்கிறீர்கள்?"

"வெட்டியா பறந்து கிட்டு இருக்கியா? தின்ன எதாவது கிடைச்சதா இல்லையா?"

"இல்லையே "

"டேக் இட் ஈஸி மிஸ்டர் கழுகாரே "

"நீங்கள் பேசுவது புரியவில்லை. இருக்கும் கோரப்பசிக்கு உங்களைத்தான் அடித்து சாப்பிட வேண்டும் "

"சாப்பிடேன் பிரதர் "

நெருங்கி தனது நாரை முகத்தை மனித முகமாக்கி வழிப்பம் காட்டினான்

'வெவ்வ வெவ்வ '

கழுகு அலறி விட்டது.



"நீங்கள் நிஜ நாரை அல்ல. ஏதோ குட்டி மந்திரவாதி. என்னை எதுவும் பண்ணி விடாதீர்கள் "

"சேச்சே... ஒண்ணும் பண்ண மாட்டேன்.. அய்யாவுக்கு ஒரு சலாம் போடு "

"சலாம்னா என்ன?"

செய்து காட்டினான். கழுகும் செய்தது.

"ஒழிந்து போ "

கழுகை விட்டு விலகி பறந்தனர்.

சிட்டுக்குருவி கூட்டமாய் பறந்து கொண்டிருந்தன.

"சிட்டுகுருவிகளா இங்க வாங்க "

"என்ன?"

"உங்களால கழுகு அளவு உயரத்துக்கு பறக்க முடியுமா?"

"முடியாதே "

"பறக்க ஆசையா?"

"ஆமாம் "

"நீங்கள் அனைவரும் எங்கள் முதுகுகளில் அமர்ந்து கொள்ளுங்கள் பயப்படாதீர்கள் "

சிட்டுக்குருவிகள் அமர்ந்து கொண்டன.

மூவரும் வெகுவெகு உயரத்துக்கு பறந்தனர்.

சிட்டுக்குருவிகளுக்கு மகிழ்ச்சி தாளவில்லை.

"உங்களுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை."

உயரம் தாழ்ந்து சிட்டுக்குருவிகளை இறக்கி விட்டனர்.

ஒரு குயிலை கூப்பிட்டான் நட்டு.

"பிரமாதமாக பாடுகிறாய். ஆனால் சொந்தமாக உனக்கு கூடு கட்டத் தெரியவில்லை. சுயமாக உனது முட்டைகளை அடை காத்து குஞ்சு பொறிக்கத் தெரியவில்லை. ஏன் இவ்வளவு பெரிய சோம்பேறியாக இருக்கிறாய்?"

"அது என் பிறவிக்குணம். கடவுளைக்கேள் "

தொடர்ந்து நட்டு பலமணிநேரம் ஏராளமான பறவைகளிடம் வம்பு பண்ணினான்.

சக்தி நட்டுவை முறைத்தாள்.

"என்ன சக்தி?"

"நட்டு உன் விளையாட்டுத்தனத்துக்கு ஒரு அளவே இல்லையா? நாம போறது எவ்வளவு சீரியசான விஷயம். பொழுது சாய்வதற்குள் நாம் எங்காவது இறங்கி மனித உருவுக்கு மாறவேண்டும். மந்திரவாதியைப் பற்றி விசாரிக்க வேண்டும் "

"ஓகே ஓகே..." என்றான் நட்டு.

பறவைகளிடமும் மந்திரவாதியைப்பற்றி விசாரித்தான் நட்டு.

எல்லா பறவைகளும் உதடு பிதுக்கின.

மாலை மயங்க ஆரம்பித்தது.

வானத்தின் நிறம் மாறியது.

ஆரஞ்சு நிறம் ரோஜாநிறம் வந்தது.

மஞ்சளும் பச்சையும் கூத்தாடின.

தொடர்ந்த அரைமணி நேரத்தில் வானம் ஆயிரம் வர்ணங்களை உடுத்தி களித்தது.

பின் பழுப்பான கறுப்பு நிறத்துக்கு தாவ ஆரம்பித்தது.

பகல் முழுவதும் இரை தேடிய பறவைகள் கூடு நோக்கி பறந்தன.

எங்கு பார்த்தாலும் பறவைகளின் கீச் கீச்!

சூரியன் மெதுமெதுவாக கடலுக்குள் இறங்கியது.

பறந்து கொண்டிருந்த ஆர்த்தி கத்தினாள்.

"சக்தி! நட்டு! அதோ பாருங்கள் "

ஆர்த்தி சுட்டிய இடத்தில் வானத்தை முட்டும் உயரமான மலை இருந்தது. மலை செங்குத்தாய் யாருமே எறி விடாத அளவுக்கு உயர்ந்திருந்தது.

மலை உச்சியில் மிகப்பெரிய அரண்மனை கட்டப்பட்டிருந்தது.

அரண்மனை மின்னி பளபளத்தது.

"இவ்வளவு உயரமான மலையில் மாளிகை கட்டியவன், சாதாரண ஆளாய் இருக்க முடியாது. அவனுக்கு நாம் தேடும் மந்திரவாதியைப் பற்றி மிக நிச்சயம் தகவல் தெரிந்திருக்கும்." என்றாள் ஆர்த்தி.

"யார் கண்டது? நாம் தேடிப்போகும் மந்திரவாதி இங்கே கூட இருக்கக் கூடும்?" என்றாள் சக்தி.

"சான்ஸ் இருக்கு. ஆனா என் உள்மனசு வேற மாதிரி எச்சரிக்குது " என்றான் நட்டு.

"என்னடா எச்சரிக்குது?"

"அங்கு நமக்குத் தேவையான தகவல் கிடைக்கப் போவதில்லை. பதிலாக ஒரு மிகப்பெரிய ஆபத்து நம்மை பிடிக்கப் போகுது "

"என்னடா பூச்சாண்டி காட்ற!"

"தோணியதை சொன்னேன்."

"எந்த ஆபத்துனாலும் நாம மந்திரப் பேழை உதவியுடன் தப்பிக்கலாம். யோசிக்காம அந்த மலைமாளிகைக்கு பறப்போம் "

"சரிங்கடி "

மூவரும் பறந்தனர்.

பறக்க பறக்க மலை உயர்ந்து கொண்டே போனது.

இரவு வானத்தில் நட்சத்திரங்கள் பூத்திருந்தன.

மூவருக்கும் இறக்கைகள் வலித்தன

"இதென்ன அதிசயம்.. மலையின் உயரம் அனுமார் வால் போல் உசந்துகிட்டே இருக்கு."

"அசராதே இன்னும் கொஞ்ச நேரம் மாளிகை வந்திடும்"

மலையின் உச்சியை அடைந்தனர்.

அடைந்ததும் மனித உருவுக்கு மாறினர்.

உஷ்க்!

உஷ்க்!

உஷ்க்!

கீழே எட்டினான் நட்டு.

அதல பாதாளத்தில் பூமி.

நட்டுவுக்கு தலை கிறுகிறுத்தது.

மாளிகை நோக்கி நடந்தனர்.

தங்க முலாம் பூசிய கண்ணாடிமாளிகை அது.

ஆயிரம் கதவுகளைக் கொண்டிருந்தது.

எந்த கதவு பிரதான கதவு என்றே புரியவில்லை.

குழப்பத்துடன் மூவரும் ஒரு கதவின் வழியாக உள்ளே பிரவேசித்தனர்.

மாளிகைக்குள் யாரும் இருப்பதாக தெரியவில்லை.

நட்டு வாய் வலிக்க கத்தினான்.

"மாளிகைக்குள்ள யார் இருக்கிறது?"

நட்டுவின் குரல் பலமுறை எதிரொலித்து அடங்கியது.

ஆர்த்தி ஒரு முறை குரல் கொடுத்தாள்.

ம்ஹிம்

சக்தி ஒரு முறை குரல் கொடுத்தாள்.

எந்த பதிலும் இல்லை.

பயத்துடன் நட்டு தொடர்ந்து நடந்தான்.

காலடியில் ஏதோ தடுக்கியது.

அலட்சியாக குனித்தான்.

தரையில் ஒரு எலும்புக்கூடு கிடந்தது.

இடதுபுறங்கையை வாயில் வைத்து கர்ணகடூரமாய் அலறினான் நட்டு

நட்டுவின் அலறல் தொடர்ந்து எதிரொலித்தது!

# 14

அலறின மூன்று வாண்டுகளும் ஆடாமல் அசையாமல் பொம்மை போல் நின்றனர்.

நட்டு உடலை அசைக்காமல் மெதுவாக கிசுகிசுத்தான்.

"ஓடிப்போயிரலாமா?"

"பயந்தா சாகசம் செய்ய முடியாதுடா. துணிச்சலாய் தொடர்ந்து நடப்போம் "

"அப்டின்ற "

சில நிமிடம் தைரியத்தை பெருக்கிக் கொண்டு "அச்சம் என்பது மடமையடா... அஞ்சாமை திராவிடர் உடமையடா.. ஆறிலும் சாவு நூறிலும் சாவு... இளவரசியை மீட்பது கடமையடா..." பாடினான் நட்டு.

தொடர்ந்து நடக்க ஆரம்பித்தனர்.

'தட்டாங்கல்லு' ஆட்டம் ஆடுவது போல தாண்டிதாண்டி நடந்தனர்.

மென்மேலும் எலும்புக்கூடுகள் பார்வையாயின.

நட்டு செயற்கையாய் சிரித்துக் கொண்டான். "ஹெ.. எனக்கென்ன பயம்? எலும்புக்கூடுகளை கட்டிபுடிச்சுக்கூட டான்ஸ் ஆடுவேனாக்கும் "

"டேய் அலட்டல்.. பேசாம வாடா..."

"ஏங்கடி "

"என்னடா?"

"இந்த எலும்புக்கூடுகள் எல்லாம் ஆம்பிளை எலும்புக் கூடுகளா, பொம்பளை எலும்புக்கூடுகளா?"

"அய்யய்யோ.... அறுக்காம பேசாம வாடா..."

-கதையை பிரேக்கிட்டு நிறுத்தினார் கம்ப்யூட்டர் தாத்தா.

"என்ன தாத்தா எப்பவும் நாங்கதானே கதைல குறுக்கிடுவோம். இப்ப நீங்களே இடைவேளை விடுறீங்க?"

"சின்ன ஆசுவாசம். கூடவே எலும்புக்கூடு சம்பந்தமாக ஒரு விஞ்ஞானத் தகவல் சொல்ல ஆசை. சொல்லிட்டு மீண்டும் கதை "

"அது என்ன தகவல்?"

"ஒவ்வொரு மனிதனின் காலுக்கு கீழும் குறைந்த பட்சம் பத்து எலும்புக்கூடுகளாவது புதைந்துள்ளனவாம். கதைக்குள் போவம் "

கதையை தொடர்ந்தார் தாத்தா.

-நடந்த மூவரும் ஒரு அறைக்குள் பிரவேசித்தனர்.

வித்தியாசமான வண்ண சுவர்களுடன் அறை டாலடித்தது.

சந்தன மரத்தால் செய்யப்பட்ட சாப்பாட்டு மேஜை

மேஜை நிறைய பழங்கள்.

நட்டு அது போன்ற பழங்களை இதுவரை கண்டதில்லை.

புதியபுதிய வண்ணத்தில் பளபளத்தன.

"ஆஹா ஹாஹா! அட்டகாசமான பழங்கள். வாய்ல லிட்டர் கணக்கில் ஜொள் ஊறுதே "

பழங்களை கையில் எடுத்தான்.

ஆசைஆசையாய் வாய்க்கு அருகே கொண்டு சென்றான்.

அதுவரை பேசாமல் இருந்த சக்தி கத்தினாள். "நிறுத்து நிறுத்து. சாப்பிடாத நட்டு "

"ஏண்டி?"

"இந்த பழங்கள்ல பயங்கர சதி ஒளிஞ்சிருக்கு "

"எப்டி?"

"மாளிகையில் மனித நடமாட்டமே இல்லை. ஆனால் பழங்கள் தரைமுழுக்க எலும்புக்கூடுகள். இந்த பழங்கள் கொடிய விஷப்பழங்களாக இருக்கக் கூடும் "

"எப்படி கண்டுபிடிப்பது?"

"மந்திரப் பேழைலயே அதுக்கான வழி இருக்கு" பேழையைத் திறந்து ஒரு உருண்டை கண்ணாடிக் கோளத்தை எடுத்தாள் சக்தி.

கோளத்திடம் பேசினாள்.

"ஏ கண்ணாடி கோளமே இந்த பழத்தை நாங்கள் சாப்பிட்டால் என்ன ஆவோம் என்பதை காட்சியாகக் காட்டு"

கோளத்தில் 'நட்டு' தெரிந்தான்.

நட்டு மெதுவாக பழங்களை எடுத்து தின்ன ஆரம்பித்தான்.

பழங்கள் வயிற்றுக்குள் போய் விழுந்தன.

அவ்வளவுதான்...

பழங்களுக்கு கைகால் முளைத்தன.

கோரப்பற்களுடன் கூடிய குட்டி சாத்தான்களாய் மாறின.

ஜிங்ஜிங் என்று குதித்தன.

நட்டு வயிற்றை கிழித்துக்கொண்டு வெளியே வந்தன.

இரத்தம் பீரிட நட்டு கீழே சரிந்தான்.

குட்டி சாத்தான்கள் போட்டி போட்டுக்கொண்டு நட்டுவை சாப்பிட ஆரம்பித்தன.

உடல் நடுங்கியபடி நட்டு கோளத்தை பார்த்தான்.

"அடக்கண்ணராவியே இந்த பழங்கள் எல்லாம் நிஜத்தில் குட்டிசாத்தான்களா " பயத்துடன் வயிற்றைத் தடவிக்கொண்டான்.

"நடக்க இருந்ததை காட்டியதற்கு நன்றி கண்ணாடிக் கோளமே " எனக்கூறி சக்தி அதனை மீண்டும் மந்திரப் பேழையில் வைத்து மூடினாள்.

"இந்த பழங்களை என்ன செய்வோம்?"

"பொறுத்திருந்து பார் "

பழங்களை தரையில் போட்டு கால்களால் நசுக்கினான்.

குட்டி சாத்தான்கள் குடல் பிதுங்கி மரண ஓலமிட்டன.

அறையின் முடிவில் படுபயங்கர சப்தம் கிளம்பியது. சப்தத்துடன் புகைமண்டலம்.

மூவரும் கண்களை கசக்கியபடி புகைமண்டலத்தை உன்னித்தனர்.

அதிலிருந்து ஓர் உருவம் நடந்து வந்தது.

ஹா!

அந்த உருவம் ஒரு சூன்யக்காரக்கிழவி உருவம்!

கிழவி படுகோரமாய் இருந்தாள்.

நான்கடி உயரம்.

சடைசடையாய் திரிந்து நரை ஏறிய நீள் தலைக்கேசம்.

அழுகி சுருங்கிய தக்காளிப்பழம் போல் முகம்.

முடிச்சு போட்ட வெள்ளை புருவங்கள்.

குழியில் விழுந்த கொள்ளிக்கண்கள்.

மிகமிக நீண்ட மூக்கு.

இரத்தம் வழியும் பொக்கை வாய்.

கழுத்திலிருந்து கால்வரை நீண்ட கறுப்பு அங்கி.

கழுத்தில் பாசி மணி மாலை.

கையில் மந்திரக்கோல்.

நசுங்கிக் கிடந்த குட்டி சாத்தான்களைக் கண்டு ஓலமிட்டாள்.

"மனிதப்பதர்களே! எனது உயிருக்கு உயிரான குட்டி சாத்தான்களைக் கொன்று விட்டீர்களே!"

"ஏ கிழவி நீ யார் கிழவி?"

ஆங்காரமாக சிரித்தாள்.

"முதலில் நீங்கள் யார் என்பதைக்கூறுங்கள் "

"நாங்க உனக்கு ஆயிரத்தி சொச்சம் வருஷம் பிந்தியவங்க. என் பெயர் நடராஜ். இவ சக்தி. அவ ஆர்த்தி இப்பச்சொல்லு நீ யார்?"

"ஹா ஹா நானா? மகாமந்திரசக்திகள் கொண்ட சூன்யக்காரக் கிழவி நான் "

"உன் வயதென்ன?"

"அய்நூற்றி பத்து வயது "

"இந்த மலை மாளிகையில் தன்னந்தனியாக என்ன பண்ணுகிறாய்?"

"இங்கு வருபவர்களை கொன்னு தின்னு மகிழ்ச்சியாக வாழ்கிறேன் "

"அடி கிழ போல்ட்டு? இன்னைக்கி உன் கதை ஓவர்டி "

"என்ன பேசுகிறாய்? புரியவில்லை "

"இத்னி நா அப்பாவி மனுசங்களுக்கு அல்வா குடுத்திருக்க... இன்னைக்கி நாங்க குடுக்ரோம்... இரு.."

கிழவி நெற்றி சுருக்கினாள்.

"என்னடா குட்டிப்பயலே பினாத்துகிறாய்? நீ பேசுவது தமிழ்தானா?"

"அடி உங்கக்காமக்கா.. நா பேசுரது தங்லீஷ்டி கிய்வி "

கிழவி பதட்டமடைந்தாள்.

"அடுத்தடுத்து இப்படி பேசினால் உன்னை கடித்துக் கொன்று விடுவேன் "

"உன்னால முடியாது.. எங்களிடமும் மந்திர சக்திகள் உள்ளன..." என்றாள் சக்தி.

கிழவி இடிஇடியென சிரித்தாள்.

"உங்கள் மந்திர சக்திகள் எனக்கு கால்தூசி "

உருமாறும் மாத்திரை விழுங்கி ராஜநாகமாய் மாறினாள் சக்தி.

ஸ்ஸ்ஸ்!

சீறி பாய்ந்து சூன்யக்காரக்கிழவியை தீண்டினாள்.

கிழவியை விஷம் ஒன்றுமே செய்யவில்லை.

சக்தி சிங்கமாய் மாறி கிழவியை கடித்துக் குதறினாள்.

அடுத்த நொடியே கிழவியின் சதைத்துண்டங்கள் கூடி கிழவி உயிர் பெற்றாள். சிரித்தாள்.

மேன்மேலும் போராடித் தோற்று மனித உருவுக்கு வந்தாள் சக்தி.

ஆர்த்தி இப்போது பேச ஆரம்பித்தாள்.

"பாட்டி உன்கிட்ட எங்களை விட அதிகம் மந்திரசக்தி உள்ளது. ஒப்புக் கொள்கிறோம். ஆனால் ஒரு விஷயம். நீ எங்களுக்கு எதிரி அல்ல, நாங்கள் உனக்கு எதிரி அல்ல, தற்செயலாகவே நாங்கள் உனது மலைமாளிகையில் ஒதுங்கினோம். நாங்கள் ஒரு மந்திரவாதியால் நயவஞ்சகமாய் கடத்தப்பட்ட ஜாலபுரி இளவரசி ராஜமோகினியை மீட்கவே சென்று கொண்டிருக்கிறோம். இளவரசியை கடத்திச் சென்ற மந்திரவாதியைப் பற்றி யாருக்குமே தகவல் சொல்லத் தெரியவில்லை. நீயாவது உன் மந்திர சக்தியை உபயோகித்து யாரந்த மந்திரவாதி? அவனது இருப்பிடம் எது? அவனை எப்படி வெல்லலாம்? எனக்கூறி உதவேன் "

சூன்யக்காரக் கிழவி கண்களைக் குறுக்கி சிரித்தாள்.

"பெண்ணே! உனது பேச்சு சாமர்த்தியத்தை நெஞ்சார பாராட்டுகிறேன். ஆனால் எனது மலை மாளிகையில் அத்துமீறி பிரவேசிப்பவர்களை நான் இதுவரை உயிருடன் விட்டதில்லை. எனக்கு இப்போது கோரப்பசி. உங்கள் மூவரையும் தின்னால்தான் எனது பசி ஆறும் "

"வேண்டாம். சொன்னால் கேள். எங்கள் மாமிசம் கசக்கும்" நட்டு.

"பரவாயில்லை."

"எலும்புகள் தொண்டையில் சிக்கும்."

"பரவாயில்லை "

"அஜீரணக்கோளாறு வரும் "

"வரட்டும் "

"இதோ பார் கிழவி எந்தவித சுவாரசியமும் இல்லாமல் நீ எங்களை இரை எடுப்பதில் உன் திறமைக்கென்ன மரியாதை?"

"அப்படியென்றால்?"

"எதாவது போட்டி வை. போட்டியில் நீ ஜெயித்தால் எங்களை சாப்பிடு. நீ தோற்றால்..."

"என்னை நீங்கள் சாப்பிடுவீர்களாக்கும் "

"சேச்சே.. கிழவிக்கறி யாருக்கு வேண்டும்...."

"பின்ன?"

"நீ தோற்றதை ஒப்புக்கொண்டு நாங்கள் தேடும் மந்திரவாதியைப் பற்றிய தகவல்கள் தரவேண்டும் "

"சரி "

"என்ன போட்டி வைக்கலாம் "

"கிரிக்கெட் விளையாடத் தெரியுமா உனக்கு? செஸ், ரிங்பால்? பீச் வாலிபால்?"

"மீண்டும் புரியாத வார்த்தைகள் பேசாதே சிறுவனே எனக்கு விடுகதைகள் போடத் தெரியும்?"

"சரி "

"நான் சில விடுகதைகள் போடுவேன். நீங்கள் விடை சொல்ல வேண்டும். ஒரு விடை தவறினாலும் உங்களை ஈவு இரக்கமில் லாமல் கொன்று தின்னுவேன் "

"நாங்கள் வெற்றி பெற்றால்?"

"நீங்கள் கேட்டதை நான் செய்வேன். வாக்குத் தவற மாட்டேன் "

"அழுகுணி ஆட்டம் ஆடிரமாட்டியே..."

"ஏய்?"

"விடுகதைகளை நீ போடுகிறாயா? அல்லது நாங்கள் போடட்டுமா?"

"நானே போடுகிறேன் "

சூன்யக்காரக் கிழவி முனைப்பானாள்.

"தயாரா?"

"அட்டாக் " என கூவினான் நட்டு.

"விடைகள் தவறானால்?" சக்தி. ஆர்த்தியின் உடல்கள் நடுங்கின.

நட்டு குதித்தான்.

"விடுகதைகளை ஒன் பை ஒன் அவுத்து விடு பொக்ஸ் " கத்தினான் நட்டு

சூன்யக்காரக்கிழவி முதல் விடுகதையை எடுத்து வீசினாள்.

நட்டு அண்ட் கோ நிலை குலைந்தது.

பம்பபம் பபம் பம்பம்பா!

○

# 15

**க**தைக்குள் ரகு குறுக்கிட்டான்.

"ஒரு கேள்வி தாத்தா "

"கேள் " என்றார் கம்ப்யூட்டர் தாத்தா.

"நட்டு சக்தி ஆர்த்தி உயிர்களை கிழவி கிட்ட பணயம் வைக்ற அளவுக்கு விடுகதைகள் முக்கியமானவையா?"

"என்ன அப்டி கேட்டுட்ட? உலகத்தில் விடுகதைகள் புழங்காத நாடுகளே இல்லை. விடுகதைகள் மொழிகளுக்கு அப்பாற்பட்டவை. எந்த தலைப்பில் வேண்டுமானாலும் விடுகதைகளை இயற்றலாம். கிரேக்க புராணகதைகளில் கூட தேவதைகள் விடுகதை போடும் தெரியுமா? விடுகதைகளில் பலவகை உண்டு. ஒரு பொருளை குழப்பமா வர்ணனை பண்ணி விடுகதை போடலாம். பாடல்களில் விடுகதை அமைக்கலாம்..."

"ஆமாமா.. 'அருணாச்சலம்' படத்ல ரஜினிகாந்த் பாடுவாரே ஒரு பாட்டு- 'மாத்தாடு மாத்தாடு மல்லிகை'னு.... அந்த பாட்டு முழுக்க விடுகதைகள்தான். ஒரு விடுகதையை ரஜினி போடுவாரு சவுந்தர்யா விடுவிப்பா. மறுவிடுகதையை சவுந்தர்யா போடுவா ரஜினி விடுவிப்பாரு "

"கரக்ட் கரக்ட் ரகு " தலையாட்டினார் தாத்தா.

"எனக்கு நிறைய விடுகதைகள் தெரியும் தாத்தா " என்றான் வசந்த்.

"பரவாயில்லையே... எங்க சொல்லு சொல்லு..."

"ஒரு பாலத்து மேல ஒரு வாத்து போயிட்டு இருந்துச்சாம். வாத்தை சுத்தி ட்ராபிக் ஜாமாகி போச்சாம். முன்னாடி காரு.

பின்னாடி லாரி. இடது சைடுல ஆட்டோ. வலது சைடுல கட்டை வண்டி. வாத்து எப்டி பத்திரமா வீடு போய் சேரும்?"

யாருக்கும் பதில் தெரியவில்லை.

"நீயே சொல்லு வசந்த் "

"வாத்து 'பேக் பேக் 'னு சத்தம் போடும். 'பேக்' னா இங்கிலீஷ்ல பின்னாடினு ஒரு அர்த்தம் உண்டுல்ல. அதனால எல்லா வண்டியும் பின்னாடி நகர்ந்து வாத்துக்கு இடம் விடும். வாத்து ஜாலியா வீடு போய் சேரும் "

"அறுக்ரான்... அறுக்ரான் " என்றாள் புவனா.

"இன்னொரு விடுகதை சொல்ரேன். ரெண்டு பூனை லவ் பண்ணுச்சாம். ஈவினிங் சிக்ஸ் ஒ கிளாக் பனகல் பார்க்ல சந்திக் கிறதா பேசி வச்சிருந்துச்சுகளாம். ஆனா ஆம்பளை பூனை ஒரு மணி நேரம் லேட்டா வந்துச்சாம். லேட்டானதுக்கு பொம்பிளை பூனை என்ன சொல்லி கத்தும்?"

"ஏய்யா லேட் ட்யூப்லைட்? உனக்கெல்லாம் ஒரு லவ் தேவையான்னு பொம்பளை பூனை கத்தும் " என்றான் கமல்.

"இல்ல " மறுத்தான் வசந்த்.

"பின்ன?"

"பொம்பளை பூனைக்கு எப்டி தமிழ் தெரியும்? லேட்டா னதுக்கும் 'மியாவ் மியாவ்' னுதான் கத்தும் "

"பிளேடு விடுகதை " என்றாள் அர்ச்சனா.

"இது மாதிரி விடுகதை நான் ஒண்ணு சொல்ரேன் " கூறினான் ராஜ்குமார்.

"சரி சொல்லு "

"மகாபாரதத்து அர்ஜுனன் மவுண்ட் ரோட்டு மேல தேர்ல வரார். வழில சிவப்பு சிக்னல் விழுந்திருது. ஆனாலும் அர்ஜுனன் சிக்னலைத் தாண்டி போயிடுரார் எப்டி?"

"எப்டி?"

"எப்டி?"

"அர்ஜுனன் தனது வில்லை தரைல போட்டு அது மேல நடந்து போய்டுவார். ஏன்னா 'WHERE THERE IS A WILLï THERE IS A WAY' இல்லையா? இதன் உண்மையான அர்த்தம் 'மனமிருந்தா மார்க்கமுண்டு' இருந்தாலும் முரட்டு அர்த்தம் 'வில்லிருந்தா வழி இருக்கும்' இப்டி இங்கிலீஷ் வார்த்தையை உல்ட்டா அடிச்சு நிறைய விடுகதைகள் இருக்கு. நாள் பூராவும் சொல்லிக்கிட்டே இருக்கலாம். இல்லையா தாத்தா?"

"ஆமாமா "

"வசந்த் நான் ஒரு லேட்டஸ்ட் கடி வச்சிருக்கேன். பாக்ரியா?" புவனா.

"ஓ " என்றான் வசந்த் அப்பாவியாக.

புவனா பாய்ந்து வசந்த்தின் கையை 'நறுக்' என்று ஒரு கடி கடித்து "இதுதான் என் லேட்டஸ்ட் கடி. எப்டி இருக்கு? பச்ச மிளகா பழம் கடிச்ச மாதிரி சுருக்னு இருக்கா?" சிரித்தாள்.

வசந்த்தின் முகம் மேலும் கறுத்தது.

அனைவரும் சிரித்தனர்.

"ஓகே ஓகே கதைக்குள் போவம். ரொம்ப சஸ்பென்சான கட்டத்ல கதையை விட்டுட்டு வந்திருக்கம் "

மீண்டும் கதைக்குள் பாய்ந்தார் கம்ப்யூட்டர் தாத்தா.

-முதல் விடுகதையை வீசினாள் கிழவி

"கல்லாலும் மணலாலும் கட்டாத வீடு

கதவு இல்லாத வீடு

காற்று அடித்தால் அசையும் வீடு

அது என்ன வாண்டுகளா?"

நட்டு உதடுகளை கடித்து யோசித்தான்.

ஆர்த்தியின் அம்மா வழி பாட்டி விடுகதை போடுவதிலும் விடுகதை விடுவிப்பதிலும் நிபுணி.

அவளின் பயிற்சி இப்போது உதவியது.

"அசையும் வீடு என்றால் விடை உயிருள்ளது. எது ஆமையா? ம்ஹீம்... எது? எது?

ஆங் நத்தை " முணுமுணுத்தாள் ஆர்த்தி. பின் சப்தமாக அறிவித்தாள். "விடை நத்தை "

சூன்யக்காரக்கிழவியின் முகம் இருண்டது.

"முதல் முறை தப்பித்துக் கொண்டீர்கள். தொடர்ந்து பார்ப்போம். இரண்டாவது விடுகதை. 'பெட்டியைத் திறந்தான் கிருஷ்ணன் வந்தான் ' அது என்ன?"

பெட்டிக்குள் கிருஷ்ணன் எப்படி?

பெட்டி என்றால் நேரடி அர்த்தம் அல்ல ஓடு.

ஓட்டுக்குள் என்ன இருக்கும்?

பருப்பு

என்ன பருப்பு?

பாதாம் பருப்பு?

பிஸ்தாம் பருப்பு?

ஆங்!

வேர்க்கடலை. தென் ஆர்க்காடு பேச்சுத்தமிழில் மல்லாக் கொட்டை.

"ஓல்டு பார்ட்டி. ஆன்ஸர்-வேர்க்கடலை " எனக்கூறி குதித்தான் நட்டு.

சக்தியும் ஆர்த்தியும் கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

கிழவியின் கண்கள் கொலைவெறியாய் மிளிர்ந்தன.

"மூன்றாவது விடுகதை. நாள் எல்லாம் ஓடும். இரவில் படுக்கைக்கு கீழ் ஓய்வெடுக்கும் அது என்ன?"

நாய்?

சக்தி துள்ளினாள். "நான் சொல்கிறேன். விடை-மிதியடி"

"நான்காவது விடுகதை. கவரிமான் பூக்கும். தின்கிற பழம் பழுக்கும். தின்னாத காய் காய்க்கும். அது என்ன?"

கேள்வி கேட்டு விட்டு மூவரின் முகங்களையே ஆராய்ந்தாள் கிழவி.

ஆர்த்தியின் முகம் விளக்கு எரிந்தது.

"விடை- வேப்பமரம் "

தளர்ந்தாள் சூன்யக்காரக்கிழவி.

"ஐந்தாவது விடுகதை. அம்மாவின் புடவையை மடிக்க முடியாது. அப்பாவின் பணத்தை எண்ண முடியாது. அவை என்ன?"

நட்டு கண்டுபிடித்து விட்டான்.

"விடை- வானமும் நட்சத்திரமும் "

"உங்களைப் போன்ற புத்திசாலிக் குழந்தைகளை நான் இதுவரை பார்த்ததில்லை. ஆனாலும் நான் அசரமாட்டேன். ஏதாவது ஒரு விடுகதையில் சிக்காமலா போய்விடுவீர்கள்?"

"அ... இசுக்கு புசுக்கு. ஆசை தோசை அப்பளம் வடை கிழவி."

"மீண்டும் உளறுகிறாய் "

"நீ விடுகதைகளை கன்டினியூ பண்ணு மேஜிக் பப்பல்லோ."

"புரியவில்லை "

"உனக்கு புரியவே புரியாது டாங்கி "

"டாங்கின்னா?"

"டாங்கி இல்ல நீ மங்கி "

"ஏய் பெண் வாண்டுகளே! இந்த அற்பச் சிறுவனை அதட்டி வையுங்கள் "

"உன்னை அவன் திட்டவில்லை. பாராட்டுகிறான் "

அரைமனதாய் ஆறாவது விடுகதையைப் போட்டாள் கிழவி.

"வட்ட வட்ட சுக்கிரன்

வால் இல்லாத சுக்கிரன்

எலும்பு இல்லாத சுக்கிரன்

என்னை வந்து கொஞ்சுகிறான்.

அவன் யார்?"

நட்டு தலையை சொறிந்து கொண்டான். சக்தி ஆர்த்திக்கும் கூட தெரியவில்லை. மூளையை கசக்கிக் கொண்டனர்.

நேரம் நழுவியது.

கிழவி மூவரையும் பார்த்து சப்புக் கொட்டினாள்.

ஓர் அசரீரி கிழவிக்குத் தெரியாமல் நட்டுவின் காதுகளில் விடையை முணுமுணுத்தது.

"விடை-மூட்டைப்பூச்சி "

கிழவிக்கு சந்தேகம் தொற்றியது.

"விடை சொல்ல ஏன் இவ்வளவு நேரம்?"

"சும்மா உன்னை 'ஜில்பான்ஸ்' பண்றோம் "

"ஜில்பான்ஸ் "

"தெரியாத மாதிரி போக்கு காட்டுறோம் "

"ஓஹோ! இதோ ஏழாவது விடுகதை. மரம் வழுக்கும். இலை சுருளும். கனி இனிக்கும். பூ துவர்க்கும். அது என்ன?"

இம்முறை அசரீரி சக்திக்கு உதவியது.

"நான் சொல்கிறேன். விடை-வாழை மரம் "

மேலும் தளர்ந்தாள் கிழவி.

"எட்டாவது விடுகதை போடுகிறேன். விடுவியுங்கள் "

"சரி "

"செக்கச் செவந்திருப்பான்.

செட்டிப்பெண் போலிருப்பான்

வால் முளைச்சிருப்பான்

சந்தைக்கு அரங்கேற வந்திருப்பான்

அவன் யார்?"

மூவரும் கண்களை மூடி யோசித்தனர்.

"இம்முறை மாட்டிக்கொண்டீர்கள் அதிகப் பிரசங்கிகளா?"

ஆர்த்தி வெடித்துக் கூறினாள்.

"விடை-சிவப்பு மிளகாய் "

சூன்யக்காரக் கிழவி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்.

"எல்லாவற்றுக்கும் பதில் வைத்திருக்கிறீர்கள் எமகாதகர் களே!"

கிழவியைச் சுற்றி சுற்றி வந்து ஆடினான் நட்டு.

"ஹேய் ஜாலியோ ஜிம்கானா உட்டாலக்கடி கிரிகிரி. சைதாப்பேட்டை வடகறி "

"சரியான உளறுவாயன் நீ. ஒன்பதாவது விடுகதை போடுகிறேன். பதில் சொல்லுங்கள் "

"ரைட்டோ கமான்... கமான் "

மெலிந்தால் ஒளிவாள்.

வளர்ந்தால் சிரிப்பாள்.

நோய் இல்லை நொடி இல்லை. மெலிவாள்.

காதலன் இல்லை அவளின் பிரிவும் இல்லை கரைவாள்.

அவள் யார்?"

"ரொம்ப ரொம்ப ஈஸி விடுகதை. கை சரக்கு தீர்ந்து போச்சா கிழ போல்ட்டு. விடை -நிலா "

இறுகினாள் கிழவி.

"பத்தாவது கடைசி விடுகதை. மிக கடினமான விடுகதை"

"பீடிகை போடாதே. விடுகதையைப் போடு "

"கண்ணாடியில் ஒரு உருவம் தெரியும் போது உருவத்தின் இடப்பக்கம் வலப்பக்கமாகவும் வலப்பக்கம் இடப்பக்கமாகவும்

மாறி தெரியும். ஏன் மேல் பக்கம் கீழ்பக்கமாகவும் கீழ்பக்கம் மேல் பக்கமாகவும் மாறித் தெரிவதில்லை? விடை கூறு?"

நட்டு தலை சொறிந்து கொண்டான்.

சக்தி நெற்றியில் தட்டிக் கொண்டாள்

ஆர்த்தி தரையை உதைத்தாள்.

அசரீரி நட்டுவின் காதுகளில் மெதுவாக முணுமுணுத்தது.

"மன்னிக்க வேண்டும் சிறுவனே எனக்கும் விடை தெரியவில்லை "

இப்போது கிழவி கூத்தாடினாள். "என்ன பாடினாய்? ஆங் ஜாலியோ ஜிம்கானா உட்டாலக்கடி கிரிகிரி. சைதாபேட்டை வடகறி அ. ஹைய். அ. ஹைய் "

மூவரின் முகத்தில் மரணபயம் படர்ந்தது.

○

# 16

நேரம் கரைய ஆரம்பியத்தது.

பத்தாவது விடுகதையை விடுவிக்க மூவருக்கும் தெரிய வில்லை.

கிழவி கூத்தாடினாள்.

நூற்றுக்கணக்கான குட்டிச்சாத்தான்கள் தோன்றி கும்மாளம் போட்டனர்.

நட்டுவுக்கு அழுகை வந்தது.

சக்தி மந்திரப்பேழையிடம் கிசுகிசுப்பாய் வினவினாள்.

"உனக்காவது இந்த விடுகதையை விடுவிக்கத் தெரியுமா?"

மந்திரப்பேழை தலையை தொங்கப் போட்டுக் கொண்டது.

நட்டு பத்தாவது விடுகதையை மீண்டும் மீண்டும் அசை போட்டான்.

கண்ணாடியில் நமது வலதுகை இடதுகையாகத் தெரியும் போது தலை ஏன் காலாகவும் கால் ஏன் தலையாகவும் தெரியக் கூடாது?

நிற்காமல் மிதந்தால் அப்படி ஒரு சாத்தியம் உண்டு.

மிதக்க முடியாது புவி ஈர்ப்பு விசை இழுக்குமே...

-கதையில் முத்தமிழ் குறுக்கிட்டான்

"தாத்தா புவி ஈர்ப்பு விசையைப் பற்றி கொஞ்சம் விளக்குங்களேன் "

கம்ப்யூட்டர் தாத்தா முனைப்பானார்.

"உலக உருண்டையின் மையப்பகுதி பூமியின் அனைத்துப் பொருட்களையும் தன்னை நோக்கி ஓரே விசையுடன் ஈர்க்கிறது. அதனால்தான் நாம் பூமி மீது நடமாடுகிறோம். இல்லாவிட்டால் விண்வெளிக்கு பறந்து சுற்றிக் கொண்டிருப்போம். பூமியும் தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றுகிறது அல்லவா? புவிஈர்ப்பு விசை இல்லாவிட்டால் பூமி எங்கோ ஓடி எதன்மீதோ மோதி வெடித்துச் சிதறியிருக்கும். இந்த பிரபஞ்சத் திலுள்ள ஒவ்வொரு கிரகமும் நட்சத்திரங்களும் தத்தம் புவிஈர்ப்பு விசையால்தான் எந்த குழப்பமும் இல்லாமல் அதன்அதன் பாதையில் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கிரகத்தின் புவிஈர்ப்பு விசையும் கிரகத்துக்கு கிரகம் மாறுபடும். பூமியின் துணைகோளான நிலவில் புவிஈர்ப்பு விசை பூமியைப் போல் ஐந்தில் ஒரு மடங்குதான். பூமியில் வசந்த் எடை 40 கிலோ என்றால் சந்திரனில் அவனது எடை எட்டுகிலோதான் "

"ஓகே தாத்தா. கதைக்கு போவம் "

கம்ப்யூட்டர் தாத்தா தலையாட்டினார்.

-புவிஈர்ப்பு விசை இழுக்குமே ' என யோசித்த நட்டு துள்ளினான்.

"கிழவி நீ கிளீன் போல்டு "

"என்ன கூறுகிறான் சிறுவன்?"

"உனது விடுகதைக்கு விடை கண்டுபிடித்துவிட்டேன். விடை-புவிஈர்ப்பு விசை. பூமியின் புவிஈர்ப்புவிசை இல்லை யென்றால் மனிதன் நிற்க முடியுமா? நடக்க முடியுமா? கண்ணாடியில் தனது உருவத்தைப் பார்த்து ரசிக்க முடியுமா? கற்பனையாக முடியும் என்றால் அப்போது கண்ணாடியில் தலை காலாகும் கால் தலையாகவும், மாறும்."

சூன்யக்காரக்கிழவி இடிந்து ஓமப்பொடி மிக்சர் போல் நொறுங்கினாள்.

"உனது விடை சரிதான் சிறுவனே எனது திமிர் கர்வம் அகங்காரம் அழிந்து விட்டது. இனி நான் உங்களுக்கு அடிமை. உங்கள் மூவருக்கும் சேவகம் செய்யக் காத்திருக்கிறேன் "

கிழவி கும்பிட்டாள்.

மூவரின் முன் மண்டியிட்டாள்.

சுற்றியிருந்த குட்டிச் சாத்தான்களும் சாஷ்ட்டாங்கமாக மூவரின் கால்களில் விழுந்தன.

சக்தி கிசுகிசுத்தாள். "யாருக்கும் தெரியாத விடையை எப்டிர்ரா கண்டுபிடிச்ச?"

நட்டு அலட்டிக் கொண்டான். "படுபயங்கர ஆபத்துகளில் சமயோசிதமாக செயல்படுவது நட்டுவின் வாடிக்கை "

"பீத்திக்காத"

"சர்தான் போங்கடி "

"நம்ம சண்டைய அப்றம் வச்சுப்பம். கிழவிகிட்ட பேச்ச கன்டினியூ பண்ணு "

கிழவியிடம் திரும்பினான் நட்டு.

"அடிமைகிடிமைன்னு பெரிய வார்த்தையெல்லாம் பேசாத. யாரும் யாருக்கும் அடிமையாக இருப்பது எங்களுக்கு பிடிக்காது. வேணும்னா 'ப்ரண்ட்ஷிப்' வைத்துக் கொள்வோம்"

"புரியவில்லையே "

"நாம் நண்பர்களாக இருப்போம் என்கிறேன் "

"ஒரு சூன்யக்காரக்கிழவியும் மூன்று நரர்களும் தோழமையாக இருக்க முடியுமா?"

"ஏன் முடியாது எள்ளுக்கு எள் எள் பாட்டி?"

"எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது "

"நண்பர்களாகி விட்டோம். முதலில் சுய அறிமுகம் செய்து கொள்வோம். நீ விரோதியாக இருக்கும்போதே எங்கள் பெயர்களைக் கூறிவிட்டேன். இப்போது உனது பெயரைச் சொல் "

"ஐநூற்றி பத்து வருடமாக யார் என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார்கள்? எனக்கே என் பெயர் மறந்து விட்டது இருங்கள் யோசித்துக் கூறுகிறேன் "

யோசித்து நிமிர்ந்தாள் கிழவி.

"நினைவு வந்துவிட்டது. எனது பெயர் ஒச்சாயி."

"நல்ல பெயர்தான். ஒச்சாயிபாட்டி இந்த படங்களைப் பார் " மந்திரவாதி, இளவரசி புகைப்படங்களை நீட்டினாள்.

"இந்த மந்திரவாதிதான் இந்த இளவரசி ராஜமோகினியை கடத்திச் சென்றான். அவனிடமிருந்து இளவரசியை நாங்கள் மீட்டாக வேண்டும். இந்த மந்திரவாதியை உனக்குத் தெரியுமா?"

கிழவிக்கு உடம்பு உதறிக் கொண்டது.

"ஆ அண்டாரகன் "

"என்னது? அண்டங்காக்காயா?"

"இல்லை 'பெயரா'. மந்திரவாதியின் பெயர் அ-ண்-டா-ர-க-ன். கடவுளுக்கு சமமாக சக்திகள் கொண்டவன். அவனை ஒரே ஒருமுறைதான் பார்த்துள்ளேன். அதுவும் 444 வருடங்களுக்கு முன். அவன் பூமி தொடங்கிய நாளில் இருந்தே உயிர் வாழ்கிறான் பூமியின் அழிவுநாள் வரைக்கும் உயிர் வாழ்வான் என அனைவரும் கூற கேள்வி பட்டிருக்கிறேன் "

"அவனது இருப்பிடம் எது?"

"தெரியாது "

"உண்மையைத்தான் கூறுகிறாயா ஒச்சாயி பாட்டி?"

"சூன்யக்காரக்கிழவி கூறுவது கலபப்படமில்லாத உண்மை" என ஆர்ப்பரித்தன குட்டிச்சாத்தான்கள்

"கடவுளே இனி என்ன செய்ய?" அலுத்துக் கொண்டாள் ஆர்த்தி.

கிழவி இவர்களைத் தட்டிக் கொடுத்தாள்.

"கவலையுறாதீர்கள். அண்டாரகன் நோக்கி நீங்கள் அடுத்தக்காலடி வைக்க நான் உதவுகிறேன்."

"எப்படி?"

"நீங்கள் வைத்திருக்கும் மந்திரப்பேழையின் சக்திக்கு அண்டாரகனின் கால் தூசியும் மசியாது. நான் உங்களுக்கு ஒரு

பரிசைத்தருகிறேன். அது இனி உங்கள் பயணம் முழுவதும் கூட வரும்."

"என்ன பரிசு?"

சூன்யக்காரக்கிழவி பதில் பேசாமல் கர்ணகடூரமாக மந்திரங்களை முணுமுணுக்க ஆரம்பித்தாள்.

**"ஆலக்கா பாலக்கா ஜாலக்கா ஹைய்**
**தேளக்கா பாம்பக்கா குரங்கக்கா ஹைய்**
**பேயக்கா பிசாசக்கா முனியக்கா ஹைய்**
**காயக்கா கசப்பகக்கா விஷமக்கா ஹைய்**
**எனது சக்தியும்**
**எனது குட்டிச்சாத்தான்கள் சக்தியும்**
**ஒன்றுசேர்ந்து உருண்டு**
**ஓர் உருவமாகட்டும் ஹைய் ஹைய்"**

இடிகள் கட்டிப்பிடித்து உருண்டன. மின்னல்கள் சாட்டை சொடுக்கின. தீப்பொறிகள் பறந்தன. எரிமலைக் குழம்பு கொதிக்க கொதிக்க வந்தது. உருண்டது. நிமிர்ந்தது.

ஸ்ப்ளாச்!

ஸ்ப்ளாச்!

சுண்டு விரல் உயரத்துக்கு ஓர் உருவம் கனிந்தது.

பச்சை நிறம். தலையில் இரு கொம்புகள். புருவம் இல்லை. இமை இல்லாத வட்டக்கண்கள். காதுகளுக்கும் மூக்குக்கும் பதிலாக ஓட்டைகள். வாய் இருந்த இடத்தில் சிறு பிளவு. சுண்டுவிரல் உயரத்துக்கு ஏற்ப தொந்தி. வாத்துக் கால்கள். அம்பின் நுனி கொண்ட வால். வித்தியாசமான கீச் குரலில் கிழவியை வணங்கியது.

"பெயரக் குழந்தைகளே இதுவே நான் உங்களுக்குக் கொடுக்கும் விசேஷ பரிசு. பச்சை நிற குட்டிச்சாத்தான். உயரம் தான் சுண்டுவிரல் அளவே தவிர மந்திரசக்தியும் மதி நுட்பமும் அதிஅபாரம். இனி இது உங்களின் தோழன் "

நட்டு அதனை தூக்கிக் கொஞ்சினான்.

"ஆள் குட்டியா அழகாக இருக்கிறது. ஆனால் ட்ரவுசர் போடாமல் மொட்டைக்கட்டையாக இருக்கிறது. இதன் பெயர் என்ன?"

"இதன் பெயர் பிப் "

"வித்தியாசமான பெயர். ஆனால் குட்டிப்பெயர் "

"ஆம் "

"பிப் எங்களுக்கு உதவுவாயா?"

"அதற்குதானே வந்திருக்கிறேன் நட் "

"ஓ என் பெயரை மேலும் சுருக்குகிறயா? பலே "

கிழவி குறுக்கிட்டாள்.

"நீங்கள் மூவரும் பிப்புடன் பயணத்தைத் தொடரலாம். இங்கிருந்து ஏழுகடல் ஏழுமலை தாண்டி மாயாபுரி எனும் தேசம் உள்ளது. மாயாபுரிக்கு அடிக்கடி அண்டாரகன் வந்து போவான் என கேள்விப்பட்டிருக்கிறேன். யார் கண்டது? அண்டாரகன் இளவரசியை மாயாபுரியில் பதுக்கி வைத்திருக்கிறானோ என்னவோ?"

"இருக்கும் இருக்கும் "

"உனது உதவிக்கு மிக்க நன்றி பாட்டி "

"நன்றி கூறி என்னை அந்நியபப்டுத்தாதீர்கள். வேறென்ன உதவிகள் வேண்டும் உங்களுக்கு?"

நட்டு இடைமறித்தான்.

"சொன்னால் கோபித்துக் கொள்ளக் கூடாது "

"மாட்டேன் சொல் "

"எங்களுக்காக இனி நீ வெஜிட்டேரியனாக மாறவேண்டும்."

"அப்படியென்றால்?"

"இனி நீ மரக்கறி மட்டுமே உண்ணவேண்டும் "

"சரி "



"உனது மந்திரசக்தியை இனிமேல் நன்மைக்குத்தான் பிரயோகிக்க வேண்டும் "

"சரி "

நட்டு குறும்பாய் சிரித்தபடி மந்திரத்தால் கத்திரிக்கோல் வரவழைத்து கிழவிக்கு பாப் கட்டிங் செய்தான். ஷாம்பு வரவழைத்து தலைகேசத்தை அலசி பட்டு போல் ஆக்கினான். பற்பசையும் பிரஷ்ும் வரவழைத்து வாயை சுத்தமாகத் துலக்கி விட்டான்.

கண்ணாடி வரவழைத்தான். "இதில் உன் முகம் பார் பாட்டி. எவ்வளவு அழகாக மாறி இருக்கிறாய் "

கண்ணாடி பார்த்து கிழவி, "அட... ஆமா..."

"பாட்டி கண்ணாடியில் உன் தலை காலாகவும், கால் தலையாகவும் தெரிகிறதா பார் "

"என்னையே கிண்டல் செய்கிறாயா குறும்பனே "

அனைவரும் சிரித்தனர்.

"பாட்டி நாங்கள் புறப்படுகிறோம். விடை கொடு "

சூன்யக்காரக் கிழவி அழுதாள்.

மந்திரப்பேழையில் 'பிப்' படுத்துக்கொண்டது.

"மாயாபுரிக்கு செல்லும் வழியை நீங்கள் பறக்கும் போதே உங்கள் மூளைகளுக்கு தெரிவிக்கிறேன் " என்றது பிப்.

கிழவிக்கு 'டாட்டா' காட்டியபடி மூவரும் மீண்டும் நாரைகளாய் மாறினர்.

பறந்தனர்

பறக்க பறக்க மலைமாளிகை பின்னுக்கு போய் மறைந்தது.

நாரைகள் கடல்களையும் மலைகளையும் தாண்டித் தாண்டி பறந்தன.

# 17

***நா***ரைகள் மூன்றும் பறந்து கொண்டிருந்தன.

நான்காவது வானம் இலைபச்சை நிறத்தில் பளபளத்தது.

நட்சத்திரங்கள் சதுரம் சதுரமாய் மின்னின.

வானத்தில் நாவல்பழ நிறத்தில் மூன்று நிலவுகள்.

பறக்கும் போதே நட்டு அனிச்சையாக தனது வீட்டைப்பற்றி நினைத்து விட்டான்.

வாய் திறந்து கேட்டும் விட்டான்.

"ஏண்டி சக்தி, ஆர்த்தி இந்நேரம் நம்ம அம்மா அப்பால்லாம் நம்ம காலத்ல என்ன பண்ணிட்டு இருப்பாங்க?"

பறந்து கொண்டிருந்த சக்தியும் ஆர்த்தியும் பறப்பதை நிறுத்தி அப்படியே வானத்தில் நின்றனர்.

"அட.. ஆமா... பழைய காலத்துக்கு வந்த குஷில நாம நம்ம பெற்றோர்களை அடியோட மறந்திட்டோமில்ல?" என்றாள் சக்தி.

ஆர்த்திக்கு அழுகை வந்தது.

நாரை வடிவத்தில் இருந்த போதும் அழுதாள்.

அழுகை பறவையின் குரலாய் ஒலித்தது.

'கூகூகூ '

"நாம ராஜா ராணி காலத்துக்கு வந்து எத்னி நாளாகுது நம்ம காலத்து கணக்குப்படி? அதை இதுவரைக்கும் நாம கணக்கு போடலையே?"

"வாட் டு டு?" அங்கலாய்த்தான் நட்டு.

மந்திரப்பேழையிலிருந்து வெங்கலக் குரல் கிளம்பியது.

"நட் யாமிருக்க பயமேன்?"

"பிப் உனக்கு எங்க நவீன காலத்து தமிழ் பேசத்தெரியுமா?"

"இன்னாபா நீ.... கலிஜ்ஜா பேஸ்ர... இன்னா தமிழ் வோணும் உனக்கு? தின்னவேலி தமில், வடாற்காடு தமில், மதுர தமில், நாகர் கோவிலு தமில் பாண்டிச்ஸேரி தமில் எது வோணும் உனக்கு?" பிப் வெளியே வந்தது.

மூவரும் நாரை வடிவில் வானத்தில் எந்த பிடிமானமும் இல்லாமல் நின்றனர்.

அவர்களுக்கு எதிரே பிப் மிதந்தது.

"பிப்புக்குட்டி நாங்க எங்க காலத்தை விட்டு வந்து எத்னி நாளாகுது?"

பிப் சிரித்து கொண்டது.

கால்குலேட்டர் போன்றதொரு சமாச்சாரத்தை எடுத்து ஏதேதோ கணக்குகள் போட்டது.

"நட் நீங்க மூணு பேரும் வூட்டை விட்டு வந்து கரீட்டா ரெண்டு மாசமாகுது "

"ஓ காட் " சலித்துக் கொண்டான் நட்டு.

"ஏன் கேட்ட நட்?"

"எங்களுக்கு 'ஹோம் சிக்' வந்திருச்சுப்பா..."

-கதைக்குள் குறுக்கிட்டாள் அர்ச்சனா.

"ஹோம் சிக்னா என்ன தாத்தோவ்?"

"சொல்ரேன் அர்ச்சு. நாம எல்லாருமே பழக்கத்துக்கு அடிமைகள். பாசத்துக்கு அடிமைகள். உணர்ச்சிக்கு அடிமைகள். எதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு வெளியூர் வந்திருந்தோம் என்றால் மனசு நோய்வாய்ப்படும். கன்னத்தில் முத்தம் கொடுக்க அம்மா அருகில் இல்லையே என மனசு ஏங்கும். அப்பாவின் வியர்வை வாசனை பிடிக்க மூக்கு ஏங்கும். சொந்த வீட்டில் பளிங்குத்தரையில் சட்டை போடாமல் உருண்ட அனுபவம் நினைத்து முதுகு அழும். அம்மாவின் பருப்புச்சோறு தின்ன நாக்கு ஜொள்ளு விடும். மொத்தத்தில் வீட்டு ஞாபகம் காட்டுத்தீயாய் நெஞ்சில் பரவும். இதுவே 'ஹோம் சிக்னஸ்' இது சிறுவர் சிறுமிய

ருக்கும் வரும். பெரியவர்களுக்கும் வரும். வெளியூரிலிருந்து வீடு திரும்பி அப்பா அம்மாவை கட்டிக்கொண்டால் இந்த நோய் தீரும்."

வசந்த் உணர்ச்சி வசப்பட்டான்.

"எனக்கும் எங்கப்பாம்மாவ ஒரு நா பாக்காட்டியும் அளுகை அளுகையா வரும் "

"நட்டு சக்தி ஆர்த்திக்கும் ஹோம் சிக்னா இதோட ஊர் திரும்பி விடுவாங்களா? கதை அவ்ளவுதானா?"

"அவசரப்படாதே புவனா. இன்னும் கதை நிறையவே இருக்கு. நாம கதைக்குள் போவம் " என்றார் தாத்தா.

-"ஆமாம் பிப்புக் குட்டி எங்க டாடி என்னை நூறு இடம் கூட்டிட்டு போவார். எங்க மம்மி வைக்ற சிக்கன் குழம்பு செமத்தியா இருக்கும். ரெண்டு மாசத்ல நிறைய சீரியல்கள் எபிஸோடு ஓடிப்போயிருக்கும். க்ளாஸ்ல நிறைய பாடங்கள் நடத்திருப்பாங்க. ரெண்டு மாசமா வராததுனால வருகை பதிவேட்டிலிருந்து பேரை எடுத்தாலும் எடுத்திருப்பாங்க" கண்கலங்கினான் நட்டு.

"ரெண்டு மாசம்... என் யோகா கிளாஸ். டான்ஸ் கிளாஸ் போச்சு! மம்மி டபுள்கலர் காம்பினேஷன் சுடிதார் வாங்கித் தரேன்னு சொல்லிருந்தா. அதுவும் போச்சு " அழுதாள் சக்தி.

"என் ராங்க் போச்சு. சப் ஜுனியர் லெவல் செஸ் சாம்பியன் ஷிப் கலந்துக்க முடியாம போச்சே " ஆர்த்தியும் அழுதாள்.

மூவரும் அழுவதை மிமிக்ரி செய்து காட்டியது பிப்.

"ஓடிப்போயிருக்கும்.... ம்ம்ம்ம... அதுவும் போச்சூ... ஊஊஊஊ.... இதுவும் போச்சூ ஏஏஏஏ.."

"எங்க அழுகை உனக்கு கிண்டலா போச்சா பிப்பு?"

"பின்ன? உங்களுக்குத்தான் ஹோம்சிக்கு ஹாம் சிக்கு எனக்கு அந்தப் பிரச்சனையே இல்லைப்பா... ஏன்னா எனக்கு பிறந்த இடமும் இல்ல... அம்மா அப்பாவும் இல்ல... அண்ணன் தம்பி அக்கா தங்கச்சியும் இல்ல.... ஒரு விதத்ல பாத்தா சந்தோஷமா இருந்தாலும் இன்னொரு விதத்ல ஏக்கமா இருக்கு என்ன பண்ண? சரி. அத விடுங்க. இப்ப நான் உங்களுக்கு எப்படி உதவட்டும்?"

"பிப்புக்குட்டி நாங்க மூணு பேருமே எங்க அம்மாப்பாவ இப்பவே பாத்தாகணும் "

"பாத்துட்டா போகுது "

"எப்படி?" என்றான் நட்டு.

கூரிய நகங்களைக் கொண்ட நான்கே விரல்களைக் கொண்ட இடதுகையை விரித்தது.

இடதுஉள்ளங்கையை வலது கையால் மும்முறை தடவி 'மிப்லக்கா ' என்றது பிப்.

அவ்வளவுதான்...

இடது உள்ளங்கையில் மினி போர்ட்டபிள் ஓனிடா டிவி திரை தெரிந்தது.

"வாண்டுகளே உன்னித்துப் பாருங்கள் "

பார்த்தனர்.

டெலிபோன் தெரிந்தது.

டெலிபோன் விடாமல் சிணுங்கியது.

சக்தியின் அப்பா ஒலிவாங்கியை கையில் எடுத்தார்

"ஹலோ "

"ஹலோ நான் இன்ஸ்பெக்டர் ஜோ பேசுகிறேன் "

"சார் என்ன சார் ஆச்சு? டிவில எல்லாம் விளம்பரம் பண்ணினோம். போஸ்டர் அடிச்சு ஒட்டினோம். துப்பறியும் ஏஜன்ஸி உதவியை நாடினோம். இன்னுமா எந்த தகவலும் கிடைக்கவில்லை?"

இன்ஸ்பெக்டரின் குரல் கம்மியது.

"சார் அந்த சோகத்தை என் வாயால எப்படி சார் சொல்றது?"

பதறினார் சக்தி அப்பா.

"என்ன சோகம்? என்ன சோகம்? சீக்கிரம் சொல்லுங்க "

"மதுரவாயல் அருகே மூன்று பிணங்கள் கிடப்பதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. நானும் எங்கள் காவல்துறை படையும் புறப்பட தயாராய் நிற்கிறோம். மூன்று குழந்தைகளின்

பெற்றோர்களும் அங்கு வந்து விடுங்கள். பிணத்தை அடையாளம் காட்ட உதவியாய் இருக்கும்."

அவ்வளவுதான்... சக்தியின் அப்பா நெஞ்சில் அடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தார்.

"போச்சு எல்லா நம்பிக்கையும் போச்சு "

"படிச்ச நீங்களே டென்ஷன் ஆனா எப்டி சார்? மனசை சமாதானம் பண்ணிக்கிட்டு மத்த ரெண்டு குழந்தைக பெற்றோரையும் அழைச்சுக்கிட்டு உடனே புறப்பட்டு வாங்க"

ஒலிவாங்கியை வைத்துவிட்டு மேலும் அழுதார் சக்தி அப்பா.

"கற்பக விநாயகா உன்னையே அனுதினம் பூஜிக்கும் எங்களுக்கு நீ தரும் பரிசு இதுதானா?"

மூன்று குழந்தைகளின் பெற்றோர்களும் ஸ்கார்பியோ காரில் ஏறிக்கொண்டனர்.

கார் மதுரவாயல் நோக்கிப் பறந்தது.

ஆர்த்தியின் அம்மா கந்தசஷ்டி கவசம் முணுமுணுத்தாள்.

ஒரு செங்கல் சூளையின் முன் பெரிதாய் கும்பல் கூடியிருந்தது.

சற்றுத்தள்ளி இரு போலீஸ் ஜீப்கள் நின்றிருந்தன.

காரின் சப்தம் கேட்டதும் இன்ஸ்பெக்டர் ஜோ ஓடிவந்தார். மூவரின் பெற்றோர்களையும் கைத்தாங்கலாய் அழைத்துச் சென்றார். கூட்டம் இரண்டாய் பிளந்து வழி விட்டது.

அங்கே -

மூன்று பிணங்கள் கிடந்தன.

எட்டு வயது சிறுவன் பிணம் ஒன்று.

பத்து வயது சிறுமிகள் பிணம் இரண்டு.

மூன்று பிணங்களின் கழுத்துக்களும் அறுபட்டிருந்தன. பிணங்களைச் சுற்றி கருஞ்சிவப்பாய் இரத்தம் தேங்கியிருந்தது.

பிணங்களின் கழுத்துகளில் அரளி மாலை.

உடல்கள் முழுவதும் மஞ்சளும் சந்தனமும் பூசப் பட்டிருந்தன.

மூன்று பிணங்களின் முகங்கள் சிதைக்கப்பட்டிருந்தன.

பிணங்களின் அருகே......

மந்திரித்த எலுமிச்சை பழங்கள் குங்குமப்பொட்டுடன் கிடந்தன.

இன்ஸ்பெக்ட்ர் பதட்டத்துடன் வினவினார்.

"இவங்க இல்லல்லே உங்க குழந்தைகள்?"

"கடவுளே மூன்றும் எங்க குழந்தைகள்தான் எந்தப் பாவியோ மந்திரதந்திரத்துக்காக பச்சைக் குருத்துகளோட கழுத்தை வெட்டிருக்கான் "

"முகம் சிதைஞ்சு போயிருக்கு. உடம்பு ஊறி போயிருக்கு. மேற்தோல் நிறம் மாறியிருக்கு. இத்தனை பின்னடைவிலும் உங்களால இந்த பாடிகளை நூறுசதவீதம் உங்க குழந்தைகள் தான்னு அடையாளம் கண்டுக்க முடியுதா?"

"இல்ல...இதுதான் இதுதான்... இவங்கதான் "

"உணர்ச்சிவசப்படாதிங்க. இந்த பிரேதங்கள் விஞ்ஞான ரீதியா உங்க குழந்தைகள் தான்னானு உறுதி பண்ணிக்க வழி இருக்கு. டி.என்.ஏ. டெஸ்ட் (DNA Test) செஞ்சு பாத்திரலாம்" என்றார் இன்ஸ்பெக்டர் ஜோ.

கதையில் குறுக்கிட்டான் ரகு.

"டி.என்.ஏ என்றால் என்ன தாத்தா?"

தாத்தா முறுவலித்தார். "ஒவ்வொரு மனிதனும் கோடிக் கணக்கான செல்களால் ஆனவன். ஒவ்வொரு செல்லிலும் டி.என்.ஏ. எனும் உயிர் பொருள் இருக்கும். வசந்த்தின் டி.என்.ஏ செல் போல புவனாவின் டி.என்.ஏ செல் இருக்காது. முத்தமிழன் டி.என்.ஏசெல் போல கமலின் டி.என்.ஏசெல் இருக்காது. உலகத்தில் ஒருவரின் டி.என்.ஏசெல் போல இன்னொருவருக்கு இருக்க சாத்தியமே இல்லை. ஒரு அம்மா. ஒருஅப்பா. நூறு குழந்தைகள் நூற்றில் எந்த குழந்தை இந்த அம்மா அப்பாவுக்கு உரியது என்பதனை டி.என்.ஏ டெஸ்ட் மூலம் கண்டுபிடித்துவிடலாம்.

மிருகங்களின் டி.என்.ஏசெல் மனிதனின் டி.என்.ஏசெல் போல இருக்காது. இந்த டி.என்.ஏடெஸ்ட் செய்யும் வசதி ஆந்திர மாநிலத்திலுள்ள ஹைதராபாத்தில் உள்ளது. ஒரு மனிதனின் எச்சிலில் வியர்வையில் கூட டி.என்.ஏ செல்கள் காணப்படும்..." விளக்கினார் தாத்தா.

"ஓகே கதைய கண்டினியூ பண்ணுங்க தாத் " என்றான் சரண்.

-"டி.என்.ஏ டெஸ்ட் தேவை இல்லை இன்ஸ்பெக்டர். பாத்தாலே தெரியுது எங்க குழந்தைகள்தான்னு. யாரோ ஒரு மாந்திரீகன் மயக்கி அழைத்துச் சென்று நரபலி குடுத்திருக்கான்..."

இன்ஸ்பெக்டர் ஜோ. "அந்த மாந்திரீகனை பிடித்து தூக்குக்கு அனுப்பாமல் விடமாட்டேன்" என்றார்.

"எங்க கண்மணியே போயாச்சு. இனி நீங்க யாரை பிடிச்சா என்ன, விட்டா என்ன?"

அனாதைப் பிணங்களை தங்கள் குழந்தைகள் என தவறாய் கணித்து கண்ணீருடன் தகனம் செய்தனர் நட்டு, சக்தி, ஆர்த்தி பெற்றோர்.

பதிமூன்றாம் நாள் காரியங்கள் நடந்தன.

மூவரின் புகைப்படங்களுக்கும் மாலையிடப் பட்டிருந்தன.

-பொறுத்து பொறுத்து பார்த்த நட்டு பதறினான்.

"அய்யய்யோ இது என்ன கூத்து? யார் பிணத்தையோ கட்டிப்பிடிச்சு எங்க அப்பாம்மா அழறாங்க. உயிரோடு இருக்றப் பவே எங்க போட்டோக்களுக்கு மாலை அணிவிச்சிருக்காங்க. என்னால தாங்க முடியல. இனி ஒரு நிமிஷம் என்னால பொறுத்துக்க முடியாது. இளவரசி ராஜமோகினிக்கு என்ன ஆனா இனி நமக்கென்ன? இந்த காலப்பயணத்தை நிறுத்துங்க. உடனே இந்த நிமிஷமே நாம நம்ம காலத்துக்கு பறந்து போயாகணும். மம்மீமீ டாடீடீடீடீயீ "

இடைவிடாமல் நட்டு கனமழையாய் அழ ஆரம்பித்தான்.

பிப் நட்டுவைத் தேற்ற முடியாமல் தத்தளித்தது.

சக்தியும் ஆர்த்தியும் கூட கண்கலங்கினர்.

# 18

நட்டுவுடன் சக்தியும் ஆர்த்தியும் சேர்ந்து அழ குறுக்கே புகுந்து கத்தியது பிப்.

"கொஞ்சம் உங்க அழுகைகளை நிறுத்ரீங்களா?"

அழுகையை கட்டுப்படுத்தினர். ஆனால் விசும்பல் தொண்டைகளை மீறியது.

"நான் கேக்ர கேள்விகளுக்கு பதில் சொல்லுங்க " என்றது பிப்.

"ம் "

"நட்டு "உன் பிறந்த தேதி என்ன?"

"24.08.1997 "

"சக்தி உன் பிறந்த தேதி என்ன?"

"12.12.1995 "

"ஆர்த்தி உன் பிறந்த தேதி என்ன?"

"06.06.1995 "

"ஸோ... ஆயிரத்தி தொளாயிரத்து தொண்ணூத்தி அஞ்சாவது வருடம் ஜூன் மாசம் அஞ்சாம் தேதி நீங்க மூணு பேரும் பூமில பிறக்கல... இல்லையா?"

"ஆமா "

"நீங்க மூணு பேரும் அதிகபட்சம் தலா நூறு நூறு நூறு வருஷம் உயிர் வாழுரீங்கன்னே வச்சுப்பம். அதாவது கிபி 2095 வரைக்கும். ஸோ...கிபி 2096ல நீங்க மூணுபேருமே பூமில உயிரோட இருக்க மாட்டீங்க... இல்லையா?"

"ஆமா "

"காலத்தை ரயில்னு வச்சுக்கங்க. காலரயில் ஒவ்வொரு ஸ்டேஷனாய் நிக்குது. நீங்க ஏதோ ஒரு ஸ்டேஷன்ல ஏறுறீங்க. அதாவது பிறக்றீங்க. கொஞ்சகாலம் காலரயில்ல பயணம் பண்ணிட்டு ஏதோ ஒரு ஸ்டேஷன்ல இறங்றீங்க. அதாவது இறந்து போறீங்க. கோடிக்கணக்கான மக்கள் பயணம் போகும் ரயில்ல நீங்க ஏறுனதுக்கும் இறங்கினதுக்கும் எதாவது தடயம் ரயில்ல பதிஞ்சு இருக்குமா? இருக்காது..."

'என்னது. பிப் கன்னா பின்னான்னு தத்துவம் பேசுது யோசித்தான் நட்டு.

"மெரீனா பீச் கடற்கரை மணல்ல நடந்து போறீங்க. அந்த மணல்ல ஏகப்பட்ட காலடி தடங்கள் தெரியும். ஒரு ஒருமணி நேரம் கழிச்சு வந்து மணல்ல தெரியுற காலடி தடங்கள்ல நம்ம காலடி தடம் எதுன்னு கண்டுபிடிக்க முடியுமா? முடியாது. மனித வாழ்க்கை நீர்க்குமிழி போன்று நிலை இல்லாதது. நிலையற்ற மனித வாழ்விலும் அழியாத புகழ் அடைய மனிதனுக்கு கடவுள் பல வழிகள் குடுத்திருக்கார் குழந்தைகளே"

"இப்பத்தான் நீ பேசுரது கொஞ்ச கொஞ்சமா புரியுது "

"புதுமைபித்தன் இறந்துட்டார். ஆனால் அவரின் கதைகள் இன்னும் அவர் புகழ்பாடுகின்றன. கண்ணதாசன் இறந்து விட்டார். ஆனால் அவரின் பாட்டுகள் இன்னும் அவர் புகழ்பாடுகின்றன. அரசியலில் நேர்மையை போதித்த காமராஜர் இறந்தாலும் அவரின் புகழ் மங்கவில்லை. இதுபோல பலதுறைகளில் சாதித்து இறவா புகழ் கொண்ட பெரியவர்கள் ஆயிரக்கணக்கில் உண்டு..."

"ஆமா.. அதுக்கென்ன?"

"உலகத்தின் மற்றக்குழந்தைகளுக்கு கிடைக்காத மந்திரப் பேழை உங்களுக்கு கிடைச்சிருக்கு. அதன் மூலம் இறந்த காலத்துக்கு பறந்து வந்து புதிய சாதனையை படைச்சிருக்கீங்க. அதோட இல்லாம உலகின் தலைசிறந்த மந்திரவாதியிடமிருந்து இளவரசியை மீட்கப் புறப்பட்டு இருக்கீங்க. உங்களின் இந்த முயற்சி வெற்றி பெற்றால் உங்கள் மூவருக்கும் அழியா புகழ் வந்து சேரும் உங்களுக்கு ஒரு பெருமைன்னா அது உங்க பெற்றோர் களுக்கும் தானே "

"நீ சொல்றதெல்லாம் சரி பிப்பு. ஆனா எங்க பெற்றோர் நாங்க செத்து போய்ட்டதா காரியம் பண்ணி எங்க போட்டோக்களுக்கு மாலை போட்டுட்டாங்களே "

"இது தற்காலிகம். பத்து மாசம் கழிச்சு போய் மாலைகளை கழற்றி வீசிட்டா போகுது அப்ப உங்களுக்கு திருஷ்டி வேற சுத்தி போட்ரலாம் "

"ஆனாலும் பிரிவுத்துயர் தாக்குதே "

"மனிதனா பிறந்துட்டா பிரிவுகளை தாங்க பக்குவப் படணும். நட்டு. நீ வெளியூர் காலேஜ்ல படிக்க போய்ட்டா ஒரு நாலஞ்சு வருஷம் நீயும் உன் பெற்றோர்களும் பிரிஞ்சுதான ஆகணும்? சக்தி. ஆர்த்தி நீங்க எல்லாம் படிச்சு வேலைக்கு போன பிறகு கல்யாணம் பண்ணிக்கிட்டு புருஷன் வீட்டுக்கு போயிடு வீங்க. அப்றம் காலம் பூராவும் நீங்களும் உங்கள் பெற்றோர்களும் பிரிஞ்சுதான வாழனும்?"

"பிப்பு சொல்றது சரியான பாயின்ட் "

"இன்னும் கேளுங்க. தங்கள் குடும்பங்களை மறந்து வெயிலிலும் குளிரிலும் நின்னு உங்களது தேசத்தை காக்கிறார்களே ராணுவ வீரர்கள்.. அவர்கள் பிரிவுத்துயர்தான் பெரிது என்று எண்ணி வீடு திரும்பி விட்டால் உங்கள் தேசத்து மக்கள் நிம்மதியாக வாழமுடியுமா? எதிரி கையில் தேசம் சிக்கி துண்டு துண்டாக சிதறியல்லவா போய் விடும்?"

"பாயின்ட் பாயின்ட்டா பேசி அசத்ற பிப்பு " என்றான் நட்டு.

"கடைசி பாயின்ட். உங்கள் பயணகாலம் ஒரு வருடம். முடிந்திருப்பதோ இரண்டே மாதங்கள். சூளுரைத்தபடி இளவரசியை மீட்காமல் நீங்கள் மூவரும் உங்கள் காலத்துக்கு திரும்புவது மகா மகா கோழைத்தனம். கோழைகளை சரித்திரம் மன்னிக்காது. இரும்பு இதயத்துடன் பயணத்தைத் தொடர்ந்து புதிய சகாப்தம் படையுங்கள் "

"எங்க உள்ளங்களை ரொம்ப டச் பண்ணிட்ட பிப்பு எங்க மனசு மாறிடுச்சு. இனி புயல் அடிச்சாலும் பூகம்பம் வந்தாலும் சரி அசர மாட்டோம். பிரிவுத்துயரை மனசுக்குள் பூட்டி வைப்போம். இளவரசியை மீட்டேத் தீருவோம் " என்றாள் சக்தி.

"எல்லாம் சரி பிப்பு. அரசியல்வாதிகளை விட அட்டகாசமா பேசுற பேசாம எங்க காலத்துக்கு வந்து உருவத்தை மாத்திக்கிட்டு கட்சி ஆரம்பி! பிரதமர் ஆனாலும் ஆய்டுவ" கிண்டல் செய்தான் நட்டு.

பிப் ரஜினிகாந்த் போல் சிரித்தது.

"பிரச்சனை முடிஞ்சிருச்சு. இனி தொடர்ந்து பறப்போமே"

"ரைட்டோ பிப்பு டார்லிங் "

மூவரும் நாரைகளாய் மீண்டும் பறக்க ஆரம்பித்தனர்.

பிப் நட்டுவின் முதுகில் அமர்ந்து கொண்டு குதிரை ஓட்டியது.

"ஹை.. ஹை... ச்சக்கும் ச்சக்கும்.... ஹை ஹை "

அப்போதுதான் அது நடந்தது.

தலைக்கு மேலிருந்த வானம் கண்ணாடியால் செய்யப் பட்டதாய் மாறியது.

தொடர்ந்து இடிகளும் மின்னல்களும் சீறின.

பேய் சப்தத்துடன் வானம் விரிசல் விட ஆரம்பித்தது.

'ஜிலிங் கிர்ரக் கிர்ரக் கிர்ரக் '

நொடிக்கு நொடி வானத்தின் விரிசல்கள் அகண்டு கொண்டே போயின.

நட்டு அலறினான். "பிப் எங்களைக் காப்பாற்று "

பிப் கண் சிமிட்டி சிரித்தது. வலதுகையை மும்முறை சுற்றியது. கையில் சாக்பீஸ் போன்ற வஸ்து முளைத்தது.

மூவரையும் சுற்றி ஒரு வட்டம் போட்டது.

"என்னுடைய வட்டத்துக்குள் இருக்கும் உங்களை எதுவும் யாரும் என்னமும் பண்ண முடியாது "

விரிசல் விட்ட வானத்திலிருந்து அக்னி மழை பொழிய ஆரம்பித்தது.

அக்னி மழைத்துளிகள் பிப்பின் வட்டத்தின் மேல் பட்டு தெறிந்து விலகின.

அக்னி மழையால் பூமி சுருகியது.

விரிசல் வானத்திலிருந்து சரமாரியாக விண்வெளிக் கற்கள் வெளிப்பட்டன.

பிப்பின் வட்டத்தின் மீது மோதி நொறுங்கி சாம்பலாயின.

கடல் இரத்த நிறத்தில் கொந்தளித்தது.

சூறாவளிகள் சுழன்று அடித்தன.

கடலிலிருந்து ஒரு இலட்சம் கிலோமீட்டர் உயரம் கொண்ட கொடிய மிருகங்கள் வெளிப்பட்டன.

அக்னி மழையை விழுங்கின.

பிப்பின் வட்டத்தை கடித்து தூள்தூளாக்க முயற்சித்தன.

ம்ஹிம்!

வட்டம் நொறுங்கவில்லை.

மிருகங்களின் பற்கள் தான் நொறுங்கின.

பிப் தனது சுட்டு விரல்களை துப்பாக்கி போல் ஆக்கி மிருகங்களை சுட்டது. 'டிஷிங் டீரடாங்'

மிருகங்கள் மரண ஓலம் எழுப்பி செத்து வீழ்ந்தன.

இவ்வளவு அல்லோல கல்லோலத்திலும் மூன்று நாரைகள் தொடர்ந்து பறந்தன.

வானத்தில் புதிய வகை பறவைகள் தோன்றி கருகின.

எங்கு பார்த்தாலும் நெருப்பு ஜுவாலைகள் சீறிக் கொண்டிருந்தன.

இப்படியொரு கொடூரமான காட்சி அமைப்பை நட்டு கனவிலும் கண்டதில்லை.

விரிசல்கள் விட்ட வானம் பொக்கை வாய் கிழவி போல் காட்சியளித்தது. விரிசல்களுக்கு இடையே தெரியும் இருட்டான இருட்டு பீதி மூட்டியது.

"என்ன அலங்கோலம் இது? யாரின் கைங்காரியம் இது பிப்பு?" வினவினான் நட்டு.

"இரு... என் ஞானதிருஷ்டியை கேட்டுச் சொல்கிறேன்" இரு பக்க நெற்றி பொட்டுகளை விரல்களால் அழுத்தி யோசித்தது பிப்.

ஞானதிருஷ்டியில் எதுவுமே தெரியவில்லை.

'ரொய்ங் ' என சப்தம்தான் பிப் காதுகளில் தொடர்ந்தது.

"இது அண்டாரகன் வேலையா பிப்பு?"

"நிச்சயம் இல்லை. அவனை விட சக்தி வாய்ந்த வேறு யாரோ?"

"அவனை விட சக்தி வாய்ந்த-என்றால் கடவுளா? கடவுள் இப்படி நமக்கு கெடுதல்களை செய்வாரா?"

"மந்திரவாதி அண்டாரகனுக்கு மேலே கடவுளுக்கு கீழே இருக்கும் ஒரு சக்தி "

"அப்படியொரு சக்தி உண்டா என்ன?"

"இருக்கலாம் "

"தொடர்ந்து என்ன செய்வது?"

"தொடர்ந்து பறப்போம் முடிவு என்னதான் ஆகிறதென்று பார்த்து விடுவோம் "

ஊழிபிரளயம் இன்னும் உக்கிரமாய் மாறியது.

இப்போது வானம் இடிந்து தூள்தூளாய் உதிர ஆரம்பித்தது.

உதிர்வுகள் பிப்பின் வட்டத்தின் மீது மோதின.

எதற்கும் அசராத வட்டம் இப்போது நெளிந்தது நசுங்கியது அழுங்கியது

வானம் இருந்த இடத்தில் ஒன்றும் இல்லை.

வித்தியாசமான இதுவரை உலகம் காணாத கறுமை.

சிர்க் சிர்க்

கோடி கோடி லிட்டர் கடல்நீர் கறுமையால் உறிஞ்சப் பட்டது.

அக்னி மழை உறிஞ்சப்பட்டது.

மிருகங்கள், பறவைகள், கடல்வாழ் உயிரினங்கள் உறிஞ்சப்பட்டன.

பிப்பின் வட்டமும் மூன்று நாரைகளும் பிப்பும் இழுபட்டன.

நட்டு அண்ட் கோவுக்கும் கறுமைக்கும் அதிரடியான கயிறு இருக்கும் போட்டி

கறுமையின் உறிஞ்சலுக்கு பிப்பின் வட்டம் உடன்பட மறுத்தது.

நான்காவது வானமும் கடலும் அதன் சகலமும் கறுமையால் உறிஞ்சப்பட்டு பிப்பின் வட்டம் மட்டும் தன்னந்தனியாக நின்றது.

கறுமையின் ஈர்ப்பு சக்தி தொடர்ந்து விஸ்வரூபித்தது.

நட்டு அண்ட் கோ வியர்த்தனர்.

திகிலுற்றனர்.

பிப்பின் வட்டம் மெதுமெதுவாக விரிசல் விட ஆரம்பித்தது.

நட்டு அலறினான் "பிப்பு ஆபத்து ஆபத்து காப்பாற்று "

பிப் சற்றே கலவரமடைந்தது.

வட்டத்துடன் மூவரையும் ஒளிவேகத்தில் நகர்த்திச் சென்றது.

வட்டம் அசுரத்தனமான சப்தம் கிளப்பி வெடித்துச் சிதறியது.

கொடுமையான வெப்பம் நட்டு அண்ட் கோவைத் தாக்கியது.

பிப் ஏதோ மந்திரம் முணுமுணுத்தது.

கடுமையான வெப்பத்தை சமன் செய்ய ஐஸ்கட்டி மழை பொழிய ஆரம்பித்தது.

பிப் எங்கேயோ கண்களை ஓட்டி கத்தியது.

"யாரடாது மாயாவி? எங்களின் லட்சியப் பயணத்தை தடுப்பது? சுத்தவீரன் என்றால் முன்னே வா நேருக்கு நேர் மோதி பார்ப்போம் "

பதில் இல்லை.

சில நொடிகள் கழிந்தன.

டங்கார் டங்கார்!

வானத்துக்கும் பூமிக்கும் ஆன உயரத்துடன் இரு கதவுகள் முளைத்தன

நட்டு அண்ட் கோ பறக்கும் வழி மூடிக்கொண்டது.

பிப்பின் கேள்விக்கு பதில் கேள்வி சற்றே தாமதமாகக் கிளம்பியது.

"என்னை கேள்விகள் கேட்பது இருக்கட்டும்? நீங்கள் யாரடா மனிதப் பதர்கள்? உடன் இருப்பது எந்த லோகத்து குட்டிச்சாத்தான்?"

கேள்வி நட்டு, சக்தி, ஆர்த்தி, பிப் இவர்களின் முகத்தை ஈவு இரக்கமில்லாமல் கர்ணகடூரமாய் தாக்கியது.

நால்வரும் ஸ்தம்பித்தனர்.

O

# 19

அமானுஷ்யமான அமைதி நிலவியது.

மிகப்பெரிய ஊழிப்பிரளயத்துக்கு பிறகு மிஞ்சியது நட்டு அண்ட் கோ மட்டும்தான்.

தனிமை.

பயமுறுத்தும் தனிமை.

திகிலூட்டும் தனிமை.

மதிமயக்கும் தனிமை.

ஐந்தாவது வானத்துக்கு போகவிடாமல் முளைத்திருக்கும் ராட்சச கதவு மரத்தினால் ஆனது அல்ல; இரும்பினால் செய்யப் பட்டதும் அல்ல; பிளாஸ்டிக் சமாச்சாரமும் அல்ல; பூமியில் கிடைக்காத புதிய வகை உலோகத்தால் கதவு செய்யப்பட்டிருந்தது.

பிப் கதவினை ஆராய்ந்தது.

"அடுத்து என்ன செய்யப்போற பிப்பு?"

"கதவை உடைச்சுக்கிட்டு ஐந்தாம் வானம் பறக்க வேண்டியதுதான் "

"மறைந்திருக்கும் மாயாவி விடுவானா?"

"அதையும் நாம பாத்திருவோமே..."

பிப் தனது மந்திரசக்தியை பிரயோகித்து கதவை தகர்க்கும் வேளையில்.....

அது நடந்தது!

ஷிக்...

ஷிக்ஷிக் ஷிஷ்க்

நரம்பு போன்ற வஸ்து மெல்லிய நூலாய் நீண்டு குறுக்கும் நெடுக்கும் பாய்ந்து பறந்து வந்தது.

நால்வரும் நிதானிக்கும் நொடிக்குள்....

நூல்கள்பிசாசுத்தனமாய் நட்டு அண்ட் கோ உடல்களை சுற்றின. கைகளை தூக்க முடியாமல். கால்களை பிரிக்க முடியாமல் உடம்பில் கண்களையும் வாயையும் தவிர மீதிப்பகுதியை சென்டிமீட்டர் விடாமல் நூல் குறுக்கியிருந்தது.

பிப் முதலில் எதிர்ப்புக் காட்ட நினைத்தது.

பின் ஏதோ நினைத்து உடன்பட்டது.

பிப்பும் பொட்டலமாய் கட்டப்பட்டது.

மொத்தத்தில் நால்வரும் 'எகிப்து மம்மி' போல் கிடந்தனர்.

-கதைக்குள் குறுக்கிட்டாள் தீபா.

"எகிப்து மம்மின்னா என்ன தாத்தா?"

தாத்தா தலையாட்டினார். "இது நல்ல கேள்வி "

வசந்த் குறுக்கிட்டான். "எகிப்து மம்மின்னா அர்த்தம் எனக்குத் தெரியும் தாத்தா "

"சொல்லு சொல்லு."

"எகிப்து நாட்டுல இருக்ற அம்மா" என்றான் வசந்த்.

"நினைச்சேன். இப்படி ஏதாவது கோக்மாக்கா பதில் சொல் வேன்னு இரண்டாயிரத்து சில்லரை வருஷங்களுக்கு முன்னாடி எகிப்துல மன்னராட்சி நடந்துச்சு. அவங்க 'மரணத்துக்குப் பின்னும் ஒரு வாழ்க்கை இருக்கு' னு நம்புனாங்க. அதனால பெரிய பெரிய பிரமிடுகளை கட்டினாங்க. இறந்தபோன ராஜாக்களின் மூளைகளையும் உள் உறுப்புகளை அகற்றி, மருந்து தடவி, உடம்பு பூரா பேன்டேஜ் துணி சுத்தி பிரமிடுக்குள்ள வச்சாங்க. அப்படி பாதுகாக்கப்பட்ட உடல்தான் 'மம்மி' பாதுகாக்கும் முறைக்கு பேர் தான் 'மம்மிபிகேஷன்' பிரமிடுகளின் வடிவத்துக்கு பொருட்களை கெடாமல் பாதுகாக்கும் விசேஷ சக்தி இருக்குதுனு சொல்றாங்க...."

"வசந்த்தை 'மம்மிபிகேஷன்' பண்ணனும்னா ஒரு வேலை மிச்சம். கஷ்டப்பட்டு மூளையை அகற்ற வேண்டியதில்லை. ஏன்னா அவன் மண்டைல தான் மூளையே இல்லையே.." கிண்டல் செய்தாள் புவனா.

வசந்த் முறைத்தான்

பார்வையாலேயே புவனாவை செல்லமாக கண்டித்தார் தாத்தா. மீண்டும் கதைக்குள் புகுந்தார்.

-நால்வரின் கண்களும் அங்குமிங்கும் துழாவின.

மிகப்பெரிய இரைச்சலுடன் பறக்கும் தட்டு போன்ற கலம் இவர்கள் முன்வந்திறங்கியது.

அதிலிருந்து இருவர் இறங்கினர் இருவரும் வெள்ளி நிறத்தில் மினுமினுத்தனர். தலை உச்சியில் ஆன்ட்டெனா போன்று ஒரு கம்பி துருத்தியிருந்தது. கவச ஆடை அணிந்திருந்தனர். நெஞ்சில் கடிகாரம் பொருத்தப்பட்டிருந்தது. அந்த கடிகாரத்துக்கு எட்டு முள்கள்.

நட்டு அண்ட் கோவை கலத்துக்குள் கொண்டு போய் கிடத்தினர்.

கலம் 'உய்க்' என்ற சப்தத்துடன் மேல் எழும்பி பறந்தது.

மெதுமெதுவாக கண் விழித்தான் நட்டு உடலை அசைக்க முடியவில்லை. சக்தி, ஆர்த்தி, பிப்மூவரும் கூட பிரக்ஞை மீண்டனர்.

நீலநிறமான குட்டி சதுர அறை.

அறை நடுவில் கம்ப்யூட்டர் சாயலில் இரு இயந்திரங்கள் அறை சுவர் முழுக்க கடிகாரங்கள்.

ஒவ்வொரு கடிகாரமும் ஒரு நேரத்தைக்காட்டின.

உள்வாசல் திறந்து கொண்டது.

அதிலிருந்து விசித்திரமான ஓர் உருவம் வெளிப்பட்டது.

வெட்டுக்கிளி இரண்டு காலால் நடப்பது போலொரு தோற்றம்.

தலையில் மினுக்மினுக் என வெளிச்சம் துப்பும் இரு ஆன்ட்டெனாக்கள்.

ஆந்தைக்கண்கள். கத்திமூக்கு. அழுத்தமான வாய்.

உடல் முழுக்க மூடியிருந்தது கவ்ச உடை.

இடதுகையில் பத்துக் கடிகாரங்கள் கட்டியிருந்தது உருவம்.

வலது கையில் பத்துக்கடிகாரங்கள் கட்டியிருந்தது.

வினாடி முள் நகர்வது போல நடந்து வந்தது உருவம்.

"யார் நீங்க?"

நட்டு தைரியமாக பேசினான். "கட்டுகளை அவிழ்த்து விடுங்க. சொல்ரோம் "

உருவம் சுட்டுவிரலை நீட்டியது.

அவ்வளவுதான்...

நால்வரின் கட்டுகள் அறுந்தன. கைகால்களை உதறினான். உடற்பயிற்சி செய்வது போல குதித்தான். கைவிரல்களில் சொடுக்கு எடுத்துக்கொண்டான். கழுத்தை இடம்வலம் ஆட்டினான்.

பிப் ரப்பர் பந்து போல் எழுந்து மிதந்தது.

"எங்களை கேட்கிறீர்களே... முதலில் சொல்லுங்கள்.. நீங்கள் யார்?"

உருவம் பெரிய குரலில் சிரித்தது. "சிறுவனுக்கு அதீத தைரியம்தான். உன் துணிச்சலை மெச்சுகிறேன். என் பெயர் கால தேவன். காலத்தை காப்பதற்காக கடவுளால் நியமிக்கப்பட்டிருக் கிறேன் "

பிப் நட்டுவுக்கு விளக்கியது. "உங்க கால போலீஸ் டிபார்ட்மென்ட் தலைவர் டிஜிபி மாதிரி இவரு நட்டு "

"காலதேவன்! காலத்துக்கு இப்ப என்ன ஆபத்து? அதை எப்படி தினம் காப்பாற்றுகிறீர்கள்?"

"காலம்ன்றது பூமிக்காக மட்டும் படைக்கப்பட்ட ஒன்று. காலம் என்பது கோடிக்கணக்கான வருடங்கள் நீளமான சுரங்கப் பாதை. இதில் நடந்தது, நடப்பது, நடக்கவேண்டியது,

எல்லாவற்றையும் கடவுளே தீர்மானிக்கிறார். உங்க காலத்து விஞ்ஞான வளர்ச்சி ஏற்கனவே 500முறை புழங்கி அழிந் திருக்கிறது. கற்காலத்திலிருந்து மனிதன் மனிதனையே படைக்கும் காலம் வரை ஒரு ரவுண்ட். மனிதன் உயிர்களை தானே உருவாக்க ஆரம்பித்ததும் கடவுள் மனித உயிர்களை ஒட்டு மொத்தமாக அழித்து விடுவார். மீண்டும் கற்காலம் தொடரும். பல ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு பின் மனிதன் உயிர்களை தானே உருவாக்கும் நிலைக்கு உயர்வான். கடவுள் மீண்டும் மனித உயிர்களை அழிப்பார். அது ஒரு சுழற்சி முறை,. குழந்தைகள் பொம்மைகளை வைத்து விளையாடும். விளையாடி முடித்ததும் பொம்மைகளை கலைத்துவிடும். மீண்டும் மறுநாள் ஆட்டம். இப்படித்தான் கடவுள் தனது படைப்புகளுடன் விளையாடு கின்றார்."

"சே இந்த கடவுள் ரொம்ப மோசம்" அலுத்துக் கொண்டான் நட்டு.

"காலத்தின் எல்லா நிகழ்ச்சிகளும் கடவுளால் தீர்மானிக்கப் பட்டவை. அதை துளியும் மாற்ற யாருக்கும் உரிமை இல்லை. விஞ்ஞான வசதிகளைக் கொண்டு மனிதர் இறந்த காலத்துக்கோ எதிர்காலத்துக்கோ போய் நிகழ்வுகளை மாற்றி அமைப்பது கடவுளுக்கு உடன்பாடில்லை. இப்போது சொல்லுங்கள். நீங்கள் யார்? உங்கள் கால பயணத்துக்கு உதவியது யார்?"

நட்டு முன் வந்தான்.

நடந்ததை முழுக்க விளக்கினான். சுயஅறிமுகமும் நடந்தது.

"அட கடவுளுக்கு நெருக்கமான தேவதைகளை காப்பாற்றியிருக்கிறீர்களா? மிக்க சந்தோஷம். ஆனாலும்..."

"என்ன ஆனாலும்?" வினவினாள் சக்தி.

"ஆனாலும் நீங்கள் காலப்பயணம் வந்தது தப்புத்தான் "

"அதுக்காக நீங்கள் இவ்வளவு கோபப்பட்டிருக்கத் தேவையில்லை. நான்காவது வானத்தை நொறுக்கி கடலை விழுங்கி ஊழி பிரளயம் ஏற்படுத்தி. வாங்கன்னு கூப்பிட்டிருந்தா நாங்களே வந்து கைகட்டி வாய் பொத்தி உங்ககிட்ட நடந்ததைக்

கூறியிருப்போம். தயவுசெய்து நான்காவது வானத்தையும் கடலையும் பழையநிலைக்கு கொணருங்கள் காலதேவனே " நட்டு.

"அப்படியே செய்துவிட்டேன் நட்ராஜ். அப்புறம்?"

"அப்புறம் என்ன? இளவரசியை மீட்கும் எங்கள் பயணத்தைத் தொடர அனுமதியுங்கள் "

"முடியாது "

"ஏன்?"

கம்ப்யூட்டர் போன்ற இயந்திரத்தை இயக்கினார் காலதேவன்.

"காலப்பதிவுபடி இளவரசி ராஜமோகினி தன்னைக் காப்பாற்ற யாரும் வராததால் தற்கொலை செய்து கொண்டு விட்டாள். சிறுவனே உங்களால் இளவரசியைக் காப்பாற்ற முடியாது. தப்பித்தவறி காப்பாற்றிவிட்டால் காலப்பதிவை திருத்தம் செய்த குற்றத்துக்கு ஆளாகி விடுகிறீர்கள் இளவரசி ராஜ மோகினியை தற்கொலை செய்ய விடுங்கள் "

நட்டு கெஞ்சினான்.

"ஒரு தீயவனிடம் சிக்கிய பேதைப்பெண் தப்பிப்பது தானே நியாயம்? சரித்திரத்தில் உள்ளது என்பதற்காக அவள் இறந்தே ஆக வேண்டுமா?"

"இளவரசி ராஜமோகினி அவளது முற்பிறவியில் செய்த பாவத்தின் சம்பளம் இந்த மரணம் " ஆணித்தரமாய் கூறினார் காலதேவன்.

"எங்களுக்கு கிடைத்திருக்கும் காலப்பயண வாய்ப்பு இதுவரை உலகில் யாருக்கும் கிடைத்ததில்லை. சிறுவர் சிறுமியராக இருந்தாலும் எத்தனை துணிச்சலாய் இந்த பயணத்தை மேற்கொண்டு வந்திருப்போம். கொஞ்சம் புத்திசாலித்தனம் குறைவு என்றாலும் விடுகதைகளுக்கு விடை சொல்லத் தெரியாமல் சூன்யக்காரக்கிழவிக்கு இரையாகி இருப்போமே தேவனே எல்லா விதிகளிலும் விதிவிலக்கு உண்டு. எல்லா பதிவுகளுமே மாற்றத்துக்கு உட்பட்டவையே..." என்றான் நட்டு.

பிப் தனது பங்குக்கு பேச ஆரம்பித்தது.

"காலதேவனே மாற்றமே இல்லாத இயந்திரகதியான கோடி வருடங்களை பார்த்து வருகிறீர்கள்.. எங்கள் பயணத்தை தொடர்ந்து அனுமதிப்பதால் இனிமையான ஒரு மாற்றம் நிகழும்... உங்களுக்கும் சுவாரசியமாய் இருக்கும்... கருணை காட்டுங்கள் தேவனே "

"தயவுகூர்ந்து அனுமதியுங்கள் ஐயா " இறைஞ்சினாள் சக்தி.

"இரக்கம் காட்டுங்கள் காலதேவனே " வணங்கினாள் ஆர்த்தி

காலதேவன் பலநிமிடம் யோசித்தார்.

அவர் யோசிக்க யோசிக்க பயத்துடன் அவரது முகத்தையே உன்னித்தனர்.

காலதேவன் புன்னகைத்தார்.

"சரி உங்கள் காலப்பயணத்தை தொடர சம்மதிக்கிறேன்"

"நன்றி தேவனே " கோரஸாய் கை கூப்பினர்.

"நீங்கள் நினைப்பது போல பயணம் எளிதல்ல. மரணசிரமம். மேலும்மேலும் பல படுபயங்கர ஆபத்துகளை சந்திக்கப் போகிறீர்கள் "

"உங்கள் அன்பு எங்களை எந்த இடரில் இருந்தும் காப்பாற்றும் "

சிரித்தார் தேவன்.

"நன்கு பேசுகிறாய் நடராஜ் "

"ஓர் உதவி தேவனே "

"என்ன?"

"மந்திரவாதி அண்டாரகனின் இருப்பிடத்தைக் கூறினால் உபயோகரமாய் இருக்கும் "

எதிர்மறையாய் தலையாட்டினார் காலதேவன்.

"நல்லவேளை இளவரசியை மீட்டும் கொடுத்து விடுங்கள் என நீ கேட்கவில்லை. அண்டாரகன் இருப்பிடம் தெரியும். ஆனால் சொல்ல கடவுளின் அனுமதி இல்லை "



"ஏன்?"

"ஒரு நப்பாசைதான். அண்டாரகன் இருப்பிடம் தெரியாமல் அலைந்து திரிந்து நீங்கள் எல்லாம் உங்கள் காலத்துக்குத் திரும்ப வாய்ப்பு உள்ளது. அப்படி திரும்பினால் காலப்பதிவிலும் மாற்றம் வராது இல்லையா? தவிர.. காலப்பயணமே தவறு எனசித்தாந்தம் கொண்ட நான் மனிதாபிமானத்துக்காக ஒருபடி இறங்கி வந்திருக் கிறேன். இப்போது பலபடிகள் மேலும் இறங்கி உங்களுக்கு வழியும் சொல்வது மோசமான சறுக்கலாய் அமையும்."

"இதற்கு மேல் நாங்கள் வற்புறுத்த மாட்டோம். காலதேவனே எங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்தி அனுப்புங்கள். அது போதும்."

நால்வரும் காலத்தேவனின் கால்களில் விழுந்து சேவித்தனர்.

கால்த்தேவனின் கால்களில் சக்கரங்கள்.

"வாழ்த்துகள்! கடவுளின் எண்ணம் போல நடக்கட்டும் " என்ற காலதேவன் தனது வீரர்களை அழைத்தார். "இவர்களை நான்காவது வானத்தில் விட்டு வாருங்கள் "

பறக்கும் தட்டு பறந்தது.

நான்காவது வானத்தில் விட்டு விட்டு போனது.

நான்காவது வானம் பழையநிலையில் பளபளத்தது.

மூவரும் நாரைகளாய் மாறினர். நட்டு முதுகில் பிப் 'குதிரை' ஏறிக் கொண்டது.

வானத்துக்கும் பூமிக்கும் ஆன கதவு மறைந்திருந்தது.

முதுகுத்தண்டை ஜில்லிட வைக்கும் ஆபத்துகள் பல நிறைந்த பயணத்தை மீண்டும் தொடர்ந்தனர் நட்டு அண்ட் கோ.

டண்டடன் டடன் டடடன் டன்டன் டா.

O

# 20

***ப***றவை பார்வைக்கு மாயாபுரி தென்பட்டது.

மாயாபுரியின் சுற்றளவு மட்டும் மழையே காணாமல் வரண்டிருந்தது. மாயாபுரியின் சுற்றளவு தாண்டி அனைத்து திசைகளும் பச்சை பசேல் என்று செழுமையாக இருந்தன.

'இதென்ன வினோதம்?' நெற்றி சுருக்கினான் நட்டு.

பிப்புடன் சேர்ந்து மூன்று நாரைகளும் மாயாபுரி எல்லைக்குள் பிரவேசிக்க முய்னறன.

ஷராட்! ஷராட்!

மாயாபுரியின் சுற்றளவை ஒட்டி மின்சார வேலி அமைக்கப் பட்டது போல உயர் அளவு மின்சாரம் பேய்தனமாய் நாரைகளின் மீது பாய்ந்தது.

ஹக்!

"ஆ"

"வீல்"

"அம்மா செத்தேன்."

மூன்று நாரைகளும் சுற்றளவுக்கு வெளியே சிதறி விழுந்தன.

விழுந்த இடத்தில் ஏற்கனவே பல பறவைகளும் மிருகங்களும் மின்சார அதிர்ச்சி பெற்று கருகி இறந்து கிடந்தன.

சில நாட்களே ஆனவை அரைகுறையாய் அழுகி நாறிக் கொண்டிருந்தன.

பல நாட்கள் ஆனவை மக்கி எலும்புக்கூடுகளாய் காட்சி யளித்தன.

"பிப்பு எங்களை காப்பாற்று "

பிப் மின் அதிர்ச்சி பெற்ற நாரைகளை தொட்டது. தொட்டதும் நாரைகள் எழுந்து நின்றன. மந்திரப்பேழை உதவியுடன் நாரைகள் மனித உருவுக்கு மாறின.

பிப் மின் அதிர்ச்சி பாயும் இடத்துக்கு நடந்தது.

மின்சாரம் பாய்வதைத் தொட்டது.

அவ்வளவுதான்...

பச்சைநிற பிப் ரத்தச்சிவப்பு நிற பிப்பானது.

மின்சாரத்தை அள்ளி அள்ளி குடித்தது.

மின்சாரம் குடித்த பிப் பற்பல வர்ணங்களில் மிளிர்ந்தது.

பிப் தனது இடது கையை நீட்டி அதனை வலதுகையால் வெட்டுவதுபோல் பாவனை செய்தது.

உடனே மாயாபுரியை சுற்றிய அனைத்து மின் பாய்ச்சலும் காணாமல் போனது. "ஊருக்குள்ள கொஞ்சமும் பயமில்லாம நடக்கலாம் "

நடந்தனர்.

"கோக் கோக் கொக கோக் " என கூவியபடி கோழிகளும் சேவல்களும் சிதறி ஓடின.

முதலில் ஆர்த்திதான் அந்த அதிசயக்காட்சியைக் கண்டாள்.

"கடவுளே கடவுளே "

"என்னடி புலம்பர?"

"அந்த கோழி சேவல்க மூஞ்சிகளைக் கவனி "

கவனித்துவிட்டு நட்டு அலறித் துள்ளினான்.

காரணம் கோழிகளுக்கும் சேவல்களுக்கும் முகம் மனிதமுகம்.

"இதென்ன லீலா வினோதம்?" வியந்தாள் சக்தி.

"நட்டு? எதுக்கும் அதுக பாஷைல பேசிப்பாரேன் "

நட்டு அதற்கான விசேஷ மாத்திரைகளை விழுங்கிக் கொண்டான். பின் தொண்டையைச் செருமிக் கொண்டு கோழி பாஷையில் பேச ஆரம்பித்தான்.

"கோழி தங்கச்சி சேவல் அண்ணாச்சி என்னாச்சு உங்களுக்கு? உங்களுக்கெல்லாம் ஏன் முகம் மட்டும் மனித முகமாய் இருக்கிறது?"

கோழிகளும் சேவல்களும் விழித்தன. "பெப...பபா... பேப...பபா..."

மனித பாஷையில் பேசியதற்கும் விழித்தன.

வறண்டு வீறல் விட்ட நிலங்களில் அணில்களும் ஓணான்களும், எலிகளும், மரப்பல்லிகளும் காணப்பட்டன.

அவைகளுக்கும் மனிதமுகங்கள்தான்.

அவைகளும் மனித பாஷையோ மிருக பாஷையோ தெரியாமல் விழித்தன.

தொடர்ந்து நடந்தனர்.

தலையே இல்லாமல் வினோத மிருகங்கள். கழுத்துக்குள் தலை புதைந்திருந்தது. புதைந்திருந்த தலையும் மனிதத்தலை.

மனித முகத்துடன் சிங்கங்கள்

மனித முகத்துடன் புலிகள் யானைகள் எருமைகள் பசுக்கள் மான்கள் மயில்கள்

மாயாபுரி முழுக்கத் தேடியும் மருந்துக்குக் கூட மனிதர்கள் இல்லை.

அரண்மனை காலியாக வெறிச்சோடி கிடந்தது.

குதிரை லாயங்களை திறந்து விட்டான் நட்டு. மனித முகத்துடன் குதிரைகள் விரைந்தோடின.

ஏறக்குறைய நான்குமணிநேரம் செலவழித்து மாயாபுரி முழுக்க அலசினர்

"பிப்புக்குட்டி மாயாபுரிக்கு என்ன ஆச்சு? ஏனிந்த அவலம்?"

"கண்டுபிடிச்சிட்டா போச்சு " இடது உள்ளங்கையை தடவி ரகசியமாய் சில காட்சிகளை பார்த்தது. "ஓஹோ அதுதானா கதை?" அங்கலாய்த்தது.

"எங்க கையை காமி பிப்பு?"

"மாட்டேன். சஸ்பென்ஸ். கொஞ்ச நேரம் பொறுத்திரு நட் "

மூவரையும் அழைத்துக்கொண்டு மாயாபுரியின் மையப் பகுதிக்கு விரைந்தது பிப்.

"இங்க என்ன இருந்திருக்கும்னு யூகிக்க முடியுதா நட்?"

கண்களை குறுக்கி ஆராய்ந்தான் நட்டு. "வாவ் கண்டு பிடிச்சிட்டேன் "

"என்ன கண்டுபிடிச்ச?"

"இந்த இடத்தில் மிகப்பெரிய குளம் ஒண்ணு இருந்திருக்கு. சாபமோ என்னமோ மாயாபுரி மழையே காணாம வறண்டு போயிருச்சு. மாயாபுரியோட சேந்து இந்த குளமும் காய்ஞ்சு போச்சு. அரைகுறை ஈரம் கூடிய சதுப்பு நிலமாய் கூட இல்லாமல் முழுமையாக வரண்டிருக்கிறது "

"மிகச்சரி நட் "

"இந்த வரண்ட குளத்துக்கு எங்களை ஏன் அழைத்து வந்தாய் பிப்பு?"

"சிலபல நிமிடங்கள் வேடிக்கை பார் " என்றது பிப். வானத்துக்கு அண்ணாந்தது. இரு கைகளையும் பட்பட் என்று தட்டியது.

"வானத்தில் எங்கு மழை மேகங்கள் இருந்தாலும் உடனே மாயாபுரிக்கு மேலே கூடுங்கள். இது குட்டி சாத்தான்களின் தலைவனின் ஆணை "

வெளிர் நீல நிறமான வானம் உன்மத்தமானது.

கால்களும் தும்பிக்கைகளும் இல்லாத யானைகளாய் மேகங்கள் ஆயிரம் திசைகளிலிருந்தும் மாயாபுரி நோக்கி விரைந்தன.

திரளும் மேகங்கள் மோதிக்கொண்டு பேரொலி கிளப்பின.

மின்னல்கள் ஆலமரஇலை நரம்புகளாய் கிளை விரித்தன.

ஆயிரக்கணக்கான முரசுகள் ஒலித்தது போல் இடி விழுந்தன.

மழைக்குருவிகள் தாழப்பறந்தன.

காற்றில் திடீர் குளிர்மையும் சிலுசிலுப்பும் பரவின.

முதலில் பெரிய பெரிய மழைத்துளிகள் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாய் விழுந்தன.

சில துளிகள் நட்டுவின் முகத்தில் பட்டுத் தெறித்தன.

மழை அடர்ந்தது.

சீரான லயத்துடன் நேர் கோட்டு அம்புகள் கூட்டணியாய் மழை.

பேய்மழை பெருமழை.

காற்று எதுவும் அடிக்காததால் மழைமேகங்கள் எங்கும் நகரவில்லை. மாயாபுரியின் மீதே முழுக்க நங்கூரமிட்டன.

மாயாபுரியின் சுற்றளவு தாண்டிய ஒரு சென்டி மீட்டரிலும் சிறுமழைத்துளியும் படவில்லை.

மழைநீர்படபட மனித முகங்கள் கொண்ட மிருகங்களும் பறவைகளும் ஹீனஸ்வரமாய் அலறி ஓடின.

மழைநீர் மனித முகங்களை கரைத்து அதன்அதன் மிருக முகங்களை திருப்பி கையளித்தது.

சிங்கங்கள் சிங்கங்களாய்...

எறும்புகள் எறும்புகளாய்....

ஐந்தே நிமிட இடைவெளியில் நகரத்தின் அத்தனை மிருகங்களின் முகங்களும் பறவைகளின் முகங்களும் மாறுவது நட்டு அண்ட் கோவுக்கு ஆனந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

உண்மையான முகங்களைத் திரும்ப பெற்ற காட்டு மிருகங்கள் காடு தேடி ஓடின. பறவைகள பறந்தன.

நடப்பதை திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தான் நட்டு.

பிப் மீண்டும் ஆணையிட்டது.

"பெய்யும் மழை முழுக்க இப்போது வரண்ட குளத்தில் பெய்யட்டும் குளம் முன்னிருந்த நீர் அளவை எட்டட்டும் "

குளம் மழை நீரால் நிறைய ஆரம்பித்தது.

சேறும் சகதியும் செம்மண்ணும் கலந்து குளம் கலங்கலாய் காட்சி அளித்தது.

சேற்றுக்குள் குளிர் நிலைத்தூக்கத்திலிருந்த மீன்கள் தூக்கம் கலைந்து இயல்புநிலை மீண்டன. சுவாசம் திரும்பியது. நீரிலிருந்து ஆக்ஸிஜனை பிரித்து மீன்கள் சுவாசிக்க ஆரம்பித்தன.

-கதைக்குள் குறுக்கிட்டான் ராஜ்குமார்.

"வழக்கம் போல ஒரு சந்தேகம் கம்ப்யூட்டர் தாத்தா "

"குளிர்நிலைத் தூக்கம் என்றால் என்னவென்று கேட்கப் போகிறாய். அப்படித்தானே ராஜ்குமார்?"

"ஆமா தாத் "

"சுவாசிக்காமல் நம்மால் எவ்வளவு நேரம் இருக்க முடியும் குழந்தைகளா?

"சில நிமிடங்கள்தான் "

"ஆமாம்.... சில நிமிடங்களுக்கு மேல் நாம் சுவாசிக்காமல் இருந்தால் ஆக்ஸிஜன் கிடைக்காமல் நமது மூளை செத்துப் போகும். அதன்பின் இருதயம் துடிப்பதை நிறுத்தும். தொடர்ந்து முழு உடலும் மரணமடையும். அதே நிலைதான் நீரில் வாழும் மீன்களுக்கும். தண்ணீரிலிருந்து மீன்களை எடுத்து தரையில் போட்டால் சுவாசிக்க முடியாமல் சிறிது நேரத்தில் மீன்கள் செத்துப் போகும். இது பொதுவான நிலை. ஆனால் மீன்களிலும் விலங்குகளிலும் சில விதிவிலக்குகள் உண்டு "

"எப்படி?"

"அணிலில் ஒரு வகையும் ஈல் மீன் வகையும் விதி விலக்கானவை இந்த ஒரு வகை அணில்கள் தங்களின்

செயல்பாட்டை நிறுத்திவிட்டு உணவு சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, இருதய துடிப்பை குறைத்துக் கொண்டு குளிர்நிலைத் தூக்கத்தில் ஆழும். பல மாதங்கள் கழித்து தூக்கத்திலிருந்து எழுந்து சுறுசுறுப் பாகும். அதே மாதிரி ஈல்மீன்கள் நீர்நிலை வெயில் காலத்தில் வற்றிப்போகும் போது சேற்றுக்குள் புதைந்து குளிர்நிலை தூக்கம் கொள்ளும். மீண்டும் மழைக்காலம் வந்து நீர்நிலை நிரம்பினால் ஈல் மீன்கள் தூக்கத்திலிருந்து விடுபட்டு சுறுசுறுப்பாகும் "

"வாவ் வித்தியாசமான தகவல் தாத்தா இது "

"தொடர்ந்து கேளுங்க. பண்டை காலத்தில் முனிவர்கள் குகைகளிலும் புற்றுகளிலும் குளிர்நிலைத்தூக்கத்தில் அமர்ந்து தவம் செய்திருக்கிறார்கள். அப்போது அவர்களது நாடித்துடிப்பு இருபதில் ஒன்றாக குறைகிறது. ஏறக்குறைய பிணம் போல அமர்ந் திருந்திருக்கிறார்கள். மனிதன் சுயமாக தனது நாடித்துடிப்பை குறைக்க தனிபயிற்சி தேவை. இருதயத் துடிப்பு மிகக்குறைவாக உள்ள மிருகங்கள் நீண்ட காலம் வாழ்கின்றன என்று விஞ்ஞானிக்ள கண்டுபிடித்திருக்கிறார்கள் " தொடர்ந்தார் தாத்தா.

"ஓவ் தாத்தா அப்றம் அப்றம்?"

"இப்போது தீவிரமான ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. மனிதனை பல நூறு ஆண்டுகள் குளிர்நிலைத்தூக்கத்தில் ஆழ்த்தி நீண்ட தூரமுள்ள கிரகங்களுக்கு ராக்கட்டில் அனுப்ப முடியுமா என்று?"

புவனா குறுக்கிட்டாள்.

"பேசாம வசந்த்தை குளிர்நிலை தூக்கத்தில் ஆழ்த்தி எதாவது ஒரு நட்சத்திரத்துக்கு அனுப்ச்சிட்டா என்ன?"

"அப்டியா? அனுப்புங்க சந்தோஷமா போய்ட்டு வரேன்" என்றான் வசந்த்.

"வசந்த் டீஸிங்கை குறைச்சுக்க புவனா. அழுதிரப் போரான். நாம கதைக்குள் போவமா?" என்றார் தாத்தா.

"ஓ எஸ் " என்றன குழந்தைகள்.

-இப்போது குளம் முழுதும் மீன்கள் துள்ளி விளையாடின.

பிப்பின் முகம் பிரகாசித்தது.

மந்திரத்தால் ஒரு தூண்டில் வரவழைத்தது.

"நட்டு நான் சொல்வதை நன்கு கவனி. நான் தூண்டில் புழுவாக மாறப் போகிறேன். கொக்கியில் என்னை கோர்த்து குளத்துக்குள் வீசு "

"வீசினால்?"

"வீசு. பின் நடப்பதை நீயே பார்ப்பாய் "

'உய்க் '

பிப் கொழுத்த மண்புழுவாய் மாறியது.

கொக்கியில் புழு கோர்த்து தூண்டிலை குளத்தில் விசிறினான் நட்டு.

தூண்டில் புழு குளத்துக்கு அடியே போனது. புழுவைக் கடிக்க மீன்களுக்குள் பலத்தப் போட்டி.

ஒரே நேரத்தில் ஒரு புழுவுக்காக நூற்றுக்கணக்கான மீன்கள் பேய்தனமாய் சண்டையிட்டுக் கொண்டன

தம் ததம் ததம் ததம் தம் தம்....

O

# 21

கதையில் அவசரமாக குறுக்கிட்டான் கார்த்தி. கேள்வி கேட்க கையை உயர்த்தினான். "என் பங்குக்கு ஒரு கேள்வி தாத்தா "

மலர்ந்தார் தாத்தா. "தாராளமா கேளு கார்த்தி "

"மனுசன் நீர்ல மீன் மாதிரி வாழ முடியுமா?"

"தற்சமயம் இருக்ற உடம்போட ஒரு மனுசன் தண்ணீர்ல உயிர் வாழவே முடியாது "

"பின்ன? மனுச உடம்பு எப்டி மாறுனா வாழலாம் தாத்தா?"

"இது ஒரு நல்ல கேள்வி பய்யா. இப்டித்தான் கேக்கணும். வளர்ற வயசுல உலகத்ல பாக்ற எல்லாமே புதுசா, புதிரா, புதுமையா, வினோதமா தெரியும். 'கிளி ஏன் பச்சையா இருக்கு? கறுப்பா ஏன் இருக்கக்கூடதது?' னு கேள்வி ஏற்படலாம் மனசுல. 'வானத்ல இருக்ற நட்சத்திரங்கள் தவறி பூமி மேல விழுந்திராதா' னு கூட சந்தேகம் வரலாம். 'குரங்கிலிருந்து மனுசன் வந்தான்றீங்க. சரி. மனுசன் மட்டும் மட்டன் சாப்டுறான். ஆனா குரங்கு பூராவும் சைவம்தான் சாப்பிடுது. ஏன்?' அப்டினு கூட நீங்க கேள்வி கேக்க லாம். இப்டி ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நீங்க 'ஏன்?-எதற்கு?-எப்படி?'னு கேள்விகள் கேட்டு அலசிப் பாக்கணும்.. விடியற் காலைல கிழக்கு திசைல உதிக்ற சூரியன் மேற்குல உதிக்கணும்னா என்ன சாத்தியம் உண்டுனு தர்க்கரீதியா ஆராயலாம் "

தான் கேள்வி கேட்டதை தாத்தா பாராட்டுவது பரம சந்தோஷம் கார்த்திக்கு.

தொடர்ந்து பேசினார் தாத்தா.

"வசந்த் நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய ஓர் உயிரினம் சொல் பாப்பம்?"

"ஈஸி கேள்வி. தவளை தாத்தா "

"இன்னொரு உதாரணம்?"

"ஹி ஹி இன்னொரு தவளை-தாத்தா "

"கடிக்ரான். தவளை நீர்ல நீந்தும் போது நீர்ல இருக்ற ஆக்ஸிஜனை சுவாசிச்சுக்குது. அதே தவளை நிலத்ல வசிக்கும் போது காத்ல இருக்ற ஆக்ஸிஜனை சுவாசிச்சுக்குது. இப்படி ஒரே நேரத்தில் நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினத்துக்கு ஆங்கிலத்தில் 'ஆம்பிபியா' எனப் பெயர். மனுசனுக்கும் உடல்ல சிற்சில மாற்றங்களை செஞ்சா அவனும் தவளை மாதிரி நீரிலும் வாழ முடியும் "

"என்னென்ன மாற்றங்கள் தாத்தா?" என்றாள் புவனா.

"மீனுக்கு செவுள்கள் இருக்கிற மாதிரி மனுசனுக்கும் கழுத்ல செவுள்கள் இருக்கணும். நீரில் இருக்ற ஆக்ஸிஜனை பிரிக்கத் தோதாய் கூடுதல் இரு நுரையீரல்கள் ஒவ்வொரு மனுசனுக்கும் இருக்கணும். நீரின் குளிர்மை மனிதனின் உடல் வெப்பத்தை தாக்காது இருக்க உடல் முழுதும் மெழுகு பூச்சு இருக்க வேண்டும். கண், காது, மூக்கு, வாய் வழியே தண்ணீர் உள் புகுந்து விடாமல் இருக்க உறுப்புகளில் ஜவ்வு சல்லடை. நீந்த வசதியாக கைகால் விரல்களுக்கு இடையே வாத்துக் கால் போன்ற ஜவ்வு இணைப்புகள். தண்ணீருக்குள் ஆழம் போகபோக அழுத்தம் அதிகரிக்கும். அந்த அழுத்தம் மனித உடலை நசுக்கும் சிதறடிக்கும் சக்தி வாய்ந்தது. அந்த அழுத்தத்தை சமாளிக்கும். உடல்திறன் வரவேண்டும். இவை அனைத்தும் இருந்தால் மனிதன் தாராளமா நீரில் வாழலாம் " என்றார் தாத்தா.

"ஓஹோ " ரகு.

"நீரில் வாழும் உயிரினங்களின் மாமிசங்களில் கொழுப்பு சத்து மிகக்குறைவு மீன்களின் மாமிசம் வெள்ளை நிறமாக இருக்கும். ஆங்கிலத்தில் 'ஒயிட் மீட்' எனக் கூறுவார்கள். கொழுப்பு சத்து அதிகமாக இருக்கும் ஆடு, மாடுகளின் மாமிசங்கள் சிவப்பு நிறமாக இருக்கும். ஆங்கிலத்தில் 'ரெட் மீட்' எனக் கூறுவார்கள்."

"ஓ " அர்ச்சனா.

"மனிதன் மீன் போல மாற வழி உண்டானு கேட்டீங்க. பதில் சொன்னேன். மனிதனைப் போல பிஹேவ் பண்ற ஒரு மீன் இனத்தைப் பத்தி நீங்க கேக்காமலேயே சொல்ரேன். அது டால்பின் மீன். கடலில் தத்தளிக்கும். மனிதரை காப்பாற்றும் இரக்கக்குணம் கொண்டது டால்பின், மனிதனைப் போல கனவு காணும். டால்பின் மனிதனைப் போல ஒரு பாலூட்டி "

"அப்டின்னா?" கமல்.

"பொதுவா மீன்கள் முட்டை இட்டு குஞ்சு பொறிக்கும் இயல்பு உடையவை. ஆனா டால்பின் நேரடியா குட்டி போட்டு குட்டிகளுக்கு நம்ம அம்மாக்கள் மாதிரி தாய்ப்பால் புகட்டும் தெரியுமா? டால்பின் நிறைய சர்க்கஸ் விளையாட்டு விளையாடும்.. அதுக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் ஜாலியோ ஜாலிதான் "

"கதைக்கு வெளில ரொம்ப தூரம் போய்ட்டீங்க தாத்தா. 'பிப் குட்டி சாத்தான் தூண்டில் புழுவாக மாறி குளத்துக்கு அடியே போகுது. புழுன்னு நினைச்சு பிப்பைக் கடிக்க மீன்களுக்குள் பலத்த போட்டி'னு சொன்னீங்க. அப்றம்? அப்றம் அப்றம்? சொல்லுங்க தாத்தா " என்றாள் புவனா.

மீண்டும் கதைக்குள் பிரவேசித்தார் தாத்தா.

-தூண்டிலைப் பிடித்திருந்த நட்டு மெதுவாக சக்தி, ஆர்த்தியிடம் திரும்பினான்.

"ஏண்டிகளா?"

"உதைப்போம். படுவா. மரியாதையா பேசுரா ஜியாமென்ட்ரி பாக்ஸ் ஸ்கேலு "

"அக்காஸ்! எனக்கொரு திடீர் ஆசை "

"என்ன?"

"இந்த தூண்டிலை பிடிச்சுக்கிட்டு கொஞ்ச நேரம் நில்லுங்க. நான் மீனா மாறி குளத்துக்குள்ள போய் பிப்பு என்ன பண்ணரதுன்னு வேடிக்கை பாத்துட்டு வந்தூர்ரேன் "

சக்தியின் முகத்தில் பயம் படர்ந்தது.

"எங்களை தனியா விட்டுட்டா போரேன்ற. பயமாயிருக் குடா. அதோட பிப் நம்பள தூண்டிலோட இங்கதான் நிக்கச் சொல்லுச்சு. நாம அதிகப்பிரசங்கித்தனம் பண்ணக்கூடாது "

"இது ஒண்ணும் தப்பில்லை அக்காஸ். கொஞ்ச நேரம். ப்ளீஸ் "

"அப்றம் உன் இஷ்டம் ஸ்மால் பிரதர் "

"மீனாகப் போறதுன்னு முடிவு பண்ணிட்டேன். என்ன வகை மீனாக மாற?"

"விலாங்கு மீன்?"

"சீச்சீ அதெல்லாம் ஒரு மீனா? பாம்புக்கு தலையும் மீனுக்கு வாலையும் காட்ற வவ்வா டைப்பு "

"பின்ன? ஜிலேபி கெண்டை?"

"உவ்வே அந்த மீனை எனக்கு பிடிக்கவே பிடிக்காது. எங்க மம்மி அந்த மீன்ல குழம்பு வச்சா சாப்பிடக்கூட மாட்டேன். செமமுள்ளு. ஈறுல உள்வாய்ல குத்தும் "

"வேறென்ன தான்?"

"என் சைஸ்க்கு ஏத்த மீனு... அயிரை மீனாக மாறப்போரேன்."

"தொலை "

"பாத்தீங்களா.. அபசகுனமா பேசுறீங்க?"

"இம். பத்திரமா போய்ட்டு வாங்க குட்டீஸ் "

மந்திரப்பேழை உதவியது.

சொய்ங்க்!

நட்டு அயிரை மீனாக மாறினான். குளத்துக்குள் டைவ் அடித்தான்.

மழை குறைந்திருந்தது.

கரும்மேகங்கள் சற்றே வெள்ளிநிற வெளிச்சம் வாங்கி சாம்பல் நிறம் பூத்திருந்தன. மெல்லிய சாரல் தொடர்ந்தது.

தூண்டில் பலமாக இழுபட்டது.

நீரில் மிதந்த தக்கை சுண்டி சுண்டி குளத்துக்குள் போனது.

தூண்டில் மீதான பிடியை விட்டுவிடாமல் சக்தியும் ஆர்த்தியும் மல்லுக் கட்டினர்.

கலங்கலாய் இருந்த குளம் தெளிந்திருந்தது.

நட்டு அயிரை மீனாய் மாறியதும் சிறிய குளம் சமுத்திரமாய் மலைப்பூட்டியது.

வாலை டிங்டிங் என்று ஆட்டி நீந்தினான்.

திரும்பிய தண்ணீர் திசையெல்லாம் வகை வகையான மீன்கள்.

அட மீன்களில் இத்தனை வகைகளும் நிறங்களும் ஒரே குளத்திலா?

எங்கே பிப்?

துழாவினான்.

தூண்டில் நரம்பும் புழுவும் கண்களுக்கு சிக்கவில்லை.

நட்டுவுக்கு மெதுவாக பயம் படர்ந்தது.

தப்பு பண்ணி விட்டோமோ?

'தனியாக வந்தது முதல் தப்பு. அயிரை மீனாக வடிவெடுத்தது இரண்டாவது தப்பு. மீனின் வடிவத்திற்கேற்ப குளம் எனக்கு மிகப் பெரிதாய் நீண்டுவிட்டது. நீந்தும் வேகமும் குறுகி விட்டது '

நட்டு யோசித்துக் கொண்டிருக்கும் அதே நொடியில்-

தூண்டிலிலில் கோர்க்கப்பட்டிருந்த பிப் தன்னை மொய்க்கும் மீன் கூட்டத்தை ஆராய்ந்தது.

வெள்ளை மீன்கள்

பச்சை மீன்கள்

சிவப்பு மீன்கள்

மஞ்சள் மீன்கள்

பிப்பின் சதையை சிறிது கொறித்த மீன்கள் தடுமாறின. வடிவம் வளைந்து நெளிந்து குழைந்து வீங்கின. குளத்துக்கு வெளியே தூண்டில் பிடித்திருந்த சக்தி ஆர்த்தி முன் போய் மீன்கள் விழுந்தன.

விழுந்தவேகத்தில் உயர்ந்து கைகால்கள் முளைத்து மனிதர்கள் ஆயின.

மனிதர்கள் ஆனதும் அவர்கள் ஆனந்தத்தில் திளைத்தனர்.

"கடவுளே எங்களை மீண்டும் மனிதராக்கியதற்கு நன்றி " கூவியபடி அவரவர் வீடுகளுக்கு ஓடினர்.

நூற்றுக்கணக்கான மீன்கள் கடித்ததால் சதை இழந்த பிப் நொடியில் மீண்டும் சதை வளர்த்துக் கொண்டது.

ஒவ்வொரு முறையும் நூற்றுக்கணக்கான மீன்கள் பிப்பைக் கடித்தவுடன் குளத்துக்கு வெளியே வந்து விழுந்து மனிதராயின.

மனிதரானதும் தத்தம் குடும்பத்து அங்கத்தினர்களை தேடினர்.

சிலருக்கு மனைவி மகன் மகள்கள் கிடைத்தனர்.

சிலருக்கு கிடைக்கவில்லை.

கிடைத்தவர்கள் புதிய மகிழ்ச்சி கொண்டனர்.

கிடைக்காதவர்கள் புதிய கவலை கொண்டனர்.

"எனது மனைவி மக்கள் இல்லையென்றால் எனக்கு மட்டும் மீண்டும் மனித உரு எதற்கு?"

அடுத்த அரைமணி நேரத்தில் மாயாபுரியின் ஆயிரக் கணக்கான குடிமக்கள் மனித உருவம் மீண்டனர்.

வெறிச்சோடியிருந்த, மிருகங்கள் மட்டும் நடமாடிய மாயாபுரி மீண்டும் தனது குடிமக்கள் வருகையால் புத்துயிர் பெற்றது.

பெண்டிர் தத்தம் வீடுகளை சுத்தம் செய்ய ஆரம்பித்தனர். சாணம் வைத்து தரைகளை மெழுகினர்.

நகரம் முழுதும் புதிதாய் பூத்திருந்த மலர்கள் நறுமணம் பரப்பின.

தொடர்ந்து மீன்கள் வெளியே விழுந்து மனிதராகிக் கொண்டிருந்தன.

-நட்டு நீந்தி நீந்தி களைத்துப் போயிருந்தான். நீரில் மீன்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே போவது கண்கூடாய் தெரிந்தது.

இன்னும் பிப் எங்கே என்று தெரியவில்லையே?

-பிப் உற்சாகமாய் தனது பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தது.

போட்டி போட்டுக்கொண்டு வந்து கடிக்கும் மீன்களின் எந்த அடையாளத்தையோ பிப் ஆர்வமாய் தேடியது.

எங்கே? எங்கே?

'அந்த தங்க வெல்வெட் வானவில் நிற மீன் எங்கே?'

தூண்டில் நரம்புடன் சேர்ந்து நீரின் அடியில் நகர்ந்தது.

'இப்போது குளத்தில் தான் தேடும் மீனைத்தவிர வேறெந்த மீனும் இருப்பதாகத் தெரியவில்லையே' என கவலையுற்றது பிப்.

-நட்டு முழுக்க களைத்திருந்தான்.

'போதும் இந்த விபரீத விளையாட்டு... என்னைக்காணாமல் சக்தியும் ஆர்த்தியும் துடித்துக் கொண்டு இருப்பார்கள் மேலும் பிப் கரைக்கு வந்த என்னை வசை பாடுகிறதோ என்னவோ?'

திரும்பி கரைக்கு நீந்த ஆரம்பித்தான்.

அப்போதுதான் அது நடந்தது.

ஒரு பொந்துக்குள் கன்னங்கறுத்த ஒரு கொடுமையான நீண்ட ஜந்து ஒளிந்திருந்தது.

பேய்தனமாய் அது அயிரைமீன் மீது பாய்ந்தது.

ரம்பம் போன்ற பற்கள்.

ரத்தநிறக்கண்கள்.

நட்டு பாய்ந்து பறந்தோடினான்.

ஆனால்-

ஆனால்-

அந்த ஜந்து எட்டு கால் பாய்ச்சலில் நீந்தி நட்டுவை 'கபக்' என்று விழுங்கியது.

வாய்க்குள் போகும்போதே நட்டு கதறினான்.

"பிப்பு சக்தீ ஆர்த்தி " விளித்தான். "என்னைக் காப்பாத்துங்க."

அவனின் அலறல் அந்த விபரீதத்தின் வாய்க்குள்ளேயே எதிரொலித்து அடங்கியது.

நட்டுவை விழுங்கி மிகப்பெரிதாய் ஏப்பமிட்டபடி அந்த ஜந்து மீண்டும் தனது பொந்துக்குள் பதுங்கிக் கொண்டது

நட்டுக்கு நேர்ந்த ஆபத்து உணராமல் இன்னுமே வெல்வெட் மீனை வலை வீசி தேடிக் கொண்டிருந்தது பிப்

சக்தியும் ஆர்த்தியும் அழ ஆரம்பித்தனர்.

O

# 22

கதையில் ரகு குறுக்கிட்டான். "ஒரு கேள்வி தாத்தா. குளங்களில் பொந்துகள் இருக்குமா? அதில் எந்த மாதிரி ஜந்துகள் வசிக்கும்?"

தாத்தா பதில் கூற ஆரம்பித்தார். "ஒரு இடத்தில் தேங்காது ஓடிக்கொண்டிருக்கும் நதியின் நீர் சுத்தமாக இருக்கும். காரணம் நதிநீர் காற்றிலுள்ள ஆக்ஸிஜனை உறிஞ்சிக் கொண்டு அசுத்தங் களை அகற்றிக் கொள்ளும். ஆனால் குளத்தில் நீர் சேறும் சகதியும் கொண்டு கலங்கலாய் காணப்படும். நீர் மட்டத்தில் நிறைய நீர் தாவரங்கள் பரவி இருக்கும். குளத்தில் நிறைய மீன்கள் வசித்தாலும் விலாங்கு மீன்கள் பகலில் சூரியவெளிச்சத்தில் நடமாடாது. இரவில் தான் பொந்துகளை விட்டு வெளியே வந்து இரை தேடும்."

"ஊ லலா " என்றாள் புவனா

"இரவில் மட்டுமே நடமாடும் உயிரினங்கள் சிலவற்றைக் கூறுங்கள் பார்ப்போம் "

"பூனை " என்றான் ராஜ்குமார்.

"ஆந்தை " என்றாள் அர்ச்சனா.

"வவ்வால் " என்றாள் ஹிமஜா

"குரங்கு குரங்கு குரங்கு " என்றான் வசந்த்.

அர்ச்சனா எரிச்சலடைந்தாள். "உன்னை வச்சு மத்தக் குரங்குளை தவறா எடை போடாதே "

தாத்தா ரகுவிடம் திரும்பினார். "ரகு குளங்களில் இருக்கும் பொந்துகள் பற்றியும் அதில் வசிக்கும் ஜந்துகள் பற்றியும் என்ன காரணத்துக்காக கேட்ட?"

"இல்ல... கதைல பொந்துல வசிக்கும் ஒரு ஜந்து நட்டுவை முழுங்கிட்டதாச் சொன்னீங்க... ஆனா அது எந்த வகை ஜந்துனு நீங்க விவரிக்கல "

"ஓகே கதைக்குள் போவம் " கதையைத் தொடர்ந்தார் தாத்தா.

-நட்டுவை விழுங்கின ஜந்து விலாங்கு மீன் போல நீளமாய் இருந்தது. ஆனால் உடல் முழுவதும் மலைப்பாம்புக்கு இருப்பது போல மஞ்சள் நீலக்கோடுகள் நிறைந்திருந்தன. வாயில் சிங்கம் போல் கூரிய பற்கள். தலையில் இரு கொம்புகள் மொத்தத்தில் ஒரே ஜந்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மிருகங்களின் குணங்கள் விரவிக் கிடந்தன.

நட்டு அந்த ஜந்துவின் தொண்டைக்குள் சறுக்கிக் கொண்டே போனான்.

ரத்த நிற ஜவ்வுப்பொருள் கொண்ட சறுக்குப்பாதை.

நட்டு சாமர் சால்ட் அடித்தபடி சறுக்கினான்.

ஜந்துவின் தொண்டைப் பகுதியில் அமிலம் சுரந்து கொண்டிருந்தது.

அது அயிரை மீனாய் இருக்கும் நட்டுவின் உடலை அரிக்க ஆரம்பித்தது.

அலறினான் நட்டு.

தொடர்ந்து அதல பாதாளத்தில் சறுக்கிக்கொண்டே போய் ஜந்துவின் வயிற்றில் போய் விழுந்தான்.

வயிறா அது?

விதவிதமான அமிலங்கள் சுரந்து புகைந்து கொண்டிருந்தன.

தவிர ஏற்கனவே அந்த ஜந்து விழுங்கிய ஏராளமான மீன்கள் குவியலாய் குவிந்து கிடந்தன.

அந்தக்குவியலில் ஒரு தங்க வெல்வெட் மீனும் கிடந்தது.

நட்டு தனது மந்திரப்பேழை உதவியுடன் மனித உருவத்துக்கு மாறி ஜந்துவின் வயிற்றிலிருந்து தப்பிக்க விரும்பினான்.

அயிரை மீனாக மாறியதால் மந்திரப்பேழையின் அளவு கடுகாய் சிறுத்து மீன் உடலுடன் ஒட்டியிருந்தது.

நட்டுவின் முயற்சி பலிக்கும் முன் மயங்கி மீன் குவியலில் இணைந்தான்.

பிப்புக்கு அவநம்பிக்கை பூத்தது.

இந்தக்குளத்தில் தங்க வெலவெட் மீன் இல்லவே இல்லை போலும்

நீண்ட நேரம் தூண்டிலுடன் மூன்று வாண்டுகளை விட்டு விட்டு வந்திருக்கிறேனே.... அவர்களுக்கு ஏதாவது அசம்பாவிதம்?

யோசிக்க யோசிக்க பயம் பூத்தது.

பிப் உடனே ஒரு மந்திரத்தை முணுமுணுத்தது.

சிட்டாங்

பிப் உருமாறி குளத்துக்கு வெளியே பறந்தது. சக்தி, ஆர்த்திக்கு முன் வந்து குதித்தது. பிப்பை பார்த்ததும் சக்தி ஆர்த்தி தூண்டிலை தவற விட்டனர். பிப்போ நட்டுவைக் காணாது பதறியது.

"நட் எங்கே?"

"நாங்களும் தான் கேட்கிறோம் நட்டு எங்கே பிப்பு?"

"நட் எங்கேயா? ஏதோ விபரீதம் நடந்துள்ளது "

"பிப்பு உன்னைத் தேடித்தான் நட்டுஅயிரை மீனாக மாறி குளத்துக்குள் குதித்தான் "

"ஏன் அனுமதிச்சீங்க?"

"நாங்க சொல்றத அவன் கேட்டாத்தானே?"

"அவன் போய் எவ்வளவு நாழி ஆகுது?"

"நீ போன கொஞ்ச நேரத்ல போனான் "

"ஹ. நீருக்குள் ஆயிரக்கணக்கான மீன்களை சந்திச்சேன். ஆனா நட்டை பார்க்கலையே..."

"புலம்பி நிக்காதே பிப்பு " சக்தி.

"உடனே உனது மந்திரக்கையில் மை தடவி நட்டு உள்ள இடத்தை கண்டுபிடி "

"ஆமாமா "

"கேக்கணும்னு நினைச்சம். நீ தூண்டில் புழு உருவெடுத்து குளத்துக்குள் போனது ஏன்?"

"உங்களுக்கே பாதி புரிஞ்சிருக்கும். குளத்தின் சேத்ல மீன் வடிவுல புதைஞ்சிருந்த மாயாபுரி மக்களை ஒரு சாபத்திலிருந்து விலக்கி மீண்டும் மனிதராக்கினேன். எல்லாரையும் மனிதராக்க முடிஞ்ச என்னால மாயாபுரியின் மன்னர் வீரசேனனை மட்டும் கண்டுபிடிக்க முடியல. அவர் தங்க வெல்வெட் மீனாய் குளத்துக்குள் இருப்பதாக ஞானதிருஷ்டி மூலம் உணர்ந்தேன். ஆனால் குளத்தில் தேடியபோது அவர் கிடைக்கவில்லை. மொத்தத்தில் எனக்கு இரட்டைத் தோல்வி. நட்டுவையும் காணவில்லை வீரசேனனையும் காணவில்லை "

"ஏதாவது உடனே செய் "

பிப் தனது இடது உள்ளங்கையை தடவி பார்த்தது.

ஐந்துவின் வயிற்றுக்குள் நட்டுவும் மன்னரும் அமிலம் கரைக்க மயக்கமாய் கிடந்தனர்.

பிப் திகிலுற்றது.

வெள்ளி மீனாய் மாறி குளத்துக்குள் குதித்தது.

சரசரப்பாய் நீந்தியது.

ஒவ்வொரு பொந்தாய் துழாவியது.

ஏறக்குறைய பதினைந்து பொந்துகளில் தேடி சலித்தது. அடுத்தப்பொந்தில் ஒளிந்திருந்த ஐந்து வெள்ளி மீனை பார்த்து விட்டது.

வெள்ளி மீனிலிருந்து கண்களை கூச வைக்கும் பிரகாசம் நீர் முழுவதும் பரவியது.

ஆர்வமில்லாமல் ஐந்து வெள்ளி மீனை பார்த்தது.

வெள்ளி மீன் நரித்தனமாய் திட்டமிட்டது.

ஐந்துவின் வாய்க்கு எதிரே விதவிதமாய நடனமாடியது.

விழுங்காமல் விரட்டும் ஐந்துவை சீண்டியது.

கோபம் ஐந்துவுக்கு தலைக்கேறியது.

வெள்ளி மீனை பிடிக்க ஐந்து பாய்ந்தது. வெள்ளி மீன் வடிவிலிருந்த பிப்புக்கு படுபயங்கர உற்காசம் தொற்றிக் கொண்டது.

சிக்காமல் போக்கு காட்ட ஆரம்பித்தது.

இப்படி எந்த இரையும் நெடுநேரம் விளையாட்டுக் காட்டியதில்லை.

ஐந்துவுக்கு பயம் எழுந்தது.

'மந்திரவாதி அண்டாரகளின் எச்சரிக்கையை மீறு கிறோமோ? இது சாதாரண வெள்ளி மீன் அல்ல. என்னை விட சக்தி வாய்ந்த ஏதோ ஒரு மாய மனிதன் '

மறுமனம் பயத்தை உதறியது.

'சேச்சே இது வீண்பயம் தங்கவெல்வெட் மீனுக்கு துணையாக வெள்ளி மீனையும் விழுங்க வேண்டியதுதான் '

இதற்கு மேலும் தாமதிக்காமல் வெள்ளி மீன் ஐந்துவுக்கு இரையானது.

'கபக் '

மீனை லட்டு போல் ஐந்து விழுங்கியது.

பிப்பு தொண்டையில் சறுக்கியது. வயிற்றில் போய் விழுந்தது.

விழுந்ததும் பிப் தனது நிஜ வடிவத்துக்கு மாறியது.

குவிந்து கிடந்த மீன் கூட்டத்தில் நட்டுவையும் வெல்வெட் மீனையும் தேடியது.

வயிற்றுக்குள் பரவிக்கொண்டிருக்கும் அமிலத்துக்கு சமமாக காரத்தன்மை உள்ள திரவத்தை உற்பத்தி செய்தது பிப்பு.

அவ்வளவுதான் அமிலத்தின் சக்தி நீர்த்தது.

-கதையில் குறுக்கிட்டான் சரண்.

"அமிலம் என்றால் என்ன? காரம் என்றால் என்ன தாத்தா?"

"சொல்லிட்டாப் போச்சு... சரண் 'அமிலம்' என்பது லத்தீன் வார்த்தை. பொதுவாக அமிலங்கள் புளிப்பு சுவை கொண்டவை. இருவகையான அமிலங்கள் உள்ளன. வினிகர், எலுமிச்சை, ஆரஞ்சுப்பழம், திராட்சை பழம், புளி, தக்காளி, ஆப்பிள், பால், வெண்ணெய் போன்ற உணவுப்பொருட்களில் ஒரு வகை அமிலம் உண்டு. இது ஆபத்து இல்லாததது.

"பூமிலயிருந்து வெட்டி எடுக்கப்படும் தாதுப் பொருட்களில் ஹைடிரோ குளோரிக் அமிலம், சல்பூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் போன்றவை கிடைக்கின்றன இவை இரும்பையே அரிக்கும் பலம் கொண்டவை."

"நமது வாயிலும் இரைப்பையிலும் கூட அமிலங்கள் சுரக்கின்றன. இவை நாம் சாப்பிடும் உணவுப் பொருட்கள் ஜீரணிக்க உதவுகின்றன...."

"எங்களுக்கு அமிலம் பத்தி புரியுற மாதிரி சொன்னீங்க தாத்தா. சரி. காரம் பத்தியும் சொல்லுங்களேன் " என்றாள் அர்ச்சனா.

"காரம் தொடுவதற்கு சோப் திரவத்தைத் தொடுவது மாதிரி இருக்கும். காரம் கசப்பான சுவை கொண்டது. மணம் இல்லாததது. பொதுவாக நிறமும் இல்லாததது "

"காரத்துக்கு சில உதாரணங்கள் சொல்லுங்க தாத்தா" தேஜா.

"சமையல் சோடா, சுண்ணாம்பு."

"வேற?"

"குடிதண்ணீர்ல கிருமியை சாகடிக்க போடுவாங்களே பிளீச்சிங் பவுடர் அது கூட காரம் தான் "

"அமிலமும் காரமும் ஒண்ணு சேர்ந்தா என்னாகும் தாத்?"

"உப்பும் நீரும் உருவாகும் "

"நீர் அமிலமா, காரமா?" என்றான் வசந்த்

"நீர் இரண்டும் அல்ல நடுநிலைமை ஆனது "

"ஒரு திரவம் அமிலமா, காரமான்னு தொடாம எப்டி தெரிஞ்சுக்கிரது?" என வினவினான் ராஜ்குமார்.

"பரிசோதனைக் கூடங்களில் இரு வர்ணங்களில் லிட்மஸ் தாள் இருக்கும். சிவப்பு லிட்மஸ் தாள். நீல லிட்மஸ்தாள். அமிலம் நீல லிட்மஸ் தாளை சிவப்பாக்கும். காரம் சிவப்பு லிட்மஸ்தாளை நீலமாக்கும் "

"எதுக்கு தாளை வீணா தேடனும்? குடிச்சுப்பாத்தா தெரியுது. அமிலம்னா புளிப்பா இருக்கும். காரம்னா வழுவழுன்னு இருக்கும் " என்றான் வசந்த்.

"மடையா அமிலத்தைக் குடிச்சா குடல் வெந்து செத்துப் போயிருவ!"

"நம்ம வயித்ல சுரக்ற அமிலம் நம்மைக் கொல்ல மாட்டிங்குதே!"

"வயிற்றில் சுரக்கும் அமிலத்தின் சக்தி குறைவு. ஆனால் நாம் நேரத்துக்கு சாப்பிடாவிட்டால் வயிற்றை அமிலம் அரித்து 'அல்சர்' வருகிறது."

"ஓஹோ."

"சில வகை குளவிகளின் விஷங்களில் அமிலத்தன்மை உள்ளது. இவை நம்மைக் கொட்டி விட்டால் கொட்டின இடம் கடுகடுக்கும். உடனே சுண்ணாம்பு எனப்படும் காரத்தை கடிவாயில் தடவினால் விஷத்தின் அமிலத்தன்மை நீர்த்து வலி போகும்."

"மீண்டும் கதைக்குள் போங்க தாத்தா " என்றான் பிரவீன்.

-பிப் மயங்கிக் கிடக்கும் நட்டுவையும் வெல்வெட் மீனையும் பார்த்துவிட்டது. இருமீனையும் எடுத்து தனது நாக்குக்கு அடியில் அதக்கிக் கொண்டது பிப்.

வெகுவேகமாக மந்திரத்தை முணுமுணுக்க ஆரம்பித்தது.

"ஜியாலக்கடி அக்குவா

டமாலக்கடி பக்குவா

சிலாங்

பலாங்

உச்சா உச்சா உச்சா உஷ் உஷ் "

மந்திரங்களை முணுமுணுத்தும் ஒன்றும் ஆகவில்லை. திகைந்தது பிப். ஐந்து தனது தலைபகுதியை வளைத்து தனது வயிற்றப்பகுதியில் நின்றிருக்கும் பிப்பை கடித்துக் குதற ஆரம்பித்தது.

பிப் ஜந்துவின் கடிக்குள் சிக்காமல் விளையாட்டுக் காட்டியது.

'எந்த மந்திரமும் பலிக்காதபோது கடைசி உபாயமாக இதனைக்கூறு' என ஒரு மந்திரத்தை சொல்லிக் கொடுத்திருந்தாள் சூனியக்காரக்கிழவி.

ஜந்துவின் வயிற்றுப்பகுதி கிழிந்து இரத்தம் பெருக்கெடுத் தோடியது.

"பிரபஞ்சாஸ் உட் படபடபட பட் "

சொல்லி முடித்த நொடி-

அந்த படுபயங்கர ஜந்து வெடித்துச் சிதறியது.

பிப் அடிநாக்கில் அயிரை, வெல்வெட் மீன்களுடன் பறந்து குளத்துக்கு வெளியே சீறியது

சக்தி ஆர்த்தி முன் இருமீன்களை உமிழ்ந்து மந்திரங்களை உச்சரித்தது பிப்

நட்டு மனித உருவம் மீண்டான்.

வெல்வெட் மீனியிலிருந்தும் ஒரு மனித உருவம் தோன்றியது

அது மாயாபுரியின் மன்னர் வீரசேனன்.

O


12·10

# 23

**ம**னித உருவத்துக்கு மாறிய மன்னர் வீரசேனன் ஐம்பது வயதைத் தாண்டி இருந்தார்.

கனத்த உயர்ந்த உருவம்.

தலையில் முத்துக்களும் மாணிக்கமும் மரகதமும் பதிக்கப்பட்ட தங்க கிரீடம். கோவைப்பழமாய் சிவந்த கண்கள். குடைமிளகாய் போன்ற மூக்கு. நெய்தடவி போஷனை செய்யப் பட்ட முறுக்குமீசை. கழுத்தில் மணிமாலைகள். புஜத்திலும் மணிக்கட்டிலும் தங்க ஆபரணங்கள். இடுப்பில் உறையுடன் வாள். கணுக்கால் வரை இறங்கிய இடுப்பு வஸ்திரம். கால்களில் தண்டை.

குனிந்து நால்வரையும் வணங்கினார். அவரது கண்கள் ஒரு முறை நகரத்தின் அனைத்து திசைகளையும் சுற்றிச் சுழன்று கவனித்தன. கண்களில் ஆனந்தக்கண்ணீர்.

குளம் இருந்த இடத்தில் தெப்பக்குளம். அதனைச் சுற்றி கோயில்களும் தோன்றிள.

"நான் காண்பது கனவா, நிஜமா? அண்டாரகன் சாபத்தால் மிருகங்கள் நகருக்குள் புகுந்தன மனிதர்கள் மீன்களாகி சேற்றில் புதைந்தனர் நகரம் பாலைவனம் ஆனது. ஆனால் அனைத்தும் இத்தனைக் குறுகிய இடைவெளியில் மாறி மீண்டும் மாயாபுரியாய் புத்துயிர் பெற்றது அதிசயத்திலும் அதிசயம். இந்த மாயாஜாலத்தை சாதித்த நீங்கள் மூவரும் தெய்வீகக் குழந்தைகள் " வீரசேனன் மனதாரப்பாராட்டிக் கொண்டிருந்தார்.

தூரத்தில் மேளதாள சப்தம் கேட்டது.

உருமி மேளம்.

நையாண்டி மேளம்.

மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், கரகாட்டம் எல்லாம் வர மேளதானம் தொடர்ந்தது.

ஆட்டங்களுக்கு நடுவே-

வீரசேனனின் துணைவியார் பேரரசி ஆரியமாலா காணப்பட்டார்.

மந்திரிகள், தளபதிகள், அரண்மனை வைத்தியர், பொக்கிஷ காப்பாளர், விதூஷகர் இதர இதரர் ராணியாருடன் நடந்து வந்து கொண்டிருந்தனர்.

அவர்களுக்குப் பின்னே மாயாபுரியின் மக்கள் அணி வகுத்திருந்தனர்.

-கதைக்குள் வசந்த் குறுக்கிட்டான்.

"விதூஷகர் என்றால் யார் தாத்தா?"

"ஆளுக்கு ஏத்த கேள்விடா வசந்த் சர்க்கஸ்ல எல்லாம் கோமாளிகள் பாத்திருப்ப. சினிமாக்கள்ல எல்லாம் கவுண்டமணி, செந்தில், விவேக், சார்லி, வெண்ணிற ஆடை மூர்த்தி, வடிவேலு குமரிமுத்து, ஜனகராஜ் போன்ற காமெடியன்கள் பாத்திருப்ப. இவங்க வேலை மக்களைச் சிரிக்க வைக்றது தான் "

"ஓகே. கதைக்குள் போங்க தாத்தா " பச்சைக்கொடி காட்டினான் வசந்த்

-வரும் கூட்டத்தில் பட்டத்து யானைகளும் குதிரைகளும் கலந்திருந்தன.

பிப் உருமி மேளத்தை மிகமிக ரசித்தது.

வந்தவர்கள் மன்னர் வீரசேனனை வணங்கினர்

"என்னை வணங்காதீர்கள். நான் சாதாரணன். இதோ இந்த தெய்வீகக் குழந்தைகளை வணங்குங்கள் வாழ்த்துங்கள் " உணர்ச்சி வசப்பட்டார்.

அரண்மனைக் கவிஞர் வாழ்த்துப்பா பாட ஆரம்பித்தார்.

நட்டுஅண்ட் கோவுக்கு அர்த்தம் புரியவில்லை.

இருந்தாலும் மரியாதைக்காக கைதட்டினர்.

பிப் மந்திரத்தால் பொற்கிழி வரவழைத்து கவிஞருக்கு பரிசளித்தது.

நட்டு அரண்மனை விதூஷகரை இரகசியமாய் சீண்டினான்.

"வாழைப்பழ ஜோக் தெரியுமா உனக்கு- பிரதர்?"

"தெரியாது "

"ரக்பி ஜோக்ஸ்?"

"கேட்பது அர்த்தமாகவில்லை?"

"குட்டிகரணம் போடத்தெரியுமா?"

"தெரியாது "

"டி.டி.ல வர்ற கிச்சா மாதிரி சிரிக்கத்தெரியுமா?"

"புரியவில்லை "

"கோமுட்டித்தலையா பப்ளிமாஸ் தலையா ஜிலேபி தலையா மணிபர்ஸ் வாயா டைட்டானிக் வாயா அப்டி இப்டின்னு வாய்க்கு வந்தபடி கண்ல மாட்றவங்களை திட்டத் தெரியுமா- ஓமப்பொடி பிரதர் "

"பேசுவது ஒன்றுமே புரியவில்லை "

"போடா பெட்ரோமாக்ஸ் தலையா நீ விதூஷகனா இருப்பது ஜாலபுரிக்கு கிரிமினல் வேஸ்ட் "

விதூஷகனுக்கு நட்டு பேசுவது மேலும் புரிபடாமல் அழுகை வந்தது.

நட்டுவை சக்தியும் ஆர்த்தியும் அடக்கினர். "இங்கயும் வந்து உன் வேலையக் காட்றியா பொடியா? இந்த விதூஷகன் வயித்ல மண்ண அள்ளிப் போட்டுர்ராத "

நட்டு சிரித்தான்.

பட்டத்துக்குதிரை மன்னரின் முன் வந்து நின்றது.

தனது எஜமானனை பார்த்த சந்தோஷத்தில் கனைத்தது.

வீரசேனன் தனது குதிரை மீது ஏறும் முன்பு தனது தளபதியிடம் திரும்பினார்.

"இவர்கள் நமது சிறப்பு விருந்தாளிகள். இவர்களின் சாகசத்தால்தான் நாம் உயிர்த்தோம். நாம் இவர்களுக்கு உரிய மரியாதை செலுத்த வேண்டும். இன்னும் ஒரு வாரத்துக்கு அரசு விழாதான். வாணவேடிக்கைகள் உண்டு. ஆடல் பாடல் கொண்டாட்டங்கள் உண்டு. மொத்தத்தில் இவர்களை நமது கேளிக்கைகளால் கவுரவப்படுத்த வேண்டும் "

"ஆகட்டும். அப்படியே செய்கிறேன் மன்னா "

"நான் பட்டத்துக் குதிரையில் ஏற வேண்டும் என்றால் இவர்கள் பல்லக்குகளில் ஏற வேண்டும். இது அரசகட்டளை "

-கதையில் குறுக்கிட்டான் ரகு.

"பல்லக்கு பற்றிக் கொஞ்சம் விவரித்துக் சொல்லுங்களேன் தாத்தா "

"சொல்றேன் சொல்றேன். கடந்த 150 வருடங்களில்தான் போக்குவரத்தில் பெரும்புரட்சி நிகழ்ந்தது குழந்தைகளா! நவீனப்படுத்தப்பட்ட கப்பல், சைக்கிள், புகைவண்டி, ட்ராம்வண்டி, ஆகாயவிமானம், நீர் மூழ்கிக்கப்பல், ஜெட் விமானம், ராக்கட், மின்சாரத்தால் இயங்கும் வாகனங்கள் படிப்படியாக மக்கள் புழக்கத்துக்கு வந்தன. ராஜாராணி காலத்தில் மின்சாரம் ஏது? பெட்ரோல் ஏது? போக்குவரத்துக்கு குதிரைகள், யானைகள் உபயோகப்பட்டன. தவிர மனிதர்களை மனிதர்களே தூக்கும் பல்லக்குகள் புழங்கின. பல்லக்குகளில் ஏழை எளிய மக்கள் ஏறிவர முடியாது. பல்லக்கு உள்ளே அதிகபட்சம் இருவர் உட்கார வாய்ப்பு. இருபுறமும் திரைச்சீலை. முன்னே இருவர் தூக்குவர். பின்னே இருவர் தூக்குவர். ஏதாவது பாடிக்கொண்டே பல்லக்குத் தூக்கிகள் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு போவார்கள்..."

"ஓஹோ "

"மீண்டும் கதைக்குள் போவம் " என்றார் தாத்தா.

-நட்டு அண்டகோ பிப்புடன் பல்லக்கில் ஏறிக் கொண்டனர்.

மீண்டும் உருமி மேளம் முழங்கியது.

ஊர்வலம் அரண்மனைக்குள் பிரவேசித்தது.

தாழ்த்தப்பட்ட பல்லக்கிலிருந்து நால்வரும் இறங்கினர்.

உள்ளே நடந்தனர்.

வீரசேனன் தனது செங்கோலை நட்டுவிடம் நீட்டினார். "நீங்கள் நால்வரும் புறப்படும் வரை நீங்களே செங்கோல் ஏந்தி அரசாட்சி நடத்தித்தர வேண்டும்..."

சக்தி புன்னகைத்தாள்.

"இதனை நாங்கள் ஏற்றுக்கொள்வது தவறு. இது எங்களுக்குத் தகுதியான மரியாதை அல்ல "

"நீங்கள் மிகவும் உணர்ச்சி வசப்படுகிறீர்கள் மன்னா. மாயாபுரி உயிர்த்ததற்கு எங்கள் மந்திரப்பேழையும் இந்த 'பிப்' எனும் குட்டிச்சாத்தானும்தான் காரணம். இத்தனை நாழிகளில் நீங்கள் எங்களது நாம கரணத்தையும் இருப்பிடத்தையும் விசாரிக்கவே இல்லை..."

"சரி சொல்லுங்கள் உங்களைப்பற்றி "

"நாங்கள் உங்களுக்கு ஆயிரக்கணக்கான வருடங்கள் பிந்தியவர்கள். எங்கள் காலத்தில் ராஜாராணி ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு விட்டது. மக்கள் ஆட்சி முறை வந்துவிட்டது. இவன் பெயர் நடராஜ். என் பெயர் ஆர்த்தி. இவள் பெயர் சக்தி, இது பெயர் பிப் எனும் குட்டி சாத்தான் எங்களது பெயர் கூட உங்களுக்கு வினோதமாக இருக்கும். நாங்கள் ஒரு மந்திரப்பேழை உதவியால் காலத்தின் முன்னோக்கிய பயணம் வந்திருக்கிறோம். ஜாலபுரி இளவரசியை மந்திரவாதி அண்டாரகள் கடத்திச் சென்று விட்டான். அண்டாரகன் பற்றிய செய்தி ஜாலபுரியில் கிடைக்கும் என்றார்கள். உங்களை உயிர்ப்பித்தோம் இப்போது விரிவாக பேசுகிறோம் " என்றாள் ஆர்த்தி.

மந்திரவாதி அண்டாரகனின் பெயரை ஆர்த்தி உச்சரித்ததும் மன்னர் வீரசேனனின் முகம் இருண்டது.

"நாங்களும் மந்திரவாதி அண்டாரகனின் கொடுஞ்செயலால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள்.."

"எப்படி?"

"மந்திரவாதி அண்டாரகன் பலசமயம் எங்கள் ஜாலபுரியின் எல்லைப்புறத்தில் வந்து தங்குவான். மிகவும் பொல்லாதவன். அதனால அவனுக்குப் பயந்து அவன் வரும் இபோதெல்லாம் அவனுக்கு பணிவிடைகள் செய்வோம். யாகங்கள் பூஜைகள் நடத்த ஏதோதோ கேட்பான். நாங்களும் சளைக்காமல் வழங்கு வோம்."

"சரி "

"இம்முறை வந்தான். பொதுவாகவே அவன் பெண்கள் விஷயத்தில் பலவீனமானவன், என்பதனை நன்கு அறிவோம். எனக்கும் அரசி ஆரியமாலாவுக்கும் பிறந்த இளவரசி கயல்விழி ஒரு பேரழகி. அவளைத்திருமணம் செய்ய 156தேசங்களை சேர்ந்த ராஜகுமாரர்கள் போட்டிக் போட்டார்கள். கயல்விழிக்காக போர் தொடுக்கவும் சில அரசர்கள் ஆயத்தமானார்கள். யோசித்தேன். ஒரு முடிவு எடுத்தேன். ஆடம்பரமாக சுயம்வரம் நடத்தத் தீர்மானித்தேன் " என்றார் வீரசேனன்.

-கதையில் குறுக்கிட்டாள் புவனா.

"சுயம்வரம்னா என்ன தாத்தா?"

" 'தினமலர்' ல வரும் 'வாங்கமாட்டோம் வரதட்சணை' பகுதி அப்போது இல்லை. ஏன்னா அப்ப ந்யூஸ் பேப்பரே கிடையாது. ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு செய்தி அனுப்ப புறா பறக்கவிட்டனர். முரசு அறைந்தனர். குதிரை வீரன் அனுப்பினர். இளவரசிகளுக்கு மாப்பிள்ளை பார்ப்பது என்றால் சாதாரண காரியமா? ஆகவே ஒரு குறிப்பிட்ட தேதியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எல்லா நாட்டு இளவரசர்களையும் வரவழைத்து விடுவார்கள் இளவரசி கையில் மணமாலை. ஒவ்வொரு இளவரசனாக பார்த்துக் கொண்டே வருவாள். பிடித்த இளவரசன் கழுத்தில் மாலையிடுவாள். மாலையிட்டக் கணமே அவனை கணவனாக வரிப்பாள் "

"இப்ப சுயம்வரம் வழியாத்தான் கல்யாணம்னா குரங்கு மாதிரி ஆம்பிளைகளுக்கு கல்யாணமே ஆகாது...ஹிஹி " என்றான் வசந்த்.

"குரங்குகளுக்காவது கல்யாணம் ஆகும். வசந்த் மாதிரி காட்டுப்பன்னிகளுக்கு சான்ஸே இல்லை "

"தாத்தா நீங்க குடுக்ற செல்லம்.... எல்லாரும் என்னை கண்டமாதிரி கிண்டல் பண்றாங்க " அழுதான் வசந்த்.

"கேலி சுகமாக இருக்கவேண்டும் ஆழமான காயங்களை ஏற்படுத்தி விட்டுவிடக் கூடாது. கேலி பண்ணியவர்கள் வசந்த்திடம் மன்னிப்புக் கேளுங்க "

"ஸாரிடா "

"ஸாரி வசந்த் "

"சரி. ஸாரி பூரி எல்லாம் போதும். நீங்க கதைக்குள் போங்க தாத்தா "

"குட். தட்ஸ் தி ரைட் ஸ்பிரிட் " மீண்டும் கதையை ஆரம்பித்தார் தாத்தா.

"சுயம்வரம் திட்டமிட்டத்தேதியில் நடந்தது. மந்திரவாதி அண்டாரகன் ஒரு மிக அழகான இளவரசனாக உருவெடுத்து சுயம்வரத்தில் கலந்து கொண்டான். எங்களுக்கு அண்டாரகனின் சதித்திட்டம் தெரியாது. போலி இளவரசனின் அழகில் மயங்கி எங்களது இளவரசி அவனுக்கு மாலையிட்டு விட்டாள். அன்று மாலை இளவரசியை இளவரசனோடு அவனது நாட்டுக்கு அனுப்புவதாய் இருந்தோம் "

"சரி "

"எங்களது விதூஷகனுக்கு முதலிலிருந்தே போலி இளவரசனின் மீது சந்தேகம். அவனது நடை உடை பாவனைகளில் ஏதோ வினோதம் உணர்ந்திருக்கிறான். மந்திரவாதி அண்டார கனின் இருப்பிடத்தை ஆராய்ந்திருக்கிறான். அப்போது அண்டாரகன் நிஜ இளவரசனை கொன்று புதைத்ததையும் அவன்வடிவில் தற் காலிகமாக அண்டாரகன் மாறியதையும் உறுதி செய்திருக்கிறான்."

"ஓஹோ "

"நடந்த விபரீதத்தை விதூஷகன் எங்களிடம் கக்க நாங்கள் முன்னெச்சரிக்கை அடைந்தோம். இளவரசியை பத்திரப்படுத்திக்

கொண்டு அண்டாரகனை விசாரித்தோம். எனக்கும் அண்டாரகனுக்கும் வாள் சண்டை மூண்டது. வாள்போரில் அண்டாரகன் தோற்றான். அப்போதுதான் எங்களை மந்திரத்தால் சபித்தான். 'மிருகங்கள் நாடு புகட்டும். மனிதர்கள் மீன்களாகி புதைசேற்றில் சிக்கட்டும். என்றான். எங்களை யாரும் மீட்காவண்ணம் ஒரு பிசாசை படைத்து பொந்தில் நடமாடவிட்டான். கயல்விழியுடன் பறந்தான். மன்னனாகிய நான் தங்கமீன் ஆனேன். என்னை ஐந்து விழுங்கி வயிற்றில் பாதுகாத்தது. குளத்துக்கு வெளியே யாரும் எங்களை மந்திர சக்தியால் மீட்க முடியாதபடிக்கு விசேஷ வேலி படைத்தான். ஆனால் அத்தனைத் தடைகளையும் மீறி நீங்களும் உங்களது பிப்பும் எங்களைக் காப்பாற்றி விட்டீர்கள். எங்களின் ஒரே சோகம்-அண்டாரகனின் வெஞ்சிறையில் எங்களது அன்புமகள் கயல்விழி இருப்பதுதான் "

"கவலைப்படாதீர்கள் ராஜமோகினியுடன் கயல்விழியையும் சேர்ந்துக் காப்பாற்றுவோம். அண்டாரகனைப் பற்றி ஏதேனும் தகவல் இருந்தால் கூறுங்கள்"

"விதூஷகனுக்குத் தெரியும் "

"சொல் விதூஷகா "

விதூஷகர் குறும்பாய் சிரித்தார். "என்னிடம் பரமபதம் விளையாட வாருங்கள். வென்றால் அண்டாரகளைப் பற்றி கட்டாயமாக தகவல்கள் கூறுகிறேன். தோற்றால் அண்டாரகனை ஜெயிக்கும் சக்தி உங்களிடம் இல்லை என பொருள். புறமுதுகிட்டு ஓடி விடுங்கள் "

தாயக்கட்டைகளை உருட்ட ஆரம்பித்தார் விதூஷகர்.

○

# 24




**வி**தூஷகர் தாயக்கட்டை உருட்டுவதை தடுத்து நிறுத்தினான் நட்டு.

"நீ ஒரு கோமாளி என்பதை உனது செயல் மூலம் நிரூபித்து விட்டாயே.... பொதுவாகவே கோமாளிகளுக்கு தலையில் மூளை இருக்காது போலும் "

விதூஷகரின் முகம் மாறியது.

கோபம் இல்லை அது. அறியாச் சிறுவனைப் பார்த்து அனுதாபம்

"நான் கோமாளிதான். கலைக்கூத்தாடிதான். மறுக்கவில்லை. ஆனால் கோமாளிகள் முட்டாள்கள் என்று உனக்கு யார் சொன்னது?"

"யார் சொல்ல வேண்டும்? நான்தான் கண்நிறைய நிறைய பார்த்திருக்கிறேனே... அவர்கள் கூத்தடிப்பதையும் எதிராளிகளிட மிருந்து உதை வாங்கித் தின்னுவதையும் "

"உனது அனுமானம் தவறு சிறுவனே. உலகத்தில் சிரிக்கத் தெரிந்த மிருகம் மனிதன் தான். அதனைப் போல பிற மனிதரை சிரிக்க வைக்கும் தந்திரமும் தெரிந்தவன் மனிதன்தான் ஒருவரை ஏன் ஒரு கூட்டத்தையே அழ வைப்பது எளிது. ஆனால் ஒரே ஒருவரை ஒரே ஒரு தடவை சிரிக்க வைப்பதுகூட அதி சிரமம். மிகவும் அசாத்தியமான மதிநுட்பம் கொண்டவர்களே விதூஷகர்களாகவும் கோமாளிகளாகவும் வேஷம் தரிக்கிறார்கள். வெறும் கோமாளித்தனம் செய்வதோடு அவர்களின் பணி நின்று விடுவதில்லை. மன்னர்களுக்கு ராஜதந்திரம் போதிக்கிறார்கள். மன்னர்களுக்கும் மக்களுக்கும் பாலமாய் விளங்குகிறார்கள். இவ்வளவு ஏன்? கடந்தபல வருடங்களாக மாயாபுரியின் முதுகெலும்பாக விளங்கி வந்திருக்கிறேன் "

நட்டு அயர்ந்து போனான்.

"ஓஹோ உங்களின் கோமாளி வேஷத்துக்கு பின்னால் இவ்வளவு விஷயங்கள் உள்ளனவா! என்னுடைய தவறான நடத்தைக்கு மன்னியுங்கள் விதூஷக் "

"பெரிய வார்த்தைகள் கூறாதே சிறுவனே நாங்கள் உங்களுக்கு ஆயுட்காலம் முழுமை கடமைப்பட்டுள்ளோம். இன்னும் எந்த சந்தேகம் இருந்தாலும் நீ தாராளமாய் கேட்கலாம் "

"மந்திரவாதி அண்டாரகன் இளைப்பாற ஆயிரம் இடங்கள் இருக்க-அவன் மாயாபுரியின் எல்லைப்புறத்தை தேர்ந்தெடுத்தது ஏன்?"

"ஏழாம் வானத்தைத் தாண்டி இருக்கும் முதல் நாடு இதுதான். இங்கே தங்குவது அவனுக்கு ஏதாவது ஒரு விதத்தில் வசதியாக இருந்திருக்கலாம் "

"இங்கே வந்து அவன் என்னென்ன யாகங்கள் செய்வான்?"

"தெரியாது."

"அவன் ஆபத்தானவன் என்பதனை முன்னமே செவிவழிச் செய்தியாக அறிந்திருப்பீர்கள். அப்படி இருக்கும் போது அவன்

மாயாபுரி எல்லையில் வந்து தங்கி யாகங்கள் நடத்துவதை உங்கள் மன்னர் எப்படி அனுமதித்தார்? அப்படி அவர் அனுமதிக்கக் கூடாதென்று நீங்கள் தகுந்த நேரத்தில் மன்னரை அறிவுறுத்த வில்லையே ஏன்? விதூஷகர்கள் ராஜதந்திரிகள் ராஜ்ஜியத்தின் முதுகெலும்புகள் அல்லவா? எப்படி ஏமாந்தீர்கள்? யானைக்கும் அடிசறுக்கும் அல்லவா?"

"எனக்கு அடி சறுக்கவில்லை சிறுவனே. எனது அபாய எச்சரிக்கையை அலட்சியப்படுத்தியது மன்னர்தான் "

மன்னர் வீரசேனன் தலைகுனிந்தார்.

"விதூஷகன் சொல்வது சரிதான். நான்தான் அண்டாரகனை பகைக்கக் கூடாதென்று அவனை மாயாபுரி எல்லையில் தங்க அனுமதித்தேன் "

"சுயம்வரத்தில் அழகிய இளவரசனாக அண்டாரகன் வரப்போவதை எப்படி யூகித்தீர்கள்?"

"எனக்கும் அடிப்படை மந்திரதந்திரங்கள் தெரியும். அண்டாரகன் பெண் ஆசை பிடித்தவன். சுயம்வரத்தில் ஏதாவது குழப்பங்கள் விளைவிப்பான் எனமுடிவுக்கு வந்தேன். என்ன மாதிரி குழப்பம் விளைவிப்பான்? அண்டாரகனின் மனம் யோசிக்கும் வழியில் சென்று என் மனமும் யோசித்தது. அண்டாரகன் உருவாக்கப் போகும் குழப்பம் எது என்பது தெளிவானது. வந்திருந்த 156 தேசங்களின் இளவரசர்களில் யார் சகலகலாவல்லவன் என உளவறிந்தேன். அண்டாரகனும் உளவறிந்திருக்கிறான். அந்த சகலகலா வல்லவனைத்தான் இளவரசி கயல்விழி சுயம்வரத்தில் தேர்ந்தெடுப்பாள் என நானும் அண்டாரகனும் ஒரே சமயத்தில் ஆனால் தனித்தனியாக உணர்ந்து கொண்டோம். அண்டாரகன் என்னை முந்திக் கொண்டான். இளவரசனைக் கொன்று விட்டு தற்காலிகமாக இளவரசனின் உருவத்தைத் தான் அடைந்திருக்கிறான். மறுநாள் அவனது கூடாரத்துக்கு வெளியே புதிய குழி தோண்டி மூடப்பட்டிருந்ததை பார்த்துவிட்டேன். நான் தெரிந்து கொண்டதை உணர்ந்த அண்டாரகன் சுயம்வரம் நடந்து முடியும்வரை எனக்கு மந்திரத்தால் 'வாய்ப்பூட்டு' போட்டு விட்டான்..." விதூஷகர்.

"ம் "

"சுயம்வரம் நடந்தது. அண்டாரகன் கழுத்தில்தான் இளவரசி மாலையிட்டாள். உடனே என்னுடைய 'வாய்ப் பூட்டு' விலகியது. நடந்ததை மன்னரிடம் கூறினேன். மன்னருக்கும் அண்டார கனுக்கும் வாள் சண்டை. அண்டாரகன் தோற்றான். இறுதிவழியாக அண்டாரகன் எங்களது நாட்டையும் சபித்துவிட்டு இளவரசியுடன் பறந்து போய்விட்டான் "

மந்திரவாதி அண்டாரகனின் புகைப்படத்தை எடுத்து நீட்டினான் நட்டு.

"விதூஷகரே! இவன்தான் நீங்கள் சொல்லும் அண்டாரகன்!"

இருகைகளாலும் இருகாதுகளையும் பொத்திக்கொண்டு கூவினார் விதூஷகர். "ஆமாம் "

"இந்த ஓவியத்தில் இருக்கும் பெண் ஜாலபுரி மன்னர் நந்திவர்மனின் ஒரே மகள்-இளவரசி ராஜமோகினி. ராஜ மோகினியைத் தேடித்தான் மாயாபுரி வந்தோம். மாயாபுரியின் இளவரசி கயல்விழியும் அண்டாரகனால் கடத்தப்பட்டு விட்டாள். ஆகையால் எங்களது பணி இரட்டிப்பாகிறது. இப்போது நாங்கள் மீட்க வேண்டியது இரண்டு இளவரசிகளை " அறிவித்தான் நட்டு.

"உனது யூகம் தவறு நட்டு " என்றாள் ஆர்த்தி.

"ஏன்? என்றான் நட்டு.

"எதனை வைத்து இப்படிக் கூறுகிறீர்கள்?" என விதூஷகர் வினவினார்.

"பெண் ஆசை பிடித்தவர்கள் உலகத்திலேயே அழகான பெண்ணை அடைய முயற்சிப்பார்கள். அந்த ஆசை நிறைவேறி விட்டால் அடுத்தப் பெண்ணுக்கு உடனே தாவமாட்டார்கள். யாருக்கு எதில் போதை அதிகமோ அதனில் மட்டுமே ஆர்வமாய் ஈடுபடுவார்கள். மற்ற விஷயமெல்லாம் அவர்களுக்கு கால்தூசு. மன்னர்களுக்கு மண் ஆசை அதிகம். விதூஷகர்களுக்கு பிறரை சதா சர்வ காலமும் சிரிக்க வைக்கும் ஆசை அதிகம் தளபதிகளுக்கு புகழ். பெண்களுக்கு தங்க ஆபரணங்கள். மந்திரவாதிகளுக்கு? மேலும்மேலும் மந்திர சக்திகளை அடையவேண்டும் எனும் ஆசை அதிகம் " என்றாள் ஆர்த்தி.

"உனது வாதம் அர்த்தப்பூர்வமானது. தொடர்ந்து பேசு ஆர்த்தி " எனக்கூறினாள் சக்தி.

"மந்திரவாதி அண்டாரகன் இளவரசிகளை கடத்திச் சென்றது அவர்களைத் திருமணம் செய்து கொள்ள அல்ல "

"பின்னே?"

"அண்டாரகன் கடத்திச் சென்றிருப்பது நமக்குத் தெரிந்து இரு இளவரசிகள் நமக்குத் தெரியாமல் எத்தனை இளவரசி களோ?"

விதூஷகர் துள்ளினார்.

"பிரமதம் அம்மா பிரமாதம். உன்னுடைய கோணம் சாத்தியமானதுதான் தொடர்ந்து பேசு."

"மந்திரவாதி அண்டாரகனின் இலக்கு. ஒரு இளவரசி அல்ல இரு இளவரசி அல்ல நூறு இளவரசிகள் என நம்புகிறேன் " என்றாள் ஆர்த்தி.

"ம். அப்றம்?"

"நரபலி கொடுப்பது எல்லா காலத்திலும் சகஜமாய் நடக்கும் ஒன்று. நூறு இளவரசிகளை ஒட்டுமொத்தமாய் பலி கொடுத்தால் மாபெரும் மந்திரசக்தியை அடையலாம் என அண்டாரகன் கணக்குப் போட்டிருக்கக்கூடும்."

விதூஷகர் கண்களை மூடி யோசித்து நிமிர்ந்தார்.

"நீ சொல்வது ஏற்புடையதுதான். நான் இதற்கு முன் என் தந்தையார் சொல்லக் கேட்டிருக்கிறேன்.. நூறு கன்னிப் பெண்களை வடகிழக்குத் திசையில் வைத்து ஓங்கார காளிக்கு பலி கொடுத்தால் ஆதிபகவனுக்கு சமமான சக்திகள் கைக்கூடும் என கூறியிருக் கிறார் "

"கன்னிப்பெண்கள் போதும் என்றிருக்கும் போது அண்டார கன் இளவரசிகளுக்காக அலைவது ஏன்?" வினவினான் நட்டு.

"பதில் இதோ. கடத்தப்படும் இளவரசிகளும் கன்னிப்பெண் கள்தான். அவர்கள் பெற்றோருக்கு ஒரே மகளாக இருக்க வேண்டும் என நிபந்தனை மந்திர சாஸ்திரத்தில் குறிப்பிடப்

பட்டிருக்கலாம். தவிர கன்னிப்பெண்களுக்கு 12ராசிகளின் உருவத்தில் மச்சம் இருந்திருக்கவேண்டும்! எனவும் நிபந்தனை உள்ளதோ என்னவோ?" என்றாள் ஆர்த்தி.

மன்னர் வீரசேனன் துள்ளினார்.

"ஆர்த்தியின் கூற்று மிகச்சரி. எனது மகள் கயல்விழி எங்களுக்கு ஒரே மகள். அவள் மீனராசியைச் சார்ந்தவள். அவளது முதுகில் மீன்வடிவ மச்சம் ஒன்று உண்டு "

"சாமுத்திரிகா லட்சணம் பற்றியும் எதாவது நிபந்தனை இருக்கக்கூடும்" என்றார் விதூஷகர்.

-கதைக்குள் குறுக்கிட்டான் முத்தமிழ்.

"சாமுத்ரிகா லட்சணம் அப்டின்னா என்ன தாத்தா?"

முத்தமிழை முறைத்து பார்த்துவிட்டு விளக்கம் கூற ஆரம்பித்தார் தாத்தா "சாமுத்ரிகா லட்சணம் என்பது ஒரு வகை சாஸ்திரம். பெண்களின் ஆண்களின் உடலமைப்பை அட்ட வணைப்படுத்தி அந்தந்த உடலமைப்புகளுக்குரிய குணாதிசயங் களை வரையறுத்துள்ளார்கள். இப்போதும் கவனிச்சுப்பாருங்க. சிலருக்கு வட்டமுகம். சிலருக்கு சதுரமுகம். சிலருக்கு நீளமுகம். தலைகேசங்களில் கூட ஆளுக்கு ஆள் வித்தியாசம் உண்டு. வியர்வை வாசனையில் கூட தனித்தன்மை உண்டு. குரல் வளத்தில் வகைகள் உண்டு."

"ஆமா தாத்தா "

"இந்த சாமுத்ரிகா லட்சணத்துக்கு தொடர்பில்லாத ஒரு விஷயத்தைச் சொல்ரேன். ஆராய்ஞ்சு பாருங்க. மனுசங்களோட முகங்கள் ஏதாவது மிருகத்தின் முகத்தையோ பறவைகளின் முகத்தையோ முழுமையா ஒத்திருக்கும். சிலர் மூஞ்சி காக்கா மாதிரி. சிலர் மூஞ்சி கழுதை மாதிரி. சேவல்மாதிரி. எருமை மாதிரி சாயலடிக்கும் "

வசந்த் முந்திக்கொண்டான். "தாத்தா சொன்னத வச்சுக்கிட்டு யாராவது என் மூஞ்சிய கிண்டல் பண்ணிங்கன்னா -உங்கங்க மூஞ்சிகள் எந்தந்த மிருகம் மாதிரி இருக்குனு பட்டியல் போடுவேன். ஜாக்கிரதை "

"சாமுத்ரிகா லட்சணத்துக்கு தொடர்பில்லாத இன்னொரு விஷயமும் சொல்ரேன். ஆராய்ஞ்சு பாருங்க. உங்கங்க மம்மி-டாடியோட கல்யாண ஆல்பத்தை எடுத்து மம்மி-டாடி முகங்களை கவனியுங்க. ரெண்டு முகங்களும் கொஞ்சம் கூட ஒத்துமை இல்லாம முரட்டு வேறுபாடு காட்டும். இப்ப எடுத்த மம்மி-டாடி போட்டோவையோ அல்லது நேரா முகத்தையோ கவனியுங்க. கல்யாணமான பத்துபனிரெண்டு வருஷத்ல உங்க மம்மி-டாடி முகம் அண்ணன்-தங்கச்சி முகம்மாதிரி ஒற்றுமை சாயல்ல இருக்கும்."

"அது எப்படி தாத்தா?"

"காரணம் எனக்குத் தெரியாது. கடவுள்கிட்டத்தான் கேக்கணும். நாம மீண்டும் கதைக்குள் போவம் "

கதையைத் தொடர்ந்தார் கம்ப்யூட்டர் தாத்தா.

-"கடத்தப்பட்ட இன்னொரு இளவரசி ராஜமோகினிக்கும் எதாவது ராசியின் வடிவத்தில் மச்சம் இருந்திருக்கும் " என்றான் நட்டு.

அனைவரும் ஆமோதித்தனர்.

"ஏறக்குறைய அனைவருமே அவரவர் யூகங்களைக் கொட்டி விட்டோம். மந்திரவாதி அண்டாரகனுக்கு எதிரான கருத்துக்களை முழுமையாக்கிக் கொண்டோம். ஆனாலும் ஒரு இறுதி கேள்வி விதூஷகருக்கு "

"என்ன நட்டு?"

"மன்னரின் மகள் கடத்தப்பட்டு விட்டாள். அவளையும் சேர்த்து மீட்க நாங்களும் ஆயத்தமாகி விட்டோம். அண்டாரகன் பற்றி கூடுதல் தகவல்கள் உங்களுக்குத்தான் தெரியும் என மன்னரே கூறிவிட்டார். தாமதிக்காமல் நீங்கள் உடனே அந்தத்தகவல்களைத் தெரிவித்தால் நாங்கள் எங்கள் பயணத்தைத்தொடர வசதியாக இருக்கும். அதனை விட்டுவிட்டு நீங்கள் எங்களிடம் குறும்பு பண்ணுகிறீர்கள். தாயக்கட்டையை உருட்டியபடி பரமபதம் விளையாட அழைக்கிறீர்கள். இது சிறுபிள்ளைத் தனமாக இருக்கிறது. விளையாட இதுவா நேரம்? இளவரசிகளை மீட்டுத்

தந்துவிட்டு உங்களுடன் நான் பலிங் சடுகுடு, கியாகியா, சாட் பூட் த்ரீ, நொண்டித் தட்டு, செதுக்குச் சிப்பி, வெட்டு, திருடன் போலீஸ் ஆடுகிறேன் "

சிரித்தார் விதூஷகர்.

"நீ கூறும் பல விளையாட்டுகளின் பெயர் எனக்கு அர்த்தமாகவில்லை. ஆனால் ஒன்று கூறுகிறேன்-நான் உங்களை பரமபதம் ஆட அழைப்பது சிறு பிள்ளைத்தனமாக அல்ல. நாம் ஆடப்போகும் பரமபதம் வித்தியாசமானது. நாம உருட்டப் போகும் தாயக்கட்டை வினோதமானது. இதில் கரணம் தப்பினால் மரணம். இந்த பரமபதத்தில் ஏணிகள் உயரம் குறைந்தவை. ஆனால் பாம்புகள் மிக நீண்டவை சீண்டியவுடன் உயிரெடுக்கும் விஷம் உள்ளவை. இந்த விளையாட்டில் நீங்கள் வெற்றி பெற்றால்தான் உங்களுக்கு மந்திரவாதி அண்டாரகனை ஜெயிக்கும் மதிநுட்பம் உள்ளதென நம்புவேன். எனக்குத் தெரிந்த தகவல்களைக் கூறுவேன். தோற்றுவிட்டால் உங்கள் காலத்துக்குத் திரும்பிப் போய்விடுங்கள். இழப்பு இளவரசி உயிரோடு நிற்கட்டும் "

மன்னர் ஆமோதித்தார்.

"விதூகர் சொல்வதுதான் எனது அபிப்ராயமும்."

"நாங்கள் பரமபத ஆட்டத்துக்கு தயார்தயார் " கோரஸாய் அறிவித்தனர் நட்டு அண்ட் கோ.

விதூஷகரின் தாயக்கட்டை கண்சிமிட்டி சிரித்தது.

O

# 25

**வி**தூஷகரின் தாயக்கட்டை ஒன்றும் உயிரில்லாத பொருள் அல்ல. வெள்ளை நிறமுள்ள சதுரவடிவான ஜெல்லிமீன் போல் துள்ளியது தாவியது வளைந்தது நெளிந்தது தழைந்தது குதித்தது.

உருட்டப்படும் போது அதன் வடிவம் ஒழுங்கில்லாமல் ததும்பினாலும் தரையில் நிற்கும் போது சதுரமாய் '1' '2' '6' காட்டியது.

விதூஷகர் சிரித்தார். "நாம் விளையாடப் போகும் பரம பதத்தை உட்கார்ந்து ஆட முடியாது. முன்னமே நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறன் அல்லவா? எனக்கு மந்திர தந்திரம் தெரியும் என்று நாம் ஒரு மாய சமவெளியில் நின்று... புரியவில்லையா? ஒரு கற்பனை பிரதேசத்தில் நின்று ஆடப்போகிறோம். நமது காலடிகள் வானத்திலும் நிற்காது பூமியிலும் நிற்காது. நாம் பரமபதம் ஆடப்போகும் நேரம் இரவும் அல்ல பகலும் அல்ல..."

நட்டுவுக்கு பயம் வந்தது.

இருந்தாலும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் சிரித்தான்.

"என்ன விதூஷகர் பிரதர் பூச்சாண்டி காட்டுகிறீர்கள் இன்னும் எத்தனை 'அல்ல' கூறப்போகிறீர்கள் "

விதூஷகர் விபரீதமாய் சிரித்தார்

கண்களை மூடி மந்திரங்களை முணுமுணுத்தார்.

உள்ளங்கை மூடிய வலது கையை நீட்டினார்.

மந்திரங்களைக்கூறி முடித்ததும் உள்ளங்கையை உதறி நீட்டினார்.

'பப்பளாங் '

நட்டு அண்ட் கோவும் விதூஷகரும் காற்றில் தூக்கி எறியப்பட்டனர். மனித அம்புகளாய் பயணித்து அந்தரத்தில் நின்றனர்.

எதிரே பரமபதம்

மிதக்கும் கண்ணாடிப்பரப்பில் பரமபதம்.

நூறு சதுரங்கள் கைகோர்த்து ஒரு மெஹா சதுரம்.

ஐம்பது சதுரங்கள் யானைத்தந்த நிறத்தில் வெண்மையாய் பளபளத்தன.

ஐம்பது சதுரங்கள் இருட்டான கறுப்பு நிறத்தில் பூடகம் காட்டின.

ஒன்றாவது முதல் சதுரம் ஆரம்பிக்கும் வழி!

நூறாவது கடைசி சதுரம் சென்று அடைய வேண்டிய அரண்மனை!

நிஜம் போலவே அரண்மனை ஜொலித்தது.

பரமபதத்தில் மொத்தம் 14ஏணிகள்.

ஏணிகள் பாதரசத்தால் செய்யப்பட்டிருந்தன.

பதினான்கு ஏணிகளும் பரமபதத்தில் எங்கெங்கு அமைந்து நின்றிருந்தன என்பதை பார்ப்போமா?

கட்டம் '4' லிருந்து '23' க்கு ஒரு ஏணி.

கட்டம் '8' லிருந்து '26' க்கு ஒரு ஏணி.

கட்டம் '19' லிருந்து '38' க்கு ஒரு ஏணி.

கட்டம் '28' லிருந்து '34' க்கு ஒரு ஏணி.

கட்டம் '36' லிருந்து '57' க்கு ஒரு ஏணி.

கட்டம் '21' லிருந்து '82' க்கு ஒரு ஏணி.

கட்டம் '43' லிருந்து '77' க்கு ஒரு ஏணி.

கட்டம் '54' லிருந்து '88' க்கு ஒரு ஏணி.

கட்டம் '69' லிருந்து '73' க்கு ஒரு ஏணி.

கட்டம் '61' லிருந்து '99' க்கு ஒரு ஏணி.

கட்டம் '66' லிருந்து '87' க்கு ஒரு ஏணி.

கட்டம் '71 லிருந்து '92' க்கு ஒரு ஏணி.

கட்டம் '85' லிருந்து '94' க்கு ஒரு ஏணி.

கட்டம் '62' லிருந்து '96'க்கு ஒரு ஏணி.

விதூஷகர் கண்களை குறுக்கி சிரித்தார். "ஏணிகள் பாத ரசத்தால் செய்யப்பட்டவை என நினைத்து ஏமாந்து விடாதீர்கள். ஒவ்வொரு ஏணியும் பல கிலுகிலுப்பை விரியன் பாம்புகளை ஒட்டி இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. ஏணி மீது ஏறும் போதும் கவனமாய் இருக்க வேண்டும். இல்லையென்றால் சுடச்சுட மரணம்தான் "

சக்தியும் ஆர்த்தியும் கலவரமுகம் காட்டினர்.

பிப் முருகப்பெருமான் போல 'யாமிருக்க பயமேன் ' என்றது.

நட்டு விதூஷகருக்குத் தெரியாமல் வழிப்பம் காட்டினான்.

விதூஷகர் பேச்சைத் தொடர்ந்தார். "முதலில் பரமபதத் திலுள்ள ஏணிகளைப் பற்றிக் கூறிவிட்டேன். இப்போது பாம்பு களைப் பற்றிக் கூறப்போகிறேன். இங்குள்ள பத்து பாம்புகளுமே உண்மையானவை. பல வருடங்களுக்கு மேல் பட்டினி போடப்பட்டவை. இந்த பாம்புகளில் '98' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு கொடுமையானது. சுமார் 150வருடம் யாரையும் தீண்டாமல் விஷத்தை நாகரத்தினமாக்கும் அரும்பணியில் ஈடுபட்டுள்ளது. அப்படி என்றால் அதன் விஷப்பல்லில் எவ்வளவு விஷம் இருக்கும் என்பததை யூகித்துக் கொள்ளுங்கள் "

பாம்புகளை கவனித்தான் நட்டு.

'98' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '13' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'93' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '25' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'83' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '22' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'89' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '51' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'68' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '2' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'64' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '24' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'59' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '18' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'52' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '11' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'48' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '9' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

'46' வது கட்டத்தில் இருக்கும் பாம்பு சீண்டினால் '15' வது கட்டத்துக்கு விளையாடுபவர் இறக்க வேண்டிய வரும்

நட்டு புன்னகைத்தான். "மொத்தம் 100 கட்டம். முதல் கட்டம் ஆரம்பம். இறுதி கட்டம் வெற்றி. 14 கட்டங்களில் ஏணிகள். 10 கட்டங்களில் பாம்புகள். 26 கட்டங்கள் போக 74 கட்டங்கள் பிரச்சனை இல்லாதவை. "

"ஆமாம் இந்த விளையாட்டுக்கு சில நிபந்தனைகள் விதிக்கப் போகிறேன் "

"என்ன? கண்களைக் கட்டிக்கொண்டு தாயம் உருட்ட வேண்டுமா?"

"கட்டாயம் இல்லை. அதுஉங்கள் விருப்பம். என்னுடைய நிபந்தனைகள் வேறு மாதிரி "

"சரி.. சொல்லுங்கள் "

"உங்களுடன் இருக்கும் 'பிப்' குட்டிச்சாத்தான்களின் தலைவன். மந்திரதந்திரங்களில் என்னைவிட கூடுதல் சக்தி வாய்ந்தது. ஆகவே பரமபதம் என்னுடன் விளையாட உங்கள் மூவரில் ஒருவர்தான் வரவேண்டும். பிப் வெறும் பார்வை யாளர்தான் "

பிப் முதல் நிபந்தனையை மறுக்க சமிக்ஞை காட்டியது.

நட்டுவோ தைரியமாய் தலையசைத்தான். "சரி "

"உங்களுடைய இரண்டாவது நிபந்தனை என்ன சீனியர் கவுண்டமணி?"

"கவுண்டமணி எங்க தாத்தாவின் பெயர். சீனியர் என்றால் பெரிய என்று அர்த்தம் " கிண்டல் அடித்தான் நட்டு.

விதூஷகர் முறைத்தபடி இரண்டாவது நிபந்தனையை எடுத்து வீசினார்.

"இந்த பரமபத விளையாட்டு வேண்டுமானால் மாய சம வெளியில் நடக்கலாம். ஆனால் விளையாட்டில் நீங்களோ நானோ மந்திரசக்திகளை உபயோகிக்கக் கூடாது. சத்தியம் பண்ணுங்கள் "

மனதுக்குள் 'அ' நினைத்துக்கொண்டு வெளியில் சப்தமாக 'சத்தியம்' சொல்வோமா? கிருத்துருவமாக யோசித்தான் நட்டு.

மீண்டும் பிப் மறுக்கச் சொன்னது.

விதி வலியது. அதனிலும் வலியது நட்டு குட்டிப் பையனின் பிடிவாதம்.

சக்தியும் ஆர்த்தியும் கூட நட்டுவின் முதுகைச் சொரண்டினர்.

"என்னங்கடி எலிமாதிரி சொரண்டுறீங்க? பயப்படாதீங்கடி எல்லாம் நல்லதே நடக்கும் "

பின் விதூஷகரிடம் திரும்பினான் நட்டு.

"உங்களுடைய வீரத்தைக் கண்டு மெச்சுகிறேன். மூன்றாவது நிபந்தனை. ஆட்டத்தில் உனக்கும் எனக்கும் அதிகபட்சம் இரண்டே முறைதான் பாம்பு கடிபட அனுமதி. இரண்டு முறைக்கும் உயிர் தப்பிக்க நாம் விஷமுறிவு மருந்தை உட்கொள்ளலாம்..."

"ஆ " அலறினாள் சக்தி.

"ஹய்யோ " என்றாள் ஆர்த்தி.

"அந்த இருமுறையும் விஷமுறிவு மருந்து எடுத்துக் கொண்டு ஆட்டத்தைத் தொடரலாம். இரண்டாவது முறை பாம்பு

சீண்டி விஷமுறிவு மருந்து எடுத்தபின் உங்களுக்கு ஆட்டத்தைத் தொடர மனம் இல்லையென்றால்?..." என இழுத்தார்.

"ஆட்டத்தை நாங்களே ஜெயித்ததாக அறிவித்து விடுவீர்களா? அல்லது உங்களுக்கும் இல்லாமல் எங்களுக்கும் இல்லாமல் ஆட்டத்தை 'ட்ரா' என்று அறிவித்து விடுவீர்களா?"

" 'ட்ரா' இந்த வார்த்தை புரியவில்லை. நான் சொல்ல வந்தது வேறு. முந்திரிக் கொட்டை மாதிரி முந்தாதே "

"அட இந்த முந்திரிக்கொட்டை 'சொலவடை' ராஜாராணி காலத்திலேயே வந்திருச்சு போல "

-கதையில் குறுக்கிட்டான் கமல். "சொலவடைன்னா என்ன தாத்தா?"

வசந்த் முந்தினான். "எனக்குத் தெரியும் எனக்குத் தெரியும்."

"சொல்லு "

"ஆமவடை உளுந்தவடை மசால்வடை கீரை வடை காரவடை மாதிரி சொல வடை. ஆனா என்ன போட்டு செய்வாங்கன்னு தெரியல "

"அட முந்திரிக்கொட்டை அப்டி இல்ல. முந்திரிப்பழத்துக்கு முன்னாடி முந்திரிப்பருப்பு துருத்திக் கொண்டிருக்கும் பழத்துக் குள்ள பருப்பு இருக்காம இப்படி நீட்டிக்கிட்டு இருக்கிறதை அதிகப்பிரசங்கிகளோட அவசரக்காரர்களோட உவமைப்படுத்திப் பேசுவாங்க. அடுத்து 'சொலவடை'ன்னா உவமைகளையும் பழமொழிகளையும் அதிகம் கலந்து கிராமத்துத் தமிழர்கள் பேசுவதை குறிக்குது. மீண்டும் கதைக்குள் போவம் "

-தலையைச் சொறிந்தார் விதூஷகர். "கண்டதையும் பேசாதே சிறுவனே. இருதடவை பாம்பு சீண்டிய பின் ஆட்டம் தொடர விருப்பம் இல்லையென்றால் இளவரசிகளை தேடுவதை நிறுத்திவிட்டு நீங்கள் உங்கள் காலத்துக்கு திரும்பிப் போகலாம் "

"அது கோழைத்தனம் அது கோழைத்தனம் நிபந்தனைகள் அவ்வளவுதானா? இன்னும் இருக்கிறதா?"

"கடைசி நிபந்தனை. கூற மனமில்லாமல் கூறுகிறேன் "

"வரிசையா வெடிகுண்டா போடுற... கடைசி வெடிகுண்டு போட என்னய்யா சென்டிமென்ட்? அதயும் போட்டுரு 'விதூ' ப்ரதர்."

"நீ பேசுவது அர்த்தமாகவில்லை. இதோ கடைசி நிபந்தனை. மூன்றாவது முறை நீயோ நானோ பாம்பால் கடிபட்டால் விஷமுறிவு மருந்து எடுத்துக்கொள்ளக் கூடாது. மரணத்துக்கு சம்மதிக்கவேண்டும்"

நட்டு அண்ட் கோ மௌனமாய் யோசித்தது.

நட்டுதான் முதலில் வாய் திறந்தான். "அடியேய்களா ஏற்கனவே நம்ம மம்மி-டாடி நாம செத்துப் போனதா நினைச்சு நம்ம போட்டோக்களுக்கு மாலை போட்டுட்டாங்க. அட்லீஸ்ட்... நம்பள்ல ஒருத்தர் விஷயத்திலாவது அது உண்மையாகட்டுமே.... ஹ... ஆறில் சாவு நூறிலும் சாவுன்னுவாங்க. எட்டு வயசுல போய்ட்டு போறேனே "

நட்டு வீரமாய் பேசியதும் கிளர்ந்து எழுந்தார்கள் சக்தியும் ஆர்த்தியும்

"வீரம்ன்றது ஆண்களுக்கு அல்லது சிறுவர்களுக்கு மட்டும் உரியது அல்ல. பெண்களுக்கும் அல்லது சிறுமியருக்கும் கூட உரியது. நட்டு நீ எங்களை விட இருவயது வேறு சிறியவன். நீ விலகிக் கொள். எங்களில் யாராவது ஒருவர் கலந்து கொள்கிறோம்."

"சரி... 'டாஸ்' போட்டு பார்ப்போம் "

மந்திரத்தால் ஒரு ஒரு ரூபாய் நாணயம் வரவழைத்தான் நட்டு.

"தலை என்றால் நான். பூ என்றால் நீங்கள். பூ விழுந்தால் உங்களில் இருவர் யார் என்பதை தீர்மானிக்க மீண்டும் டாஸ் சுண்டி விடப்படும் "

பிப் நாணயத்தை வாங்கியது.

சுண்டியது.

நாணயம் ஜகஜகவென சுழன்றபடி பிப்பின் உள்ளங் கைக்கு வந்தது.

'தலை '

பிப் நட்டுவைப் பார்த்துக் கண்ணடித்தது.

நட்டுவின் கைகளை சக்தியும் ஆர்த்தியும் குலுக்கினர். "நம்முடைய மிஷனின் தலைவிதி உன் கையில் உள்ளது. உனது வெற்றி நமது வெற்றி தர்மத்தின் வெற்றி. நாம் வெற்றி பெற உன்னை வாழ்த்துகிறோம் விஷ் யூ பெஸ்ட் ஆப் லக் குட்டீஸ் "

நட்டுவுக்கு ஆனந்தக்கண்ணீர் பொங்கியது.

கண்ணீரைச் சுண்டிவிட்டபடி நட்டு, "நான் ஆட்டத்துக்கு தயார் " என்றான்.

ஆட்டம் சுடச்சுட ஆரம்பித்தது.

விதூஷகர் முதல்முறை தாயக்கட்டை உருட்டவே 'தாயம்' விழுந்தது. முதல் கட்டத்தில் சென்று அமர்ந்தார்.

மீண்டும் உருட்டினார் '3' (டி-டி)விழுந்தது.

ஏணி ஏறி '23' வது கட்டத்துக்குப் போனார்.

நட்டு இருமுறை தாயக்கட்டை உருட்டியும் தாயம் விழவில்லை. அந்த இருமுறையும் --டி --- விழுந்தது.

மூன்றாவது முறை தாயக்கட்டையை கண்களில் ஒற்றிக் கொண்டு வீசினான் நட்டு.

வாவ்!

'தாயம்' விழுந்தது.

முதல் கட்டத்தில் போய் அமர்ந்தான் நட்டு.

இரண்டாவது முறை, மூன்றாவது முறை தாயம்.

ஏணி ஏறி '26' போனான். நான்காவது முறை - ஏணி '34' போனான்.

விதூஷகர் '23' லிருந்து '25' போனார்.

இம்முறை நட்டுவுக்கு ஈராறு ஒரு இரண்டு விழுந்தது

'46'லிலுள்ள பாம்பு கடித்து '15' க்கு இறங்கி '17' க்கு நகர்ந்தான் நட்டு.

பாம்பு விஷம் உடல் முழுவதும் பரவி நீலம் பாரித்து பிணம் போல் சரிந்தான் நட்டு!

# 26

**ந**ட்டுவை கடித்த பாம்பு கடித்தபின் பரமபத மெஹா சதுரத்தில் தனக்கு உரிய இடத்தில் போய் உறைந்தது.

நட்டுவின் வலது தொடையில்தான் பாம்பு கடித்திருந்தது.

கடிபட்ட இடம் இரட்டை இரத்தப்புள்ளிகளாய் பார்வைக்குத் தெரிந்தது.

பாம்பு விஷம் இரத்த ஓட்டத்துடன் கலந்து ஜிகுஜிகுவென இதயத்துக்குப் பாய்ந்தது. விஷம் இதயத்துக்குப் போய் விட்டால் மரணம்தான். காரணம் விஷம் இதயத்துக்கு வரும் போகும் இரத்த ஒட்டத்தை உறைய வைப்பதுதான்.

கீழே கிடந்த நட்டுவின் கைகால்கள் வெட்டிக் கொண்டன.

கண்ணின் கருமணிகள் மேல் இமையில் நட்டுக் கொண்டன.

வாயில் நுரை தள்ளியது.

மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகியது.

நட்டுவின் உடலின் முன் ஓடிப்போய் முழங்காலிட்டனர் சக்தியும் ஆர்த்தியும் இருவரும் கதறி அழுதனர்.

பிப் கவலையுடன் நட்டுவின் உடலை வெறித்தது.

விதூஷகரின் முகத்தில் கதம்பமாய் உணர்வுகள். தன்னுடன் பரமபதம் விளையாடி யாரும் ஜெயிக்க முடியாது எனும் சந்தோஷம். சிறுவனாய் இருந்தாலும் தன்னுடன் தீரமாய் விளையாடி மரணத்துடன் போராடுகிறானே என்கிற ஆற்றாமை மறுபக்கம். நட்டு இந்த விளையாட்டில் ஜெயித்து விட்டால் மந்திரவாதி அண்டாரகனை அழிக்க சரியான வீரன் கிடைப்பானே என நம்பினோமே அந்த நம்பிக்கை பொய்த்து விட்டதே எனும் மனவேதனை இன்னொரு பக்கம்.

நடக்கும் பரமபத விளையாட்டு மன்னர் வீரசேனனின் கண்களுக்கோ மக்களின் கண்களுக்கோ தெரியாததால் மலங்க விழித்தபடி நின்றிருந்தனர் அனைவரும்.

பிப் விதூஷகரிடம் நடந்தது.

"பரமபத விளையாட்டுக்குத்தான் மந்திரதந்திரங்களை உபயோகிக்கக் கூடாதென்றாய். இப்போது நட்டுவின் உடலில் இருக்கும் பாம்பு விஷத்தை முறிக்க மந்திரத்தால் மூலிகை வரவழைக்க இருக்கிறேன். அதனை நீ தடுக்க இயலாது "

விதூஷகர் தலையாட்டினார்.

பிப் விஷமுறிவு மூலிகையை வரவழைத்தது.

மூலிகையை கசக்கி நட்டுவின் வாயிலும் மூக்கிலும் விட்டது. மூலிகைச்சாறு சொட்டு சொட்டாய் நட்டுவின் உணவு மண்டலத்திலும் சுவாசமண்டலத்திலும் இறங்க இறங்க நட்டுவின் நீலநிறம் மாறிக்கொண்டே வந்தது.

ஏறக்குறைய முப்பதே நொடிகளில் நட்டுவின் உடலில் இருந்த விஷம் முறிந்துவிட்டது.

தாறுமாறாய் துடித்துக்கொண்டிருந்த நட்டுவின் இதயம் இயல்பானது.

சுவாசம் சீரானது.

மயக்கம் விடுபட்டு முடுக்கி விடப்பட்டவனாய் நட்டு எழுந்தான்.

"ஹேய் எனக்கு என்ன ஆயிற்று? கட்டம் '17' க்கு எப்படி வந்தேன்?"

ஆனந்தகண்ணீர் வடித்தபடி சக்தியும் ஆர்த்தியும் நட்டுவை கட்டிக்கொண்டனர்.

"நட்டு நட்டு எங்கள் பிரியத்துக்குரிய நட்டு சில நிமிடங்களில் மரணத்தின் விளிம்பு வரை போய் வந்திருக்கிறாய்! உனக்கு ஏதாவது அசம்பாவிதம் ஆகி இருந்தால் எங்கள் நிலை என்ன? எங்கள் இதயம் சோகத்தால் வெடித்தே சிதறி இருக்கும் " என்றாள் சக்தி.

"விதூஷகர் முதலில் கூறும்போது ஏதோ பூச்சி காட்டுகிறார் என நினைத்தேன். இப்போதுதான் மந்திர தந்திரங்களின் சிலந்தி

வலை கண்ணுக்கு புலனாகிறது. கேவலம் இந்த பரமபத விளையாட்டிலேயே நாம் ஜெயிக்கவில்லை யென்றால் மந்திரவாதி அண்டாரகனை நாம் ஜெயிப்பது எப்படி? எனக்கு நம்பிக்கை வரண்டுவிட்டது. வா நட்டு எல்லாவற்றுக்கும் ஒன்ஸ் பார் ஆல் டாட்டா காண்பித்து விட்டு நாம் நமது காலத்துக்குத் திரும்பிப் போய் விடுவோம் "

நட்டு எதிர்மறையாய் தலையாட்டினான்.

"எப்படி இந்த பாம்புக்கடியிலிருந்து வெற்றிகரமாய் மீண்டேனோ அதே போல இனி வரும் பிரச்சனைகளிலும் ஆபத்துகளிலும் தெய்வாதீனமாய் மீள்வோம். எனக்கு நொடிக்கு நொடி தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கிறது. கடவுளின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு மீண்டும் பரமபத விளையாட்டில் இறங்குவோம் "

பிப்பின் கண்கள் மிளிர்ந்தன.

தடைப்பட்ட ஆட்டம் மீண்டும் தொடர்ந்தது.

விதூஷகரும் நட்டுவும் தாயக்கட்டையை மாறிமாறி உருட்டினர்.

விதூஷகருக்கு நல்லநேரம். எந்த பாம்பும் அவரை தீண்டவில்லை.

ஆனால்?

ஆனால்?

நட்டுவுக்குக் கெட்ட நேரம் தொடர்ந்தது.

தாயக்கட்டையை உருட்டினான்.

'கடவுளே இரண்டு மட்டும் விழுந்திரக்கூடாது கடவுளே கடவுளே '

என்ன செய்ய?

விழுந்தது '2'தான்.

கட்டம் '66' லிருந்து கட்டம் '68' க்கு காயை நகர்த்தினான்.

மிக நீளமுள்ள பளிங்குநிற பாம்பு காத்திருந்தது.

புதிய கட்டத்துக்குள் நட்டு கால் வைத்ததுதான் தாமதம் பரமபத பாம்பு சீறிச் சினத்து உயர்ந்து நட்டுவின் முகத்தில் கொத்தியது.

'ஸ்ஸ்ஸ்ஸ '

'ப்யூக் '

முதல் பாம்பை விட இரண்டாவது பாம்புக்கு நூறு மடங்கு விஷம் அதிகம். அதுவும் முகத்தில் கொத்திவிட்டது.

நட்டு வேரற்ற மரமாய் சிதறினான்.

சுவாசம் இல்லை.

ஏறக்குறைய பிணம்தான்.

கழிவிரக்கத்துடன் விதூஷகர் பேசினார். "பிப்பு நட்டுவைக் கடித்திருக்கும் இரண்டாவது வகை பாம்பு சாதாரண விஷம் உடையது அல்ல. அதற்கான விஷமுறிவு மூலிகை எளிதில் கிடைக்காது. தவிர இன்னும் 5 நிமிடங்கள் கரைந்து விட்டால் அந்த மூலிகை கூட நட்டுவைக் காப்பாற்றாது என்ன செய்யப் போகிறாய்?"

பிப் தலையாட்டிக்கொண்டது.

சிலநொடிகள் யோசித்தது.

முன்னோக்கி நொடி நொடியாய் நகரும் காலத்தை மந்திரத்தால் கட்டிப் போட்டுவிட்டு பிப் மூலிகை தேடி அலைந்தது.

காலம் பாறாங்கல் என்றால் பிப் போட்ட தடுப்பு மந்திரம் வடக்கயிறு போல. பாறாங்கல் வடக்கயிற்றை அறுத்துக் கொண்டு தொடர்ந்து நகர அல்லாடியது. காலத்துக்கும் பிப்பின் மந்திரத் துக்கும் கடுமையான போராட்டம். காலம் நகர முரண்டு பிடிப்பது கிர்ரக் கிர்ரக் என சப்தம் எழுப்பியது.

பிப் பறந்தது.

மலைகளுக்கு புகுந்து அலசியது.

மூலிகைச் செடிகளை பிடுங்கி நுகர்ந்தது. ஆராய்ந்து எறிந்தது.

குறிப்பிட்ட மூலிகை கிடைக்கவில்லை.

இன்னும் புதிய புதிய மலைகளுக்கு பறந்தது பிப்.

பிப் பிடுங்கி எறிந்த மூலிகைகளை ஒன்று சேர்த்து உருண்டை ஆக்கினாலே புதியதொரு பூமி உருண்டை உருவாகி விடும்.

என்ன துரதிஷ்டம்?

பிப்பின் மந்திரம் அழுத்தம் தாளாமல் பட்டுத்தெறிந்தது. காலம் மீண்டும் முன்னுக்கு நகர ஆரம்பித்தது.

விதூஷகர் சொன்ன அவகாசம் கரைய ஆரம்பித்தது.

கோடை வெயிலில் கைக்கு கிடைத்த ஐஸ்கட்டி எவ்வளவு வேகமாய் கரையும்? அத்தனை வேகமாய் நேரம் கரைய ஆரம்பித்தது.

இன்னும் பத்தே நொடிகள்!

டிக்டிக் டிடிக் டிடிக்டிக்!

10.....

9.......

8......

7......

6......

5.....

4....

3....

2....

பிப் பேய்தனமாய் பாய்ந்து பறந்து வந்து மூலிகைச் சாற்றை நட்டுவின் நாசியில் பிழிந்தது.

ஹக்!

1.....

நட்டுவின் உடம்பு ஒருமுறை தூக்கிப்போட்டது.

0....

நட்டு உயிர்த்து எழுந்தான்.

காலத்தேவன் நெட்டுயிர்த்தான். பெரியபெரிய மூச்சுகள் விட்டபடி நட்டுவின் கைகளை சக்தியும் ஆர்த்தியும் நேசமாய் பற்றிக் கொண்டனர்.

அவர்களின் கை பற்றுதலில் ஆயிரம் வருட பாசம் தெறித்தது.

பிப் தனது மூக்கை உல்லாசமாய் சொரண்டிக் கொண்டது.

"சிறுமிகளா ரெண்டாவது தடவ ரொம்ப பயந்துட்டீங்களோ?"

சக்திக்கும் ஆர்த்திக்கும் ஆமோதித்து தலையாட்டக் கூட வெட்கமாய் இருந்தது.

நட்டு முன்பை விட தெம்பாய் இருந்தான். இருமுறை விஷம் முறிக்கப்பட்ட உடம்பு முறுக்கேறி திண்ணென்று இருந்தது.

ஏதோ பேச முற்பட்ட சக்தி ஆர்த்தியை சமிக்ஞை காட்டி நிறுத்தினான் நட்டு. "போதும்டிகளா உங்க புளிச்சுப்போன புலம்பல் எத்தனை தடவ கேக்றது? எப்பா பிப்பு நாம மந்திரவாதி அண்டாரகனை ஜெயிக்கும் வரைக்கும் இவளுக வாய தைச்சு போடேன். சாப்பிட மட்டும் அப்பப்ப திறந்து விட்டுக்கலாம் "

பிப்பின் பச்சையான முகம் திடீரென்று கறுத்தது.

"இப்போது புலம்புவது என் முறை நட்டு பிரதர்."

"என்ன?"

"நிபந்தனைப்படி இருமுறை உன்னை உயிர்த்தெழ வைத்து விட்டேன்."

"சரி."

"மூன்றாவது முறை நீ பரமபத பாம்பால கொத்துபட்டா? நினைச்சுப்பாக்கவே பயமாயிருக்கு உன்னைக் காப்பாற்ற மந்திரமும் வராது மூலிகையும் வராது பிரதர் ஒரேயடியா ஹோகயாதான் "

"ஆமா... அதுக்கென்ன?"

நட்டுவுக்கு உள்ளுக்குள் பயம் வந்தது. ஆனால் காட்டிக் கொள்ளவில்லை. வீரனுக்கு அழகு பயமே இல்லாமல் இருப்பது அல்ல பயம் இருப்பதைக் காட்டிக்கொள்ளாமல் இருப்பதே.

"நீ மூன்றாவது முறை பரமபத விளையாட்டுக்குள் பிரவேசிப்பது சரிதானா? இம்முறை நான் கைகால்கள் கட்டப்பட்ட வாய் ஒட்டப்பட்ட பார்வையாளன்."

நட்டு நெஞ்சை நிமிர்த்தி எழுந்தான்.

"உச்சி மீது வான் இடிந்து வீழ்கின்றபோதும்.

அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே."

"இது யார் பாடினது?"

"மகாகவி பாரதியார்! எங்க காலத்துக்கவிஞர் "

"என்னது பாதிரியாரா?"

"பாதிரியாரும் அல்ல; முல்லாவும் அல்ல; பா-ர-தி-யா-ர்"

"இவ்ளவு வீராவேசமா பேசுற... சரி... உன் இஷ்டம் போல செய் "

விதூஷகரிடம் நடந்தான் நட்டு.

மீண்டும் பரமபத ஆட்டம் ஆரம்பித்தது.

இம்முறை விதூஷகர் பரமபத பாம்பால் கொத்தப் பட்டார்.

பிப் இரக்கத்துடன் மூலிகைச் சாற்றை ஊற்றி விதூஷகரைக் காப்பாற்றியது.

தடைப்பட்ட ஆட்டம் தொடர்ந்தது.

ஆட்டத்தில் அனல் பறந்தது.

கொண்டை ஊசி வளைவுகளும் கிடுகிடு பள்ளங்களும் தலை சுற்றும் வழுக்கலும் சறுக்கலும் ஆட்டத்துக்கு சுருதி ஏற்றின.

நேரம் ஆகஆக பாம்புகளும் ஏணிகளும் தாயம் உருட்டப்படும் பரப்பும் பரபரத்தன.

காய் நகர்த்தல்களுக்கிடையே விதூஷகரும் நட்டுவும் கொடிய பாம்புப் பண்ணைக்குள் இருப்பதுபோல உணர்ந்தனர்.

பாம்புகளின் சீற்றம் காதுகளை நிறைத்தது.

முழு பரமபத சதுரமும் கொந்தளித்தது.

திக்திக். பக்பக்.

வெகுநேர ஆட்டத்துக்குப் பின் விதூஷகரும் நட்டுவும் '96'வது கட்டத்துக்கு வந்து நின்றனர்.

நிற்கும் கால் பரப்பு வழுவழுத்தது.

தாயக்கட்டையை மூடிய உள்ளங்கைக்குள் குலுக்கிக் கொண்டான் நட்டு.

இருவர் கையிலும் தனித்தனி தாயக்கட்டை!

'2' விழுந்தால் மூன்றாவது முறை பாம்பு கொத்தி நட்டுவுக்கு மரணம்! விதூஷகர் மூலிகைச்சாற்றால் இரண்டாம் முறை உயிர்த்தெழுவார்!

'4' விழுந்தால் வெற்றி!

இருவரின் இதயங்களும் அசுரத்தனமாய் அடித்துக் கொண்டன.

படபடப்பும் வியர்வையும் கூடின.

நட்டு வாயால் சுவாசித்தான்.

இமைக்காமல் சக்தியும் ஆர்த்தியும் ஸ்தம்பித்தனர்.

'இருவரில் யார் கொத்தக்கிடைப்பர்?' என்ற எதிர்பார்ப்புடன் '98' வது கட்டத்திலிருக்கும் பாம்பு ஆயத்தமானது.

"தயாரா சிறுவனே "

"நான் தயார். நீங்கள் "

அவ்வளவுதான்....

நட்டுவும் விதூஷகரும் ஒரே நொடியில் தத்தம் தாயக்கட்டையை உருட்டினர்.

தாயக்கட்டைகள் உருண்டன உருண்டன நிற்காமல்

எண்கள் மாறிமாறிச் சுழன்றன.

'6' --'4' -- '3' -- '1' -- '2' -- '6' -- '4' -- '3' -- '2' --'1'

திடீரென்று அவரவர் தாயக்கட்டைகள் நின்றன

'நட்டுவின் தாயக்கட்டை எந்த எண்ணைக்காட்டுகிறது?' கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு உன்னித்தது பிப் அண்ட் கோ!

# 27

***தா***யக்கட்டையை உன்னிப்பாகக் கவனித்தனர் பிப் அண்ட் கோ. கண்கள் மங்கல் அடித்தன.

தரைக்கு குனிந்தனர்.

மங்கலாய் தெரிந்த தாயக்கட்டை மெதுமெதுவாய் தெளிவானது.

வாவ்!

நட்டுவுக்கு விழுந்தது '4'

அவனது காய் வெற்றி இலக்கான அரண்மனைக்கு நகர்ந்தது.

"ஹிப் ஹிப் ஹுர்ரே " இரு கை தூக்கி கூச்சலிட்டான் நட்டு சக்தி, ஆர்த்தி, பிப்பும் கூச்சலிட்டனர்.

அதே நேரத்தில் விதூகக்ஷகருக்கு விழுந்தது'2'

அவரது காய் '98' வது கட்டத்துக்கு நகர-

நீளமான பாம்பு சீறிப் பாய்ந்து விதூகக்ஷகர் நெற்றியில் கொத்தியது.

'ஷிக்கும் '

அதே நொடியில் விஷம் ஏறி மரவட்டை போல் சுருண்டார் விதூஷகர்.

இதுவரை கண்ணாடி பரப்பில் பளபளத்த பரமபதம் நூறு சதுரங்களாய் பிரிந்தது. பிரிந்த நூறு சதுரங்கள் ஆளுக்கொரு திசை அமைத்து பறந்தன. கரைந்தன. மறைந்தன.

பரமபதத்திலிருந்த பாம்புகள் அந்தரத்தில் அல்லாடின. பின் சீறிக்கொண்டு பூமிக்கு பாய்ந்தன. பூமியைத் துவாரம் பண்ணிக்

கொண்டு பூமியின் மையப்பகுதிக்கு போயின. பரமபதத்தின் ஏணிகளிலிருந்த குட்டிகுட்டி பாம்புகளும் இணைப்பு விடுபட்டு பூமியின் மையப் பகுதிக்கு போயின.

விளையாடிக் கொண்டிருந்த பரமபதம் மறைந்ததுதான் தாமதம்...

பூமியின் 25000 மீட்டர் தூரத்தில் அமைந்திருந்த விசேஷ தரை கரைந்தது.

உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் விதூஷகரை பிப் கைகளில் ஏந்திக்கொண்டது.

அனைவரும் சுழன்று சுழன்று பூமியின் உண்மையான தரைக்கு பாய்ந்தனர்.

வெறும் ஓர் அடி தூரத்திலிருந்து குதித்தாற் போல அனைவரும் மாயாபுரியின் அரண்மனை முன் லகுவாக குதித்து நின்றனர்.

பிப் விதூஷகரை தரையில் படுக்க வைத்தது.

மன்னர் வீரசேனன் மிகவும் பதட்டப்பட்டு கேள்விகளை அள்ளி வீசினார்.

"விதூஷகருக்கும் நட்டுவுக்கும் பரமபத போட்டி நடந்ததா? போட்டி நடந்தது என்றால் போட்டியில் யார் ஜெயித்தது, விதூஷகரின் உடல் நீலம் பாரித்து உள்ளதே ஏன்?"

நட்டு குறுக்கிட்டான்.

"இன்னும் பல கேள்விகளை நீங்கள் அடுக்கும் முன்பு நடந்ததை முழுவதும் விவரித்து விடுகிறேன்..." என்றபடி நட்டு நடந்ததை முழுக்கக் கூறினான்.

அரண்மனை வைத்தியர் ஓடிவந்து விதூஷகரின் நாடியை பார்த்துவிட்டு உதடுபிதுக்கினார்.

"விதூஷகரின் ஆயுள் முடிந்துவிட்டது என எண்ணுகிறேன்."

"விதூஷகரின் ஆயுள் முடியட்டும். மந்திரவாதி அண்டாரகனைப் பற்றியத் தகவல்களை நேரடியாகக் கூறாமல்

பரமபத போட்டி வைத்து படாதபாடு படுத்தி விட்டார். இருமுறை நட்டுவின் உயிரோடு விளையாடி விட்டார். இப்போது சிரமப்பட்டு அவர் முறை. படட்டும். இறந்தாலும் வருத்தமில்லை "என்றாள் சக்தி.

நட்டு கடிந்து கொண்டான். "இப்படி மனிதாபிமானம் இல்லாமல் பேசக்கூடாது. பிப்! உடனே விதூஷகரைக் காப்பாற்று."

பிப் சிரித்தது. "நட்டுவின் உயிரை இரண்டாவது முறை காப்பாற்றிய மூலிகை மிச்சத்தை பதுக்கி வைத்திருந்தது நல்லதாய் போயிற்று " எனக்கூறியபடி மூலிகைச் சாற்றை விதூஷகர் நாசியில் பிழிந்து விடடது.

விதூஷகர் எழுந்தார்.

நட்டுவுக்கும் பிப்புக்கும் உளமார நன்றி தெரிவித்தார்.

அரண்மனை வைத்தியர் ஆனந்தக்கூச்சலிட்டார். "இது ஒரு மிகப்பெரிய மருத்துவ அதிசயம் "

மன்னன் வீரசேனன் விதூஷகரை தட்டிக்கொடுத்தார்.

விதூஷகர் அனைவருக்கும் பொதுவாக வணக்கம் வைத்தார். "தயவுசெய்து எல்லோரும் மன்னிக்க வேண்டும். யாரையும் காயப்படுத்துவதோ கொல்வதோ எனது பரமபத விளையாட்டின் நோக்கமல்ல. நமது அன்புக்குரிய இளவரசி கயல்விழியை மீட்டு வரும் வீரமும் மனோதிடமும் விவேகமும் நட்டு குழுமத்துக்கு உள்ளதா என அறிந்து கொள்ளவே சோதனை வைத்தேன். அந்த சோதனையில் அவர்கள் வென்றுவிட்டார்கள். அவர்களின் வெற்றி எனது வெற்றி மாயாபுரியின் வெற்றி "

நட்டு அவசரப்பட்டான். "விதூஷகரே உடனே அண்டாரகனைப் பற்றி உங்களுக்குத்தெரியும் தகவல்களை அவிழ்த்து விடுங்கள் "

விதூஷகர் சிரித்தார். "இன்று இரவு நடன மண்டபத்தில் உங்களை மகிழ்விக்கும் நாட்டியம் நடக்க இருக்கிறது. அதன்பின் சிறப்பான விருந்து கடைசியாக நீங்கள் கேட்கும் தகவல்களைக் கூறுகிறேன் "

"முடியாது. அவ்வளவு நேரம் காத்திருக்க முடியாது " துள்ளினான் நட்டு.

நட்டுவை தோளில் தட்டிக்கொடுத்தார் மன்னர்.

"ஒரு நாள் இரவு தானே? விருந்தில் கலந்துகொண்டு விட்டே புறப்படுங்கள் "

நட்டு சம்மதமாய் மௌனித்தான்.

இரவு.

நட்டு அண்ட் கோ பட்டு ஆடைகள் அணிந்து நாட்டியத்தை ரசித்தனர்

பிப் விசில் அடித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.

விருந்து அமர்க்களமாய் இருந்தது. அனைவரும் ரசித்து உண்டனர். விருந்துக்குப் பிறகு ஓய்வு எடுத்துக் கொண்டனர்.

மறுநாள் காலை.

அரசவையில் சிம்மானத்தில் கம்பீரமாய் வீற்றிருந்தார் மன்னர் வீரசேனன்.

அவையோரும் அவரவர் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

நட்டு அண்ட் கோவுக்கு விசேஷ இருக்கைகள்.

விதூஷகர் மன்னரையும் அவையோரையும் வணங்கியபடி சபைக்குள் பிரவேசித்தார்.

நட்டு முறுவலித்தான். "இப்போதாவது மந்திரவாதி அண்டார கனைப் பற்றியத் தகவல்களைக் கூறுங்களேன் விதூஷகரே "

விதூஷகர் சிரித்தார்.

"மிகவும் அவசரப்படாதே சிறுவனே! மந்திரபுரி மந்திரபுரி என்கிற பெயரில் ஒரு தேசம் உள்ளது "

"இரண்டு மந்திரபுரியா?"

"இந்த கிண்டல்தானே வேண்டாம். பேச்சுவழக்கில் மந்திரபுரியைக் குறிப்பிட இருமுறை கூறினேன். அவ்வளவுதான்"

"சரி மேலே கூற வேண்டியதைக் கூறுங்கள் "

"உலகில் நூற்றுக்கணக்கான தேசங்கள் இருக்கின்றன. ஆனால் அவை எதுவுமே மந்திரபுரிக்கு சிறிதும் ஈடாகாது மந்திரபுரி ஒரு மர்மதேசம். அங்கு காணப்படுபவை அனைத்துமே இயற்கைக்கு புறம்பானவை. அங்கு உதிக்கும் சூரியன் கறுப்பாக இருக்கும். காகங்கள் வெண்மையாக இருக்கும். குயிலுக்கு கழுதையின் குரல். எருக்கம் பூ தாழம்பூ தவிர வேறெந்த பூக்களும் அந்த தேசத்தில் பூப்பதில்லை. அங்குள்ள மக்களுக்கு முகத்தில் ஒரு கண். பின்னந்தலையில் ஒரு கண். அங்குள்ள மக்கள் யாவரும் பகல் முழுக்கத் தூங்குவார்கள் இரவில் நடமாடுவார்கள்...."

"மிகவும் பயமுறுத்துகிறீர்கள் விதூஷகரே "

"சொன்னவை சொற்பம். மீதியையும் கேட்டுவிட்டு பயப்படுங்கள் அங்கு யாரும் இறந்து போனால் பிணங்களை எரிப்பதில்லை புதைப்பதில்லை. மற்ற மக்கள் அந்த பிணத்தை விருந்து சமைத்து சாப்பிட்டு விடுவார்கள். எலும்புகளைக் கூட விட்டு வைப்பதில்லை...."

"அஹ்"

"அங்கு பிறக்கும் குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் வைபவம் வினோதமாக நடக்கும். பொதுவாக குழந்தைகளுக்கு பெற்றோரும் பாட்டனாரும் பூட்டனாரும் தான் பெயர் சூட்டுவர். ஆனால் மந்திரபுரியில் ஆவிகள்தான் குழந்தைகளுக்கு பெயர் சூட்டும்..."

"ஓஹோ "

"நமக்கெல்லாம் பரம்பொருள்தான் வழிபாட்டுக்கு உரியவன். ஆனால் மந்திரபுரி மக்களுக்கு கடவுள் மந்திரவாதி அண்டாரகன்தான். மீறினவர்களை கொன்று தின்று விடுவார்கள் "

"கர்மம் கர்மம் " தலையில் அடித்துக்கொண்டாள் சக்தி.

"இன்னும் இருக்கிறது. தொடர்ந்து கேளுங்கள். புறாக்களோ, மயில்களோ, கிளிகளோ வானத்தில் தென்படாது. பொதுவாக மங்களகரமான மிருகங்களோ பறவைகளோ அங்கு வசிக்க முடியாது. வௌவால்கள், அண்டங்காக்கைகள், கழுகுகள்,

ஆந்தைகள், நரிகள், ஓநாய்கள், காட்டு நாய்கள், காட்டு பன்றிகள்தான் வசிக்கின்றன."

"கேட்கவே அருவெறுப்பாய் இருக்கிறது "

"மந்திரபுரிக்கு மன்னர் ஒரு மனிதர் அல்ல; பூனை எட்டடி உயரமுள்ள பூனை, மந்திரவாதி அண்டாரகன்தான் அந்த பூனையை மந்திரபுரி மன்னனாக நியமித்திருக்கிறான். அந்த பூனையின் பெயர் 'மிச்சாங்'. அந்த பூனை மனித பாஷை பேசும் வல்லமை பெற்றது "

"இம் "

"மந்திரபுரிக்கு மந்திரவாதி அண்டாரகன் எப்போதாவது தான் வருவான். எப்போது வருவான் என்பது மகாமர்மம் "

"தொடர்ந்து சொல்லுங்கள் "

"ஆனால் நான் பிரம்மபிரயத்தனம் பண்ணி அண்டாரகன் அங்கு எப்போது வருவான் என்பதை கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். வருடத்தில் ஒரு முறை சித்திரை மாதத்தில் வரும் அமாவாசைக்கு அண்டாரகன் மந்திரபுரி வருவான்.. அந்த அமாவாசை இரவில் உலகம் முழுவதும் உள்ள மந்திரவாதிகள் மந்திரபுரியில் குழுமுவார்கள். விடியல்வரை விசேஷ பூஜைகள் நடக்கும். விடிய சில நிமிடங்கள் இருக்கும்போது மந்திரவாதிகள் அவரவர் தேசத்துக்கு பறப்பர். விடிந்தபின் பார்த்தால் மந்திரபுரி மயான புரியாக காட்சியளிக்கும். நரபலி கொடுக்கப்பட்டு கழுத்து அறுபட்டுக்கிடக்கும் பிணங்களை நாய்களும் நரிகளும் பிணந்தின்னி கழுகுகளும் கடித்துக்குதறிக் கொண்டு இருக்கும் "

நட்டு அருவெறுப்பாய் முகத்தை வைத்துக்கொண்டான்.

"அப்புறம்."

"உங்களின் நல்லநேரம்-அடுத்த சில நாட்களில் சித்திரை மாதத்து அமாவாசை வர இருக்கிறது. நீங்கள் அந்த அமாவாசை இரவுக்குள் மந்திரபுரிக்குள் புகுந்து விட வேண்டும். எந்த வழியில் என்பதனை நானே கூறுகிறேன். நட்டு ஏதாவது ஒரு பெயரில் மந்திரவாதியாக சக்தியும் ஆர்த்தியும் நட்டுவின் சீடர்களாக. பிப் நட்டுவின் மந்திரக் கோலாக."

"யோசனை நன்றாக இருக்கிறது. ஆனால் புதியதொரு மந்திரவாதியாக போனால் அண்டாரகனுக்கு எங்கள் மீது சந்தேகம் வந்து விடாதா?"

"வரும்தான். ஏற்கனவே அங்குசென்று வரும் ஒரு மந்திர வாதியின் உருவத்தில்தான் நீங்கள் மந்திரபுரிக்குள் பிரவேசிக்க வேண்டும். அதற்கு உங்கள் பிப் உதவும் "

"அமாவாசை இரவு பூஜைக்கு அண்டாரகன் தனது கழுகுவாகனத்தில் வருவான். மீண்டும் அவன் அவனது இருப்பிடத்துக்கு பறக்கும் போது நீங்களும் நைச்சியமாக தொற்றிக் கொண்டு போக வேண்டியதான். மந்திரபுரியைப் பற்றி இவ்வளவு தகவல் சொல்லும் எனக்கு அண்டாரகனின் இருப்பிடத்தை மோப்பம் பிடிக்கத் தெரியவில்லை. அண்டாரகனின் இருப்பிடம் அந்த கடவுளுக்கும் தெரியுமா என்பது கேள்விக்குறி "

நட்டு நீண்டநேரம் யோசித்தான்.

"இந்த விஷயத்தில் நாங்கள் கடவுளை முந்திக் கொள்கிறோம். மந்திரபுரிக்கு வழி சொல்லுங்கள் "

இதுவரை சிரித்த முகத்துடன் பேசிக்கொண்டிருந்த விதூஷகர் இருண்டார்.

"மந்திரபுரி பற்றி நான் சொன்ன தகவல்கள் முழுவதும் காதால் கேட்டு சேகரிக்கப்பட்டவை. எனக்கு மந்திரபுரிக்கு வழி சொல்லத் தெரியாது "

திடுக்கிட்டனர்.

"கிழிஞ்சது கிருஷ்ணகிரி " அலுத்துக்கொண்டான் நட்டு.

பிப் தனது இடது உள்ளங்கையை தடவிக்கொண்டது. "மந்திரபுரிக்கு வழி என்ன சொல் "

மாயக்காட்சி உதடு பிதுக்கியது.

"அதற்கான வழியை நான் யோசித்தாலே முழு மறதி வந்து விடுகிறது. மந்திரபுரிக்கான வழியை எந்த மந்திரதந்திரத்தாலும் கண்டறிய முடியாது. உங்களுக்கு உதவ முடியாமைக்கு வருந்துகிறேன் "

இடது உள்ளங்கையை பிசைந்து காட்சியை அழித்தது பிப்.

"பரவாயில்லை. மந்திரபுரிக்கான வழியை போகும் போதே உளவறிந்து கொள்கிறோம் "

நட்டு அண்ட் கோ மன்னரிடமும் விதூஷகரிடமும் மக்களிடமும் அவையோரிடமும் பிரியாவிடை பெற்றுக் கொண்டது.

மூவரும் நாரைகளாக மாறினர்.

பிப் நட்டுவின் முதுகில் ஏறிக்கொண்டது.

வானம் ஏறி பறந்தனர்.

மந்திரபுரி தேடி அவர்களது பயணம் ஆரம்பித்தது.

இதுவரை நட்டு அண்ட் கோ பட்ட சிரமங்களும் உயிராபத்துகளும் சொற்பம் இனி சந்திக்கப் போபவையே அதிபயங்கரம்!

கிராமங்களின் முடிவில் எல்லைக்கல் நட்டிருப்பார்களே-அதனைப்போல ஒரு எல்லைக்கல் நடுவானில் நின்றிருந்தது

அந்த கல்லில் குத்துக்காலிட்டு ஒரு கிழவன் அமர்ந்திருந்தான். அவனின் முதுகில் கூன் விழுந்திருந்தது. தாடி அவனது கால் வரை தழைந்தது.

பறந்து வரும் மூன்று நாரைகள் பக்கம் திரும்பினான் கூன் கிழவன்.

இதயம் வாய்க்கு வர அதிர்ந்தனர்-மூவரும்.

கிழவனின் முகம் முழுவதும் கண்கள் கண்கள்

பம்பம் பபம் பபம் பம்பா!

○



# 28

நட்ட நடுவானில் ஒரு எல்லைக்கல். அந்த எல்லைக் கல்லில் குத்துக்காலிட்டு அமர்ந்திருக்கும் ஒரு கூன் கிழவன். அந்த கூன் கிழவனின் முகம் முழுவதும் கண்கள். சிறுசிறு வட்டங்களாய் நூற்றுக்கும் மேற்பட்ட ஈக்களைப் போன்ற கூட்டுக்கண்கள். அவனது கால்களிலும் கைகளிலும் ஐந்துஐந்து விரல்களுக்குப் பதிலாக நான்கு நான்கு விரல்கள். விரல் நுனிகளில் கொக்கிகளாய் நகங்கள்.

கிழவன் முழு நிர்வாணமாய் இருந்தான். அவனது கழுத்தும் வயிறும் பெட்பாட்டில் போல் உள்ளிருப்பதை அப்பட்டமாய் வெளிச்சம் போட்டுக்காட்டியது.

கூன் கிழவனின் வயிற்றுக்குள்-

ஏராளமானபறவைகள்!

சில மனிதர்கள்!

வயிற்றுக்குள்ளிருந்தவை, குழகுழப்பாய் பிசுபிசுப்பாய் ஒன்றோடு ஒன்று ஒட்டி குழைந்து உருமாறிய ஜவ்வரசி வடகம் போல காட்சியளித்தன.

இந்த கூன் கிழவன் மனிதனா? நடுவானில் எல்லைக் கல்லை பற்றித்தொங்கும் அபூர்வ பல்லியா?

மூன்று நாரைகளும் பறப்பதை நிறுத்தின. அந்தரத்தில் அப்படியே நின்று கிழவனை ஆராய்ந்தன.

கூன் கிழவன் சுவர் பல்லி போல் 'கெவுளி' கொட்டினான்.

ரிக் ரிக் ரிக்!

பிப்புக்கு காட்சி அமைப்பு சுவாரசியமாகத் தெரிந்தது. முகத்தைக் குறும்பாக வைத்துக் கொண்டது. தனது வாய்க்குள் நாக்கைச் சுழற்றி அடித்துக்கொண்டது.

இடது உள்ளங்கையைத் தடவியது.

"மாயக்காட்சியே இந்த கூன் கிழவன் உண்மையில் யார்?"

மாயக்காட்சி பல நொடிகள் மௌனம் சாதித்தது. "இந்த கூன் கிழவன் யார் என்பதை நான் இப்போதே உங்களுக்குக் கூறிவிட்டால் உங்களது சாகசம் உப்பு சப்பில்லாமல் போய்விடும். நடப்பதை பொறுத்திருந்து பாருங்கள் "

இடது உள்ளங்கையை பிசைந்து மாயக்காட்சியை அழித்தது பிப்.

தன்னையே மூன்று நாரைகளும் ஒரு பச்சை குள்ள உருவமும் முறைப்பதை பதட்டமாய் கவனித்தான் கூன் கிழவன்

கிழவனின் கண்களில் கொடூரம் மிளிர்ந்தது.

ப்பூக்கும்!

அடுத்த நொடி அந்த விபரீதம் நிகழ்ந்தது

சாதாரண பல்லிகளை விட தவளைகளை விட நீளமான எலாஸ்டிக் நாக்கைப் பெற்றிருந்தான் கூன்கிழவன்.

வண்ணத்துப்பூச்சி தனது தேன் உறிஞ்சும் குழலை சுருட்டி வைத்திருப்பது போல நாக்கை சுருட்டி வைத்திருந்தான் கூன் கிழவன். வாய்க்குள் நாக்கு டார்டாய்ஸ் கொசுவத்தி சுருள் போல காட்சியளித்தது. நாக்கு விடுபட்ட ஸ்பிரிங் போல நீநீண்டு மூன்று நாரைகளையும் குண்டுக்கட்டாய் சுருட்டியது. கபளீகரம் செய்யத் துடித்தது. சுருட்டியவற்றை கிழவன் வாய்க்குள் இழுத்தான். பிப் த்னியே குதித்துப் தப்பித்திருந்தது.

பிப் நொடி தாமதிக்காமல் ஒரு நீண்ட வாளை மந்திரத்தால் வரவழைத்தது

'விஷ்க் '

வாளை ஆக்ரோஷமாய் உயர்த்தி இறக்கியது.

மூன்று நாரைகளைச் சுருட்டிய நாக்கு வெட்டுப்பட்டு தனியே விழுந்தது. தனியே விழுந்த கிழவனின் நாக்கிலிருந்து நாரைகள் விடுபட்டன. வெட்டுப்பட்ட நாக்கு பல்லி வால் போல துள்ளத் துடித்தது. கிழவனின் வாயிலிருந்து இரத்தம் நீர்வீழ்ச்சியாய் கொட்டியது.

எல்லாம் முப்பதே நொடிகள்தான்!

என்ன ஆச்சரியம்?

வெட்டுப்பட்ட நாக்கு பொரபொரவென பழைய நீளத்துக்கு வளர்ந்தது. வளர்ந்த வேகத்துக்கு கிழவனின் நாக்கு மீண்டும் மூன்று நாரைகளை சுருட்டி விழுங்க யத்தனித்தது.

பிப் சோர்ந்து போகின்ற குட்டிச்சாத்தானா? ம்ஹிம் சிறிதும் சளைக்காமல் இரண்டாவது முறையும் கிழவனின் நாக்கைத் துண்டாடியது.

திரும்ப நாக்கு முளைத்தது.

-கதையில் அர்ச்சனா குறுக்கிட்டாள்.

"தாத்தா இந்த பல்லிகளுக்கு வால் அறுந்திட்டா திரும்ப முளைச்சிருது. ஆனா மனுசங்களுக்கு ஒரு விரல் விபத்துல போய்ட்டாக் கூட திரும்ப முளைக்கமாட்டிங்குது. கடவுளுக்கு ஏன் இந்த ஓரவஞ்சனை தாத்தா!"

"ஓரவஞ்சனைன்னு நீ சொல்றது தப்பு. கடவுள் ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒவ்வொரு மாதிரி சலுகைகளை அளிச்சிருக்கார். அதாவது உயிரினங்களை ஒன்றைப் போல் ஒன்று இல்லாமல் வேற்றுமைப்படுத்தி இருக்கிறார். அதனால்தான் உலகம் பார்க்க சுவாரசியமா இருக்கு. பல்லி விஷயத்துக்கு வருவம். பல்லி தனது வாலை அறுத்து விட்டுக்கிறது-தனது எதிரியைக் குழப்ப. பல்லி 'ஊர்வன' வகையைச் சேர்ந்தது. இப்படி அறுந்த வால் வளர்ற அம்சத்துக்கு ஆங்கிலத்தில் 'ரீ-ஜெனரேஷன் பேக்டர்' என்று கூறுவார்கள். எதிர்காலத்தில் விஞ்ஞானிகள் பல்லிகளின் இந்த அம்சததை பிரித்து எடுத்து மனிதனுக்கு பொருத்தக்கூடும். அப்போது மனிதனும் இழந்த உறுப்புகளை வளரப் பெறுவான் " மீண்டும் கதைக்குள் போனார் தாத்தா.

-நாரைகள் வடிவிலிருந்த மூவரும் மனித உருவத்துக்கு மாறினர்.

நட்டு ஆற்றாமையுடன் கூவினான்.

"பிப்பு இதென்ன கூத்து? கூன்கிழவன் எங்களை விழுங்க- நீ அவனது நாக்கை வெட்டித் தள்ள- போரடிக்குதுபா "

நாரைகள் மனித உருவத்துக்கு மாறி ஒரு பச்சை நிற குட்டிச்சாத்தானுடன் கொஞ்சிக் குழாவுவதை பார்த்து விட்டான் கூன் கிழவன்.

கொடூரமான அவனது முகம் மாறியது. எதனை எதிர்பார்த்தானோ அதுவே நடப்பதாக உணர்ந்தான் கூன் கிழவன்.

"இந்த எல்லைக்கல்லில் ஏறி வாருங்கள் " அன்பொழுக அழைத்தான் கிழவன்.

"இதென்ன திடீர் பாசம்? நாங்கள் நம்பமாட்டோம் எதற்கு பக்கத்தில் அழைக்கிறாய்? வசதியாக வாரிச்சுருட்டி விழுங்கவா?"

எதிர்மறையாய் தலை ஆட்டினான் கிழவன். முகம் இளகியது. முகத்திலிருந்த அத்தனைக் கண்களும் அழுதன.

"என்னை நம்புங்கள் குழந்கைளே இந்த அபாக்கியவானை நம்புங்கள் உங்களை விழுங்க மாட்டேன்... மேலேறி வாருங்கள் "

அரை நம்பிக்கையுடன் எல்லைக்கல்லில் ஏறினர். மிக பக்கத்தில் சென்றனர்.

"வந்து விட்டோம். இப்போது சொல். என்ன?"

"யார் நீங்கள்? எந்தக்காலத்திலிருந்து வருகிறீர்கள்?"

"புத்திசாலித்தனமான கேள்வி, நாங்களும் கேட்கிறோம். எல்லைக்கல்லில் நின்று பறந்து போகும் ஜீவராசிகளை விழுங்கும் பல்லிமனிதன்-நீ யார்?"

"நான் யார் என்பதை பற்றி அறிய அவசரப்படாதீர்கள். நானே தகுந்த சமயத்தில் கூறுவேன். பிடிவாதம் பண்ணாமல் முதலில் உங்களைப் பற்றிக் கூறுங்கள் "

நட்டு பிப்பை பார்த்தான். பிப் சொல்ல சம்மதம் தெரிவித்தது சமிக்ஞையால். நட்டு முன்கதைச் சுருக்கத்தை ஒப்பித்தான்.

அவ்வளவுதான்.

கூன்கிழவனின் முகத்தில் யாரோ சூரியனைக்கட்டி வைத்தார்கள்.

பிரகாசித்த முகம் பின் நவரச பாவங்களில் தத்தளித்தது.

பாதி வருத்தமும் பாதி சந்தோஷமும் கொண்டு அங்கலாய்த்தான் கூன்கிழவன். "ஹ. எல்லாம் அவனது ஊழ்வினை "

"எவனின் ஊழ்வினை?" வினவினான் நட்டு

-கதையில் குறுக்கிட்டான் ரகு.

"ஊழ்வினைன்னா என்ன தாத்தா?"

முனைப்பானார் தாத்தா. "சின்ன குழந்தைகங்க நீங்க. நான் சொல்றது உங்களுக்கு முழுசும் புரியுதோ என்னமோ? இருந்தாலும் சொல்ரேன். இந்துமத கோட்பாட்டின் படி மனிதரின் வாழ்க்கையை அவர்களின் நல்லதுகெட்டதுகளை பிரம்மன் எழுதிய தலைவிதியே தீர்மானிக்கிறது எனும் நம்பிக்கை உண்டு. தவிர மனிதருக்கு ஏழு பிறவிகள்உண்டு என இந்து மதம் கூறுகிறது. போன பிறவியில் ஒரு மனிதன் செய்த பாவத்துக்கு இந்தப்பிறவில் அந்த மனிதனுக்குத் தண்டனை உண்டுன்னும் இந்துமதம் சொல்லுது. கூன் கிழவன் சொன்ன வாக்கியத்துக்கு அர்த்தம்- 'அவன் செய்த பாவம் அவனை தொடர்ந்து துரத்துகிறது '-என்பதே ஆகும் "

குழந்தைகள் ஆர்வமாய் கேட்டனர். "மதம் சொல்றது இருக்கட்டும் தாத்தா உங்களுக்கு முற்பிறவி மறுபிறவி இதுல எல்லாம் நம்பிக்கை இருக்கா?"

"எதிர்கேள்வி கேக்க ஆரம்பிச்சிட்டீங்க. வெரிகுட் வெரிகுட். நம்பிக்கை உண்டு குழந்தைகளே "

"ஓவ் "

"மனிதன் செய்யும் சிறுசிறு தப்புகளுக்குத் தண்டனை இந்த பிறவிலயே கிடைச்சிருது. பெரிய தப்புகளுக்கு தண்டனை அடுத்த பிறவியில் கிடைக்குது. பிறரை கோள் சொல்றவன் மரப்பல்லியா பிறக்கிறான். கொள்கைப் பிடிப்பு இல்லாதவன் குரங்காக பிறக்கிறான். பிறரை கடுமையாக சொற்களால்பழிப்பவன்

தெருநாயாக பிறக்கிறான். சோம்பேறி நத்தையாக. இப்படி இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகும் "

"உங்க வாதத்துக்கு விஞ்ஞானச் சான்று உண்டா தாத்தா?"

"சிலபல அங்கும் இங்குமாய் உண்டு. தவிர நமது புராணங்கள் இதிகாசங்கள். ஐம்பெரும் காப்பியங்கள் அனைத்துமே மனிதனின் முற்பிறவி மறுபிறவிகளை ஆதரிக்கின்றன. இராவணனுக்கு சீதை முந்தின பிறவியில் மகள் என்று கூட கிளைக்கதை உண்டு "

"பாவம் செய்யாத மனுசனுக்கு மறுபிறவி உண்டா?"

"பெரும்பாலும் இருக்காது. இருந்தாக்கூட அது சிறப்பான வாழ்க்கையா அமையும். பிறவி இல்லாதவர்கள் கடவுளோடு ஒளி வடிவில் ஐக்கியம் ஆகி விடுவார்கள் "

"தாத்தா உங்களுக்கு மறுபிறவி இருக்குமா, இருக்காதா?" வினவினாள் புவனா.

தாத்தா நெட்டுயிர்த்தார். "தெரியலையேம்மா.... முதல்ல நான் நல்லவனா, கெட்டவனான்னே தெரியலையேம்மா... தெரிஞ்சாத் தானே மறுபிறவி பத்தி தெளிவா யோசிக்க முடியும்"

"இந்த கடவுள் ரொம்ப மோசம் தாத்தா " புகார் கூறினாள் அர்ச்சனா.

"எப்படிம்மா சொல்ற?"

"மனுசனை படைச்சு வியாதிகளை படைச்சு ஆசைகளை படைச்சு அவனை கெட்டவன் ஆக்கிறதை விட மனுசனை கடவுள் படைக்காமயே இருந்திருக்கலாமில்ல? அல்லது எந்த மனுசனையும் கெட்டவன் ஆகவிடாம தனது சக்தியால தடுத்திருக்கலாமில்ல?"

"இந்த மாதிரி கேள்விகளுக்கு நெத்தில அடிச்சமாதிரி பதில் இல்லவே இல்ல அர்ச்சனா "

"சாமிகீமி கடவுள்கிடவுள் முற்பிறவி கிற்பிறவினு பேசி அறுக்காதிங்க. கதைக்குள்ள போங்க தாத்தா " என்றான் வசந்த்.

"வசந்த்துக்கு மறுபிறவி உண்டுனா என்னவா பிறப்பான்?"

வசந்த்தே குறுக்கிட்டான்.

"யாரும் கன்னாபின்னான்னு கற்பனை பண்ணி உளர்றாதிங்க. நானே சொல்றேன். ஆப்பிரிக்கால குண்டு யானையா பிறந்து காட்ல ஜாலியா சுத்திக்கிட்டு இருப்பேன் "

குழந்தைகள் அனைவரும் சிரித்தனர்.

இந்த சந்தோஷமான மூடுடன் தாத்தா கதைக்குள் பிரவேசித்தார்.

-நட்டுவின் கேள்விக்கு நிறுத்தி நிதானமாக அழுத்தம் திருத்தமாக பதில் அளித்தான் கூன்கிழவன்.

"மந்திரவாதி அண்டார்கனின் ஊழ்வினைதான் அவனை துரத்துகிறது என்றேன் "

அனைவரும் ஆனந்தமாய் அதிர்ந்தனர்.

"அப்படி என்றால் நீ அண்டாரகனின் ஆள் இல்லையா?"

"இல்லை "

"பின்னே ஏன் அப்பாவி பறவைகளை மனிதர்களை பல்லி போல் விழுங்குகிறாய்?"

"அந்த நிலைக்கு என்னை அண்டாரகன் சபித்து விட்டான்"

"ஏன் சபித்தான்?"

"நான் அவனுக்கு எதிராக செயல்பட்டதினால் சபித்தான்"

"அப்படியென்றால் நீ அவனுக்கு அருகில் சில காலம் இருந்தாயா?"

"ஆம். பல காலம் இருந்தேன். அப்போதெல்லாம் அவனுக்கு முழுமையாக உதவி இருந்திருக்கிறேன். சமீபத்தில்தான் அவனுடைய நடவடிக்கை பிடிக்காமல் அவனை நேருக்குநேர் எதிர்த்தேன் "

"அவனுடைய எந்த நடவடிக்கை உனக்கு பிடிக்கவில்லை?"

"ஏழு உலகங்களிலுள்ள தேசங்களுக்கு போய் இளவரசிகளை கடத்தி வர ஆரம்பித்தான். அறிவுரை கூறினேன். அலட்சியம்

செய்தான். இதுவரை 99 இளவரசிகளை கடத்தி இருக்கிறான். இன்னும் ஒரே ஒரு இளவரசிதான் பாக்கி "

"இளவரசிகளை கடத்தி திருமணம் செய்து கொள்கிறானா?"

"இல்லை. இளவரசிகளின் எண்ணிக்கை நூறானாதும் நரபலி கொடுத்து கடவுளின் சக்தியை பறிக்க இருக்கிறானாம்"

"சாத்தியமா?"

"மந்திரதந்திர இயல்களின் படி சாத்தியமே "

"கடவுளே "

"கடவுளுக்கு எதிரான நரபலி மகாபாவம், என போராடினேன். கோபமுற்று என்னை சபித்து இந்த எல்லைக்கல்லில் கூன்கிழவனாக நிறுத்தி இருக்கிறான். அவனுக்கு அழிவுகாலம் வந்து விட்டது. அதுவும் சின்னஞ்சிறு குழந்தைகளான உங்கள் மூலம். அவனை வெல்லும் உபாயம் இனி நான் கூறுகிறேன். கடவுளுக்கு சவால் விடும் சக்தி எந்த காலத்திலும் இருக்கக்கூடாது. கூடுதலாக நூறு அப்பாவி இளவரசிகளின் உயிரை அந்த அயோக்கியன் அண்டாரகன் பறித்து விடக்கூடாது "

"அவனுக்கு எதிராக செயல்படும் உன்னைக் கொல்லாமல் அண்டாரகன் சபித்தது ஏன்?

வெறுமையாய் சிரித்தான் கூன்கிழவன்.

"ஏன்? ஏனென்றால் நான் அவனின் உடன்பிறந்த இளைய சகோதரன் வினு "

நட்டு குழுமம் அதிரடியாக ஸ்தம்பித்தது.

O

# 29

“நீங்கள் மந்திரவாதி அண்டாரகனின் தம்பியா?" இதுவரை கூன்கிழவனை 'நீ வா, போ,' வென அழைத்த நட்டு குழுமம் இப்போது மரியாதையாய் 'நீங்கள்' என அழைத்தது.

"சொந்த தம்பியே அண்ணனுக்கு எதிராகவா? நம்ப முடியவில்லையே இது ஒன்றும் அண்டாரகன் செய்யும் சூழ்ச்சி இல்லையே?" கேள்விமேல் கேள்வியை அடுக்கினான் நட்டு

வெறுமையாக சிரித்தான் வினு. "அம்மாவும் மகனுமாய் இருந்தாலும் வாயும்வயிறும் வேறல்லவா? ஒரே கையில் இருந்தாலும் ஐந்து விரல்களுக்குள்ளேயே உயரத்திலும் தடிமனிலும் வித்தியாசம் உண்டல்லவா? ஒரே மரத்தில் கனிந்தாலும் கனிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவை காட்டுவதில்லையா?"

"வினு போதும் உங்கள் உதாரணங்கள். எங்களை திணறடிக்கின்றன."

"வினு உங்கள் மீதான சாபத்தை விளக்கிக் கூறுங்கள்."

"என் அண்ணன் அண்டாரகனின் சாபம் வித்தியாசமானது. இதைவிட அவன் என்னைக் கொன்று இருக்கலாம். அவனை அழிப்பதற்கு நான் உங்களுக்குத் தேவை என்பதால் விதி அவனை அப்படி சிந்திக்க வைத்தது போலும் அவனுடைய சாபத்தின் பின்பகுதி மிகமிகக் கொடியது குழந்தைகளே."

"பிற்பகுதி என்ன?"

"'நான் எந்த பின்னணியில் பல்லி மனிதனாக நின்றிருக்கிறேனோ அதே காட்சி அமைப்பில் யுகம் யுகமாய் நிற்க வேண்டும். என்னை இந்த நிலையிலிருந்து ஒரே ஒரு குண்டுமணி இடம் மாற்றி வைத்தாலும் நான் இறந்து விடுவேன்'-இதுதான்

சாபத்தின் பின்பகுதி. என்னதான் அந்தகாரத்தில் நின்றாலும் நிர்வாணமாய் நிற்க மனம் கூசுகிறது குழந்தைகளே "

நட்டு குழுமம் 'உச்' கொட்டியது.

"குழந்தைகளே நீங்கள் சித்திரை அமாவாசையில் நடக்க இருக்கும் மந்திரவாதி மாநாட்டில் கலந்துகொள்ள நான் யோசனை கூறுகிறேன் "

"உஸ் அப்பாடா தப்பித்தோம் " நெட்டுயிர்த்தான் நட்டு.

"என்ன ஆனது சிறுவனே... உனக்கு?"

"இல்லை... இதற்குமுன் எங்களுக்கு உதவி செய்த மலைமாளிகை சூன்யக்காரக்கிழவி விடுகதை போட்டு விடுவிக்க சொன்னாள். மாயாபுரி விதூஷகனோ பரமபதம் ஆடி வெற்றி பெறச் சொன்னான். நீங்களும் எதாவது போட்டி வைத்துதான் மந்திரபுரி மாநாட்டில் கலந்து கொள்ள யோசனை தருவீர்களோ என பயந்தேன். போட்டி வைத்தாலும் கலந்து வெற்றி பெற நாங்கள் தயார் "

கூன்கிழவன் சிரித்துவிட்டான்.

"வேடிக்கையாக பேசுகிறாய். மகிழ்ச்சியாக உள்ளது. நான் போட்டி எதுவும் வைக்கப் போவதில்லை. நேரடியாக உதவிதான் "

பிப் குறுக்கிட்டது.

"வினு உங்கள் உதவி இந்த சந்தர்ப்பத்துடன் முடிந்து விடக்கூடாது. அண்டாரகனை அழித்தொழிக்கும் வரை நீங்கள் எங்களுடன் வரவேண்டும் "

"அண்டாரகனின் சாபத்தின்படி சாத்தியமல்லவே?"

"சாத்தியப்பட வைக்கிறேன் "

"எப்டி பிப்பு?"

பிப் இடது முகவாயைச் சொறிந்து கொண்டது. குட்டிக் கரணம் அடித்தபடி யோசித்தது.

"ஆஹா இதுதான் சிறந்த யோசனை நட்டு "

"அது தான் எப்டி பிப்பு?"

"இப்போது வினு நின்றிருக்கும் காட்சி அமைப்பை பாக்டீரியோ அளவுக்கு சுருக்கி பாதுகாத்துக் கொள்வோம் யாரின் ஊன, மந்திரக்கண்களுக்கும் வினு தட்டுப்படாதே தவிர வினுவின் கண்களுக்கு அனைத்தும் தெரியும். வினு அவ்வப்போது கூறும் ஆலோசனைகளும் நம் காதுகளுக்கு மட்டும் கேட்கும் "

"சரி ...வினு தான் சபித்தபடி எல்லைக்கல்லில் நிற்கிறாரா இல்லையா என்று அவ்வப்போது பார்த்துத் தொலைப்பானே அண்டாரகன்?"

"கவலை வேண்டாம். வினு கூன்கிழவனாய் எல்லைக் கல்லில் நிற்பதான மாயக்காட்சியை உருவாக்கி நிறுத்தி விடுகிறேன். அந்த மாயக்காட்சி சாமர்த்தியமாய் அண்டாரகனை ஏமாற்றிக் கொண்டே இருக்கும் "

நட்டு குழுமம் ஆனந்தித்தது.

பிப் கடுமையாக மந்திரங்களை முணுமுணுக்க ஆரம்பித்தது.

மந்திரத்தால் ஒரு குறுவாள் வரவழைத்தது.

நமது வீட்டு சுவர்களில் இருக்கும் ரஜினிகாந்த் ப்ளோஅப்பை பிளேடால் கீறி எப்படி எடுப்போமோ-அதே போல வினு நிற்கும் காட்சி அமைப்பைக் கீறி எடுத்தது.

அப்பாடி எவ்வளவு பெரிய செவ்வகம் நூறு மைல் நீளமும் நாற்பது மைல் அகலமும் கொண்ட செவ்வகம் அத்தனை மைல் நீளத்துக்கு பிப்பின் கை சளைக்காமல் நீண்டது. கீறுவதுதான் எளி தாகத் தெரிந்தது என்கிறீர்களா? இல்லை வானமும் காற்று மண்டலமும் கூட கேக் போல வெட்டுப்பட சம்மதித்தது.

வெட்டிய செவ்வகத்தை தனது இடதுகை சுண்டுவிரலில் நிறுத்தி மந்திரங்களை முணுமுணுத்து 'பட் பட்டாங்' என கூவியது பிப்

செவ்வகம் நொடிக்கு நொடி சிறுத்துக்கொண்டே போனது.

சின்ன செவ்வகமாய்.....

அதனைவிட மிகச் சின்ன செவ்வகமாய்....

சாதாரண நுண்ணோக்கியால் கூட பார்க்க முடியாத செவ்வகமாய்....

அதனை எடுத்து மந்திரப்பேழையில் பாதுகாத்தது பிப்.

இப்போது மீண்டும் மந்திரங்களை முணுமுணுத்து இரு கைகளை விசிறியது.

காட்சி அமைப்பில் எந்த செவ்வகத்தை பிப் வெட்டி எடுத்ததோ அதே மாதிரியான போலி செவ்வகம் ஒன்று கச்சிதமாய் வானத்தில் போய் ஒட்டிக்கொண்டது.

'பப்பச்சசக் '

அதைவிட ஆச்சரியம்...

போலி கூன் கிழவன் பறந்து வரும்போகும் பறவைகளை கபக் கபக் என்று விழுங்கிக் கொண்டிருந்தான்.

ஏமாற்றுவேலையை வெற்றிகரமாக செய்து முடித்த மகிழ்ச்சியில் காணப்பட்டது பிப்.

"இப்போது சந்தோஷமா வினு?"

மந்திரப்பேழையில் இருந்த வினு பேசினான். "சந்தேக மென்ன? ஆமாம் "

"இனி ஆற அமர சாவகாசமாய் உங்களது யோசனைகளைக் கூறலாம். கேட்டுச் செயல்பட ஆய்த்தமாய் உள்ளோம் "

"மந்திரிபுரி மாநாட்டுக்குள் நீங்கள் மூவரும் ஒரு மந்திரவாதியாக மந்திரவாதியின் இரு உதவியாளர்களாக ஊடுருவது உலகசிரமம். அநியாயமாய் அண்டாரகனின் கைகளில் சிக்கிக் கொள்வீர்கள் "

"பின்னே?"

"மாநாட்டில் கலந்து கொள்ளும் மந்திரவாதிகளின் எண்ணிக்கை சரியாக இருநூறு மட்டும்!"

"சரி "

"அந்த இருநூறு மந்திரவாதிகளில் ஒருவன்தான் வசந்தபுரியைச் சேர்ந்த சித்திரன் அவன் நட்டு அளவுக்கு குள்ளமானவன். அவனிடமும் இரு சீடர்கள் இருக்கிறார்கள். மாநாட்டுக்கு 'அவனாக' போவது சாலச்சிறந்தது. ஆனால்...."

"என்ன ஆனால்?"

"அவனைப் போலவும், அவனது சீடர்கள் போலவும் மாறுவேடம் பூணுவது உசிதமான காரியமல்ல. முதலில் அவனையும் அவனது சீடர்களையும் சிறைப்பிடிக்க வேண்டும். அந்த பணியை பிப்தான் செய்து முடிக்கவேண்டும். அவர்களை சிறைபிடித்த பின் அவர்களிடமிருந்து நான் குறிப்பிடும் ஆறு அம்சங்களை திருடி வரவேண்டும். திருடி வந்த அம்சங்களை நட்டு, சக்தி, ஆர்த்திக்கு ஏற்ற வேண்டும் "

"என்னென்ன அம்சங்கள்?"

"அவர்களது உருவங்கள் "

"ம் "

"நடை உடை பாவனை "

"ம் "

"குரல் அமைப்பு "

"சரி "

"அவர்களது வியர்வை வாசனை "

"ஓ "

"உதட்டு, கை ரேகைகள் "

"ம்ம் "

"அவர்களின் ஞாபகத்திரள்கள் "

"இம் "

"மூவரின் ஆறு அம்சங்களை நட்டு, சக்தி, ஆர்த்தி உடலுக்குள்ளும் மூளைக்குள்ளும் ஏற்றவேண்டும் பிப். அவ்வாறு ஏற்றிய பின் நட்டு சுயமாயும் சிந்திக்கலாம். குள்ள மந்திரவாதி சித்திரனாயும் சிந்திக்கலாம். சீடர்களாய் மாறப்போகும் சக்திக்கும் ஆர்த்திக்கும் கூட அப்படித்தான். மொத்தத்தில் நட்டு குழுமம் இரட்டை ஆளுமையுடன் மந்திரபுரி மாநாட்டில் கலந்து கொள்ளலாம் " என்றான் வினு அல்லது கூன்கிழவன்.

"வாவ்! வல்லியதொரு யோசனையாக்கும். மந்திரவாதி அண்டாரகனுக்கு சந்தேகமே வராது " ஆர்ப்பரித்தாள் ஆர்த்தி.

வினு, "அவசரப்படாதீர்கள். சித்திரனின் ஆறு அம்சங் களைத் திருடுவது அவ்வளவு எளிதான காரியமல்ல..."

பிப் ஆமோதித்தது.

"சித்திரன் வசிப்பது வசந்தபுரியில். குள்ள மந்திரவாதி சித்திரனின் மீது வெகுநாட்களாக ஒரு சாபம் உள்ளது. ஒரு தடவை அவன் ஒரு தேன்கூட்டை புகை மூட்டிக் கலைத்து ஆயிரக்கணக் கான தேனீக்களைக் கொன்று விட்டான். அந்த தேன்கூடு சித்திரனுக்கு மந்திரம் சொல்லிக்கொடுத்த குருமந்திரவாதிக்குச் சொந்தமானது. உடனே மந்திரவாதி சித்திரனை 'ஒரு தேனீயால் அந்தி நேரத்தில் கொட்டப்பட்டு இறப்பாய் 'என சபித்து விட்டார் இந்த சாபத்தை நடைமுறைப்படுத்த இப்போது தங்க சந்தர்ப்பம் வந்துள்ளது "

அனைவரும் கூர்ப்பாகினர்.

"பிப்பு உனக்கான பணிதான் இது. மனோவேகத்தில் வசந்தபுரிக்கு புறப்படு. வசந்தபுரியை நெருங்கியதும் தேனீயாக வடிவெடு! வாயில் மகரந்தத்தூளும் தேனும் அதிபயங்கர விஷமும் கலந்த திரவத்தை ஆயத்தமாக வைத்துக்கொள். பகலும் இரவும் சந்தித்துக்கொள்ளும் அந்திநேரத்துக்குக் காத்திரு. அந்தி வந்ததும் நேராக சித்திரனிடம் பறந்துபோ."

"போகிறேன் "

"போனதும் அவனது நாசிக்கு நேராக பறந்து தேனும் விஷமும் கலந்த திரவத்தைத்துப்பு. தடுக்கவரும் இரு சீடர்களையும் நெற்றியில் கொட்டு. மூவரும் மயக்கநிலைக்குப் பாய்வர். எந்த தாமதமும் பண்ணாமல் மூவரின் ஆறு அம்சங்களைத திருடு "

"சரி "

"அம்சங்கள் திருடப்பட்டப்பின் மூவரின் உடல்கள் கரும்பு சக்கைக்கு சமம். அவர்களை சிறைப்படுத்துவதற்கு பதிலாக அந்தி மாறுவதற்குள் அவர்களை எரித்து சாம்பலாக்கி விடு. சாம்பலை ஒரு கண்ணாடி குடுவைக்குள் இட்டு கடலுக்குள் எறி! போன பணி முடிந்ததும் அதே மனோவேகத்தில் இங்கு திரும்பி வந்துவிடு "

"கேட்க மிகமிக எளிதாக உள்ளதே "

"பிப்! குள்ள மந்திரவாதி சித்திரனை சாதாரணமாக நினைத்துவிடாதே. நீ வண்டின் வடிவு எடுத்து அவனது குகைக்குள் போவது குதிரை முட்டை என்றால் அவனது மூக்கின் அருகில்போய் நீ விஷம் உமிழ்ந்து அவனை மயக்கப்படுத்துவது யானைமுட்டை. உனது பயணநிரலில் ஒரு நொடி முன்னே பின்னே பிசகினாலும் வண்டின் வடிவிலேயே சித்திரனால் கொல்லப் படுவாய் "

பேச யத்தனித்த பிப்பை அடக்கினான் வினு. "சித்திரன் உன்னைவிட மந்திர சக்தி அதிகம் உள்ளவன். அலட்சியமும் ஆணவமும் பிறர் பலத்தைக் குறைவாக மதிப்பிடும் குணமும் மகாவீரர்களையே வீழ்த்திவிடும்..."

"நீங்கள் கூறும் அறிவுரை நியாயமானதே "

"பிப் நீ வசந்தபுரி எல்லைக்குள் பிரவேசிக்கும் போது 'தேசக்கா வட் புப்பா ' எனும் மந்திரத்தை பதிமூன்று தடவை உச்சரிக்க வேண்டும்..."

"அப்படி உச்சரித்தால்?" என்றான் நட்டு.

"தனது எல்லைக்குள் ஒரு 'சக்தி' தேனீ வடிவெடுத்து தன்னைக் கொல்ல வருவதை மந்திரசக்தியால் அறியமாட்டான் சித்திரன்... நீ உச்சரிக்கும் மந்திரம் அவனது கண்களை மட்டுமல்ல ஞானதிருஷ்டியையும் மறைத்து விடும் " என விவரித்தான் வினு.

"வேறு எதாவது தகவல்?" சக்தி.

"இல்லை. பிப் புறப்பட வேண்டியதுதான் "

நட்டு குழுமமும் வினுவும பிப்பை வாழ்த்தி அனுப்பினர்.

பிப் வணங்கி விடைபெற்றது.

'உய்க் '

தென்மேற்கு திசை நோக்கி மனோவேகத்தில் பறந்தது பிப்.

அஃதோ வசந்தபுரி

வசந்தபுரியின் எல்லையை அடைந்ததும் வினு கூறிய மந்திரத்தை 13 முறை உச்சரித்தது பிப்.

காற்று மண்டலத்திலுள்ள சித்திரனின் மந்திரக் கண்காணிப்பு மறைந்தது.

அழகிய கனத்த கறுத்த வேலைக்காரத்தேனீயாக மாறியது பிப்.

சூரியன் கடலுக்குள் அமிழ்ந்து போக-

நிலா வானத்தின் முதல்படி ஏற-

அந்தி நேரம் உருவானது.

குகைக்குள் தேனீ பறந்தது.

நிஷ்டையில் அமர்ந்திருந்தான் சித்திரன்.

'ஆஹா மிகவும் நல்லதாகப் போயிற்று '

நொடி வீணாக்காமல் சித்திரனின் மூக்குக்குப் பறக்க-

தேனீயின் இறக்கையடிப்பு காதில் கேட்டு சித்திரன் விழிக்க-

சித்திரன் வெறித்தனமாய் ஒரு வட்டத்தகடு எடுத்து தேனீயை மொத்தினான்.

'மடேர் '

கண்களுக்குள் பொய் நட்சத்திரங்கள் பறக்க-

மயங்கி தரையில் சொத் என்று விழுந்தது தேனீ வடிவில் இருந்த பிப்.

இன்னும் கோபம் அடங்காமல் இம்முறை நசுக்கிக் கொன்று விடுவது என்ற முடிவுடன் வலது காலை யானை போல் தூக்கினான் சித்திரன்

பிப் நசுங்கி சட்னி ஆகத் தயாரானது!

○

# 30

***பி***ப் தேனீ வடிவத்துடன் அண்ணாந்து பார்த்தது.

மந்திரவாதி சித்திரன் மதங்கொண்ட யானை போல் காலைத் தூக்கியிருந்தான்.

பற்களை கொலைவெறியாய் கடித்தபடி காலை தரையில் மிதித்தான்.

சித்திரனின் கால் தன்னை நசுக்க கால் நொடி இருக்கையில்-

தனது சக்தி எல்லாம் திரட்டி உந்தி மேலேறி பறந்தது பிப்!

பிப் இல்லாத வெறும் தரையை ஆங்காரமாக மிதித்தான் சித்திரன்

அட சட்...

எழுந்து பறந்த தேனீ ஒரு நொடியும் தாமதம் பண்ணாமல் சித்திரனின் மூக்குக்கு பாய்ந்தது. பாய்ந்த வேகத்தில் தேனீ சித்திரனின் மூக்கில் மோதியது. குட்டிக்கரணம் போட்ட தேனீயின் வாய்க்கு நேராக சித்திரனின் நாசித் துவாரங்கள் வகையாய் அமைந்தது.

அவ்வளவுதான்...

தேனீ வாயில் ஊறவைத்திருந்த தேனையும் விஷத்தையும் மகரந்தத்தூளையும் சித்திரனின் நாசித்துவாரத்துக்கு துப்பியது.

சித்திரனின் மூக்குக்கும் தேனீயின் வாய்க்கும் திரவப்பாலம் அமைந்தது.

பொள்ச்

விஷத்தேன் சித்திரனின் நாசிக்குள் பயணித்தது.

சித்திரன் ஏதேதோ மந்திரங்களை முணுமுணுத்து விஷத்தேனின் சக்தியை முறியடிக்க முயன்றான். விஷத்தேன்

சுவாசப்பாதையிலும் உணவுப்பாதையிலும் அசுரவேகமாக முன்னேறியது.

வாயைக்காறினான்.

மூக்கைச் சிந்தினான்.

சித்திரனின் உடம்பு உதற ஆரம்பித்தது. தரையில் படுத்து உருள ஆரம்பித்தான்.

தனது குருநாதருக்கு ஆன கதியைப் பார்த்து சீடர்கள் கழிகளைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தனர்.

துரத்தும் சீடர்களுக்கு போக்குக்காட்டி இருவரின் நெற்றியிலும் விஷத்தை கொட்டியது பிப்.

சீடர்களும் தரையில் புரண்டு துள்ளத் துடித்தனர்.

அந்திநேரம் மாறியது.

பிப் தனது வழக்கமான பச்சைநிற உடம்புக்கு மாறியது.

மிகமிகத் துரிதமாக செயல்பட வேண்டிய தருணம்

மந்திரத்தால் ஊசிகள் வரவழைத்தது பிப். சித்திரனின் தலைமீதும் சீடர்களின் தலை மீதும் ஊசிகளை தைத்தது. 'ஸிர்ரக் '

ஊசிகள் சித்திரனின் மூளையையும் அவனது சீடர்களின் மூளைகளையும் தைத்தன.

வேகமாக ஓடும் 'சூடு' வைத்த ஆட்டோவின் மீட்டரில் எண்கள் ஓடுவதுபோல சித்திரன் குழுமத்தின் ஞாபகத்திரள்கள் ஊசிகளுக்குள் பதிவாக ஆரம்பித்தன.

சித்திரன் மந்திர தந்திரங்கள்....

சித்திரன் ஆசை நிராசைகள்....

சித்திரனின் பழக்கவழக்கங்கள்...

மொத்தத்தில் சித்திரனின் பிறப்பு முதல் சித்திரன் தேனீயால் கொட்டப்பட்டு வீழ்ந்தது வரையான ஞாபகத்திரள்கள் ஊசியில் பதிவாயின. அதே போல சீடர்களின் ஞாபகத்திரள்களும் அவரவர் ஊசியில் பதிவாயின.

-கதைக்குள் குறுக்கிட்டான் முத்தமிழ்.

"ஏன் தாத்தா நீங்க சொல்ற மாதிரி ஒரு மனிதனோட ஒட்டு மொத்த நினைவுகளைத் திருடுவது சாத்தியமா தாத்தா?"

"முதல்ல மனிதரோட மூளை அமைப்பை விவரமா பாக்கலாம். மனிதனின் மூளை 500கிராம் எடை உள்ளது. பழுப்பு நிற காளான் வடிவம். ஒரு மனிதன் தூங்கும்போது கூட மூளை இடைவிடாது வேலை செய்கிறது. மூளை ந்யூரான் எனப்படும் செல்களால் ஆனது. ஒரு மனித மூளைக்குள் இருக்கும் ந்யூரான் செல்களின் எண்ணிக்கை 300 கோடிக்கு மேல். மனிதன் சுவாசிக்கும் ஆக்ஸிஜனில் இருபது சதவீதத்தை மூளை எடுத்துக் கொள்கிறது. மனிதனின் உடம்பில் எங்கு வலி ஏற்பட்டாலும் மூளை உணர்ந்து கொள்ளும். ஆனால் மூளைக்கு வலி தெரியாது. மூளையின் ந்யூரான் செல்கள் ஒன்றுக்கொன்று கை கோர்த்து ஒரு வலை பின்னிக் கொள்கின்றன. அந்த வலையே நினைவுகளை சேமித்துக் கொள்கின்றன. மூளைக்குள் செய்திகள் பரவும் வேகம் மணிக்கு முன்னூத்தி சொச்சம் கிலோமீட்டர். இப்படி ந்யூரான்களால் சேமிக்கப்பட்ட ஒரு மனிதனின் ஒட்டுமொத்த நினைவுகளை திருடுவதுவிஞ்ஞானப்படி சாத்தியமே இதற்கு ஆங்கிலத்தில் 'டவுன் லோடிங்' (DOWN LOADING) என்று கூறுவார்கள். கிட்னி திருட்டு போல நினைவுகள் திருட்டும் இன்னும் சில வருடங்களில் சகஜமாக நடக்கும். ஒரு சாகப்போகும் கிழவன் தனது நினைவுகளை எடுத்து ஒரு சிறுவனின் மூளைக்குள் தைத்து சிறுவனாக நடமாட முடியும். வெளி பார்வைக்கு சிறுவன் உள்ளுக்குள் உடலை மாற்றிக்கொண்ட கிழவன் "

"ஏ அப்பா கேட்கவே மயிர் கூச்செரிகிறதே "

மீண்டும் கதைக்குள் பிரவேசித்தார் தாத்தா.

-மிகத்துரிதமாக செயல்பட்டது பிப்.

மூவரின் உருவங்களை, உடை நடை பாவனைகளை, குரலை, உதட்டு கைரேகைகளை வியர்வை வாசனையை திருடி தனித்தனியாக மூன்று ஊசிகளிலும் சேமித்துக் கொண்டது.

மூன்று உடல்களையும் எரித்து சாம்பலாக்கி பாட்டிலுக்குள் அடக்கியது.

பறக்கும் போது பாட்டிலை கடலுக்குள் வீசியது.

மனோவேகத்தில் பறந்து நட்டு குழுமத்திடம் வந்து சேர்ந்தது பிப்.

வினு பதட்டப்பட்டான்.

"இத்தனை சீக்கிரம் திரும்பிவிட்டாய் போன காரியம் என்ன ஆயிற்று?"

பிப் வெற்றிப்புன்னகை பூத்தது.

"போன காரியம் முழு வெற்றி. காரணம் கடவுள் நம் பக்கம்."

"குட்டிசாத்தான் நீயும் கடவுள் பற்றி பேச ஆரம்பித்து விட்டாயா?"

"நட்டு குழுமத்துடன் சேர்ந்த கணத்தில் எனக்கும் நல்ல குணம் வந்துவிட்டது!" சொல்லிய பிப் நாணியது.

"எங்கே அந்த மூவரின் ஆறு அம்சங்கள்?" வினவினான் நட்டு.

மூன்று ஊசிகளை எடுத்தது பிப்.

ஊசிகள் தலைப்பகுதியில் கண்ணாடியாக வீங்கியிருந்தன. அந்த வீக்கத்தில் ஏதேதோ வர்ணமாய் நெளிந்தன.

தலை வீக்கத்துக்கு கீழே சிறு கழுத்து வீக்கம்.

மூன்று ஊசிகளுமே துள்ளின. துடித்தன.

மந்திரவாதி சித்திரனின் ஊசி பிப்பைக் கொடூரமாய் முறைத்தது. கத்தியது. "சண்டாளா என் உடலை எரித்துவிட்டு என் நினைவுகளைத் திருடிக்கொண்டாயே.... உன்னை என்ன செய்கிறேன் பார் "

எகத்தாளமாக சிரித்தது பிப்.

"உன்னுடைய குதியாட்டம் நட்டுவின் உடலுக்குள் போகும் வரைதான். போனதும் உனது நினைவுகளுக்கு நட்டுதான் எஜமானன். அவன் எடுக்கும் முடிவுகளுக்கு நீ முழுமையாக கட்டுப்படவேண்டும்.

"எப்போதுதான் எனக்கு விடுதலை?"

"என்ன உளறுகிறாய் சித்திரா? உடல் இல்லாத உனக்கு விடுதலை ஒரு பகல் கனவு! மந்திரவாதி அண்டாரகனை வென்றதும் நட்டுவின் மூளையிலிருந்து உனது உபரி நினைவுத் திரள்களை அகற்றி அழிப்பேன். உனது சீடர்களின் நினைவுத் திரள்களுக்கும் இதே கதிதான் "

வினு எரிச்சலடைந்தான்.

"அந்த குள்ள மந்திரவாதி சித்திரனிடம் என்ன வெட்டிப் பேச்சு? நேரத்தை வீணடிக்காமல் ஆறு அம்சங்களை நட்டு குழுமத்தின் மூளைகளுக்குள் செலுத்து "

நட்டு, சக்தி, ஆர்த்தி படுத்துக் கொண்டனர்.

சவாசனம் மேற்கொண்டனர்.

பிப் முனைப்பாய் உச்சரிக்க ஆரம்பித்தது மந்திரங்களை.

நட்டுவின் இடது காதுக்கு மேலே இடம் துழாவி நிர்ண யித்தது பிப். பின் ஆறு அம்ச ஊசியை அந்த இடத்தில் குத்தித்திருகியது.

அவ்வளவுதான்

ஊசியின் தலைப்பகுதி வீக்கம் குபுகுபுத்தது. வீக்கத்தி லிருந்து ஏதேதோ நட்டு மூளைக்குள் ஜவ்வூடு பரவல் ஆனது.

எல்லாம் சில நொடிகள்...

மூளையின் அனைத்து பதிவுகளும் நட்டுவுக்கு தாவிய உடன் ஊசியின் தலை வீக்கம் மறைந்தது.

ஊசியை எடுத்து பிப் நட்டுவின் தொண்டையில் குத்தியது.

நட்டுவின் தொண்டைப்பெட்டி மைக்டெஸ்ட்டிங் நடத்தியது.

முதலில் குழந்தையின் குவாகுவா சப்தம்!

பின் சிறுவனின் மழலைக்குரல்!

பின் பருவமடைந்த சிறுவனின் மகரக்கட்டு உடைந்த ஆண்மைக்குரல்!

பின் நட்டுவின் குரல் வந்தது. அதன் மீது மந்திரவாதி சித்திரனின் குரல் படுத்தது. சில நொடிகள் கழித்து இரு குரல்களும் கீச்சு மூச்சென்று சண்டை இட்டுக்கொண்டன இறுதியில் சித்திரனின் குரல் நட்டுவின் தொண்டைப் பெட்டியில் நிலைத்தது.

ஊசியில் இருந்த கழுத்தின் வீக்கம் மறைந்து போனது.

முதல் இரு அம்சங்கள் ஏற்றியாகி விட்டது.

மூன்றாவது அம்சம் வியர்வை வாசனை

பிப் ஊசியை எடுத்து நட்டுவின் காதுமடல்களில், அக்குள் களில், பின்னங்கால் மடிப்புகளில், மூக்குநுனியில், நெற்றியில் குத்தியது.

நட்டுவின் உடலில் சித்திரனின் வியர்வை வாசனை குடியேறியது.

பிப் திருப்தி முகம் காட்டியது. "நான்காவது அம்சம் உதட்டு, கைரேகை அத்துடன் கண்ணின் கருவிழிகள் அமைப்பு" முணு முணுத்தது.

இம்முறை ஊசி நட்டுவின் உதடுகளில் கைரேகைகளில் கண்களின் கருவிழிகளில் விளையாடியது.

உதட்டின் வரிவரியான கோடுகள் மாறின.

கண்ணின் கருவிழிகள் பழுப்பாயின.

ரேகைகளின் பனிரெண்டு அம்சங்களும் சித்திரனின் அம்சங்கள் ஆகின.

-கதையில் குறுக்கிட்டான் கமல்.

"ரேகை ப்ளஸ் பனிரெண்டு அம்சங்கள்... விளக்குங்களேன் தாத்தா "

"சம்பளம் வாங்கிற கூலித்தொழிலாளிகள் தனது இடது பெருவிரல்ரேகையை சம்பளம் பெற்றதற்கான அத்தாட்சியாக லெட்ஜரில் பதிவு செய்வார்கள். இந்த ரேகை தடயம் முழுமையாக பனிரெண்டு அம்சங்கள் கொண்டு இருக்கும். ஆனால் ஒரு திருடன் ஒரு வீட்டுக்குள் புகுந்து திருடி விட்டுப் போகும்போது கைவிரல்ரேகையை முழுமையாக திருடப்பட்ட இடத்தில் பதித்துவிட்டா போவான்? அவனுக்கேத் தெரியாமல் அவனது ரேகைகள் அரைகுறையாகத்தான் பதிவு ஆகி இருக்கும். பனிரெண்டு அம்சங்களுக்கு பதில் ஆறேழு அம்சங்களே அங்கு காணப்படும். இதுதான் கைரேகைகளும் அதன் அம்சங்களும்"

மீண்டும் கதைக்குள் போனார் கம்ப்யூட்டர் தாத்தா.

-பிப் முறுவலித்தது. "இப்போது நட்டு குழுமத்துக்கு உருவமும் நடைஉடை பாவனைகளும் மட்டுமே மாற்றப்பட வேண்டும் "

வினு ஆமோதித்தான்.

அக்யூபங்க்ச்சர் நிபுணர் போல செயல்பட்டது பிப்.

-"அக்யூபங்க்ச்சர்- னா என்ன தாத்தா?" குறுக்கிட்டான் ரகு.

"அக்யூபங்க்ச்சர் என்பது சீனவகை மருத்துவம் இந்த மருத்துவத்தில் மருந்து மாத்திரைகள் கிடையாது "

"பின்னே "

"உடல் முழுவதும் முப்பதுக்கும் மேற்பட்ட புள்ளிகள் உள்ளன. அந்தப்புள்ளிகளில் அக்யூபங்க்ச்சர் ஊசி திருகி நோயைக் குணப்படுத்துவார்கள். இந்த வகை மருத்துவத்தை உலக சுகாதார நிறுவனம் அங்கீகரித்துள்ளது."

"ஓஹோ "

அவசரம் அவசரமாக மீண்டும் கதை சொல்ல ஆரம்பித்தார் தாத்தா.

நட்டுவின் உடல் முழுவதும் முகம் முழுவதும் பிப் ஊசி குத்தி எடுத்தது. பின் ஊசியை படுக்கைவசத்தில் நட்டுவின் உடலில் உருட்டியது பிப்.

'ப்ரக் '

நட்டுவின் தடிமன் மாறியது. நிறம் கறுத்தது. தலைகேசம் ஜடாமுடியாய் நீண்டது. பற்கள் காரை இழந்து பலவீனமாயின. காதுகளில் அளவு அகன்டது. முகத்தில் மீசை தாடி முளைத்து புதர் ஆகியது.

சில நிமிடங்களில் நட்டு சித்திரனின் உருவத்துடன் எழுந்தான்.

சித்திரனைப் போல நடந்து பார்த்தான்.

பேசிப் பார்த்தான். சிரித்தான். கர்ணகடூரமாய் உருமினான்.

பின்னந்தலை கேசத்தை கொண்டை போட்டுக் கொண்டான். திரிதிரியாகத் தொங்கியது தாடி. கறுப்பு அங்கி அணிந்து கொண்டான். தலையில் மான்கொம்பு கிரீடம்.

கண்ணாடியில் தன்னைப்பார்த்து கூச்சலாய் சிரித்தான் நட்டு. "சபாஷ் பிப்! வெளிபார்வைக்கு நான் மந்திரவாதி சித்திரன். உள்ளுக்குள் நட்டு. உண்மைல நான் யார்னு படைச்ச கடவுளுக்கும் தெரியாது. ஹ...ஹ....ஹ...ஹா... என் சிரிப்பு கூட சித்திரனை போல் "

பிப் கட்டைவிரல் உயர்த்தியது.

"என்னை தயார் செய்து விட்டாய். எனது சிஷ்யர்களாக சக்தி ஆர்த்தியை தயார் செய். சீக்கிரம் சீக்கிரம் "

பிப் புயல் வேகத்தில் செயல்பட்டது.

எம்ப்ராய்ட்டரி பூக்கள் போடும் ஊசியின் வேகமும் லாவகமும் பிப்பிடம் காணப்பட்டன.

சரியாக இரண்டுமணி நேரம் கழித்து ஆசுவாசித்தது பிப்.

சக்தியும் ஆர்த்தியும் தரை புரளும் கறுப்பு அங்கி உடுத்தியிருந்தனர் தாடிமீசை.

அவர்களும் கண்ணாடியில் பார்த்து அதிசயித்துக் கொண்டனர்.

நட்டுவை வணங்கினர். "குருவே வணக்கம் "

பிப் மூன்று ஊசிகளையும் மந்திரப்பேழையில் பாதுகாப்பாய் வைத்தது. "மந்திரவாதி அண்டாரகனை அழித்ததும் மீண்டும் இந்த ஊசிகளை உங்களது உடலில் விளையாட விடுவேன். சித்திரன் குழுமத்தின் ஆறு அம்சங்களை உறிஞ்சி உங்களின் ஒரிஜினல் உருவங்களை பரிசளிப்பேன்..."

நட்டு பிப்பை மந்திரக்கோலாக்கிக் கொண்டான்.

இடுப்பு மறைவில் மந்திரப்பேழையும் பாக்டீரியா சைஸ் வினுவும்.

இனி சில அத்தியாயங்களுக்கு நட்டுவை 'போலி சித்திரன்' என்றே அழைப்போம். சரியா?

போலி சித்திரன் தனது சீடர்களுடன் மந்திரபுரி மாநாட்டுக்குப் புறப்பட்டான்.

முதுகுத்தண்டை ஜில்லிட வைக்கும் மெஹா சாகசம் ஆரம்பம்!

"வாருங்கள் குழந்தைகளே மந்திரபுரியில் என்ன நடக்கப் போகிறது. என்பதை மறைந்திருந்து பார்ப்போம் "

பயமுறுத்தலாய் சொல்லிச் சிரித்தார் கம்ப்யூட்டர் தாத்தா!

O

# 31

**ப**றக்கும் பல்லக்கு மந்திரபுரியை நெருங்கியது.

மந்திரபுரியின் மேற்குத்திசையில் கறுப்புச்சூரியன் அஸ்தமனம் ஆவது பார்வையானது.

மந்திரபுரியின் மீது இருள் போர்வையாய் படிய ஆரம்பித்தது.

வானம் முழுக்க ஆந்தைகளும் கழுகுகளும் வௌவால் களும் பறந்து கொண்டிருந்தன.

காற்றுமண்டலம் முழுக்க எருக்கம்பூ தாழம்பூ வாசனை.

கறுப்பு அங்கி அணிந்த மக்கள் காணப்பட்டனர். அவர்களுக்கு முகத்தில் ஒரு கண். பின்னந்தலையில் ஒரு கண்.

எந்த நேரத்திலும் இடுகாடுகள் எல்லை ஓரத்தில்தான் அமைந்திருக்கும். மந்திரபுரியோ விதிவிலக்கு. நகரின் முக்கியத் தெருக்களில் எல்லாம் கல்லறைகள் காணப்பட்டன. கல்லறைகள் அனைத்தும் இரண்டாய் பிளந்திருந்தன. பிளவுக்குள்ளிருந்து பிரேதங்கள் தற்காலிகமாக உயிர்த்து எழுந்திருந்தன. அவற்றின் உடல் மரப்பட்டை போல் பழுப்பாய் காணப்பட்டது. உடல் முழுவதும் புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தன. அவர்களின் உடல்களிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசியது.

மந்திரபுரி முழுக்க வினோத கலவையாய் நடமாட்டம்

சித்திரை அமாவாசைக்காக உயிர்த்தெழுந்த பிரேதங்கள்...

புரியின் ஒற்றைக்கண் குடிமக்கள்...

அமாவாசை சிறப்புக்கூட்டத்துக்கு கலந்த கொள்ள வந்திருந்த மந்திரவாதிகளும் அவர்களது சீடர்களும்...



கு.சாத்தான்களும் துர்தேவதைகளும்...

மந்திரவாதிகள் ஏறி வந்திருந்த கறுப்புக்குதிரைகளும் கறுப்பு யானைகளும் லாயத்தில் இளைப்பாறின.

இரவுப்பூச்சிகள் ரிங்ரிங் என மந்திரம் உச்சரித்தன.

குயில்கள் கழுதை குரலில் கூவின.

அடை மழை ஆரம்பித்திருந்தது.. பறக்கும் பல்லக்கு அரண்மனையில் போய் இறங்கியது.

பல்லக்கிலிருந்து போலி சித்திரன்(நட்டு) சீடர்களுடன் (சக்தி ஆர்த்தி) இறங்கினான்.

"ஜெய் கால கண்டேஸ்வரி "

"மியாவ் "

போலி சித்திரன் திரும்பி பார்த்தான். மந்திரபுரியின் பூனை ராஜா 'மிச்சாங்' மிடுக்காய் வந்தது.

மிச்சாங் ஒரு ஆளுயர பூனை.

தலையில் வைடூரியங்கள் மின்னும் கிரீடம்.

கறுப்பு நிற உடல்.

கண்கள் கூட கறுப்பாய் மின்னின.

மார்புப் பகுதியில் பட்டு வஸ்திரம்.

உடன் குண்டு குண்டு பெருச்சாளிகள் அவையோராய்.

மந்திரவாதி போலி சித்திரனைப் பார்த்ததும் ஆனந்தமாய் வரவேற்றது மிச்சாங். "மியாவ் மியாவ் கடவுள் அண்டாரகன் புகழ் வாழ்க! சிறப்பு சித்திரை அமாவாசை கூட்டத்துக்கு வந்திருக்கும் உங்களை அன்புடன் வரவேற்கிறேன். சீடர்களே நீவிரும் வருக வருக "

போலி சித்திரன் விகாரமாக சிரித்தான்.

"வரவேற்புக்கு மகிழ்ச்சியடைகிறேன். மிச்சாங் கடவுள் அண்டாரகன் வந்து விட்டாரா? மற்ற சகோதர மந்திரவாதிகளும் வந்துவிட்டனரா?"

"நமது கடவுள் இன்னும் வரவில்லை. ஆனால் மற்ற சகோதர மந்திரவாதிகள் வந்து விட்டனர். அவரவர் ஓய்வறையில் ஓய்வெடுக்கின்றனர் "

"நல்லது. மிக நல்லது மிச்சாங் "

"நீண்ட தூர பயணம் வந்திருக்கிறீர்கள் சித்திரன். இரவு உணவு உண்ணுங்கள். நள்ளிரவு கூட்டம் வரை பசி தாளும் "

போலி சித்திரனும் இரு சீடர்களும் விருந்து மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

"இரவு விருந்துக்கு என்னென்ன உணவு வகைக்கள்?" போலி சித்திரனான நட்டு வினவினான்.

"உண்மையாகவே பசிக்கிறது சிக்கன் மட்டன் பிஷ் பிரை என்றால் ஒரு வெட்டு வெட்டி விடலாம் '

விருந்து உபசரிப்பாளர் இளித்தார். "எல்லாம் தங்களுக்கு மிகவும் பிடித்த உணவு வகைகள்தான். மனிதமூளை பொறியல், மனித கால் (சூப்பு) மனித ஈரல் வறுவல், இனிப்புச் சாற்றில் ஊறவைக்கப்பட்ட மனிதக்கண்கள் (குலோப்ஜாமூன்) மனித விரல் (சிப்ஸ்) மனித நாக்கு (பஜ்ஜி) மனித மூக்குகள் காதுகள் (சாலட்), மனித குடல் (நூடுல்ஸ்)...."

"சொல்லிக் கொண்டே போக 'உவ்வே' என குமட்டியது நட்டுவுக்கு. ஆனால் எழும் அருவெறுப்பான உணர்வுகளை வெளிக்காட்டி மாட்டிக்கொள்ள முடியுமா? மாட்டிக் கொண்டால் நம்மையும் வறுவல் பொறியல் செய்து விடுவார்கள் "

மழுப்பலாய் சிரித்தான் போலி சித்திரன் (அ) நட்டு.

"இன்று கடவுள் அண்டாரகனுக்காக உபவாசம் இருக்கிறேன். வெறும் திரவ உணவுகள் உட்கொள்ளுவேன். திரவ உணவு என்ன இருக்கிறது மனிதகால் சூப்பைத் தவிர?"

"மனித இரத்தம், கோவேறு கழுதை இரத்தம் இருக்கிறது குடிக்கிறீர்களா?"

இதனையும் மறுத்தால் சந்தேகப்படுவார்கள் நட்டு குழுமம் வெள்ளிக்கோப்பைகளை வாங்கியது.

இரத்தத்தின் வீச்சம் நாசியைத் தாக்கியது.

நட்டு குழுமம் இரத்தத்தைக் குடிப்பதுபோல பாவனை செய்துவிட்டு மறைவில் கொட்டியது.

மனித எலும்புகளைக் கடித்தபடி மந்திரவாதிகள் போலி சித்திரனிடம் வந்தனர். குசலம் விசாரித்தனர்.

"சித்திரரே வசந்தபுரியில் உமது மந்திர வாழ்க்கை எப்படி இருக்கிறது? புதிதாக என்ன மந்திரசக்தி கற்றுக் கொண்டீர்கள்?"

நட்டுவிடம்தான் சித்திரனின் நினைவுத்திரள்களும் உள்ளதே...

பதட்டப்படாமல் பதிலளித்தான். "மகிழ்ச்சியாக இருக்கிறேன். தாவரங்களுடன் பேசும் வித்தையை விரிவுப்படுத்தி இருக்கிறேன்."

"நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் மந்திரவாதி கரடுமுரடன் அவர்களே "

"எங்கள் தேசத்தில் நல்லவர் எண்ணிக்கை அதிகமாகி விட்டது. அதுதான் எனக்கு மிகவும் வருத்தத்தைத் தருகிறது. நான் புதிதாக எந்த மந்திரமும் கற்றுக் கொள்ளவில்லை "

யாருக்கும் சிறிதும் சந்தேகம் ஏற்படாத வகையில் எல்லா மந்திரவாதிகளுடனும் குசலம் விசாரித்தான் நட்டு அல்லது போலி சித்திரன்.

மந்திரவாதிகள் மனித உறுப்புகளை கர்ரக்முர்ரக் என்று கடித்துத் தின்பதுதான் நட்டுவின் காதுகளுக்கு நாராசமாய் இருந்தது.

மந்திரபுரி மன்னர் பூனை மிச்சாங் மந்திரவாதிகள் அனைவரின் பக்கமும் போய் வந்தது.

"வெட்கப்படாமல் சாப்பிடுங்கள். மனித மாமிசம் போதுமான அளவு சமைக்கப்பட்டுள்ளது. இன்றைய சமையலுக்கு ஆயிரம் மனிதர்கள் பலி கொடுக்கப்பட்டுள்ளனர்..."

வாய் கொள்ளாத அளவுக்கு மனிதமாமிசங்களை மென்றபடி மந்திரவாதிகள் வினவினர். "கடவுள் அண்டாரகன் வந்து விட்டாரா?"

"வருகின்ற நேரம்தான். நள்ளிரவில் நமது கூட்டத்தை ஆரம்பிக்கவேண்டியது தான் "

விருந்து முடிந்தது.

மோகினிப்பிசாசுகள் ஆட்டம் ஆரம்பித்தது.

"ஜிம்ப்பர ஜிம்ப்பா ஜிம்ப்பா ஜிம்ப்பா.

ஜிம்ப்பர ஜிம்ப்பா

மோகினி ஆட்டமா? மோகினி பாட்டுமா?

கேளிக்கை கூட்டமா?

ரசிப்பது மந்திரவாதி மன்றமா?

லல்லல் லாலலா

லல் லல் லாலலா "

கவர்ச்சி சினிமா நடிகைகள் போல மோகினிகள் ஆடினர்.

"சீ கர்மம் " என தலையில் அடித்துக் கொண்டான் நட்டு.

நள்ளிரவாக இன்னும் சில நாழிகைகளே.

மோகினியாட்டம் முடிவு பெற்றது. அனைவரும் மாநாடு நடக்கும் திடலுக்கு நடக்க ஆரம்பித்தனர்.

இப்படி கொடுமையான பயங்கரமான காட்சியை நட்டு ஆங்கில சினிமாவிலும் கண்டதில்லை.

மந்திரவாதிகள், சீடர்கள், பேய்கள், பிசாசுகள், அபசகுனம் அறிவிக்கும் மிருகங்கள், பறவைகள், அருவெறுப்பாய் கருதப் படும் ஊர்வன அனைத்தும் குறித்த திசை நோக்கி அமாவாசை இரவில் நடந்து போவதை அவர்களுடன் நடந்துகொண்டே நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? தப்பித்தவறி கனவில் கண்டாலும் டவுசரில் மூச்சா போய் விடுவீர்கள் அல்லவா?

நட்டு மூச்சாவை அடக்கிக் கொண்டான்.

நள்ளிரவுக்கு ஒருசில நிமிடங்களே.

திடீரென்ற வானத்தில் ஒரு பிரளயம்.

மேகங்கள் முட்டி மோதிக் கொண்டன. விசித்திரமான ஒலியுடன் காற்று அடித்தது. ஆயிரக்கணக்கான கனத்தக்குரல் கொண்ட ஆண்கள் குலவை இட்டனர்.

இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான் போன்ற நூறு இசை அமைப் பாளர்கள் கூடி திகில் இசை இசைப்பது போல இசை எழுந்தது.

"ஹோ ஹோ ஹோ ஹொஉற்ஹஉற் ஹோ "

"ரிம்ஜிம் பபம்பபம் பம்பா "
ஜிக் ஜிக் ஜிஜிக் ஜிஜிக் ஜிச்சா "
"தும்தா தும்தா தும் "
"ராகராக ரீகரீக ரரரி ரரரி ரர்ரா "

உயர்ந்த இடத்திலிருந்து தாம்பாளங்கள் விழுந்தது போல ஓசைநயம் கூடியது. விதவிதமான ஒலிக்குறிப்புகள் மந்திரம் சொல்வது போல கிசுகிசுத்தன.

வானத்தில் ஒரு கழுகு தெரிந்தது. அந்த கழுகுக்கு அனைத்து பறக்கும் பறவைகளின் அம்சம் இருந்தது. கழுகும் வானவில் நிறத்தில் மின்னியது.

கழுகின் கழுத்தில் மந்திரவாதி அண்டாரகன் அமர்ந் திருந்தான்.

பத்துஅடி உயரமும் நான்கடி பருமனும் கொண்டிருந்தான்.

பனிரெண்டாவது அத்தியாத்தில் அண்டாரகனை கிளி வர்ணித்ததற்கும் நேரில் பார்ப்பதற்கும் எக்கசக்க வித்தியாசங்கள் இருந்தன.

நாவல் பழ நிறம்

ஒரு மிகப்பெரிய முகம் அவன் கொண்டிருந்தாலும் அவனது கீழ்கழுத்திலிருந்து இருபதுக்கும் மேற்பட்ட குட்டிகுட்டி முகங்கள் கிளைத்திருந்தன.

அவனது சினை கெழுத்திக்கண்கள் பைனாகுலர் போல் நீண்டு 360' கோணமும் பார்க்கும் திறன் கொண்டவை.

நாய்களுக்கு மனிதனை விட 17 மடங்கு மோப்பச் சக்தி அதிகம். அண்டாரகனுக்கோ 400 மடங்கு.



அவனது கழுத்தில் ஒரு ராட்சச மலைப்பாம்பு ஊர்ந்து கொண்டிருந்தது.

அவன் தான் வெற்றி பெற்ற மந்திரவாதிகளின் பற்களை கோர்த்து மாலைகளாய் அணிந்திருந்தான்.

அவனது மகுடம் மண்டை ஓடுகளால் ஆனது.

கைகளில் நகங்கள் வளர்ந்து தரை தவழ்ந்தன.

இடுப்பில் வைர ஆடை.

வலதுகையில் மந்திரக்கோல்.

கால்களில் கிலுகிலுப்பை விரியன்களை தண்டைகளாய் அணிந்திருந்தான்.

மனிதத் தோல்களால் ஆன மிதியடி.

மந்திரவாதி அண்டாரகனின் மீது புனுசு, ஜவ்வாது, அத்தர், பன்னீர், மலர் நறுமணச்சாறுகள் கலந்த வாசனை அடித்தது.

கழுகு 'ழீய் ' என்று கத்தியது.

மாநாட்டின் முன் இறங்கியது.

அண்டாரகன் இறங்கியதும் அனைத்து மந்திரவாதிகளும் உலக ஆவேசமாக கோஷமிட்டனர்.

"கடவுள் அண்டாரகன் வாழ்க "

"கடவுள் அண்டாரகன் வாழ்க் "

"நமது புதிய கடவுளின் புகழ் ஓங்குக "

"நல்லவர்களின் கடவுள் ஒழிக "

வரவேற்புகளை ஏற்றபடி கைகளை உயர்த்தி ஆட்டியபடி கழுகிலிருந்து இறங்கி நடந்து வந்தான் அண்டாரகன்.

கோஷம் நொடிக்கு நொடி உயர்ந்தது.

மந்திரவாதிகளின் கூட்டத்தை மெதுவாக மிக மெதுவாக முக மாக ஒவ்வொரு முகமாக ஆராய்ந்து தெளிந்தான் அண்டாரகன்.

மிச்சாங் பக்கம் திரும்பினான் அண்டாரகன்.

"பூனை ராஜா கூட்டத்தை ஆரம்பிப்போமே "

"தங்களின் சித்தம் எனது பாக்கியம் கடவுளே "

அண்டாரகன் பேச ஆரம்பித்தான். "எனது அரசாட்சியின் அடிமைகளே நானே கடவுள்! மற்ற எல்லோருமே எனது காலடிக்கு கீழ். நல்லவர்களின் கடவுளை வெற்றி பெற நான் ஒரு மஹா நரபலி ஏற்பாடு செய்திருக்கிறேன். 100 கன்னிப் பெண் இளவரசிகளை நரபலி கொடுக்கப் போகிறேன். நூறாவது இளவரசியையும் சிறைப்பிடித்து விட்டேன். நரபலி வருகிற பௌர்ணமி அன்று. அது நடந்தேறி விட்டால் நானே முழு முதல் கடவுள் ஆவேன் பௌர்ணமி நரபலிக்கு நீங்கள் அனைவரும் வரவேண்டும் "

தொடர்ந்து பேசி முடித்தான் அண்டாரகன்.

மீண்டும் மந்திரவாதிகள் கோஷங்களை எழுப்பினர்.

அண்டாரகன் மிடுக்காக நடந்து கூட்டம் எழுந்த மகிழ்ச்சி யில் ஒவ்வொரு மந்திரவாதியிடமும் வந்து அளவளாவ ஆரம்பித்தான்.

நட்டு (அ) போலி சித்திரனிடம் வந்தான் அண்டாரகன்.

நட்டுவுக்கு உள்ளுக்குள் உதறிக் கொண்டது.

அண்டாரகனின் கண்கள் இடுங்கின. மெதுமெதுவாக அவனது முகம் சந்தேகம் காட்ட ஆரம்பித்தது. கழுத்தில் இருந்த முகங்கள் நீண்டு புடைத்தன.

நட்டு அசட்டுத்தனமாய் சிரித்தான்.

அண்டாரகனின் கேள்வி அடிவயிற்றில் பூகம்பம் கிளப்பியது.

"நீ யார்?"

ஹைய்யய்யோ நட்டு அண்டாரகனிடம் வசமாக மாட்டிக் கொண்டானா?



# 32

"**நீ** யார்?" என்று அண்டாரகன் கேட்ட கேள்வி பூதாகரமாய் வடிவெடுத்து போலி சித்திரனின் முன் நின்றது.

நட்டு மௌனமாய் இருந்தான்.

வயிற்றுக்குள் பயம் உதைத்தது.

பற்கள் டிகிடிகி என கிட்டித்துக் கொண்டன.

உமிழ்நீரை சிரமப்பட்டு விழுங்கினான்.

"மாட்டிக்கிட்டோம் சாமீ. இந்த மந்திரவாதி படுபயங்கர வில்லன். என்னவாய் போ என்று சாபமிடுகிறானோ?"

மனம் அலறியது

திக்திக் பக்பக்.

அண்டாரகன் நெற்றி சுருக்கினான். கோபம் ஏணி போட்டு அவனது மூக்கில் ஏறியது.

"உன்னைத்தான் கேட்டேன் நீ யார்?"

"நா... நான் நட்டு என்கிற நடராஜன். இதோ இந்த குண்டச்சி சக்தி. இவ வாயாடி ஆர்த்தி. என் இடுப்பு மந்திரப்பேழைல உன் பிரதர் வினு. என் கைல இருக்கிற மந்திரக்கோல் குட்டிச்சாத்தான் பிப். போதுமா?" என முழுதும் உளறிக்கொட்டத் தயாரானான் நட்டு.

'இந்த குள்ளப்பையனின் அடாவடிப்பேச்செல்லாம் நம்பள மாதிரி பொட்டச்சிக் கிட்டதான் இந்த மந்திரவாதி கேட்டது ஒரே ஒரு கேள்வி அதுக்கு இந்த நடுங்கு நடுங்குரானே... இவனோட உதறலே இவனையும் நம்பளையும் காட்டிக் குடுத்திரும் போல...'

சிஷ்யன் உருவத்தில் இருந்த சக்தி இடைமறித்தாள்.

"கடவுளே இதென்ன சோதனை கடவுளே இவர் வசந்தபுரி மந்திரவாதி சித்திரன். நாங்கள் இவரின் சீடர்கள். மொத்தத்தில் நாங்கள் மூவருமே உங்கள் அடிமைகள் "

இறுகியிருந்த அண்டாரகனின் முகம் புறாவின் சிறகு போல இலேசானது.

முதலில் மெலிதாய் சிரித்தான்.

பின் சிரிப்பின் சப்த அளவைக்கூட்டினான்.

அலறலாய் சிரித்தபடி அண்டாரகன் சித்திரனின் முதுகில் தட்டினான். "மிக சாதாரண கேள்வி ஒன்றை வினவினேன். நடு நடுங்கி விட்டாயே? என் கேள்விக்கு நீ என்ன பதில் சொல்லிருக்க வேண்டும் தெரியுமா?"

மீண்டும் முழித்தான் நட்டு.

"அதையும் நானே என் வாயாலே சொல்ல வேண்டுமாக்கும். நீ என் அபிமானத்துக்குரிய குள்ள மந்திரவாதி சித்திரன் நான் 100கன்னிப்பெண்களை நரபலி கொடுத்து முழு முதல் கடவுள் ஆனால் எனது இடதுகையாக இருக்கப் போவது நீ!"

'அட சண்டாளா இதுக்குத்தான் இத்தனை பீடிகை போட்டாயா? சஸ்பென்ஸ் தாளாமல் நானே உளறிக்கொட்ட இருந்தேன்.... ஸ்......ஸ்.....ஸ்....' பெருமூச்சு விட்டான் நட்டு.

"ஹி ஹி ஹி "

"இத்தனை மந்திரவாதிகளில் உன்னை மட்டும் எனக்கு ஏன் பிடிக்கிறது தெரியுமா?"

'எல்லாம் உன் தலைவிதி. என் கையால் நீ சாகவேண்டும் என்பது கடவுள் விருப்பம் வேறென்ன?' இந்த பதிலையா சொல்ல முடியும்?

வேறொரு பதிலைக் கூறினான் நட்டு.

"அதனையும் உங்கள் திருவாய் மலர்ந்து கூறிவிடுங்கள் கடவுளே "

"உன் குள்ள உருவம். உனது கீழ்ப்பணிவு. உனது அசட்டுப் புன்னகை "

"உங்களின் பேரன்புக்கு நான் பணிகிறேன் கடவுளே "

தட்டிக்கொடுத்தான் அண்டாரகன். "உன்னுடைய அப்பழுக் கற்ற பக்திக்கு மெச்சினேன் சித்திரா. நீ பலமுறை என்னிடம் உன்னை என் உலகத்துக்கு அழைத்துச் சென்று காட்ட விண்ணப் பித்தாய் "

'இல்லையே நான் எங்கே கேட்டேன் ' என சொல்ல நினைத்து "ஆம் கடவுளே " என்றான் நட்டு.

"இந்தமுறை உன்னை என்னுடன் என் உலகத்துக்கு அழைத்துச் செல்வதாக தீர்மானித்து விட்டேன் "

"நன்றி. எனது சீடர்கள்?"

"அவர்கள் அடுத்த முறை வரட்டுமே?"

"கடவுளே எங்கள் குருநாதர் சித்திரனுக்கு நீங்கள் எவ்வளவு ஆராதனைக் குரியவரோ-அதே அளவு மரியாதை-எங்களுக்கு எங்கள் குருநாதனின் மீது. அவர் போகும் இடம் எங்களுக்கு சொர்க்கம். எங்களுக்கு உங்கள் உலகத்தை பார்க்க ஆசை இருக் காதா? அவர் வரும் தருணத்தை நாங்களும் உபயோகப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம். அனுமதி பிச்சை அளியுங்கள் கடவுளே."

இறைஞ்சினாள் சக்தி.

ஆர்த்திக்கு பயம் கலந்த சிரிப்பு வந்தது.

'இவளுக்கு இவ்வளவு பேச வருமா? அசத்திப்புட்டாளே அசத்தி '

சித்திரனின் முதல் சீடனை உன்னித்தான் அண்டாரகன்.

"இரக்கமே இல்லாத அரக்கக்குணம் கொண்ட என்னையே பேசி கனிய வைத்து விட்டாயே மொத்ததில் நீங்கள் மூவருமே எனது உலகத்துக்கு வருகிறீர்கள். உங்களை அழைத்து செல்வது வெறும் ஊர் சுற்றி பார்க்க அல்ல நரபலி வைபவத்தை இருந்து செவ்வனே நடத்திக் கொடுக்க "

'உனக்கு பேட் டைம் அண்டாரகன்ஸ்! இல்லைன்னா நீயே கத்தியும் குடுத்து கழுத்தையும் நீட்டி 'வெட்டிக்கோ வெட்டிக்கோ ' ன்னு சொல்லுவியா?'

"உங்களுக்கு ஊழியம் பண்ணவே பிறந்திருக்கிறோம் கடவுளே "

இந்த பதில் அண்டாரகனை மிகவும் ஆனந்தப்படுத்தியது.

"விடிவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் நாம் புறப்படுவோம் "

சிரித்தான் அண்டாரகன். "சமுத்திரம் வரை எனது கழுகின் கால்கள். சமுத்திரத்திலிருந்து கடலின் அடிப்பகுதி வரை நீலத்திமிலங்கலத்தின் முதுகு. கடலின் அடிப்பகுதியிலிருந்து பூமி உருண்டையின் மையப்பகுதிக்கு மண்ணுளிப்பாம்பு "

'ஓஹோ அண்டாரகனின் இருப்பிடம் பூமியின் மேற் பகுதியில் எத்தனைமலை எத்தனை கடல் தாண்டினாலும் கண்டறிய முடியாது போலும்... பூமியின் மையப்பகுதியில் தன் உலகம் உருவாக்கி தன் மந்திரதந்திரங்களை எத்தனை புத்திசாலித்தனமாக நடத்தி வருகிறான் இந்த மாஜிக் டாக் அண்டாரகன் '

தலைக்கு மேல் பெரிய கும்பிடு போட்டு தரையில் விழுந்து வணங்கினர்.

"உங்கள் பக்தியைக் கண்டு மெச்சினேன். புறப்படத் தயாராக இருங்கள். மீதி அவகாசத்தில் மற்றவர்களுடனும் கதைத்து விட்டு வருகிறேன் "

அண்டாரகன் நலம் விசாரித்தபடி ஒவ்வொரு மந்திரவாதி யாக நகர்ந்தான்.

பூனைராஜா மிச்சாங் அண்டாரகனை பவ்யமாகத் தொடர்ந்தது.

நலம் விசாரிப்புகள் முடிந்தன.

மிச்சாங்கும் அணடாரகனும் தனித்து அமர்ந்திருந்தனர்.

"என்ன மிச்சாங் உன் முகம் தெளிவாக இல்லை "

"என்னை விடவா உங்களுக்கு சிறப்பான அடிமை கிடைத்து விட முடியும்? நரபலி வைபவ ஏற்பாடுகளைக் கவனிக்க என்னை அழைத்துச் செல்லாமல் குள்ள மந்திரவாதியை அல்லவா கூட்டிச் செல்கிறீர்கள்?"

"நீ நிர்வகிக்க ஒரு தேசம் பரிசளித்து விட்டேன். இன்னும் ஏன் பொறுப்புகளுக்கு அலைகிறாய்?"

"தவறாக புரிந்து கொண்டீர்கள் கடவுளே. எனக்கு ஒரு சந்தேகம் உங்களிடம் சொல்வதா, வேண்டாமா என்று இருதலை கொள்ளி எறும்பாய் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்"

"ஒன்றும் தத்தளிக்காதே. உன் சந்தேகம் என்ன?"

"இவர்கள் உண்மையான மந்திரவாதி சித்திரனும் அவனது சீடர்களும் தானாவென்று எனக்கு சந்தேகம்"

ஒரே ஒரு நொடி கண்களை இடுக்கி யோசித்த அண்டாரகன் சிரித்தான். "உனக்கு பிடிக்கவில்லை என்பதால் அவர்களின் மீது வீண் பழி போடாதே. எதனை வைத்து அப்பாவி அவர்கள் மீது சந்தேப்படுகிறாய்?"

"குள்ள மந்திரவாதியின் நடவடிக்கைகள் இரட்டைத் தனமாய் உள்ளன. தவிர விருந்தில் நான் உபசரித்த மனித இரத்தத்தை சித்திரன் யாரும் பார்க்காத போது கொட்டிவிட்டான்..."

"எப்போதும் அவன் சித்திரை அமாவாசைக்கு உபவாசம் இருப்பது வழக்கம். அந்த உபவாசமும் எனக்காகத்தான். அவனது பக்தி மீது அவதூறு சேற்றை வீசாதே"

மீண்டும் ஏதோ சொல்ல முனைந்தது மிச்சாங்.

கோபமாய் இடை மறித்தான் அண்டாரகன்.

"பேசாதே இதற்குமேல் ஒரு வார்த்தை பேசாதே. எந்த விரோதியும் என் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசிக்க முடியாது.காரணம் என்னின் அதீத மோப்பசக்தியே. சித்திரனின் வாசனை எனக்கு மிகமிக பரிட்சயம். நீ சொல்வது போல சித்திரனின் நடவடிக்கைகளில் எனக்கு எந்த மாறுதலும் தெரியவில்லை..."

"இல்லை... உங்கள் சகோதரன் வினு உங்களுக்கு எதிராக சதி..."

அண்டாரகன் பதில் சொல்லாமல் காற்றில் வட்டம் போட்டு கூவினான். "என்னால் சபிக்கப்பட்ட வினு எங்கே?"

காற்று படம் கண்ணாடி போல் பொரபொரத்தது.

பிப் உருவாக்கிய மாய உண்மைக்காட்சியில் வினு வானத்தின் மீதான எல்லைக்கல்லில் பல்லி மனிதனாக குத்துக்காலிட்டிருந்தான்.

காட்சியை அழித்தான் அண்டாரகன்.

"இப்போதாவது உன் மனக்கிலேசம் தீர்ந்ததா?"

அரைகுறையாய் தலையாட்டியது மிச்சாங்.

"என்னை அழிக்க இதுவரை உலகில் யாரும் பிறக்கவில்லை பிறக்கப் போவதும் இல்லை. மற்ற மந்திரவாதிகளின் உயிர் யாராலாவது கைப்பற்றி அழிக்கக்கூடிய தூரத்தில் இருக்கும். ஆனால் எனக்கு? என்னை அழிக்கும் வழி மிகவும் மர்மமானது. நரபலி முடித்தவுடன் எனது முதல் பணி என்னை அழிக்கும் ஒரே வழியையும் முடக்குவதுதான்."

மிச்சாங் திருப்தி முகம் காட்டியது.

"தேவையில்லாத உரையாடல் நிகழ்த்தி உங்களது பொன்னான நேரத்தை வீணடித்து விட்டேன். மன்னியுங்கள் "

அண்டாரகன் சிரித்தான்.

"பரவாயில்லை... உனது கேள்வி நோக்கம் உன்னதமானதே."

அண்டாரகன் இளைப்பாறினான். நேரம் கரைந்து கொண்டே போனது. விடியலுக்கு இன்னும் இருநாழிகைகள்.

அமாவாசை மாநாட்டுக்கு வந்த மந்திரவாதிகள் அண்டாரகனிடம் விடை பெற்று அவரவர் தேசங்களுக்கு பறந்துபோக ஆரம்பித்தனர்.

எல்லோரின் தலையிலும் கால் வைத்து ஆசிர்வதித்தான் அண்டாரகன்.

விடியலுக்கு இன்னும் ஒருசில நிமிடங்கள்

தனது வாகனம் கழுகுக்கு நடந்தான் அண்டாரகன். பின்னே நட்டு குழுமம் தொடர்ந்தது.

"புறப்படுவோமா?" கழுகிடம் கேட்டான் அண்டாரகன்.

கழுகு தனது உடலை கூரிய அலகால் கோதிக் கொண்டது. தலைப்பகுதியை சிலுப்பிக் கொண்டது.

"சரி கடவுளே "

"நம்முடன் இவர்களும் வருகிறார்கள் "

"யார் இவர்கள்?"

"என்ன இப்படி கேட்கிறாய்? மந்திரவாதி சித்திரனும் அவனது சீடர்களும் "

ஏனோ கழுகாருக்கு சந்தேகம் பூத்தது.

கழுகு கூரியக்கண்களால் மூவரையும் துளைத்தது.

நட்டு நடுநடுங்கிப் போனான்.

இதென்ன தடை? மிச்சாங்கிடமிருந்து தப்பி இந்த கழுகிடம் சிக்குவதா?

'கடவுளே கடவுளே எங்களைக் காப்பாற்று இந்த மந்திரவாதி அண்டாரகனின் யோசிக்கும் திறனை மழுங்கலாக்கு.'

அண்டாரகன் கழுகை முறைத்தான். "ஏன்னா.. நீயும் மிச்சாங் மாதிரி சந்தேகப்பிராணி ஆகி விட்டாய்?"

"என்னுடைய நாசிக்கு நரவாசனை அடிக்கிறதே கடவுளே"

"என்னை விட உனக்கு கூரிய நாசியா? தலை இருக்க வால் ஆடாதே. இட்ட பணியை நிறைவேற்று "

"என்னை மன்னிக்க வேண்டும் மகாபிரபுவே "

"சரி சரி... புறப்படு "

கழுகின் கால்களில் நட்டு குழுமம் தொங்க அண்டாரகன் கழுகின் மேல் ஏறி அமர்ந்தான்.

அந்தக்கழுகு ஓர் ஆகாய விமானம் அளவுக்கு பிரமாண்டமாக இருந்தது.

கழுகு பறக்கும்போது அதன் இறக்கைகள் ஏற்படுத்தும் காற்று புயல் அடிப்பது போல பிரமை ஊட்டியது.

பிரயாண காலஅளவு புரிபடவில்லை.

இப்போது அதளபாதாளத்தில் சமுத்திரம் காட்சியளித்தது.

கழுகு தனது பறக்கும் வேகத்தையும் குறைத்து மெதுமெது வாக கடல் மட்டத்துக்கு இறங்கி வந்தது.

கடல் மட்டத்துக்கு வந்ததும் அண்டாரகன் கழுகை குடைபோல் மடக்கி இடுப்பில் வைத்துக் கொண்டான்.

நால்வரும் கடல் மட்டத்தில் மூழ்காமல் நின்றனர்.

அண்டாரகன் குரல் கொடுத்தான்.

"சமுத்திரத்தின் அடியில் நீ எங்க நீந்திக்கொண்டிருந்தாலும் உடனே வா டிம் "

கடல்மட்டம் கொந்தளித்தது. கத்திபோல் துடுப்பு மட்டத்துக்கு மேல் கீறிக்கொண்டே வந்தது.

'ஸ்பளாச் '

பத்துடன் எடை அளவுக்கு நீர் சிதறல்கள் எழுந்தன.

'டிம்' என அழைக்கப்பட்ட நீல திமிங்கலம் நீருக்கு மேல் தலையை உயர்த்தியது.

"வணக்கம் கடவுளே "

"புறப்படுவோமா? விருந்தாளிகளுடன் எனது உலகத்துக்கு."

அண்டாரகன் முதலில் அமர்ந்து கொள்ள தொடர்ந்து மூவரும் அமர்ந்து கொண்டனர்.

'சலேர் '

நீலத்திமிங்கலம் சமுத்திரத்துக்குள் அம்பாய் சீறியது

நட்டு குழுமத்தைச் சுற்றி கடல் பிரதேசம் பார்வை சுகம் கூட்டியது.

# 33

“குழந்தைகளே குழந்தைகளே நீங்கள் யாராவது நீலத்திமிங்கலத்தின் மீது அமர்ந்து ஆழ்கடல் பயணம் போயிருக்கிறீர்களா! நிச்சயம் மாட்டீர்கள்! அட்லீஸ்ட் அப்படி ஒரு கனவாவது கண்டு இருக்கிறீர்களா? அதுவும் மாட்டீர்கள்! ஆனால் அந்த பொன்னான வாய்ப்பு நட்டு, சக்தி, ஆர்த்திக்கு கிடைத்தது. அண்டாரகனின் பின்னால் இரவல் உருவத்துடன் அமர்ந்து ஆழ்கடல் பயணம் போவது செம ரிஸ்க்கான ஆனால் படுத்ரில்லான அனுபவம். நடுங்கிக் கொண்டே அமர்ந்திருந்தனர்.

நீலத்திமிங்கலம் தான் உலகிலேயே பிரமாண்டமான உயிரினம். இந்த நால்வர் செல்லும் நீலத்திமிங்கலம் நீலமும் கறுப்பும் கலந்த நிறமாய் இருந்தது. அதன் உடல் முழுவதும் பச்சைப்பாசிகள் படர்ந்திருந்தன.

குதிரை என்றால் அமர்ந்து பிடிக்க லகான் இருக்கும். யானை என்றால் அமர்ந்து பயணிக்க மத்தளம் இருக்கும். ஆனால் திமிங்கலப்பயணத்தில் எந்த பிடிமானமும் இல்லை. வழுக்குப் பாறையில் அமர்ந்திருப்பது போல பாதுகாப்பற்ற நிலை.

திமிங்கலம் படுக்கைவசமாய் நீந்தவில்லை. தலைகீழாய் கடலின் அடிமட்டம் நோக்கி பாய்ந்தது.

திமிங்கலத்தின் மின்னல்வேகம் கண்டு மற்ற மீன் வகைகள் விலகிஓடின. ஆனால் சில குட்டிமீன் வகை கூட்டம் திமிங் கலத்தின் திறந்த வாய்க்குள் சங்கமம் ஆயின.

நீருக்குள் சில நிமிடங்கள் கூட மனிதரால் சுவாசிக்க இயலாது.

ஆனால் அண்டாரகனும் நட்டு குழுமமும் மந்திரத்தின் துணைகொண்டு சுவாசித்தனர்.

கடலுக்குள் போகப்போக வெளிச்சம் குறைந்தது. இருட்டு கூடியது.

மின்சாரத்தை பாய்ச்சும் ஈல்மீன்கள் விலகி ஓடின.

திமிங்கலம் இன்னும் ஆழம் நோக்கி...

திமிங்கலம் இன்னும் இன்னும் ஆழம் நோக்கி...

கடலுக்கு இத்தனை ஆழம் உண்டா? இருட்டில் எங்கு போகிறோம் என்றே தெரியவில்லையே!

போய் கொண்டே இருந்த நீலத்திமிங்கலம் அண்டாரகனிடம் பேச ஆரம்பித்தது. தண்ணீருக்குள் யாரும் பேச முடியாது. காரணம் பேசும்போது பேசும் உயிரினங்களின் வாய்க்குள் நீர் புகும். அத்துடன் நீருக்குள் ஒலிஅலைகள் பரவாது. ஆனால் திமிங்கலம் பேசியது.

"கடவுளே "

"என்ன அடிமையே "

"மந்திரிபுரி அமாவாசை மாநாடு நல்லபடியாக நடந்ததா?"

"ஆம் "

"வருகின்ற பௌர்ணமியில் நீங்கள் நடத்தப்போகும் நரபலி வைபவத்துக்கு பிறகு உங்கள் சக்தி உச்சக்கட்டம் அடையும். அப்போதும் இந்த அடிமையை மறந்துவிடாதீர்கள் கடவுளே "

"நான் சமுத்திரத்தில் பயணம் செய்ய உன்னைப் போல லட்சக்கணக்கான திமிங்கல அடிமைகளை வைத்திருக்கிறேன். அதில் உன்னை மட்டும் விசேஷமாக நான் நினைவில் நிறுத்திக் கொள்வது எப்படி?"

இப்போது நீலத்திமிங்கலம் கடலின் அடிமட்டத்தை அடைந்து விடடது. அந்த இடத்தில் கடல் நீர் இல்லாத மண்டலம் ஒன்று இருந்தது. அந்த மண்டலத்துக்குள் முதலில் அண்டாரகன் குதித்தான். பின் நட்டு குழுமம் குதித்தது.

கடலுக்குள் இப்படி ஒரு இடமா?

நால்வரும் குதித்தவுடன் நீலத்திமிங்கலம் விடைபெற்றது.

அண்டாரகன் ஒரு பள்ளத்தை அடைந்தான். வெளி பார்வைக்கு சிறு பொந்து போல் தெரிந்தது. எட்டி அண்டாரகன் யாரையோ அழைத்தான்.

ஒரு மண்ணுளிப்பாம்பு தலையை நீட்டியது. அதற்கு தலையில் இருகொம்புகள் இருந்தன. மனிதர்களுக்கு இருப்பது போல வாய்.

"வணக்கம் கடவுளே " என்றது.

அண்டாரகன் அதன்மேல் ஏறி அமர்ந்தான். தொடர்ந்து நட்டு குழுமம் ஏறி அமர்ந்தது.

நால்வரும் அமர்ந்ததுதான் தாமதம்

மண்ணுளிப்பாம்பு பொந்துக்குள் பாய்ந்தது.

அந்தப்பொந்து பூமியின் மையப்பகுதிக்கு நீண்டது.

பாறைகளும் எரிமலைக்குழம்புகளும் நீருற்றுகளும் நிலக்கரி படுகைகளும் தாண்டி பூமியின் மையப்பகுதிக்கு பாய்ந்தனர்.

'தொபக் '

இத்தனை ஆயிரம் மைல் நீளமுள்ள பொந்தில் இறங்கியும் அடிபடவில்லை. பஞ்சுமெத்தை போன்ற இடத்தில் குதித்து நின்றனர்.

குதித்த இடம் ஒரு மிகப்பெரிய தேசத்தை தன்னுள் அடக்கியிருந்தது.

சூரியன் இல்லாத தேசம்.

ஆங்காங்கே நெருப்பு ஊற்றுகள்.

"மந்திரவாதி சித்திரன் இதுதான் என் உலகம் வித்தியாசமான உலகம். சூரியன் இல்லாத தேசம். வானம் இல்லாத தேசம். நட்சத்திரங்கள் இல்லாத தேசம். என்னுடைய பாதுகாப்புக்காக இந்த உலகத்தை நிர்மாணித்துக் கொண்டேன். இந்த ஒளிவுமறைவு வாழ்க்கை நரபலி வைபவம் முடியும் வரைதான். முடிந்தவுடன் பாம்புஅரசன் சாபத்திலிருந்து விடுபட்டு முழுமுதல் கடவுள் என்ற முத்திரையுடன் கடலுக்கு வெளியே வருவேன் "

போலி சித்திரன் குழுமம் செயற்கையாக சிரித்தனர்.

வழியில் பாம்பு மனிதர்கள் அண்டாரகனை வணங்கினர்.

அண்டாரகனின் அரண்மனைக்கு நடக்கும்போதே ஆயிரம் வினோதமான காட்சிகள்

மாயாபுரி விதூஷகருடன் நட்டு பரமபதம் ஆடினானே.. அந்த பரமபதத்து பாம்புகளை கூட இங்கு கண்டான் நட்டு.

'நல்லவேளை சித்திரனின் உருவத்தில் வந்தோம். இல்லையென்றால் இந்தப் பாம்புகளே நம்மை அண்டாரகனிடம் காட்டிக் கொடுத்து விடும்'

வைரத்தால் இழைக்கப்பட்ட அரண்மனை.

அரண்மனை முழுவதும் பணிப்பெண்களாய் மோகினி பிசாசுகள்.

நட்டு குழுமத்துக்கு விருந்தளித்தான் அண்டாரகன்.

கரையான் பொறியல்

கருந்தேன் மசாலா

மண்புழு வருவல்

நட்டுவுக்கு குமட்டிக்கொண்டு வந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டான் சாப்பிடுவது போல கொறித்தான்.

விருந்து முடிந்தது.

அண்டாரகன் போலி சித்திரனை அழைத்தான். "உனக்கு சில இரகசியங்கள் காட்டுகிறேன் "

சீடர்களை ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டு நட்டு அண்டாரகனுடன் நடந்தான்.

அண்டாரகன் ஓர் அறையைத் திறந்து காட்டினான்

அங்கு-

இருபதுக்கும் மேற்பட்ட அண்டாரகர்கள் நின்றிருந்தனர். திகிலடித்து நின்றான் நட்டு.

"இதில் நிஜ அண்டாரகன் யார்?"

"எல்லாருமே முப்பரிமாண பொய் பிம்பங்கள் "

"எப்படி?"

"விசேஷ மந்திரங்கள்மூலம் முப்பரிமாண பிம்பங்கள் செய்துள்ளேன். இந்த இருபது பேர் தவிர இன்னும் பல இடங்களில் பல பிம்பங்களை உருவாக்கி உலவ விட்டுள்ளேன். எத்தனை அண்டாரகன்கள் உள்ளார்களோ-அத்தனை பேருமே என்னைப் போலவே சிந்திப்பார்கள். இத்தனை அண்டாரகன்களையும் ஒன்று சேர்த்துக் கொல்வது நடக்கக் கூடிய காரியமே அல்ல..."

"நரபலி வைபவம் முடித்தபிறகு நீங்கள் முழு முதல் கடவுள் ஆகி விடுவீர்கள். அதன் பிறகும் நூற்றுக்கணக்கான அண்டார கன்கள் இருந்தால் உங்களுக்குத்தான் தலைவலி..."

அண்டாரகன் இடிஇடியென சிரித்தான்.

"நியாயமான சந்தேகம். என்னை விட சக்தி வாய்ந்த கடவுள் ஒருவர் இருக்ககூடாது என்பதற்குதானே நரபலி வைபவம் நடத்துகிறேன். அப்படிப்பட்ட நான் கடவுள் நிலைக்கு உயர்ந்த பிறகு எனக்கு சமமாக நூற்றுக்கணக்கான அண்டாரகன்களை திரிய விடுவேனா? ஈவு இரக்கமில்லாமல் அனைவரையும் தீர்த்துக் கட்டுவேன் "

நெஞ்சடைத்தது நட்டுவுக்கு.

"உங்களின் ராஜதந்திரம் யாருக்கு வரும் கடவுளே?"

மீண்டும் அண்டாரகன்களை அறையில் போட்டு பூட்டினான், முதல் அண்டாரகன்.

அண்டாரகனும் நட்டுவும் நடந்தனர்.

"இளவரசிகளை எங்கு சிறை வைத்துள்ளீர்கள் கடவுளே?"

"ஏன்?"

"உங்களுக்காக அவர்கள் உயிரை இழப்பது புண்ணியமான காரியம் என அவர்களுக்கு விளக்குவேன் "

இருவரும் பாதாள அறைக்கு நடந்தனர்.

அங்கே மிகப்பெரிய சிறைக்கூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

சிறைக்கூடங்களில் நூறு இளவரசிகளும் பூட்டி வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் ராஜமோகினியையும் கயல்விழியையும் நட்டுவின் கண்கள் தேடின.

அண்டாரகனைக் கண்டதும் இளவரசிகள் ஆவேசம் கொண்டனர்.

"அடப்பாவி சண்டாளா உனது சுயநலத்துக்காக எங்களை சிறைப்பிடித்து வந்திருக்கிறாயே? நீ உருப்பிடமாட்டாய் "

"உனது நரபலி வைபவம் வெற்றி பெறாது. அதற்குள் நீ யாராலாவது அழிந்து போவாய் "

காரித்துப்பினர்.

கதறி அழுதனர்.

சிறைக்கதவுகளில் தலையை முட்டிக்கொண்டனர்.

போலி சித்திரன் நடிக்க ஆரம்பித்தான். "இப்படியெல்லாம் பேசக்கூடாது இளவரசிகளே! கடவுளை நிந்திப்பது சரிதானா? முறைதானா? கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதே மனிதரின் கடமை. கடவுளுக்கு உபயோகமில்லாமல் உயிர் வாழ்வதின் பயன் என்ன? எப்போதோ போகக்கூடிய உயிர் கடவுளுக்காக இப்போது நரபலியில் போகட்டுமே "

"அந்த அண்டாரகனுக்கு நீ ஒத்திசைக்கிறாயா? போடா தள்ளி."

"சரி... மிக கோபமாக இருக்கிறீர்கள் இப்போது நான் எது பேசினாலும் உங்கள் காதுகளில் ஏறாது. நாளை சந்திக்கிறேன் "

"வரவே வராதே.. போடா "

அசடு வழிந்த முகத்துடன் சிறைக்கூடத்துக்கு வெளியே வந்தான் போலிசித்திரன். அண்டாரகனைத் தொடர்ந்தான்.

"இவர்களை உன்னால் அமைதிப்படுத்த முடியுமா, என்ன?"

"முடியும் கடவுளே சிறு உளியால் பெரிய மலையையும் தகர்க்க முடியும் பெண்கள் பேதைகள். கனிவாய் பேசிப்பேசி கரைத்துவிடலாம் "

"அவர்கள் கனியாவிட்டாலும் கவலையில்லை. திட்டமிட்ட படி அவர்களை நரபலி கொடுத்தே தீருவேன் " சூளுரைத்தான் அண்டாரகன்.

"ஆமாமாம். கடைசி வழி அதுதானே "

"சித்திரா நீயும் உனது சீடர்களும் ஓய்வெடுங்கள். நாளைகாலை மீண்டும் சந்திப்போம் " ஓய்வறையைச் சுட்டினான் அண்டாரகன்.

"சரி கடவுளே "

அண்டாரகன் போனதும் கதவை உட்புறமாகத் தாளிட்டான் நட்டு. போலி சித்திரனும் அவனும் சீடர்களும் அயர்ந்துதூங்குவது போல மாய உண்மைக் காட்சி படைத்து அண்டாரகனின் மந்திர பார்வைக்கு நிறுத்தியது பிப்.

பிப் வினுவிடம் கூறியது.

"உனது திட்டம் என்ன?"

"இந்த அரண்மனையின் 13வது அறையில் ஒரு முக்கியமான ஓலைச்சுவடியை ராஜநாகம் ஒன்று பாதுகாத்து வருகிறது. அந்த ஓலைச்சுவடியில் அண்டாரகனை அழிப்பதற்கான வழி சொல்லப்பட்டிருக்கிறது சுவடிச் செய்தியை அறிந்து வர பிப் நட்டு செல்லவேண்டும் " என்றான் வினு.

நட்டுவுக்கு உதறியது.

"பயமாக இருக்கிறது வினு "

"ஏன்?"

"கொல்லன் தெருவில் ஊசி விற்பதா?"

"கொல்லன் தெருவில் ஊசி விற்க யாரும் வரமாட்டார்கள் என்பது உண்மையே. இன்னொரு விதத்தில் பார்த்தால் அங்குதான் போட்டி இல்லாமல் ஊசி விற்கலாம் " என்றான் வினு.

"இந்த பாதாள உலகத்தில் பாம்பாக நடமாடுவது எளிது. (ஒரு காலத்தில் பாம்புகள் உலகமாய் இருந்தது.பாம்பரசனை கொன்று உலகத்தை கைப்பற்றினான். அரசனின் மதியூக மந்திரி ராஜநாகனை தனது ஆளாக்கினான்) பதிமூன்றாவது அறையில் இருக்கும் ராஜநாகம் தனது நாகரத்தினத்தை துப்பி அதன் வெளிச்சத்தில்தான் ஓலைச்சுவடிகளை பாதுகாத்து வருகிறது. நட்டு நீ அந்த அறைக்குள் பாம்பாக பிரவேசித்ததும் நாகரத்தினத்தை விழுங்கி விடு. அறை அந்தகார இருளில் மூழ்கும். இன்னொரு பாம்பாக மாறி நிற்கும் பிப் கிடைக்கும் அவகாசத்தில் ஓலைச்சுவடிகளைக் கவர்ந்து கொண்டு வெளியேறும். பிப் வெளியேறியதும் நட்டு நாகரத்தினத்தை துப்பட்டும். அறைக்குள் மீண்டும் வெளிச்சம் பரவும்..."

"வெளிச்சம் மீண்டவுடன் ராஜநாகன் ஓலைச்சுவடி காணாமல் போனதை அறிந்து கொள்ளாதா?" வினவினான் நட்டு.

"அறிந்து கொள்ளும்தான். அண்டாரகனை எச்சரிக்கைப் படுத்தும்தான். அண்டாரகன் நம்மை சிறைப்பிடிப்பான்தான். என்ன செய்ய? ஆபத்தில்லாமல் சாகசம் எது? கடவுள் மேல பாரத்தைப் போட்டு காரியம் ஆற்று"

நட்டுவும் பிப்புவும் பாம்புகளாய் மாறினர்.

அந்த பதிமூன்றாம் அறைக்குள் பிரவேசித்தனர்.

அறை முழுதும் இலட்சக்கணக்கான பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து கிடந்தன.

ராட்சச குடை பிடித்தது போல் படமெடுத்து நின்றிருந்தது ராஜநாகம்.

கீழே அது துப்பிய நாகரத்தினம் ஜொலித்தது.

அதனால் அந்த அறையே மஞ்சள் சிவப்பு பச்சை நீல நிறங்களில் டாலடித்தது.

இருபுதிய பாம்புகள் அறைக்குள் திருட்டுத்தனமாய் நுழைவதை பார்த்துவிட்டது ராஜநாகம்.

# 34

தனது அறைக்குள் இரு பாம்புகள் நுழைவதை பார்த்தும் பார்க்காதது போல் இருந்து கொண்டது ராஜநாகம்.

அது அண்டாரகன் தம்பி வினுவின் வேலையாகதான் இருக்கும்.

வினுவின் உதவி இல்லாமல் யாரும் அண்டாரகனின் உயிர் இரகசியத்தை தெரிந்து கொள்ள இத்தனை ஆபத்துக்களை தாண்டி வரமாட்டார்கள்.

அண்டாரகன் ஒரு கொடியன். நன்றி மறந்தவன். மந்திர தந்திரங்களுக்காக பிறர் வாழ்க்கையைச் சிதைப்பவன். நமக்கு நமது பாம்பு உலகத்துக்கு நன்மை செய்வான் என நம்பித்தானே இந்த உலகத்தை அவனிடம் கையளித்தோம். நம்பிக்கைத்துரோகம் செய்து விட்டான்.. இருக்க இடம் கொடுத்த உலகத்தை அபகரித்துக் கொண்டான். பாம்பு மனிதர்களை அடிமையாக்கிக் கொண்டான்.

இந்த தீயவனுக்கு அழிவே இல்லையா என எத்தனை நாள் மாய்ந்து மாய்ந்து வருந்தியிருப்பேன்.

இப்போது எனது மனக்குறைக்கு தீர்வு வந்திருக்கிறது.

அண்டாரகனை அழிக்கும் இரகசியத்தைத் திருடிச் செல்லட்டும் அந்த இரகசியத்தை செயல்படுத்தி அண்டாரகனை அழிக்கட்டும்.

இந்த பாம்புகள் உலகத்தை அண்டாரகன் கைப்பற்றிய போது பாம்புகள் பேரரசன் இதுபோல சாபமிட்டான்.

'உன்னை அழிக்கும் இரகசியத்தை ஒரு ஓலைசுவடியில் எழுதி ராஜநாகத்தின் பாதுகாப்பில் விட்டுள்ளேன். நீ



ஓலைச்சுவடியை அழித்தாலோ சுவடி இருக்கும் அரண்மனை அறையை மாற்றினாலோ உடனே இறந்து போவாய். உன்னை அழிக்க விரோதிகள் பாம்பு வடிவில் தான் வருவர். அப்படி பாம்பு வடிவில் விரோதிகள் வரும்போது உனது விரோதிகள் உன்னை அழித்தொழிக்க ஒரே ஒரு முறைதான் முயற்சிக்க முடியும். இரண்டாம் முறை அவர்களால் உனது மந்திர வட்டத்துக்குள் உட்புகவே இயலாது. நீ 'முழு முதல் கடவுள்' என்கிற சக்தியைப் பெறும் போது என்னுடைய சாபம் அர்த்தமில்லாமல் போகும் '

நட்டு நாகரத்தினத்தைக் கவர்ந்தான்.

இருளில் பிப் செயற்கை வெளிச்சம் ஏற்படுத்தி சுவடிகளை திருடிவிட்டது.

நட்டு நாகரத்தினத்தைத் துப்பினான்.

இருபாம்புகளும் ஓலைச்சுவடிகளுடன் ஓய்வறைக்கு விரைந்தன.

அரை நாழிகை கெடு முடிந்தால் மாட்டிக்கொள்வோம்.

கொண்டு வந்திருந்த ஓலைச்சுவடிகளை புரட்டினான் நட்டு.

குறிப்பிட்ட ஒரு சுவ்டியை வாசித்துக்காட்டினான் வினு.

"இந்த இரகசிய சுவடியை வாசிக்கும் மக்களே மந்திரவாதி அண்டாரகனை அழித்தொழிக்கும் இரகசியத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்

உலகின் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு எதிர்பொருள் உண்டு.

இந்த பிரபஞ்சத்துக்கும் ஒரு எதிர் பிரபஞ்சம் உண்டு

ஒரு பொருளும் அதன் எதிர்பொருளும் நேருக்குநேர் சந்தித்துக் கொள்ளக்கூடாது என்பது இறைவிதி மீறி பொருளும் எதிர்பொருளும் சந்தித்துக்கொண்டால் இரண்டுமே அழிந்து போகும்.

இந்த விதியை வைத்து அண்டாரகனை அழிக்க முடியும்.

அண்டாரகனும் எதிர் அண்டாரகனும் சந்தித்துக் கொள்ளு மாறு செய்வது மிகக்கடினமான விஷயம்.

பிரபஞ்சத்தில் இருக்கும் கருப்புத்துவாரத்துக்குள் போனால் எதிர் பிரபஞ்சம் அடையலாம். பிரபஞ்சத்தில் இருக்கும் கருப்புத்துவாரத்தை நாமே செயற்கையாய் சிருஷ்டிக்க முடியும். பிரபஞ்சத்திலிருந்து எதிர் பிரபஞ்சத்துக்கு போய் திரும்புவது இரு அண்டாரகன்களை சந்திக்க வைப்பது சாத்தியமே இல்லாத சாத்தியம்.

அண்டாரகன் முழுமுதல் கடவுள் ஆகிவிட்டால் இந்த எதிர்பொருள் விதியை ரத்து செய்துவிடுவான்

எப்படியும் அண்டாரகனை அழிக்க வாழ்த்துகிறேன்!"

சுவடியை படித்து முடித்தான் நட்டு.

-கதையில் பிரவேசித்தான் ரகு.

'இதுவரை கதையில் நாங்கள் கேட்டது சின்னச்சின்ன சந்தேகங்கள். இது மெஹா சந்தேகம். எதிர்பொருள் விதி என்றால் என்ன? இப்படியொரு விதி விஞ்ஞானத்தில் உண்டா? அல்லது கப்ஸாவா? பொருள்-எதிர்பொருள் (பிரபஞ்சம் என்றால் என்ன? எதிர்பொருள் என்றால் என்ன?) பற்றியும் விளக்குங்கள் "

"உண்மைதான். இந்த சிக்கலான விஷயத்தை விளக்கினால் தான் புரியும் 'எதிர் பொருள் விதி' என்பது விஞ்ஞானத்தில் பௌதிகத்தில் உண்டு. இப்போது கம்ப்யூட்டர் தாத்தாவாகிய நான் கமல், புவனா, ரகு, முத்தமிழ், அர்ச்சனா, திவ்யா,அம்முலு, வசந்த்தாகிய உங்களுக்கு இந்த பூமியில் இந்த சென்னையில் இந்த அபார்ட்மெண்ட்டில் அமர்ந்து கதைசொல்கிறேன். நாம் பொருள். என்னைப்போலொரு கம்ப்யூட்டர் தாத்தா கமல், புவனா, அர்ச்சனா, வசந்த் போலொரு குழந்தைகளுக்கு பூமியை போன்ற இன்னொரு பூமியில் சென்னையை போன்ற இன்னொரு எதிர் சென்னையில் இந்த அபார்ட்மெண்ட்டை போன்ற இன்னொரு எதிர் அபார்ட் மெண்ட்டில் அமர்ந்து கதை சொல்லிக் கொண்டிருப்பார். இவை எதிர்பொருள். பொருள் இருப்பது ஒரு பிரபஞ்சத்தில் என்றால் எதிர்பொருள் இருப்பது இன்னொரு பிரபஞ்சத்தில். பொருளுக்கும் எதிர் பொருளுக்கும் இடையே உள்ள தூரம் பல ஒளி நூற்றாண்டுகள். (அதாவது 300000 X 60 X 60 X 24 X 365 X 100 X 300 கிலோமீட்டர்கள்)"

"சரி தாத்தா இவ்வளவு தூரம் போக. இதே தூரம் வர. நட்டு எப்படி எதிர் அண்டாரகனை அழைச்சிட்டு வந்து வில்லன் அண்டாரகனை அழிப்பான்? வில்லன் அண்டாரகனை அழிக்க எப்படி எதிர் அண்டாரகன் பூமிக்கு வருவான்?"

கம்ப்யூட்டர் தாத்தா சிரித்தார்.

"விஞ்ஞானப்படி ஒரு சாத்தியம் இருக்குது "

"அது என்ன சாத்தியம்?"

"மனுசனுக்கு மச்சம் இருக்கிற மாதிரி இந்தப்பிரபஞ்சத்தில் பல பிளாக் ஹோல்ஸ் இருக்கு. பிளாக் ஹோல்ஸ்னா தமிழ்ல கருப்புத்துவாரம். இந்த கருப்புத்துவாரம் தன் அருகில் எது வந்தாலும் கபக்னு விழுங்கிடும் துவாரத்துக்குள்ள இருக்கிற வெப்பம் கணக்குக்குள் அடங்காதது. இவை ஒவ்வொன்றுமே பல லட்சம் கிலோ மீட்டர் ஆரம் உள்ள கன்னங்கறுப்பு குழிவுகள் இந்த கறுப்புத்துவாரத்துக்குள் போனால் எதிர் பிரபஞ்சம் போய் விடலாம் நேரம் செலவழியாமல் "

"கருப்புத்துவாரத்துக்குள்ள போனா நம்ம சாம்பல் கூட மிஞ்சாதே தாத்தா "

"உண்மைதான் நிஜ கருப்புத்துவாரத்துக்குள் போனால் தானே ஆபத்து? நாமே ஒரு கருப்புத்துவாரத்தை சிருஷ்டித்து போய் எதிர் அண்டாரகனை சந்திக்கலாம் "

"அது எப்டி?"

"அதையும் நானே சொன்னா நல்லாருக்காது. கதைல வர்ற வினு சொல்வான். கேளுங்க " மீண்டும் கதையை ஆரம்பித்தார்.

-படித்து முடித்துவிட்டு நட்டு வினுவைப் பார்த்தான்.

"நட்டு! நீ மனோவேகத்தில் பறந்து கருப்புத்துவாரத்தில் புகுந்து எதிர் அண்டாரகனை சந்திக்க இலட்சம் ஆண்டுகள் ஆகும் நான் ஒரு எளிதான உபாயம் சொல்லுகிறேன். சிறு குழந்தைகள் சிறுகுழல் வைத்து சோப்பு குமிழிகள் உற்பத்தி செய்வதை பார்த் திருப்பீர்கள் நான் ஒரு விசேஷ குழலும் ஒரு மந்திரத்திரவமும் தருகிறேன். அந்தக்குழலை வைத்து ஒரு மிகப்பெரிய சோப்புக்குமிழி நீ உருவாக்க வேண்டும். அந்த சோப்புக்குமிழி நீ

நினைப்பது போல கோள வடிவில் இருக்காது. இரு பூச்சிகள் பிடிக்கும் வலைகளை இணைத்தது போலிருக்கும். இடது பக்கத்தில் ஒரு மனித உடம்பு நுழையும் அளவுக்கு துவாரம் வலது பக்கத்தில் ஒரு அல்லது அதிகபட்சம் இரு மனித உடம்புகள் வெளியேறும் அளவுக்குத் துவாரம். சோப்புக்குமிழிக்குள் நிஜ கறுப்புத் துவாரத்துக்குள் இருக்கும் அளவுக்கு வெப்பம் இருக்கும் அருகில் நிற்பதை உறிஞ்சும்..."

"சரி அப்புறம்?"

"மந்திரத்தால், ஒரு களிம்பு வரவழைத்துத்தருகிறேன். அதை உடல் முழுவதும் பூசிக்கொண்டால் சோப்புக்குமிழிக்குள் இருக்கும் வெப்பம் தாக்காது... சோப்புக் குமிழியின் நீளம் ஒரு சாண்தானே இருக்கும் என அலட்சியமாக நினைத்து விட வேண்டாம். குமிழிக்குள் நீள அகல உயரங்களும் தூரங்களும் அளவைக்கு அப்பாற்பட்டு அமைந்திருக்கும். குமிழியின் இடது பக்கத்தி லிருந்து நீ வலது பக்கத்துக்கு பயணித்தால் இதே போன்ற ஒரு ப்ரம்பு உலகத்தில் போய் சேர்வாய் அங்கும் ஒரு நட்டு, சக்தி, ஆர்த்தி, பிப், வினு இருப்பார்கள். இவர்களில் உன்னைப் போலி ருக்கும் எதிர்பொருள் நட்டுவை நேருக்கு நேர் சந்தித்துவிடாதே. சந்தித்தால் இரு நட்டுகளும் அழிந்து போவீர்கள்."

"சோப்புக்குமிழிக்குள் பயணகாலம் எவ்வளவு?"

வினு சிரித்தான்.

"சொன்னால் நம்பமாட்டாய். நீ புறப்பட நொடிக்கு முந்தின நொடி வந்து சேர்வாய் "

"அது எப்படி?"

"அதை உனக்கு விளக்கினால் புரியாது. இத்தனை கோடி ஆச்சரியங்களை படைத்த கடவுளை வென்று விடலாம் என்று மனப்பால் குடிக்கிறான் அண்டாரகன். நீ மீண்டும் சோப்புக் குமிழிக்குள் எதிர் அண்டாரகனுடன் வந்து புகு. புறப்பட்ட இதே இடத்துக்கு வந்து சேர் "

"நான் கூப்பிட்டவுடன் எதிர் அண்டாரகன் வருவானா?"

"நான் சொல்வதைப் போலச் சொல் " நட்டு காதுகளில் கிசுகிசுத்தான் வினு.

"மிக பிரமாதமான யோசனை "

"நன்றி "

"இன்னும் சில சந்தேகங்கள் "

"கேள் "

"நான் போய் வரும் கால அளவுக்கு இந்த சோப்புக்குமிழி வெடிக்காமல் இருக்குமா? வெடித்தால் என் கதி?"

வினு இருண்டான்.

"இது மந்திரமும் விஞ்ஞானமும் கலந்த புது சாகசம். இப்படி ஒரு முயற்சி இதுவரை யாரும் செய்ததில்லை இனிமேலும் செய்யப்போவதில்லை. இந்த முயற்சி வெறும் நூறு இளவரசிகளைக் காப்பாற்றுவதற்காக மட்டுமல்ல இறை எதிரியை ஒழிப்பதற்கும். இந்த கன்னி முயற்சியில் சோப்புக்குமிழி திடீர் என்று வெடித்தாலும் வெடிக்கலாம். அல்லது நீ எதிர் பிரபஞ்சம் போகாமல் சோப்புக் குமிழியால் உறிஞ்சப்பட்டு இறந்து போகலாம். இத்தனையும் மீறி நீ எதிர் பாம்பு உலகம் போய் எதிர் அண்டாரகனை சந்திக்க- எதிர் அண்டாரகனால் நீ கொல்லப்படலாம். இன்னும் எத்தனையோ லாம்கள்..."

நட்டு பெருமூச்சு விட்டான்.

சக்தியும் ஆர்த்தியும் பயந்து போயினர்

"தேவைதானா இந்த திகில் பயணம்?"

நட்டு மிடுக்கானான்.

வினு அவசரப்படுத்தினான். "இது விவாதிக்க நேரமல்ல. அரை நாழிகை கெடு இப்போது முடிந்து விடும் அண்டாரகன் விழித்து விட்டால் நம் அனைவரையும் நொடியில் அழித்து விடுவான் "

வினு மந்திரத்தால் சிறு மந்திரக்குடுவை வரவழைத்தான். அதனுடன் ஒரு சிறு குழல். குடுவையில் இருக்கும் சோப்புத் திரவம் நீல கருமையாய் காட்சியளித்தது.

வினு குழலை எடுத்து சோப்புத்திரவத்தை ஒற்றிஒற்றி ஊதினான்.

சிறுசிறு சோப்புக்குமிழிகள் தோன்றின

நூற்றுக்கணக்கில் அவை தோன்றி வெடித்தன.

மீண்டும் மீண்டும் வினு முயற்சிக்க-

அந்த விசேஷ சோப்புக்குமிழி உற்பத்தி ஆனது. மிகப்பெரிய கோளமாய் இருந்தது நடுவில் குறுகியது. நீள் வட்டமாய் மாறியது. இடது பக்கம் ஒருதுவாரமும் வலது பக்கம் சற்றே பெரிய துவாரமும் முளைத்தன.

வினு கூவினான்.

"உருவாக்கி விட்டேன். செயற்கை கறுப்புத்துவாரத்தை உருவாக்கி விட்டேன் நட்டு சீக்கிரம் "

நட்டு கடவுளை வேண்டிக்கொண்டான். இப்போது அவன் போலி சித்திரன் உருவத்தில் இல்லாமல் நட்டுவின் உண்மை வடிவத்திலேயே இருந்தான்.

அவனை அனைவரும் தட்டிக்கொடுத்தனர்

"பெஸ்ட் ஆ∴ப் லக் நட்டு "

"ஸேம் டு யூ நட்டுக்குட்டி "

"வென்று வா நட் "

"வீரச்சிறுவனே புறப்படு "

நட்டு எகிறி சோப்புக்குமிழியின் இடது துவாரத்துக்குள் புக.

அரை நாழிகை கழிந்து உண்மை பிடிபட்டு அண்டாரகன் ஆங்காரமாய் ஓடி வந்தான்.

சக்தி, ஆர்த்தி, பிப், வினுவை சபித்தான்.

நால்வரையும் விஷபாம்புகள் கொத்தின. நால்வரும் பிணமாய் சிதறினர். சோப்புக்குமிழிக்குள் புகுந்திருந்த நட்டுவின் இரு கால்கள் மட்டும் தெரிந்தன.

அண்டாரகன் நட்டுவின் கால்களை இழுத்தான்.

நட்டுஇழுப்புக்கு உடன்பட மறுத்தான்.

ஜீவமரண போராட்டம்

வெற்றி அணடாரகனுக்கா?

வெற்றி நட்டுக்கா?

O

# 35

***கா***ல்களை இழுத்த அண்டாரகனின் முகத்தில் உதைத்தான் நட்டு ஒளி துப்பாக்கி எடுத்து சுட்டான். மைனஸ் 198 டிகிரி சென்டிகிரேட் குளிர் அண்டாரகனை பேய்தனமாய் தாக்கியது அண்டாரகனின் பிடி தளர்ந்தது. கிடைத்த அவகாசத்தில் நட்டு சோப்புக் குமிழிக்குள் முழுதும் போய் விட்டான். கால்களையும் உள்ளிழுத்துக் கொண்டான். சோப்புக்குமிழ்க்குள் நட்டு போய்விட்டது ஆத்திரத்தை ஏற்படுத்தியது அணடாரகனுக்கு.

கீழே கிடந்த சக்தி, ஆர்த்தி பிணங்களை உதைத்தான்.

சோப்புக்குமிழியை உடைக்கப் பார்த்தான். முடியவில்லை.

கடுமையான மந்திரங்களை பிரயோகித்தும் குமிழி உடையவில்லை.

குமிழிக்குள்-

இருட்டான புதைமணல் நட்டுவை எங்கோ உறிஞ்சி இழுத்தது. சுற்றிலும் எரிமலை வெம்மை.

காலத்தைக் கடந்த பயணம்.

ஒளிவேகம் மனோவேகம் தாண்டிய வேகம்.

ஜிவ்

சக் சக்

ப்ரக்

ப்ளக் ப்ளக்

சோப்புக்குமிழியின் வலது பக்கத்துவாரம் வந்து சேர்ந்தான் நட்டு. குதித்து நின்றான்

வாவ் என்ன ஆச்சரியம்!

பாம்பு அரண்மனை போன்றதொரு பாம்பு அரண்மனை.

புறப்பட்ட இடத்தில் இருந்த பதிமூன்றாம் அறை போல் இங்கும் பதிமூன்றாம் அறை.

தூரத்தில் பேச்சு சப்தம் கேட்டது.

நகல் நட்டு குழுமம் நகல் அண்டாரகனை அழிக்க திட்டம் தீட்டியபடி அறைக்குள் வந்தனர்.

நிஜ நட்டு அதிர்ந்தான்.

நகல் நட்டு நம்மைப்போலவே துறுதுறு விறுவிறு.

ஓடிப்போய் நட்டுவை அணைத்து முத்தமிட நட்டுவுக்கு ஆசை வந்தது.

ஆனால்-

வினுவின் எச்சரிக்கை நினைவுக்கு வந்தது.

பொருளும் எதிர்பொருளும் நேருக்குநேர் சந்தித்துக் கொண்டால் இரண்டுமே உடனடியாக அழிந்து போகும் என்றாரே

நானும் நகல் நட்டுவும் சந்தித்துக்கொண்டால் இருவரும் அழிந்துபோவோம்.

அப்படியிருக்கையில் சந்திப்பு தேவையா?

நட்டு பதுங்கி வெளியேறினான்.

எதிர் அண்டாரகனின் சயன அறைக்குள் பிரவேசித்தான் நட்டு.

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தவனை பார்த்து ஸ்தம் பித்தான்.

ஒரிஜினல் அண்டாரகனுக்கும் இந்த அண்டாரகனுக்கும் துளியும் வித்தியாசம் இல்லை. அச்சு அசலாய் அப்படிக்கு அப்படியே.

எதிர் அண்டாரகனை எழுப்பினான் நட்டு.

"கடவுளே "

டூப்ளிகேட் அண்டாரகன் எழுந்தான்.

"யார் நீ?"

"என் பெயர் நட்டு என்கிற நடராஜ். நான் வேறு பிரபஞ் சத்தைச் சேர்ந்தவன். வேறு காலத்தைச் சேர்ந்தவன். உங்களுக்கு உதவ வந்திருக்கிறேன் "

"கடவுளாகிய எனக்கே நீ உதவப்போகிறாயா? எப்படி?"

"நீங்கள் கடவுளின் சக்தியைப் பெற நூறு இளவரசிகளை நரபலி கொடுக்க இருக்கிறீர்கள் அல்லவா?

"ஆமாம்... உனக்கு எப்படி தெரியும்?"

"நன்றாகவே தெரியும். நான் சொல்வதைக் கவனமாக கேளுங்கள். கடவுள் மட்டும் தான் உங்களுக்கு ஒரே எதிரி என்று நினைக்காதீர்கள். உங்களைப்போலவே இன்னொரு அண்டாரகன் இன்னொரு பிரபஞ்சத்தின் பாம்புகள் உலகத்தில் இளவரசிகளை நரபலி கொடுக்க இருக்கிறான். அவன் உங்களை முந்திக் கொண்டால் அவனே முழுமுதல் கடவுள் ஆவான், உங்களையும் ஒழிப்பான். அதற்கான பூஜையிலும் கூடுதலாய் ஈடுபட்டுள்ளான். அவனைப் பிடிக்காத ஒரு மந்திரவாதி என்னை உங்களிடம் அனுப்பினார். விசேஷ சோப்புக்குமிழியில் பயணம் வந்தேன்..."

"உன்னை எப்படி நம்புவது?"

"நான் சொல்லும் இரகசியம் உங்களின் மந்திர வட்டத்துக்கு அப்பாற்பட்டது. என்னுடன் நீங்கள் வந்தால் உண்மை தெரிந்துவிடப்போகிறது. நீங்கள் என்னுடன் உடனே புறப்பட்டு வாருங்கள். சோப்புக்குமிழிக்குள் பயணம். அண்டாரகனை சூழ்ச்சி செய்தோ நேருக்கு நேர் மோதியோ வெற்றி பெறுங்கள். மீண்டும் சோப்புக்குமிழி பயணம் மேற்கொண்டு இங்கு வந்து நரபலி வைபவம் முடிக்கலாம் நீங்கள். அல்லது உங்கள் எதிரி அண்டாரகனை ஒழித்த உலகத்திலேயே இருந்து அங்கிருக்கும் 100 இளவரசிகளை நரபலி கொடுத்து முழுமுதல் கடவுள் ஆகலாம் "

அண்டாரகன் II யோசித்தான்.

"யோசிக்காதீர்கள். உடனடியாக நீங்கள் செயலாற்ற வேண்டிய தருணம் இது "

"பார்க்க நல்ல சிறுவனாய் தெரிகிறாய். தவிர இவ்வளவு பெரிய அபூர்வ பயணத்தை மேற்கொண்டு வந்து என்னிடம் நீ ஒருசெய்தி கூறுகிறாய் என்றால் அது உண்மையாகத் தான் இருக்கும். உன்னிடம் மந்திரசக்தியும் விஞ்ஞான அறிவும் எக்க சக்கமாய் உள்ளன. அதனை நீ எனது சேமத்துக்கு உபயோகப் படுத்துகிறாய் என்பது ஆனந்தமான விஷயம். என்னைப் போலிருக்கும் அண்டாரகனை ஒழிக்க உதவும் உனக்கு தகுந்த பதவி அளிப்பேன் "

அண்டாரகனும் நட்டுவும் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு சோப்புக்குமிழிக்குள் சலேரென்று புகுந்தனர்.

மீண்டும் பேய்தனமான பயணம்.

புறப்பட்ட துவாரத்து வழியாக முதல் அண்டாரகனின் சயன அறைக்குள் வந்து விழுந்தனர்.

குழந்தைகளே நன்கு கவனியுங்கள்

எதிர் அண்டாரகனை அழைத்துவர நட்டு சோப்புக் குமிழிக்குள் புகுந்த போதுதான் அரை நாழிகை அவகாசம் முடிந்து அண்டாரகன் விழித்தெழுந்தான். ஓடி வந்தான். சக்தி ஆர்த்தியை பாம்பு தீண்டி கொல்லவைத்து நட்டுவின் கால்களை இழுத்தான் அண்டாரகன்.

-கதையில் குறுக்கிட்டான் முத்தமிழ்.

"ஒரு நாழிகைக்கு எத்தனை நிமிஷம் தாத்தா?"

"ஒருமணி நேரத்துக்கு இரண்டரை நாழிகை. அதாவது ஒருநாழிகைக்கு 24நிமிஷம். அண்டாரகன் தூக்கம் கலைய கிடைத்த அவகாசத்தின் அளவு அரை நாழிகை அல்லது 12நிமிஷம் " மீண்டும் கதைக்குள் பிரவேசித்தார் தாத்தா.

மந்திரவாதி அண்டாரகன் அரை நாழிகை அவகாசம் முடிந்து எழுவதற்குள் நட்டுவும் எதிர் அண்டாரகனும் அண்டாரகன் 1 சயனஅறைக்குள் புகுந்ததால் சக்தி ஆர்த்தி

பாம்புக்கடிபட்டு இறக்காமல் நட்டு சோப்புக்குமிழிக்குள் புகும் நொடியில் நின்றிருந்தனர்.

நட்டுவும் எதிர் அண்டாரகனும் அறைக்குள் பிரவேசிக்க அரை நாழிகை அவகாசம் முடிந்து முதல் அண்டாரகன் நட்டு குழுமத்தை(போலி சித்திரனும் அவனது சீடர்களும்) அழிக்க பாய-

நட்டு விலகி ஓடி ஒளிந்தான்.

அண்டாரகனும் எதிர் அண்டாரகனும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர்.

"ஆ என்னைப் போல நீயா?"

"ஆ என்னைப் போல நீயா?"

'சொய்ங்க்.'

'சொய்ங்க்.'

இருவரும் தத்தம் உடை வாள் உருவிக்கொண்டனர்.

வெறித்தனமாக ஒருவர் மீது ஒருவர் பாய....

அந்த பேரதிசயம் பெருஅதிசயம் நடந்தது.

இரு அண்டாரகன்களும் கண்ணாடி பொம்மைகள் போல வீறல் விட்டனர். பின் பொசுங்கினர். உருகி குழகுழப்பாய் தரையில் விழுந்தனர். பின் ஏழு வர்ண நிற ஆவியாகி வானில் உய்க்கி மறைந்தனர்.

நட்டு கும்மாளித்தான்.

சக்தி ஆர்த்தி அறைக்கு ஓடினான். பிப் கூத்தாடியது. வினு சாபம் நீங்கி முழு மனிதனாய் ஆடையுடன் வந்து நின்றான். சோப்புக்குமிழி பட் என்று வெடித்து சிதறியது. எதிர்பொருள் விதி பற்றிய ஓலைச்சுவடி பல பிரபஞ்சங்களைத்தாண்டி கடவுளின் காலடிகளை அடைந்தது. கடவுள் புன்னகைத்தார்.

அண்டாரகனின் வீழ்ச்சி கேள்விப்பட்டு பாம்புமனிதன் கூத்தாடினர்.

பிப் மூன்று ஊசிகளை மந்திரப்பேழையிலிருந்து எடுத்து நட்டு,சக்தி, ஆர்த்தி உடல்களிலிருந்து சித்திரன் பிளஸ் சீடர்களின்



ஆறுஅம்சங்களை உறிஞ்சியது. உறிஞ்சப்பட்ட அம்சங்களுடன் கூடிய ஊசிகளை பிப் அழித்தது.

நட்டு சிறைக்கூடங்களிலிருந்து நூறு இளவரசிகளையும் விடுவித்தான்.

அத்தனை இளவரசிகளும் குதூகலித்தனர். பரஸ்பரம் அறிமுகம் நடந்தது.

"ஒரு வீரச்சிறுவனால் எங்களுக்கு விடுதலையா?"

"உங்களில் ராஜமோகினி, கயல்விழி யார்?"

இரண்டு இளவரசிகளும் முன் வந்தனர்.

"யப்பா சூப்பர் அழகுடாப்பா...."

சக்தியும் ஆர்த்தியும் நட்டுவை முறைத்தனர்.

"ஜொள்ளு விடாதேடா ஜியாமென்ட்ரி பாக்ஸ் ஸ்கேலு"

ராஜமோகினியும் கயல்விழியும் நட்டுவின் கன்னங்களில் மாறிமாறி முத்தமிட்டனர். இரண்டு இளவரசிகள் முத்தமிடுவதை பார்த்ததும் மீதி இளவரசிகளும் ஓடிவந்து அவர்கள் பங்குக்கு முத்தமிட்டனர்.

கயல்விழி அங்கலாய்த்தாள். "இந்த வீரச்சிறுவன் இளைஞனாக இருந்தால் நானே இவனை மணம் முடிப்பேன் "

"நானும்தான் " என்றாள் ராஜமோகினி.

"நாங்களும் தான் " என்றனர் மற்ற இளவரசிகள்.

"அம்மாடிகளா நான் இந்த விளையாட்டுக்கு வரல. நான் படிக்கணும் வேலைக்குப் போகணும் அப்புறம்தான் எங்க பெற்றோர் எனக்கு திருமணம் செய்து வைப்பார்கள் "

பாம்பு மனிதர்கள் தங்கள் உலகத்துக்கு ராஜாவாக இருக்க நட்டுவை இறைஞ்சினர்

நட்டு பேசினான் "அண்டாரகனின் தம்பியாக வினு இருந்தாலும் வினு நல்லவர் அவர் உதவியால்தான் எங்களால் அண்டாரகனை ஒழிக்க முடிந்தது.இனி உங்களுக்கு மன்னராக

அவரே இருப்பார். அவர் காலத்தில் நீங்கள் நிம்மதியாக சுதந்திரமாக வாழ்வீர்கள் "

வினு நன்றிக் கண்ணீர் வடித்தான்.

வினுவும் பாம்பு மனிதர்களும் பிரியா விடை தர நட்டு குழுமம் பிப்புடன் மண்ணுளிப் பாம்பில் ஏறினர். பின்னே பல மண்ணுளிபாம்புகளில் 100 இளவரசிகள்.

மண்ணுளில்பாம்புக்குக் கூட காதுவரை வாய்.

"அந்தத்தீயவனை அழித்தொழிக்க ஆள் இல்லை என்பதால்தான் 'கடவுளே' என அழைத்தோம். அவனுக்கு சரியான தீர்ப்பு எழுதிவிட்டீர்கள் "

பொந்தின் விளிம்பில் காத்திருந்தது நீலத்திமிலங்கம் இவர்களை ஏற்றிக்கொண்டது. நூறு இளவரசிகளையும் நூறு திமிங்கலங்கள் ஏற்றிக் கொண்டன.

கரைக்கு வந்தனர்.

சக்தி நட்டுவிடம். "நாம் கால பயணம் வந்து எத்தனை நாளாகிறது நமது காலக்கணக்கின் படி."

நட்டு கணக்கிட்டுத்துள்ளினான்.

"ஒரு வருட கெடு முடிய இன்னும் 15 நிமிடங்கள் "

பிப்பின் கைகளைப் பற்றிக் கொண்டு நட்டு நெகிழ்ந்தான். மந்திரத்தால் ஒரு மிகப்பெரிய தேர் வரவழைத்து பிப்பை சாரதி ஆக்கினான் நட்டு.

"நாங்கள் எங்கள் காலத்துக்கு திரும்ப நேரம் வந்து விட்டது பிப் இந்த நூறு இளவரசிகளையும் கவனமாக அவரவர் தேசங்களில் ஒப்படை. இளவரசிகளின் தந்தையார்களுக்கு எங்களின் அன்பு விசாரிப்புகளை வழங்கு."

பிப் அழுதது.

இளவரசிகள் தாங்கள் அணிந்திருந்த ஆபரணங்களை நினைவுப்பரிசுகளாக வழங்கினர்.

"யாரும் அழக்கூடாது மகிழ்ச்சியாக புறப்படுங்கள் "

பறக்கும் தேர் வானில் எழுந்தது.

உணர்ச்சிப்பூர்வமான வழியனுப்பு வைபவம் நடந்தேறியது.

நட்டு குழுமம் கன்னங்களில் வழியும் கண்ணீரை சுண்டி விட்டுக் கொண்டனர்.

ஒரு வருடக்கெடு முடிய இன்னும் 300நொடிகளே

நட்டு ஆங்காங்கே கிடக்கும் சிலப்பொருட்களை சேகரித்து மந்திரப்பேழையில் பாதுகாத்துக் கொண்டான்.

"நட்டு."

"என்னங்கடி?"

"மிகப்பெரிய சாகசன் நீ மற்றவர்களை கண்ணியமாய் நடந்த அழைக்க பேசக் கற்றுக்கொள். இனி வாடி போடி எல்லாம் வேண்டாம் "

"நீங்க சொல்றது உண்மைதான் அக்காஸ். இனி மரியாதையா நடந்துக்கிறேன் "

"அது இருக்கட்டும். நாம நமது காலத்துக்கு திரும்ப இன்னும் 240 நொடிகளே உள்ளன அலட்சியமாக இருக்காது உடனே புறப்படு "

"ஒரே ஒரு நொடி அவகாசத்லதான் அட்டகாசமான சாகசம் எல்லாம் செஞ்சேன். 240 நொடி இருக்கு. மெதுவா நிதானமாகவே போகலாம் "

"உன்னுடைய பேச்சில் சற்றே கர்வமும் ஆணவமும் தொனிக்கின்றன. வேண்டாம் முன்னதாகவே போவதில் தவறு ஒன்றும் இல்லை".

"ரிலாக்ஸான மூடில சொன்னேன். ஏன் மந்திரக்கடிகாரம் மக்கர் பண்ணிடும்னு பயப்படுறீங்களா?"

"அப்படித்தான வச்சுக்கயேன் "

நட்டு எதிர்மறையாய் தலையாட்டினான். "மந்திரக் கடிகாரம் தப்பே பண்ணாது.இதோ இயக்கிக்காட்ரேன் "

மூவரும் தத்தம் மந்திரக்கடிகாரங்களை கட்டிக் கொண்டனர்.

கி.பி. 2005அக்டோபர் மாதம் திரும்புவதற்காக திருகியை திருகினான் நட்டு

அய்யய்யோ!

என்ன சொல்வது? எப்படி சொல்வது?

தீ என்று வெறும் வாயால் சொல்ல வாயே வெம்மையால் வெந்து விட்டதே!

மூவரின் திருகிகளும் செயல்பட மறுத்தன.

மீண்டும்....

மீண்டும் முயற்சிக்க...

மந்திரக்கடிகாரங்கள் செயல்பட மறுத்தன

நட்டுகுழுமம் கலவரமடைந்தனர்.

டிக்டிக் டிடிக்டிடிக் டிக்டிக்

140 நொடிகள்....

130 நொடிகள்...

125 நொடிகள்...

தேவதைகள் கொடுத்த ஒரு வருடகெடு முடிய இன்னும் நூற்றிஇருபதே நொடிகள்!

O

# 36

**தே**வதைகள் மந்திரப்பேழை வைத்திருக்க கொடுத்திருந்த கெடு ஒரு வருடம்தான்!

ஒருவருட அவகாசம் முழுதும் கரைய இன்னும் இரண்டு நிமிடங்களே

கடிகார முட்கள் ஆணியடித்தமாதிரி நிற்க மந்திரக் கடிகாரம் ஓட மறுத்தது.

நட்டு குழுமத்துக்கு இதயம் வாய்க்கு வந்து துடித்தது.

இந்த இருநிமிடமும் மந்திரக்கடிகாரம் இயங்க மறுத்து விட்டால் என்ன ஆகும்?

ஒன்று. இந்த ராஜாராணி காலத்திலேயே இருந்து மீதி வாழ்க்கையை வாழ்ந்து பார்க்க வேண்டி இருக்கும்.

அல்லது எதிர்காலப்பிரஜைகள் இறந்தகாலத்தில் தொடர்ந்து இருக்க முடியாமல் காற்றோடு காற்றாக கரைந்து போக வேண்டியது தான்.

நட்டு மீண்டும் மீண்டும் மந்திரக்கடிகாரங்களை உலுக்கினான்.

பயமும் பதட்டமும் ஆவேசமும் குழப்பமும் சக்தி ஆர்த்தி மனங்களில் கோலாட்டம் ஆடின.

திடீரென்று...

திடீரென்று...

தூங்கிய கடவுள் விழித்துக்கொண்டாரா?

நட்டு குழுமம் செய்த நன்மைகள் கூடி மந்திரக் கடிகாரங்களை ஓட வைத்து விட்டனவா?

மந்திரக்கடிகாரங்கள் இயங்கின.

அவைகளை அவரவர் கட்டிக்கொண்டு கூவினர்.

"மந்திரக்கடிகரங்களே எங்களை எங்கள் காலத்துக்கு சக்தி வீட்டுத்தோட்டத்துக்கு கொண்டு போங்கள் உடனே உடஉடனே "

'உய்க் '

'உய்க் '

'உய்க் '

மூவரும் காலச்சுரங்கத்தில் சீறிப்பாய்ந்தனர்.

சக்தி வீட்டுத்தோட்டத்தில் குதித்து நின்றனர்.

நட்டு கடிகாரத்தைப் பார்த்தான்.

"இன்னும் முப்பதே நொடிகள் தான் இருக்கின்றன "

வானத்தில் ஈஸ்ட்மென் நிற வெளிச்ச பிரளயம்

நட்சத்திரங்கள் வழக்கத்துக்கு மாறாக கூடுதலாய் மின்னின.

புறாக்கள் பறந்தோடின.

தோகை விரித்த மயில்கள் வானிலிருந்து தரைக்கு வந்தன.

வானவில்கள் சிதறின.

குயில்களும் கிளிகளும் பாட்டு இசைத்தன.

கோடிபூக்கள் ஒரே சமயத்தில் பூத்தது போல கமகமவாசனை எழுந்தது. வண்ணத்துப் பூச்சிகள் படபடத்தன.

ரங்கோலி வர்ணங்கள் காற்று மண்டலத்தில் இறைந்தன.

வானத்துக்கும் பூமிக்குமாய் ஒரு ஒளிக்கம்பம் தோன்றியது.

நூற்றுக்கணக்கான தேவதைகள் 'லலா லலா' பாடியபடி தோட்டத்துக்கு இறங்கி வந்தன.

நட்டு, ஆர்த்தி, சக்தி முகங்களில் வர்ணங்களும் நட்சத்திரத் தெறிப்புகளும் பட்டு தெறித்தன.

இறந்த காலத்தில் பயணித்து விட்டு திடீரென்று நிகழ் காலத்துக்குத் திரும்பிய மூவரின் உடலும் மனமும் ஏற்றுக்கொள்ள வில்லை. நிலை தடுமாற்றமும் இருந்தது.

ஆனால் அத்தனையையும் தேவதைகள் வருகை சமன் செய்தது.

தேவதைகளை பார்த்து நட்டு குழுமம் துள்ளியது.

"ஹாய் தேவதைஸ்! எப்டி இருக்கீங்க? பிங் பிங் பியா எப்டியிருக்க? மினுமினு மினுக்கியோ எப்டியிருக்க? ஹேய் டுஷ் ஹலோ குய் ஹாய் டிக்கிலி ஹலோ ஹலோ பக்லூஷ்"

தேவதைகள் மூவரின் முகங்களுக்கு முன் நின்று நடனமாடின.

"நல்லாருக்கோம் நட்டு, சக்தி, ஆர்த்தி, எப்டியிருக்கீங்க? ஒரு வருட பயண அனுபவம் எப்டி இருந்துச்சு? வாழ்க்கைல மறக்க முடியாத அனுபவம் இல்லையா? திரும்பி வரும்போது மந்திரக் கடிக்காரம் வேலை செய்யலைபோல. நல்லவேளை தெய்வாதீனமா கடிகாரத்தின் பழுதுதானே சரியாகி நிகழ்காலம் பறந்து வந்தீங்க "

மூவரும் பெரிதாய் மூச்சு விட்டார்கள்.

"இப்படி ஒரு சாகச பயணம் யாரும் மேற்கொண்டிருக்க மாட்டார்கள். கடந்த வருடத்தை மிக ரசித்தோம். எங்களின் ஒரே வருத்தம் நாங்கள் இறந்துவிட்டதாக நினைத்து எங்கள் பெற்றோர்கள் எங்களுக்கு காரியம் செய்ததுதான் "

"இன்னும் சில நிமிடங்கள் அவர்களைத்தான் நேரில் சந்திக்கப் போகிறீர்களே "

"ஆமாம் "

"குழந்தைகளே நாங்கள் உங்களுக்கு பரிசளித்த மந்திரப்பேழையை திருப்பிக் கொடுங்கள் "

"தருகிறோம். டைனசார் காலத்தில் நாங்கள் சேகரிச்ச சில பொருட்கள் திருவள்ளுவர் கையளிச்ச 1670 புதிய குறள்கள், மன்னர்களும் இளவரசிகளும் குட்டிச்சாத்தான் பிப்பும் கொடுத்த பரிசுப்பொருடகள் இன்னபிற மந்திரப்பேழையில் உள்ளன. அவைகளை மட்டும் நாங்கள் எடுத்துக் கொள்ளலாமா?"

எதிர்மறையாய் தலையாட்டின தேவதைகள்.

"மன்னிக்கவேண்டும். அவை யாவும் காற்றில் கரைந்து விடும். உங்களுக்கு கிடைக்காது. அவைகளை மறந்து விடுங்கள் "

ஏறக்குறைய அழுவது போல் முகம் வைத்துக்கொண்டு மந்திரப்பேழையை தேவதைகளிடம் திருப்பி அளித்தனர் நட்டு,சக்தி,ஆர்த்தி

"இன்னொரு முக்கியமான விஷயம்... நீங்கள் இறந்த காலத்துக்கு பயணம் போய்விட்டு வந்தது இயற்கை விதிகளுக்கு மாறானது.. ஆகவே இன்னும் சில நிமிடங்களில் பாட்டிலிலிருந்து எங்களை விடுவித்தது முதல் காலபயணம் முடித்து நீங்கள் திரும்பி வந்தது வரை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மறந்து விடுவீர்கள் "

"ஆஹ் அப்டின்னா சூன்யக்காரக்கிழவிகிட்ட விடுகதை விடுவிச்சு ஜெயிச்சத-மீட்ட இளவரசிககிட்டயிருந்து கன்னம் கொள்ளாத அளவுக்கு முத்தங்கள் வாங்கி குவிச்சத- எங்க ஸ்கூல் பாய்ஸ்கிட்ட சொல்லி பெருமை அடிக்க முடியாதா? வாட் எ பிட்டி வாட் எ பிட்டி " நட்டு.

"மந்திரப்பேழை எங்க கையை விட்டுப் போறதை விட காலபயண நினைவுகள் எங்க மூளைகளை விட்டுப்போறது மகாமகா சோகம் " என்றாள் சக்தி.

"எனக்கு அழுகை அழுகையா வருது " என்றாள் ஆர்த்தி.

"நாங்கள் புறப்படுகிறோம் குழந்தைகளா இனி உங்கள் வாழ்வில் எதாவது பிரச்சனைகள் வந்தால் உங்களுக்குத் தெரியாமல் உங்களைக்காப்பது நாங்களாகத்தான் இருக்கும். உங்களை என்றும் மறக்க மாட்டோம். உங்களைப்பற்றி தேவதைகள் உலகில் பெருமையாகப் பேசுவோம். நீங்கள் மூவரும் நன்றாக படிக்கவேண்டும். பெற்றோரின் சொல் கேட்க வேண்டும். படித்து பணிக்குப்போய் செய்யும் பணியில் புது பரிமாணம் படைக்க வேண்டும். சார்ந்திருக்கும் உங்கள் நாட்டிற்கு பெருமைகள் ஏற்படுத்தித்தர வேண்டும் நீங்கள் இருந்தாலும் மறைந்தாலும் உலகம் உங்கள் பெயர் சொல்ல வேண்டும்..."

தலையாட்டியபடி நட்டு சக்தி ஆர்த்தி கண்ணீர் விட்டு அழுதனர்.

தேவதைகளுக்கும் அழுகை வந்தது.

"அழக்கூடாது. அழவே கூடாது குழந்தைகளே. பிரிவு வாழ்க்கையில் ஒரு அங்கம். பிரிவுத்துயரை ஜீரணிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். எங்கே... எங்களை சிரித்த முகமாக வழியனுப்புங்க பார்ப்பம் "

மூவரும் சோகத்தை அடக்கிக்கொண்டனர். கண்ணீரை துடைத்துக்கொண்டனர். செயற்கையாக சிரித்தனர்.

"டாட்டா தேவதைகளே பை பை ஸி யூ "

"டாட்டா "

"டாட்டா "

தேவதைகள் மூவருக்கும் முத்தம் கொடுத்தனர்.

பதிலுக்கு டாட்டா காண்பித்தபடி வானேறினர்.

அவர்களுடன் அந்த ஒளிக்கம்பமும் மேலே போனது.

நட்சத்திரங்களாய் மின்னியபடி பறந்து மறைந்தனர்.

நடப்பு நொடி வானத்தில் எந்ததொரு வாணவேடிக்கையும் இல்லை.

மிகப்பெரிய இரகசியத்தை விழுங்கிவிட்டு யாருக்கும் தெரியாமல் குறும்பாய் சிரித்தது வானம்.

மூவரின் மூளைகளுக்குள் பிரளயம் ஆரம்பித்தது.

-டைனசார்களும் ஆதிவாசிக்ளும்....

-திருவள்ளுவரும் அவரது மனைவி வாசுகியும்...

-ஜாலபுரி, மாயபுரி, மந்திரபுரி, வசந்தபுரி...

-சூன்யக்காரக்கிழவி, பிப், கூன்கிழவன், அண்டாரகன், சித்திரன்...

-விடுகதைகளும் பரமபதமும்...

அனைத்தும் நட்டு குழுமத்தின் நினைவு அடுக்குகளி லிருந்து அகல ஆரம்பித்தன.

'சொய்ங் சொய்ங் ஷ்க் ஷக் ஷ்க் '

இந்த நொடியில் அவர்களுக்கு ஒரு வருட நிகழ்வு சிறுபுள்ளியும் ஞாபகமாகவில்லை.

'தேர்ந்தெடுக்கப்பட்ட அம்னேஷியா'

-நட்டுதானே முதலில் சக்தி ஆர்த்தியிடம் வினவினான். "நாம செடிமறைவில் ஒளிச்சு வச்ச பாட்டில் எங்கே? எவ்ளவு நேரமா தேடிக்கிட்டிருக்கோம்னு நினைச்சுப்பாத்தா மண்டை காயுதே ஆக்சுவலா நாம தோட்டத்ல எவ்ளவு நேரமா நின்னுக்கிட்டு இருக்கோம்?"

"நீ கேக்ற கேள்வி எல்லாம் நாங்க கேக்க நினைச்சதுதான். நமக்கு என்னமோ நடந்திருக்கு. நாம எல்லாம் திடீர்னு ஒரு வளர்த்தி வளர்ந்திருக்கோம் " என்றாள் சக்தி.

"மேல மேல பேசாம வீட்டுக்குள் போவம்" என்றாள் ஆர்த்தி.

மூவரும் முதலில் சக்தியின் வீட்டுக்குள் பிரவேசித்தனர்.

மூவருக்கும் முதல் வருட திதி நடத்தி முடித்துவிட்டு அழுதகண்களுடன் மூவரின் பெற்றோரும் அமர்ந்திருந்தனர்.

"டாடி மம்மி " மிழற்றியபடி பெற்றோரிடம் ஓடினர்.

காண்பது கனவா, நிஜமா?

குழந்தைகள் அழைப்பது பிரமையா?

அலங்கமலங்க விழித்தபடி எழுந்தனர்.

"நட்டு."

"சக்தி கன்னுக்குட்டீ."

"என் ஆர்த்தி தங்கமே."

"செல்லங்களா செல்லங்களா எங்கடா போனீங்க? தெய் வமே அந்த இன்ஸ்பெக்டர் பேச்சை நம்பி உங்க மூணுபேரையும் யாரோ நரபலி குடுத்திட்டாங்கன்னுல ஒரு வருடமா அழுதுகிட்டு

இருந்தோம். ஒரு வருஷமா எங்க இருந்தீங்க? மூணுபேருமே இளைச்சுத் துரும்பா போய்ட்டீங்களே.... தூக்கிட்டுப் போனவங்க பட்டினி போட்டுட்டாங்களா?" ஆயிரம் கேள்விகளை வீசினர். ஆனந்தக்கண்ணீர் வடித்தபடி பாய்ந்து அவரவர் குழந்தைகளைக் கட்டிக் கொண்டனர்.

அணைப்பில் பெற்றோரின் உடல் நடுங்குவது உணர்ந்தனர் குழந்தைகள்.

பெற்றோரின் எந்தக்கேள்விக்கும் பதில் மூவரின் மூளைகளிலும் இல்லை.

'ஒரு வருடம் நாம் எங்கேயோ காணாமல் போய்விட்டு இப்போதுதான் வீடு திரும்பியிருக்கிறோம் ' எனும் விஷயம் மட்டும் உறைத்தது.

'ஆமாம் நாம் ஒரு வருடம் எங்கே போனோம்?' விழித்தனர்.

மூன்று குழந்தைகளையும் அவரவர் பெற்றோர் கட்டி அணைத்து அழ.

சிறிது நேரத்தில் எல்லாம் காலனியே கூடிப்போனது.

தொலைந்து கிடைத்தால் சந்தோஷம். இறந்ததாக நினைத்தது உயிருடன் கிடைத்தது என்றால் உயிர் வரை ஆனந்தம் இல்லையா?

போலீஸ் ஜீப் போர்டிகோவில் தரை தேய்த்து நிற்க-

இன்ஸ்பெக்டர் ஜோ ஓடிவந்தார்.

நட்டு குழுமத்தின் பெற்றோரையும் விட ஜோவுக்கு மகிழ்ச்சி கூடுதலாய் ததும்பியது. 'வாக்குறுதி தந்தபடி குழந்தைகளை உயிருடன் மீட்காமல் பிணமாய் கையளித்தோமே'- என்கிற ஒருவருடம் குற்ற உணர்ச்சி அவரின் இதயத்திலிருந்து நீங்கியது. போலீஸ் தொப்பியை மேஜை மீது விசிறி விட்டு மூவரையும் கூட்டாக அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் உடுத்தார். "குட்டீஸ் "

"ஜிஸஸ்க்கு ஸ்தோத்திரம் " முணுமுணுத்தார்.

அவரின் கேள்விகளுக்கும் மூன்று குழந்தைகளால் பதில் சொல்ல இயலவில்லை.

காலனி மனிதர்கள் ஓடிவந்து குழந்தைகளை தலைக்குமேல் தூக்கினர். "இனி யாரும் குழந்தைகளை எந்தக்கேள்வியும் கேட்டுக் குழப்பக்கூடாது. எங்க இருந்திருந்தா என்ன-கைகால ஒச்சம் இல்லாம முழுசா கிடைச்சிட்டது போதாது?" கூத்தாடினர். முத்தமழை பொழிந்தனர்- "இன்னும் ஒரு வாரத்துக்கு நமது காலனி விழாக்கோலம் பூணப்போகிறது. ஆயிரம் ஏழைக் குழந்தைகளுக்கு அன்னதானம் செய்வோம் "

காலனி மனிதர்கள் சொல்லிக் கொண்டே போக அவர்களது உற்சாகத்தில் நட்டு குழுமமும் மூழ்கிப்போனது.

-கதையைச் சொல்லி முடித்தார் கம்ப்யூட்டர் தாத்தா.

எல்லாக்குழந்தைகளும் எழுந்து நின்று கூட்டாய் கைதட்டினர்.

"அபாரமான கதை தாத்தா. மனசெல்லாம் நெஞ்செல்லாம் நிறைஞ்சு நிக்குது. 'ஆப்பிள்தேவதைகள்' கதை தேங்க்யூ வெரி மச் தாத் " அனைத்துக் குழந்தைகளும் வாக்சல்யமாய் மிழற்றின.

தாத்தாவின் தாடி நனைய முத்தமிட்டனர்.

"நன்றி எல்லாம் எதுக்கு குழந்தைகளா? நான் கதை சொல்றதே என்னோட தனிமையை போக்கிக்கிறதுக்குதான். உங்களுக்கு கதை சொல்ற ரெண்டு மூணு மணி நேரத்ல கிடைக்ற சந்தோஷம் கோடி ரூபாய்க்கும் மேலானது. உங்களுக்குக் கதை சொல்லிக்கிட்டு இருக்கும்போதே என் உயிர் பிரிஞ்சிடனும்...ம்.... சரி... மீண்டும் அடுத்தக்கதையில் சந்திப்போம் " நெகிழ்ந்தார்.

கம்ப்யூட்டர் தாத்தாவை ஆறுதல் படுத்திவிட்டு குழந்தைகள் அவரவர் பிளாட்டுக்கு புறப்பட்டனர்.

குட் பை குட்டீஸ்!

(முற்றும்)

❁


மின்நூலாக்கம்
சுபாஷ் சண்முகா

சிறுவர்களுக்கான விஞ்ஞான நாவல்

# ஆப்பிள் தேவதைகள்

ஆர்னிகா நாசர்

